# சமூகஒளி

# SAMUUKA OLI

Volume — 6

— கல்வியாண்டு —

1994-95

SOCIAL
SCIENCE
UNION

University of Jaffna

—சமூக விஞ்ஞான மன்றம்—

பொருளியல்துறை

யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Miss. N. Teyantha.
University of Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பீடாதிபதியின்
# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சமூக விஞ்ஞான மன்றம் ஆண்டு தோறும் வெளியிட்டு வரும் சமூக ஒளியின் ஆறாவது இதழ் வெளிவருகின்றது. இவ்விதழுக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

சமூக விஞ்ஞான மன்றம் பல பயனுள்ள கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து பல்கலைக் கழக மாணவர்களுடைய அறிவுத் தேட்டத்தை வளர்த்து வருகின்றது. பொருளியல், சமூகவியல், அரசறிவியல் மாணவர்களும் ஆசிரியர்களும் பங்களிப்புச் செய்யும் சமூக ஒளி இதழும் மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் பயனுடையதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மாணவர்களின் எழுத்தாற்றலையும், ஆய்வு நோக்கினையும், தலைமைத்துவத்தினையும் வளர்த்தெடுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இதழ்களில் ஒன்றாகிய சமூக ஒளி சிறப்புற்றமையவும், செம்மைசான்ற பணியுடையதாகவும் அமைய என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்.
கலைப்பீடாதிபதி

யாழ். பல்கலைக் கழகம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சமூக ஒளி"

# SAMUUKA OLI

## இதழ் 6

## 1994 - 95

- இணை ஆசிரியர்கள் -

க. நித்தியானந்தன்

எஸ். நிலாஷினி

**SOCIAL SCIENCE UNION**

DEPARTMENT OF ECONOMICS

UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Social Science Union

## 1994 - 95

## DEPARTMENT OF ECONOMICS
## UNIVERSITY OF JAFFNA

### OFFICE BEARERS

**Names**

*Patron:*

**Mr. V. P. Sivanathan**

*Senior Treasurer:*

**Mr. R. Nanthakumaaran**

*President:-*

**Mr. S. Amalathas**

*Vice President:-*

**Miss T. Sumankalaa**

*Secretary:-*

**Mr. R. Kengeswaran**

*Asst. Secretary:-*

**Miss. S. Sabitha**

*Treasurer:-*

**Mr. R. Subramaniam**

*Joint Editors:-*

**Mr. K. Nithiyananthan,**
**Miss. S. Nilasiny**

*Committee members:*

**Mr. J. Jeyakenadi**
**Miss. K. Thayalini**
**Miss. T. Gouthamy**
**Miss, T. Jegatheeswary**
**Mr. S. Mohanabavan**
**Mr. J. Julan**
**Miss. K. Kunavathy**
**Mr. N. Kirubaharan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளியின் பிரகாசிப்பில்........


- துணைவேந்தரின் ஆசிச் செய்தி I
- கலைப்பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி II
- துறைத் தலைவரின் பாராட்டுச் செய்தி III
- பெரும் பொருளாளரின் மகிழ்வுச் செய்தி IV
- மன்றத் தலைவரின் இதயத்திலிருந்து V
- மன்றச் செயலாளரின் ஏட்டிலிருந்து VI
- இளம் பொருளாளர் இதயத்திலிருந்து VII
- இதழின் மலர்வில் இதழாசிரியர்களின் சிந்தனை VIII
- நடப்பாண்டு மன்றச் செயற்குழு IX
- துயர நினைவுகளில் X
- ஒளியின் தெறிப்பில் XI


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவேந்தரின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றம் சமூக ஒளி -- 6 சஞ்சிகையினை வெளிக்கொண்டு வருவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். சமூக விஞ்ஞான மன்றம் குறிப்பாக பொருளியல், அரசறிவியல், சமூகவியல் ஆகிய கற்கை நெறிகளை உள்ளடக்கிய மன்றமாகும். பல்கலைக்கழகத்தில் சிறப்புற இயங்கும் கல்விசார் மாணவர் மன்றங்களில் இதுவும் ஒன்றாகும்.

சமூக ஒளி — 6 சஞ்சிகையில் வரும் கட்டுரைகள் பல மாணவர்களால் எழுதப்பட்டவை. இக்கட்டுரைகள் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாத்திரமல்லாது க. பொ. த உயர்தர மாணவர்களுக்கும், இத்துறை ஆர்வலர்களுக்கும் பொருத்தமானவையாக உள்ளது. தமிழ்மொழியில் புதிய வளர்ந்து வரும் துறைகளில் நூல்கள், சஞ்சிகைகள் குறைவாக உள்ள குறையை சிறிதளவாவது இச் சஞ்சிகை தீர்த்து வைக்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் யாழ்ப்பாணப் பிரதேசமும் பல பிரச்சனைகளை எதிர் நோக்கி நின்றாலும் கூட. கடந்த ஒருவருட காலத்திற்குள் கல்விச் செயற்பாடுகளில் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளோம். முகாமைத்துவ மாணவர் மன்றம், வணிக மாணவர் மன்றம் ஆகியன ஏற்கனவே சஞ்சிகையை வெளியிட்டுள்ளன. புவியியற்கழகம், சமூக விஞ்ஞான மன்றம் முதலியவை சஞ்சிகைகளை வெளிக்கொண்டுவர உள்ளன. இச்சஞ்சிகைகள் வெளிவர உழைத்த மாணவர்கள் விரிவுரையாளர்கள் பாராட்டுக்குரியவர்கள். மன்றத்தின் பணிகள் தொடர எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை,**
**துணைவேந்தர்**

**யாழ். பல்கலைக் கழகம்,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைத் தலைவரின்
# பாராட்டுச் செய்தி

ஒரு நாட்டின் அபிவிருத்தி மதிப்பீடுகள் பொருளாதார முன்னேற்றத்தை மையமாகக் கொண்டிருப்பதை எல்லோரும் அறிவர். பொருளாதார விடயதானங்களை— எண்ணக்கருக்களை— மாதிரிகளை எல்லோரும் அறியக்கூடிய வகையில்— விளங்க வைக்கின்ற ஒரு சாதனமாக ''சமூக ஒளி'' சஞ்சிகையிருக்கின்றது. மேலும் இவ்விதழில் சமூக விஞ்ஞானத்தின் முக்கியமான கற்கை நெறிகளாகக் கருதப்படும் அரசறிவியல், சமூகவியல் கட்டுரைகளையும் உள்ளடக்கி இவ்விதழ் வருவதையிட்டு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

பொருளியல் துறை சார்ந்த மாணவர்களினால் 1987—ம் ஆண்டில் இருந்து இன்றுவரை ''சமூக ஒளி'' சஞ்சிகை ஆறு இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன என்பதை அறிகின்ற போது எம் மாணவர்களின் வினைத்திறனை மதிப்பிடும் அளவீடாக இதனைக் கொள்ள முடிகின்றது. சமூக விஞ்ஞான மன்றத்தின் உறுப்பினர்கள் தாமே பல்வேறு வழிகளில் நிதியினைத் திரட்டி இச்சஞ்சிகையை வெளியிடுவதை பாராட்டுகின்றேன்.

அத்தோடு நடப்புக் கல்வியாண்டில் ஏழு கருத்தரங்குத் தொடர்களையும் ''சமூக விஞ்ஞான ஆய்வுமுறைக்கான அறிமுகம்'' என்னும் கைந்நூல் ஒன்றினை வெளியிட்டதையும் பொதுஅறிவும் பொது உளச்சார்பும் பரீட்சையினை நடாத்தி சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கியதையிட்டும் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ்வினைத்திறனுடைய நிர்வாக உறுப்பினர்களை பாராட்டுவதோடு இனிவரும் நிர்வாக அங்கத்தவர்களும் இவர்களைப்போல் வினைத்திறன் உடையவர்களாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பசுபதி சிவநாதன்
தலைவர்
பொருளியல் துறை

பொருளியல் துறை
யாழ். பல்கலைக் கழகம்
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாளரின்

# மகிழ்வுச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே கலைப்பீடத்தில் பல்வேறு கற்கை நெறிகளை மாணவர்கள் கற்று வருகின்றனர். அவர்களின் பல் துறை அறிவினை வளம்படுத்துவதற்காக துறைரீதியான மன்றங்கள், கழகங்கள் இயங்கி வருகின்றன. 94/95 கல்வியாண்டில் உயிர்த்துடிப்புடன் இயங்கிய மன்றங்களுள் சமூக விஞ்ஞான மன்றம் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தை வகிக்கின்றது.

சமூக விஞ்ஞானத்தில் ஈடுபாடு கொண்ட அனைவரும் பயன்பெறும் வகையில் நான்கு கருத்தரங்கு அமர்வுகளை ஒழுங்கு செய்ததோடு ''சமூக விஞ்ஞான ஆய்வு முறைக்கான அறிமுகம்'' எனும் கருத்தரங்குத் தொடரில் நான்கு அமர்வுகளை நடாத்தி இக்கருத்துக்களை ''கைந்நூல்'' வடிவில் வெளியீடு செய்தமை இறுதியாண்டு மாணவர்களின் ஆய்வுக்கட்டுரையின் ஆக்கத்துக்கு மிகவும் பயனுடைய ஒரு செயலாகும்.

இவற்றினைத் தொடர்ந்து அனைத்துப் பீட மாணவர்களும் பங்குபற்றிப் பயனடையும் வகையில் பொது அறிவு, பொது உளச்சார்பு ஆகியவற்றில் தேர்வு நடாத்தப்பட்டு அதில் தகுதி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இத்தகைய பல முயற்சிகளின் மற்றொரு படியே ''சமூக ஒளி'' சஞ்சிகையின் இதழ் ஆறு வெளியீடாகும்.

விரிவுரையாளர்களின் நான்கு கட்டுரைகள் தவிர ஏனையவை மாணவர்களின் ஆக்கங்களாக அமைந்திருக்கின்றமை இத்துறையில் கல்வி பயிலும் மாணவர்களின் ஆக்கங்களுக்கு ஒரு களமாக ''சமூக ஒளி'' இருக்க வேண்டும் என்னும் எனது பேரவாவை இவ்விதழ் நிறைவு செய்வதாக அமைகின்றது. இதனையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன்.

இவ்வாறான பல செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலமாக, மன்றத்துடன் இணைந்து செயலாற்றி பலதரப்பட்ட பட்டறிவினைப் பல மாணவர்கள் பெறும் வாய்ப்பை வழங்கியமை பாராட்டுக்குரியது. இனிவரும் செயற்குழுவினரும் தொடர்ந்தும் தமது அனுபவ அறிவினை விருத்தி செய்ய மரபு சார்ந்த, மரபுசாரா செயற்பாடுகளை மேற்கொண்டு பயன்பெற வேண்டும். மன்றத்தின் பணிகள் பெருக வாழ்த்துக் கூறுவதோடு இச்சஞ்சிகை வெளிவர உழைத்த மாணவர்கள், ஒத்துழைப்பு நல்கிய நிர்வாகத்தினர் அனைவருக்கும் நன்றி கூறி பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**பெரும் பொருளாளர்**
சமூக விஞ்ஞான மன்றம்
பொருளியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

**இ. நந்தகுமாரன்**
முதுநிலை விரிவுரையாளர்
பொருளியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றத் தலைவரின்

# இதயத்திலிருந்து....

யாழ். பல்கலைக் கழக சமூக விஞ்ஞான மன்றம் ''சமூக ஒளி'' எனும் சஞ்சிகையை ஒவ்வொரு கல்வியாண்டிலும் வெளியிட்டு வருகின்றது. அந்த வகையில் இவ்வருடமும் தனது ஆறாவது இதழை வெளியிடுவதன் மூலம் முக்கியமான இலக்கை அடைந்து கொள்கின்றது.

மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு எமது மன்றம் பல்வேறு சந்தர்ப்பங்களை வழங்கி வருகின்றது. மாணவர்களது அறிவுத்திறன் விருத்தி, ஒற்றுமை மனப்பான்மை முதலியவற்றை வளர்த்தெடுக்கப் பட்டு ஆற்றல்மிக்க ஆளுமைமிக்க மாணவர்களை உருவாக்குவது கல்வி யின் நோக்கங்களுள் முதன்மையானது. இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடும்போது பல்வேறுபட்ட அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதோடு எமது ஆற்றலை வளர்த்துச் செல்லும் வாய்ப்பினை பெறுகின்றோம்.

எமது மன்றமானது இக்கல்வியாண்டில் ஏழு கருத்தரங்குத் தொடர் களை நடாத்தியுள்ளது. ஆய்வில் ஈடுபடும் மாணவர்களுக்கு வழிகாட்டி யாக ''சமூக விஞ்ஞான ஆய்வு முறைக்கான அறிமுகம்'' எனும் கைந் நூல் ஒன்றினையும் வெளியிட்டுள்ளது. இவற்றுடன் பொது அறிவும் பொது உளச்சார்பும் பரீட்சை நடாத்தி முதன்மை மாணவர்களுக்கு பரிசிலும் தகுதி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழும் வழங்கியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளைச் செய்து இக்கல்வியாண்டில் அதிகமான செயற்பாடுகளைச் செய்த மன்றம் எனும் பெருமையைப் பெற்றுள்ளது.

இம்மன்றமானது எமது நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட காலத் தில் நாட்டின் குழப்ப நிலை காரணமாக பின்தள்ளப்பட்ட நிலையில் இருந்தது. ஆனாலும் மிகக் குறுகிய காலத்தினுள் பல செயற்பாடுகளைச் செய்வதற்கு எல்லா வழிகளிலும் உதவிபுரிந்தும் ஆலோசனைகளை வழங் கியும் வந்த, பொருளியற்றுறைத் தலைவரும் மன்றக் காப்பாளருமான ப. சிவநாதன் அவர்களுக்கும், மன்ற நடவடிக்கைகளைத் திட்டமிடுவதி லும் செயற்படுத்துவதிலும் எம்முடன் எப்போதும் இணைந்து வழிகாட் டிய பெரும் பொருளாளரும் முதுநிலை விரிவுரையாளருமான இ. நந்தகு மாரன் அவர்களுக்கும், மற்றும் எம் மன்ற நடவடிக்கைகளோடு ஒத்துழைத்த விரிவுரையாளர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் அனை வருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடை கின்றேன்.

இறுதியாக தொடரப்போகும் ஆண்டுகளில் செயற்படும் நிர்வாகத்தி னர் மன்றத்தினை மேலும் சிறப்பாக வழிநடாத்தவும், மன்றம் தொடர்ந்து தனது பணிகளை ''ஒளிர்'' விட வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன்.

**செ. அமலதாஸ்**
*தலைவர்*
**சமூக விஞ்ஞான மன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றச் செயலாளர் ஏட்டிலிருந்து....

சமூக விஞ்ஞான மன்றத்தின் செயலாளர் என்ற வகையில் 1994/95 கல்வி யாண்டுக்கான மன்றத்தின் செயற்பாடுகள், வளர்ச்சிகள் பற்றி எழுதுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொருளியற்துறையின் கீழ் பொருளியல், அரசறிவியல், சமூகவியல் ஆகிய கற்கை நெறிகளைப் பகிக்கின்ற மாணவர்களை ஒருங்கிணைத்து செயற்படும் இம் மன்றமானது பல்வேறு செயற்பாடுகளை ஆற்றிவந்துள்ளது. இதன்படி எமது மன்றத்தின் செயற்பாடு கள் 1994/95 கல்வியாண்டில் எம்மிடம் ஒப் படைக்கப்பட்டது. 1995ஆம் ஆண்டு உள் நாட்டின் குழப்பநிலை காரணமாக எமது கல்வியாண்டு தடைப்பட்டு, ஒரு வருடகால மாக இயங்கமுடியாமல் போய்விட்டது. இருந்தும் 1996 இறுதிக் காலாண்டுப் பகுதியில் பல்கலைக் கழகம் மீள ஆரம்பிக்கப்பட்டபோது எமது மன்றத்தின் செயற்பாடுகள் தொடரக்கப்பட்டன. பின்னர் மன்றத்தின் நோக்கத்துக்கு ஏற்ப மாணவர்களுக்கும், ஆர்வலர்களுக் கும் பயனளிக்கக் கூடிய வகையில் விரிவுரைகள், கருத்தரங்குகள், பல்வேறு வெளியீடுகள் பொது அறிவும் பொது உளச்சார்பும் பரீட்சை எனப்பல செயற்பாடுகள் எமது மன்றத் தினால் வழி நடாத்தப்பட்டது.

(1) விரிவுரைகளும் கருத்தரங்குகளும் :-

| | திகதி | விடயம் | வழங்கியவர் |
|---|---|---|---|
| I. | 19-02-97 | சமூக விஞ்ஞான ஆய்வு முறைக்கான அறிமுகம்—I | செல்வி S. நித்தியலட்சுமி (முகாமைத்துவத்துறை விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம்) |
| II. | 04-03-97 | சமூக விஞ்ஞான ஆய்வு முறைக்கான அறிமுகம்—II | செல்வி S. நித்தியலட்சுமி (முகாமைத்துவத்துறை விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம்) |
| III. | 19-03-97 | சமூக விஞ்ஞான ஆய்வு முறைக்கான அறிமுகம்—III | செல்வி S. நித்தியலட்சுமி (முகாமைத்துவத்துறை விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம்) |
| IV. | 08-04-97 | சமூக விஞ்ஞான ஆய்வு முறைக்கான அறிமுகம்—IV | செல்வி S. நித்தியலட்சுமி (முகாமைத்துவத்துறை விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம்) |
| V. | 24-06-97 | உலக வர்த்தக அமைப்பில் இலங்கையின் வர்த்தக சடுபாடு | பேராசிரியர் வே.நவரத்தினராசா தலைவர், பொருளியல்துறை யாழ். பல்கலைக் கழகம் |
| VI. | 09-07-97 | உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் மூன்றாம் உலக நாடுகளுக்கான பாதிப்பு / நன்மை | பேராசிரியர் வே. நவரத்தினராசா தலைவர், பொருளியல்துறை யாழ். பல்கலைக் கழகம் |
| VII | 20-08-97 | நிலைக்கக் கூடிய அபிவிருத்தியும் அதற்கேற்ற தொழில் நுட்பமும் | பேராசிரியர் வே.நவரத்தினராசா தலைவர், பொருளியல்துறை யாழ். பல்கலைக் கழகம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பல்கலைக்கழக இலட்சினையும் எமது மன்றத்தின் இலட்சினையும் பொறிக்கப்பட்ட கோவைகள் (file covor) மாணவர் பயன்கருதி வெளியீடு செய்தமை.

(3) ''சமூக விஞ்ஞான ஆய்வு முறைக்கான அறிமுகம்'' எனும் கருத்தரங்குத் தொடரினை சமூக விஞ்ஞானத்துறை ஆய்வாளர்களுக்கு பயன்படும் வகையில் கைந்நூலாக வெளியீடு செய்தமை.

(4) 18-07-97 அன்று பல்கலைக் கழக மாணவர்களின் பொது அறிவு, பொது உளச்சார்பு அறிவினை வளர்க்கும் நோக்குடன் அனைத்துப்பீட மாணவர்களுக்கும் பொது அறிவும் பொது உளச்சார்பும் பரீட்சை நடாத்தி, தகுதி பெற்ற முதன்மை மாணவர்களுக்கு 28-07-97 அன்று பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவித்தமை.

(5) 28-07-97 அன்று சமூக ஒளி–இதழ்–6 வெளியீட்டு நிதிக்காக அதிர்ஸ்டலாபச் சீட்டிழுப்பு நடாத்தி பரிசில்கள் வழங்கியமை.

(6) சமூக ஒளி–இதழ்–6 வெளியீடு உங்கள் கைகளில் தவழவிடப்பட்டமை.

★ 15 வது பட்டமளிப்பு விழாத் தொடக்கம் பொருளியல், அரசறிவியல், சமூகவியல் பாடங்களில் 2 அல்லது 3 பாடங்களைக் கற்று அதிகூடிய புள்ளிகளைப் பெறும் பொதுக்கலை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் இந்த ஆண்டு பட்டமளிப்பு விழாவில் வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

''சமூக ஒளி''–இதழ்–6க்கு ஆசிச்செய்தி அனுப்பிய எமது துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கும், வாழ்த்துச் செய்தி அனுப்பிய கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கும், எமது மன்றத்தின் செயற்பாடுகளை நெறிப்படுத்தியவரும் காப்பாளருமான பொருளியற்றுறைத் தலைவர் வி. பி. சிவநாதன் அவர்களுக்கும், வேண்டிய போதெல்லாம் எமக்கு அறிவுரை கூறி, ஊக்கமளித்து. வழிப்படுத்திய பெரும் பொருளாளரும் சிரேஸ்ட விரிவுரையாளருமான இ. நந்தகுமாரன் அவர்களுக்கும் எமது மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன். வழமைபோல் இக்கல்வியாண்டிலும் வெளிவரும் சமூக ஒளி–இதழ்–6இற்கான ஆக்கங்களைத் தந்த விரிவுரையாளர்களுக்கும்' மாணவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு எமது மன்றத்தின் இந்த இதழ் வெளியீட்டுக்கான நிதியினைப்பெறும் பொருட்டு அதிர்ஸ்டலாபச் சீட்டுக்களை அச்சிடுவதற்கான நிதி உதவியை வழங்கிய யாழ். வர்த்தகர்களான E. S. பேரம்பலம் &கோ. உரிமையாளருக்கும், சன்லைற்றைக்கிளீனேர்ஸ்,போட்டோஸ்ரற் உரிமையாளருக்கும், குகன் களஞ்சிய உரிமையாளருக்கும் பொது அறிவும்பொது உளச்சார்பும் பரீட்சையில் தகுதி பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்க நிதி உதவியளித்த பலாலி வீதி, திருநெல்வேலி ''பாட்டா'' மொத்த விற்பனை நிலையத்தாருக்கும் எமது மன்றத்தின் சார்பில் உளம் கனிந்த பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதுடன், எமது மன்றத்தின் வளர்ச்சிக்காகச் செயற்பட்ட அங்கத்தவர்கள் விரிவுரையாளர்கள்,மாணவர்கள், மற்றும் இவ் இதழினை திறம்பட அச்சிட்டுத் தந்த யாழ். புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தாருக்கும் எமது மன்றத்தின் சார்பில் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இத்துடன் இச்சஞ்சிகை தொடர்ந்தும் எதிர்வரும் ஆண்டுகளிலும் ''ஒளி வீச'' எனது வாழ்த்துக்களைக் கூறி விடை பெறுகின்றேன்.

சமூகவிஞ்ஞான மன்றம்
யாழ். பல்கலைக் கழகம்

இராமச்சந்திரன் கங்கேஸ்வரன்
— செயலாளர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் பொருளாளர்
# இதயத்திலிருந்து.....

யாழ். பல்கலைக் கழகத்தில் சமூக விஞ்ஞான வளர்ச்சியை மேம் படுத்தக் கூடிய ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் மன்றங்களுள் குறிப்பிடத்தக்க முதன்மை பெற்ற மன்றமாக பொருளியற் துறையின் கீழ் இருக்கின்ற ''சமூக விஞ்ஞான மன்றம்'' விளங்குகின்றது. இம் மன்றத்தின் பல திறம்பட்ட செயற்பாடுகளில் ஒன்றாகவே ''சமூக ஒளி சஞ்சிகை - 6'' வெளியீடு அமைகின்றது.

இன்றைய காலகட்டத்தில் பல இடர்ப்பாடுகள் காலதாமதங்கள் மத்தியிலும் ''சமூக ஒளி - 6'' சஞ்சிகையை வெளிக்கொண்டு வருவதற்கான நிதி திரட்டல் நடவடிக்கைகளுக்காக மன்ற நிர்வாகத்தின் ஏகோபித்த தீர் மானத்தின் படி 94/95 கல்வியாண்டில் அதிர்ஸ்ட இலாபச் சீட்டிழுப்பு ஒன் றினை நடாத்தியதன் மூலம் நிதியினைப் பெற்று ''சமூக ஒளி - இதழ் 6'' வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மேற்படி அதிர்ஸ்டலாபச் சீட்டிழுப்பினை மேற்கொள்ள எமக்குபல வழிமளிலும் ஆலோசனைகளும் ஊக்கமும் தந்து எம்மை வழி நடாத்திய மன் றத்தின் காப்பாளரும் துறைத் தலைவருமான திரு. ப. சிவநாதன் அவர் கட்கும் எம்முடன் இணைந்து எம்மை நெறிப்படுத்திய பெரும் பொருளாள ரும், சிரேஸ்ட விரிவுரையாளருமான திரு. இ. நந்தகுமாரன் அவர்கட்கும் அதிர்ஸ்டலாபச் சீட்டை அச்சிட அன்பளிப்பு நல்கிய E.S. பேரம்பலம்&கோ, சன்லைற் றைக்கிளினேர்ஸ் – போட்டோஸ்ரற், குகன் களஞ்சியம் ஆகிய வர்த்தக அன்பர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் மனப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் '' சமூக ஒளி, இதழ் - 6'' ஐ உங்கள் கரங்களில் தவழ விடுவ துடன் உயிர்த்துடிப்புள்ள எமது மன்றம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து சிறந்த பணிகளையாற்றி சமூக ஒளியை ஒளிரச் செய்ய |வேண்டுமெனக் கேட்டு வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

சமூக விஞ்ஞான மன்றம்
யாழ். பல்கலைக் கழகம்.

இராசரத்தினம் சுப்பிரமணியம்
இளம் பொருளாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழின் மலர்வில்

# இதழாசிரியர்களின் சிந்தனை

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றம் 94/95 கல்வியாண்டில் தனது இரண்டாவது வெளியீடான ''சமூக ஒளி- 6'' இதழ் சஞ்சிகையினை உங்கள் கைகளில் தவழவிடுவதில் நிறைவடைகின்றது. இதற்கு முன்னர் ''சமூக விஞ்ஞான ஆய்வு முறைக்கான அறிமுகம்'' என்னும் தலைப்பில் கருத்தரங்குத் தொடர் ஒன்றினை நடாத்தி கைநூல் ஒன்றினை வெளியிட்டது யாவரும் அறிந்ததே.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும், அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கும், பல்வேறு துறைசார்ந்த அறிவிற்கும், வழியமைத்துக்கொடுக்கப்படும். பல மாணவ மன்றங்களில், சமூக விஞ்ஞான மன்றமும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெறுகின்றது. இதன் பல்வேறு செயற்பாடுகளுள் பல்துறை சார்ந்த கருத்தரங்குகள், கைந்நூல் வெளியீடு, பொது அறிவும் பொது உளச்சார்பும் பொதுப்பரீட்சை என்பவற்றுடன் இச்சமூக ஒளி- இதழ் 6 வெளியீடும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பொருளியல் துறை சார்ந்த மாணவர்களது ஆக்கங்கள் பெருமளவிலும் விரிவுரையாளர்களது ஆக்கங்கள் குறைந்த அளவிலும் உள்ளடக்கி இச்சஞ்சிகை வெளிவருவது மன்றத்தின் நோக்கமான ''இத்துறையில் கல்வி பயிலும் மாணவர்களின் ஆக்கங்களுக்கு ஒரு களமாக இருக்கவேண்டும்'' என்பதை நிறைவு செய்வதாக இருக்கின்றது. இச்சஞ்சிகை உள்வாரி, வெளிவாரி மாணவர்கள், ஆர்வலர்கள் அனைவருக்கும் தமிழ் மொழி- மூலம் இத்துறை சார்ந்த அறிவினை பெருக்கிக் கொள்ள உதவி செய்யும் என்பதில் ஐயம் இல்லை.

இம்மன்றம் ஏனைய மன்றங்களை விட வித்தியாசமான முறையில் சிந்திக்க முனைந்துள்ளதை யாவரும் அறிவர். சிக்கல்கள் நிறைந்த இந்தக் காலகட்டத்தில் இவ்வாறான சஞ்சிகையொன்றை வெளியிடுவதில் உள்ள சிரமங்களை நீங்கள் அறிவீர்கள். இச்சஞ்சிகை வெளியீட்டுக்கு நிதியினைப் பெற அதிர்ஸ்டலாபச்சீட்டிழுப்பினை நடாத்தினோம். இதற்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கியவர்கள் பாராட்டுக்கும், நன்றிக்கும் உரியவர்கள்.

மேலும் இச்சஞ்சிகையின் உருவாக்கலுக்கு ஆக்கங்கள் அளித்து, சிறப்பித்த விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும் இதை வடிவமைப்பதில் பல வழியிலும் ஆலோசனை வழங்கிய துறைத்தலைவரும் மன்றக் காப்பாளருமான வி. பி. சிவநாதன் அவர்களுக்கும் பெரும் பொருளாளர் இ. நந்தகுமாரன் அவர்களுக்கும், மற்றும் பொருளியல் துறை விரிவுரையாளர்களுக்கும், சக மாணவ நண்பர்களுக்கும், இந்நூலை சிறப்புடன் அமைத்துத் தந்த அச்சகத்தாருக்கும் ஊழியர்களுக்கும் மன்றத்தின் சார்பில் எமது நன்றிகள்.


மேலும், இவ்விதழ் தொடர்ந்தும் வெளிவரவேண்டுமென்று விரும்புவதுடன், இவை மாணவர்களின் பல்துறை அறிவையும் அவற்றின் மூலம் கிடைக்கும் அனுபவங்களும் மாணவ ஆளுமையை வளர்ப்பதில், இம்மன்றம் பரந்த அடிப்படையில் தொடர்ந்தும் செயல்படவேண்டுமென்ற அவாவுடன் வாழ்த்தி, இம்மன்றத்தின் மூலம் கிடைத்த சிறந்த அனுபவங்களை நினைத்து விடை பெறுகின்றோம்.

க. நித்தியானந்தன்
ச. நிலாஷினி
இதழாசிரியர்கள்.

சமூக விஞ்ஞான மன்றம்
யாழ். பல்கலைக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*The Committee of*
*"SOCIAL SCIENCE UNION"-94/95*
*University of Jaffna*



**Seated** (L—R) —

R. Nanthakumaran (Senior Treasurer), R. Subramaniyam (Treasurer), Prof: A. Shanmugathas (Dean) S. Amalathas (President), Prof P. Balasundarampillai (Vice-Chancellor), R. Kankeswarn (Secretary) V. P. Sivanathan (Patron)

**Standing** (L—R)

S. Nilasini (Editor), T. Sumankala (Vice — President), T. Gouthami, K. Thayalini, J. Julan, K. Nithiyananthan (Editor), J.Jeyakenady, N. Kirubakaran, K. Kunavathi, S. Sabitha (Asst-Secretary), T. Jegatheeswary.

**In Absentia** — S. Mohanabavan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர நினைவுகளில்,....

*மலர்ந்தும் மலராத குங்குமச் சிமிழே!*



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1969 | 1996 |
| 04 | 09 |
| 06 | 17 |

*அமரர்*

## செல்வி பரமேஸ்வரி தம்பையா (உஷா) அவர்கள்

**( யாழ்/பல்கலைக் கழக, பொருளியற்றுறை இறுதியாண்டு மாணவி )**

உத்தம்பாவை உஷாவே உந்தன் அங்கம் சங்கமித்த நாளோ
தாது வருடம் தரணிபோற்றிட புரட்டாதி மாதந் தனிலே
— பூபதியாயினையே
வசந்தம் சூழல சுகந்தம் கொப்பளிக்க பரமனின் பாதங்களை
இறைஞ்சுவதற்கு இமையம் சென்றிட்ட பேரொளியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளியின் தெறிப்பில்....


| | | | |
|---|---|---|---|
| (1) | எ. தயாபரன் | — வரிவிதித்தலில் செலுத்தும் தகுதி விதித் தத்துவம் | 01 |
| (2) | ந. ஜெயவாணி | — சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகளின் பகுப்பாய்வு | 06 |
| (3) | ந. சிவகௌரி | — சர்வதேச அரசியல் ஒரு நோக்கு | 11 |
| (4) | ஜெ. தயாபரன் | — பொருளாதாரத்தில் பணவீக்கம் | 19 |
| (5) | த. கிரிசாந்தி | — மாற்றமடையும் அபிவிருத்தி எண்ணக் கருக்கள் | 32 |
| (6) | எ. றிச்சேட் | — 'அனோமி' எண்ணக்கருவும் கோட்பாடுகளும். | 40 |
| (7) | சி. உதயகுமார் | — உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் தோற்றம், நோக்கம், செயற்பாடு பற்றிய சிறு ஆய்வு. | 46 |
| (8) | மு. சிறிதங்கராஜா | — இலங்கையின் விவசாய அபிவிருத்தியில் நிலச் சீர்திருத்தச் சட்டங்களும் அதன் விளைவுகளும். | 55 |
| (9) | தி. சுமங்களா | — அதிகாரப் பரவலாக்கமும், இனப்பிரச்சனைக்கான தீர்வு முயற்சியும். | 62 |
| (10) | த. சிறிமுரளிதரன் | — பொதுத் துறைச் செலவீனங்களின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் கோட்பாட்டு ரீதியிலான காரணிகள். | 70 |
| (11) | ந. கிருபாகரன் | — இலங்கையின் சனத்தொகையும், சமூக பொருளாதார, அபிவிருத்தி நிலமைகளும். | 79 |
| (12) | எஸ். கிருபானந்தன் | — யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய வழிபாட்டு மரபுகளும் அவற்றில் ஏற்பட்டுவரும் மாற்றங்களும், ஓர் சமூக மானிடவியல் பார்வை. | 88 |
| (13) | செ. சஞ்சீவன் | — இலங்கையின் குடித்தொகை வளர்ச்சியும் கல்வி வசதிகளும். | 94 |
| (14) | வ. ஜீவாகரன் | — இலங்கையில் கிராமிய வங்கிகளின் தோற்றமும் வளர்ச்சியும். | 99 |
| (15) | மு. வரதராஜன் | — வறுமை ஒழிப்பினையும் கிராமிய அபிவிருத்தியினையும் இலட்சியமாகக் கொண்ட சமுர்த்தித் திட்டம். | 106 |
| (16) | க. நித்தியானந்தன் | — பிரித்தானிய இந்தியாவின் கிராமிய கொடுகடன் பிரச்சனை. | 114 |
| (17) | இ. விஜிதா | — ஐரோப்பியரின் வருகையினால் இலங்கையில் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள் | 122 |
| (18) | இ. நந்தகுமாரன் | — அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அந்நிய நேரடி முதலீடுகள். | 131 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விதித்தலில்
# "செலுத்தும் தகுதி விதித்தத்துவம்"
# The Principle of Ability - To Pay in Taxation

ஏ. தயாபரன்

வரி விதிப்புத் தத்துவங்களிலே செலுத்தும் தகுதி விதி விரும்பக் கூடியதொன்றாகவும் ஓரளவு நீதித்தன்மை கொண்டதாகவும் காணப்படுகிறது. வரிஎனும் அம்சம் இன்று பொருளாதாரங்களில் பேசப்பட்டு வரும் விடயமாக காணப்படுகிறது. பொருளாதாரத்தின் உற்பத்திகளை அதிகரிக்கவும் உறுதிப்பாட்டினை மேற்கொள்ளவும் வரி விதிக்கப்படுகிறது. இன்னொரு புறத்தில் சில உற்பத்திகளை கட்டுப்படுத்தவும், பொருளாதார, சமூக நலன் கருதியும் வரியறவிடப்படுகிறது. வரியைப் பற்றி David Ricardo என்ற பொருளியலாளர் கூறும் போது, ஒரு நாட்டின் உழைப்பினதும் நிலத்தினதும் உற்பத்தியின் ஒரு பகுதி அரசுக்கு விற்கப்படுவதே வரி என்றார்.[1] அதாவது நிலம் ஊழியம் ஆகிய உற்பத்திக் காரணிகளின் வெளியீட்டில் இருந்து அரசு தன்னுடைய தேவைக்காக பெற்றுக்கொள்ளும் பகுதியே வரியாகும். இத்தகைய வரி அறவிடலிலே இரண்டு வகையான தத்துவங்கள் பேணப்படுகின்றன.

1. செலுத்தும் தகுதி விதித் தத்துவம்.
2. நல தத்துவம்.

நாம் இங்கு நோக்க இருப்பது செலுத்தும் தகுதி விதியாகும். வரியை செலுத்துவதற்கு யாரிடம் தகுதியுள்ளதோ அவரிடமிருந்து வரியறவிடப்படுவதே "செலுத்தும் தகுதி விதியாகும்" அதாவது சம அளவு தகுதியுள்ளவர் சமவளவான வரியையும், தகுதி வேறுபாடுடையவர்கள் தகுதி வேறுபாட்டிற்கேற்ப வேறுபட்ட தொகையை வரியாக செலுத்த வேண்டுமெனவும், இவ் விதி எடுத்துக் கூறுகிறது. இதன்படி சம அளவு தகுதியுடையவர் சம அளவான வரி செலுத்துவதை "கிடையான நீதித்தன்மை" எனவும், வித்தியாசமான தகுதியுடையோர் தகுதி வேறுபாட்டுக் கேற்ப வரி செலுத்துவதை 'நிலைக்குத்தான நீதித்தன்மை' எனவும் அழைப்பர்.

இவ்வடிப்படையில் தகுதி விதி என்பது என்ன அடிப்படையில் விதிக்கப்படுகிறது என்பது பிரச்சனைக்குரியதாகும். இதன்படி வருவாயை அடிப்படையாக கொள்வதா, அல்லது மக்களின் செல்வத்தை அடிப்படையாகக் கொள்வதா, அல்லது செலவிடக் கூடிய வருமானத்தை அளவிடாக கொள்வதா என்பது வரியறவிட்டாளர் எதிர் கொள்கின்ற பிரச்சனையாகும். ஆரம்ப காலத்தில் செலுத்தும் தகுதி விதி என்பது மக்களின் செல்வத்தின் அடிப்படையில் குறிப்பாக சொத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் பணப் பொருளாதாரம் வளர்ச்சியடைய வருமானம் என்பதே ஒருவரது வரி செலுத்துவதற்கான தகுதியாக கொள்ளப்பட்டது. இதிலும் பிழைப்பு மட்டத்திற்கு தேவையான வருமானத்தை வரியறவீட்டில் இருந்து கழித்துக் கொள்ள வேண்டுமென்று[2] Adam Smith கூறுகிறார். வரிச் சுமையை நீதியான முறையில் பங்கிட வேண்டுமாயின் கூடிய வருவாயை பெறுவோர் கூடிய வரியையும்

---

ஏ. தயாபரன்
பொருளியல் சிறப்புக்கலை
இறுதி வருடம்,
யாழ் பல்கலைக் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த வருவாய் பெறுவோர் குறைந்த வரியையும் செலுத்த வேண்டுமென கூறப் படுகிறது. இவ்வகையில் நீதித்தன்மை குறித்து வருமானமே சிறந்த அளவீட்டுக் கருவியாக காணப்படுகிறது.

செலுத்தும் தகுதி விதிக் கோட்பாடானது பின்வரும் சில எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

1. செலுத்தும் தகுதி விதிக் கோட்பாட்டில் வருமானமே வரியிறுப்பதற்கான அடிப்படையாக கொள்ளப்படுகிறது.
2. வருமானத்தின் பயன்பாடு அளக்கப்படுகிறது. அதாவது வருமானம் அதிகரிக்க அதிகரிக்க அதன் மொத்தப் பயன் அதிகரிக்கும்.
3. ஒவ்வொரு தனி நபரும் ஒரே மாதிரியான விருப்பத் தெரிவை கொண்டவர்கள்.
4. ஒவ்வொரு தனிநபர்களுக்கும் இடையிலான பயன்பாடு ஒப்பிடக் கூடியதாகவும். வருமானத்தின் பயன் வளையி எல்லா நபரிடையேயும் ஒரேமாதிரியாக இருப்பதாகவும் கொள்ளப்படுகிறது.

செலுத்தும் தகுதி விதிக்கேற்ப வருவாயைத் தெரிந்து அதன்படி வரியறவிடும் போது வருமானம் சார்ந்த பயன்பாட்டில் குறித்த அளவினை தியாகம் செய்கின்றனர். இத்தியாகத்தின் அளவே அவர்கள் வரியிறுப்பதால் இழக்கும் பயனாகும். எனவே இக் கோட்பாட்டின் படி தியாகம் செய்யும் தன்மையைக் கொண்டு பின்வரும் 3 விதிகளை விளக்க முடியும்.

1. சம முழுமைத்தியாக விதி.
2. சம விகித தியாக விதி.
3. சம எல்லைத் தியாக விதி.

1. சம முழுதியாகம். (Equal absolute Sacrifice)

சம முழுதியாக விதி என்பது குறைந்த வருமான மட்டத்திலுள்ளவர்கள் இழக்கும் மொத்தப் பயனும், கூடிய வருமான மட்டத்திலுள்ளவர்கள் இழக்கும் மொத்தப் பயனும் சமமாக இருப்பதனை குறிப்பிடுகிறது. அதாவது மொத்தப் பயன்பாட்டில் ஒவ்வொருவரும் சம அளவு இழப்பை அனுபவிப்பர். இதனை சமன்பாடு மூலம் பின்வருமாறு எழுதிக்காட்டலாம்.

$$Tu(Y)_A - u(Y-T)_A = Tu(Y)_B - u(Y-T)_B$$

2. சம விகித தியாக விதி (Equal Proportional Sacrifice)

சம விகித தியாக விதி என்பது ஒவ்வொரு நபரும் இழக்கின்ற பயன்பாட்டை மொத்தப் பயன்பாட்டின் விகிதமாக கூறுவதாகும். அதாவது மொத்தப் பயன் பாட்டில் இழக்கும் பயன்பாட்டு விகிதம் எல்லா நபரிடையேயும் சமமாக காணப்படும். இதனை பின்வரும் சமன்பாடாக எழுதிக் காட்டலாம்.

$$\frac{Tu(Y)_A - u(Y-T)_A}{Tu(Y)_A} = \frac{Tu(Y)_B - u(Y-T)_B}{Tu(Y)_B}$$

3. சம எல்லைத் தியாக விதி (Equal Marginal Sacrifice)

சம எல்லைத் தியாக விதி என்பது குறைந்த வருமானம் பெறுவோரும், கூடிய வருமானம் பெறுவோரும் தியாகம் செய்யும் பயன் எல்லையளவில் சமமாக இருப்பதனை குறிப்பிடுகிறது. அதாவது வரியிறுத்த பின்னர் ஒவ்வொருவரிடமும் மீதியாகவுள்ள பணத்தின் எல்லைப் பயன் மட்டங்கள் சமமாக இருப்பதனை இது குறிப்பிடுகிறது. இதனை பின்வரும் சமன்பாட்டின் மூலம் எழுதிக் காட்டலாம்.

$\frac{du(Y-T)}{d(Y-T)}$ என்பது எல்லா நபரிடையேயும் சமமாக காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில்,

Y :- வருமானம்.

T :- வரிசெலுத்துகையின் அளவு/தொகை


$Tu(Y)_A$ -: Aஎன்ற நபர் வருமானத்திலிருந்து பெறும் மொத்தப் பயன்

$Tu(Y)_B$ -: Bஎன்ற நபர் வருமானத்திலிருந்து பெறும் மொத்தப்பயன்

மேற்குறிப்பிட்ட சமன்பாடுகளின் மூலம், மக்களின் வருமான அளவு வேறுபட்டிருந்தாலும் வரிசெலுத்துவதால் அவர்கள் தியாகம் செய்யும் அளவு சமமாக இருக்கும் என்பது எடுத்துக் காட்டப்படுகிறது.

இம் மூன்று தியாக விதிகளையும் பின் வரும் ஓர் வரைபடத்தின் மூலம் தெளிவாக விளங்கப்படுத்த முடியும்.

கீழேயுள்ள படத்தின்படி கிடையச்சில் வருமானத்தின் அளவு குறித்துகாட்டப்படுகிறது. இதில் OZ, என்பது பிழைப்பூதிய வருமான மட்டத்தை காட்டுகிறது. (OZ = DC) OZ என்பது பிழைப் பூதிய வருமான மட்டமாக அமைவதால் அது வரியறவீட்டில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை, எனவே அதற்கு வலது புறமான பகுதியே வரியறவிடலுக்கு சாத்தியமான பகுதியாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. நிலைக்குத்தச்சில் O விலிருந்து Dஐ நோக்கி மேலே செல்லுகையில் அது வருமானத்தின் எல்லைப்பயனையும், Dயிலிருந்து மேல் நோக்கிச் செல்லுகையில் அது வருமானத்தின் மொத்தப் பயனையும் அளவிட்டுக் காட்டுகிறது. CE என்ற வளையி பணத்தின் மொத்தப்பயன் வளையியையும், CF என்பது பணத்தின் எல்லைப்பயன் விளையியையும் குறிப்பிடுகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு A,B என்ற இரு நபர்கள் இருப்பதாகவும் A என்பவரின் வருமானம் OG ஆகவும் B என்பவரின் வருமானம் OH ஆகவும் இருக்கிறது எனவும் கருதிக் கொள்வோம். இருவரைப் பொறுத்தும் OZ என்ற வருமானமட்டம் பிழைப்புமட்ட வருமானமாக அமைவதால் அதனை வரியறவிடலில் இருந்து நீக்கிப் பார்க்கும் போது Aஐ பொறுத்து செலுத்தும் தகுதி விதியுள்ள வருமான மட்டமாக ZG என்பது காணப்படுகிறது. ZG என்ற இவ்வருமான மட்டத்திலிருந்து A பெறும் மொத்தப்பயன் EI ஆகவும் எல்லைப்பயன் FG ஆகவும் இருக்கிறது அதேபோல் Bஐ பொறுத்து செலுத்தும் தகுதி விதிப்படி அமைந்த வருமான மட்டமாக ZH காணப்படுகிறது. ZH என்ற இவ்வருமான மட்டத்திலிருந்து B பெறும் மொத்தப்பயன் எல்லைப்பயன் என்பவை முறையே KJ ஆகவும் LH ஆகவும் இருக்கிறது. இந் நிலையில் அரசு MG என்றளவை வரியாக பெற எண்ணுகிறது எனவும் சம முழுதியாக விதியின் கீழ் A யானவர் தனது ZG என்ற வருமானத்தில் NG என்றளவையும் B யானவர் தனது ZH என்ற வருமானத்தில் TH என்றளவையும் வரியாக செலுத்துகின்றனர் எனவும் கருதிக்கொள்வோம். எனவே இங்கு NG + TH = MG ஆக இருக்கும் என்பது தெளிவாகிறது.

சம முழு தியாக விதியின் கீழ் A செலுத்தும் அளவு NG ஆகவும் B செலுத்தும் அளவு TH ஆகவும் இருக்கும் போது இவர்கள் இதனால் இழக்கும் பயன்கள் முறையே EP ஆகவும் KQ ஆகவும் உள்ளது. இருவரைப் பொறுத்தும் சம முழுதியாக விதியின் கீழ் நீதித்தன்மை பேணப்படவேண்டுமாயின் FP = KQ ஆக காணப்படல்வேண்டும். வரியிறுத்த பின்பு மீதமாகவுள்ள பணத்தின் பயன் Aஐ பொறுத்து (EI − EP = PI) ஆகவும் Bஐ பொறுத்து (KJ − KQ = QJ) ஆகவும் காணப்படும்.

இதனை கணித ரீதியாக நோக்கினால்.

$$Tu(Y)_A - Tu(Y-T)_A = Tu(Y)_B - Tu(Y-T)_B$$

$$EI - (EI - EP) = KJ - (KJ - KQ)$$

$$EI - PI = KJ - QJ$$

$$EP = KQ$$

என்று நிறுவ முடியும்.

சம விகித தியாக விதியின் கீழ் A செலுத்தும் வரியின் அளவு RG ஆகவும், B செலுத்தும் வரியின் அளவு SH ஆகவும் கருதிக் கொள்வோம். இந்த நிலையில் RG + SH = MG என்பது அரசு பெற தீர்மானித்த வரியின் அளவாக இருக்கும். இவ்வாறு செலுத்துவதன் விளைவால் இவர்கள் இருவரும் இழக்கும் பயன் மட்டங்கள் முறையே EW, KY ஆக இருக்கும். இந்த விதிப்படி இவர்கள் இழந்த பயன்களை மொத்தப்பயன்களின் விகிதாசாரமாக கூறும்போது அவை $\frac{EW}{EI} = \frac{KU}{KJ}$ ஆக இருந்தாலே அது நீதித்தன்மையுள்ள வரியறவீடாக இருக்கும். இதனை பின்வருமாறு கணித ரீதியாக நிறுவிக் காட்டலாம்.

$$\frac{Tu(Y)_A - Tu(Y-T)_A}{Tu(Y)_A} = \frac{Tu(Y)_B - Tu(Y-T)_B}{Tu(Y)_B}$$

$$\frac{EI - (EI - EW)}{EI} = \frac{KJ - (KJ - KU)}{KJ}$$

$$\frac{EI - WI}{EI} = \frac{KJ - UJ}{KJ}$$

$$\frac{EW}{EI} = \frac{KU}{KJ}$$

சம எல்லைத்தியாக விதியின் கீழ் வரி விதித்தலில் நீதித்தன்மையானது வரி செலுத்திய பின்னர் மீதியாகவுள்ள வருமானத்தின் எல்லைப் பயன்மட்டங்கள் சமமாக அமைய வேண்டும் என்று கூறப்படுகிறது. இதன்படி A,B என்பவர்கள் முறையே தமது வருமானத்தில் VG, VH என்றளவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரியாக செலுத்துகின்றனர் என்று கருதிக் கொள்க. இந்நிலையில் அரசு பெறத்தீர்மானித்த வரியின் அளவு VG + UH = MG ஆக இருக்கும். இவ்வாறு வரியை செலுத்துவதால் இவர்கள் இருவரும் இழக்கும் பயன்கள் முறையே EX ஆகவும் KY ஆகவும் இருக்கும். இங்கு இருவரைபொறுத்தும் அவர்கள் இழந்த பயன் மட்டமானது Ex (A) > Ky (B) என்றிருப்பதால் நீதித்தன்மையானது இழக்கும் பயன்பாடு குறித்து சமமாக இல்லை. எனவே A, B ஆகிய இருவரும் VG, VH என்றளவை வரியாக செலுத்திய பின்னர் மீதியாகவுள்ள ZV என்றளவு வருவாய்க்குரிய எல்லைப்பயன் Vn ஆக இருக்கும். இது இருவரைப் பொறுத்தும் சமமாகவுள்ளதை 'சம எல்லைத்தியாக' விதி குறிப்பிடுகிறது.

**செலுத்தும் தகுதி விதியின் குறைபாடுகள்**

இத்தத்துவமானது சில எடுகோள்களின் அடிப்படையிலேயே விளக்கப்படுகிறது. இவ்வகையில் பார்க்கும் போது,

1. செலுத்தும் தகுதி விதிக் கோட்பாட்டில் வருமானம் மட்டுமே வரியிறுப்பதற்கு அடிப்படையாக கொள்ளப்பட்டது. வரியிறுப்பாளரின் சொத்து செல்வம் போன்றவை கவனத்திற் கொள்ளப்படவில்லை.

2. இக் கோட்பாட்டின் படி வருமானத்தின் பயனை அளவிடுவது சிக்கலானதும் தடைமுறைச் சாத்தியமற்ற விடயமுமாகும்.

3. வரி செலுத்துவதற்கான ஒவ்வொருவரின் தகுதியையும் தெரிந்து கொள்வது சிரமமானதாகும்.

செலுத்தும் தகுதிவிதிக் கோட்பாட்டில் இத்தகைய குறைபாடுகள் இருந்த போதும் நல தத்துவத்துடன் ஒப்பிடுகையில் ஓரளவுக்கு நீதித்தன்மையை எடுத்து விளக்கும் கோட்பாடாக இதுவே இன்றுவரை காணப்படுகிறது எனலாம்.

**உசாத்துணை நூல்கள்:-**


1. Richard A. Musgrave, The Theory of Public Finance, (Mc Graw - Hill Book Company, inc, New York Toronto London - 1959)
2. S. K. Singh, Public Finance in Developed and Developing Countries, (S. Chand and Company Ltd. Ramnagar, New Delhi - 1986)
5. Philip Hard Wick, Bahadurkhan, John Langmead, An Introduction to Modern Economics, (English Language Book Society, Third Edition - 1990)


---

உலகில் இப்பொழுது 60 வயதுக்கு மேற்பட்ட சுமார் 30 கோடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சுமார் 20 சதவிகிதத்தினர் மட்டுமே ஏதாவது வருமானப் பாதுகாப்பு முறையொன்றைப் பெற்றுள்ளார்கள்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகளின் - பகுப்பாய்வு -

## An Analysis of International Trade Theories

என். ஜெயவாணி

இன்று உலகநாடுகள் யாவும் ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் நாடுகளுக்கிடையிலான வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றன. இந்நிலையில் இவ் வர்த்தகத்திற்கான அடிப்படை என்ன? வர்த்தகத்தின் மூலம் எவ்வாறான பயன்களை ஒரு நாடு பெற முடியும்? எவ்வகையான பொருட்களின் வர்த்தகம் நாடுகளிடையே நடைபெறுகின்றன? போன்ற கேள்விகளிற்கு விடை காண பல பொருளியலாளர்கள் பல்வேறுபட்ட அணுகு முறைகளைப் பயன்படுத்தி கோட்பாடுகளை உருவாக்கித் தந்துள்ளனர்.

இக் கோட்பாடுகளிற்கு அத்திவாரமாக விளங்குபவர் Adam Smith என்ற பொருளியலாளராவார். இவரது கோட்பாடு முழுமைக் கோட்பாடாகும். இருநாடுகள், இரு பொருட்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் இரு நாடுகளும் இரு பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடும்போது எந்தப் பொருளில் குறித்த நாடு கூடுதலாக உற்பத்தி செய்கிறதோ அந்தப் பொருளில் அந்நாடு முழுநயத்தையும், எப்பொருளில் அந்நாடு குறைந்தளவு உற்பத்தி செய்கிறதோ அப்பொருளில் அந்நாடு முழுநய மின்மையையும் அனுபவிக்கிறது எனலாம். இந்நிலையில் குறித்த அந்நாடு முழுநயத்தை அனுபவிக்கின்ற பொருளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதன் மூலமும் முழுநயமின்மையை உடைய பொருளை இறக்குமதி செய்வதன் மூலமும் வர்த்தகத்தில் நன்மையினைப் பெறமுடியும்.

உதாரணமாக கனடாவையும் மேற்கிந்தியத் தீவுகளையும் எடுத்து நோக்கின் காலநிலை அடிப்படையில் கனடா கோதுமையை உற்பத்தி செய்வதில் வினைத்திறனையும், வாழைப்பழத்தை உற்பத்தி செய்வதில் வினைத்திறனின்மையையும் கொண்டுள்ளது எனின் மறுபுறம் மேற்கிந்தியத் தீவுகள் வாழைப்பழத்தில் வினைத்திறனையும், கோதுமையில் வினைத்திறனின்மையையும் கொண்டிருந்தால் கனடா, மேற் இந்தியத் தீவுகளை விட கோதுமை உற்பத்தியில் முழுநயத்தையும் வாழைப்பழ உற்பத்தியில் முழுநயமின்மையையும் அனுபவிக்கின்றது. மேற்கிந்தியத் தீவுகள் எதிர்மாறான நிலையில் அமையும். எனவே கனடா. கோதுமை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய மேற்கிந்தியத்தீவுகள் வாழைப்பழத்தை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதே பொருளாகும்.

இவரைத் தொடர்ந்து 1817 இல் Ricardo தனது Principles of Political Economy என்ற நூலில் (Law of Comparative Advantage) ஒப்பீட்டு நயம் என்ற கோட்பாடு பற்றி விளக்கியுள்ளார். இவரது கோட்பாட்டின்படி ஒருநாடு இரண்டு பொருட்களின் உற்பத்தியிலும் மற்றைய

**Miss. Jeyavani Nadesu**
Economics Special
3rd Year
University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டைவிட குறைந்தளவிலான விளைத் திறனைக் கொண்டிருந்தால் அதுவே அவ் விரு நாடுகளிற்கும் இடையிலான பரஸ்பர நன்மை பயக்கக்கூடிய வர்த்தகம் ஏற்பட அடிப்படையாக அமையும். இது எவ்வகை யில் எனின் குறித்த நாடு ஒன்று ஒப்பீட்டு ரீதியில் மற்றைய நாட்டை விட இரண்டு பொருட்களின் உற்பத்தியைப் பொறுத்தும் முழு நயமின்மையைக் கொண்டிருந்தால் எப்பொருளில் நயமின்மை குறைவாக உள்ளதோ அப்பொருளின் உற்பத்தியை அதிகரித்து ஏற்றுமதி செய்வதன் மூலமும் நயமின்மை கூடிய பொருளின் உற்பத்தியைக் குறைத்து அதனை இறக்குமதி செய்வதன் மூலமும் வர்த்தகத்தில் இருந்தான நன்மை யினைப் பெறமுடியும். இதனைப் பின் வரும் உதாரணம் மூலம் எடுத்துக்காட்ட லாம்.

| | U.S | U.K |
|---|---|---|
| கோதுமை | | |
| (புசல் — 1 மனிதமணி) | 6 | 1 |
| துணி | | |
| (யார் — மனிதமணி) | 4 | 2 |

இவ்வுதாரணத்தின்படி U. S. உடன் ஒப்பிடும்போது U K கோதுமை, துணி உற்பத்திகளில் முழுநயமின்மையை கொண்டி ருந்தாலும் கோதுமையைப் பொறுத்து 1 மனித மணித்தியாலத்தில் U S உடன் ஒப்பிடும்போது 6 மடங்கு குறைவான உற்பத்தியையும் துணியைப் பொறுத்து 2 மடங்கு குறைவான உற்பத்தியையும் கொண்டிருக்கிறது. இதனடிப்படையில் U K க்கு ஒப்பீட்டு நயமுள்ள பொருள் துணியேயாகும். (குறைந்த முழு நயமின் மை) இதனால் U K துணி உற்பத்தியை அதிகரித்தும் U S கோதுமை உற்பத்தியில் கூடிய ஒப்பீட்டு நயம் இருப்பதால் U S கோதுமை உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமும் பயன் பெறமுடியும்.

Ricardo இன் இத்தகைய கோட்பாடு பின்வந்த பொருளியலாளர்களால் ஏற்கப் பட்டாலும் அதை நிறுவ எடுத்துக்கொண்ட விளக்கங்கள் சில மறுத்துரைக்கப்படுகின் றன. இவரது எடுகோள்களில் பிரதான மான ஒன்று ஊழிய பெறுமதி கோட்பாட் டில் தங்கியுள்ளது. (Labour Theory of Value) ஊழியப்படையே உற்பத்திக்கான ஒரே ஒரு காரணி அல்லது உழைப்பு என்ற காரணி எல்லாம் பொருட்களின் உற்பத்தி யிலும் ஓரே விகிதத்திலேயே பயன்படுத்தப் படுகிறது என்ற நிலையில் ஊழியப் பெறு மதி அமைந்திருப்பின் அது நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றே ஆகும். உதாரணமாக முதற் செறிவான உற்பத்திகளிற்கு உழைப்பு, முதல் என்பன பயன்படுத்தப்படுகின்ற விகிதம் சமனாக இருப்பதில்லை.

Ricardo வின் கருத்திற்கு மாறான ஓர் விளக்கமும் பின் வந்த பொருளியலாளர்க ளால் முன்வைக்கப்படுகிறது. U.K., U.S. உடன் ஒப்பிடும்போது கோதுமை, துணி ஆகிய இரு உற்பத்திகளைப் பொறுத்தும் முழு நயமின்மையைக் கொண்டிருக்கும். அதே வேளை அம் முழு நயமின்மை இரு பொருட் களைப் பொறுத்தும் ஒரே விகிதாசாரத்தில் இருக்குமானால் அது நாடுகளுக்கிடையி லான நன்மை வாய்ந்த வர்த்தகம் நடை பெற இடமளிக்காது. எனவே வர்த்தகம் நன்மையளிக்க வேண்டுமாயின் இம் முழு நயமின்மை விகிதாசாரம் இரண்டு பொருட் களைப் பொறுத்தும் வேறுபட்ட அளவுக ளில் காணப்படவேண்டும். எனினும் Ricardo வின் கோட்பாட்டைப் பொறுத்த வரை இவ்விளக்கம் அரிதாகவே கணிக்கப் படுகிறது.

1936 இல் Ricardo வின் கருத்தை ஏற்று வேறுபட்ட அணுகுமுறையில் விளக்க மளித்தவர் Harberles என்ற பொருளியலா ளராகும். இவரது ஆய்வு சந்தர்ப்பச் செலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலானது. இவரது கோட்பாட்டை ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாடு என்றும் சொல்லலாம். (Law of Comparative Cont) இரண்டு நாடுகள் இரு பொருட்கள் என்ற அடிப்படையில் உற்பத்தி நடைபெறுகின்றபோது ஒப்பீட்டுரீதியில் எப் பொருவின் உற்பத்தியைப் பொறுத்து சந்தர்ப்பச் செலவு குறைவாக உள்ளதோ அப்பொருளினை அந்நாடு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யலாம். முன்னைய உதாரணத்தின்படி,

| | US | UK |
|---|---|---|
| கோதுமை (1 அலகிற்கான ச. செலவு) | $\frac{2}{3}$ C | 2 C |
| துணி (1 அலகிற்கான ச. செலவு) | $\frac{3}{2}$W | $\frac{1}{2}$W |

இவ்வட்டவணையின்படி கோதுமை உற்பத்திக்கான அமையச் செலவு ($2/3C<2C$) U S இலும் துணிக்கான அமையச் செலவு ($1/2$ W < $3/2$ W) U K இலும் குறைவாக இருப்பதால் U S கோதுமையிலும் U K துணியிலும் சிறப்புத் தேர்ச்சியடைய முடியும். இவ்வகையில் இம்மூன்று பொருளியலாளர்களும் முழுநயம் ஒப்பீட்டு நயம் என்ற கோட்பாடுகளிற்கிணங்க தத்தம் கருத்துக்களை முன்வைத்தார்களே ஒழிய, முழு நயம் அல்லது ஒப்பீட்டு நயம் என்பது எவ்வாறு பெறப்பட்டது என்பதை விளக்கத் தவறிவிட்டனர். இதனை நீக்கும் முகமாக Heckscher, Ohlin என்ற இரு பொருளியலாளர்கள் முன்வந்தனர்.

### காரணிச் செறிவு (Factor Intensity)

H-O விளக்கத்தில் முன்வைக்கப்பட்ட இரு எண்ணக் கருக்களில் ஒன்று காரணிச் செறிவாகும். நாடுகளிடையே உற்பத்தி அளவுகளைத் தீர்மானிப்பதில் காரணிச் செறிவு முக்கிய பங்கு வகிக்கிறது. ஒவ்வொரு நாடும் வெவ்வேறுபட்ட காரணி வளங்களைக் கொண்டு காணப்படுகிறது. சில நாடுகளில் மூலதன வளம் கூடவாக இருக்கலாம், சில நாடுகளில் ஊழிய வளம் கூடவாக இருக்கலாம். உற்பத்திக் காரணிச் செறிவு அந்நாட்டின் காரணி தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். ஒரு நாட்டின் உற்பத்திப் பொருளில் எக்காரணியின் செறிவு கூடுதலாக காணப்படுகிறதோ அந்தக் காரணிக்கான விலையும், அந்நாட்டில் குறைவாகக் காணப்படும். எனவே குறித்த காரணியைச் செறிவாகப் பயன்படுத்தக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்வதன்மூலம் அந்நாடு கூடிய நலன்களைப் பெறமுடியும். இக்காரணி விலைக் குறைவு அந்நாட்டில் உற்பத்தியாக்கப்படும் பொருட்களின் காரணி செறிவுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பளித்துவிடுகிறது.

### காரணி வளம் (Factor Endowments)

H-O தேற்றத்தில் முன்வைக்கப்பட்ட இரு எண்ணக் கருக்களில் ஒன்று காரணிச் செறிவு, இரண்டாவது காரணிவளம். ஒரு நாட்டின் காரணி வளம் அந்நாட்டின் காரணிச் செறிவையும் விலையையும் தீர்மானிக்கின்றது. எந்தக் காரணி வளம் ஒரு நாட்டில் கூடுதலாகக் காணப்படுகின்றதோ அந்தக் காரணியின் விலை அந்நாட்டில் குறைவாகக் காணப்படும். இவ்வாறு குறைவான விலை பெறும் காரணிச் செறிவாக பயன்படுத்தி உற்பத்தியாக்கக்கூடிய பொருளை அந்நாடு தேர்ந்தெடுக்குமானால் அப்பொருளை பொறுத்து அந்நாடு ஒப்பீட்டளவில் சர்வதேச வர்த்தகம் மூலம் அதிகளவிலான நன்மையைப் பெறலாம்.

இதிலிருந்து H-O தேற்றத்தின் முடிபாக காரணிகளின் அசைவுகள் சர்வதேச வர்த்தகத்தில் இல்லாதவிடத்து நாடுகளில் காரணிகளிற்கிடையிலான சார்புவிலையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் வர்த்தகத்தைத் தீர்மானிக்கின்றது எனக் கூறமுடியும். இவரது கருத்துப்படி சார்பளவு விலை சமப்படும்வரை வர்த்தகம் நடைபெறும் என்பதாக உள்ளது. இது எவ்வாறெனில் ஒரு நாட்டின் ஒரு காரணிவளம் அதிகமாக உள்ளபோது உற்பத்தியில் அதன் செறிவும் அதிகமாக இருக்கும். இதனால் அதற்கான விலை குறைவாக அமையும். மறுபுறம் எக்காரணிவளம் குறைவாக உள்ளதோ அக்காரணியின் செறிவும் குறைவாக இருக்கும். அதனால் அதன் விலையும் உயர்வாக இருக்கும். தொடர்ச்சியாக காரணிவளம் அதிகமாக உள்ள காரணிக்கு கேள்வி எழும்போது அதற்கான விலையும் அதிகரித்துச் செல்லும். இதனால் அதிகரித்த கேள்வி அக்காரணிக்கு மாற்றீடாக விலை குறைந்த மற்றைய காரணியை பயன்படுத்த முனையும். இவ்வகையில் தொடர்ந்து வர்த்தகம் இரு காரணிகளின் சார்பளவில் சமப்படும் வரை நடைபெற்றுக்கொண்டிருக்கும்.

H–O வின் இம்முடிபையே மேலும் விரிவாக்கி காரணிவிலை சமப்படுத்தும் தேற்றத்தை சாமுவேல்சன் விளக்கியுள்ளார். இவரது ஆய்வின்படி சர்வதேச வர்த்தகமானது ஒரே தன்மையான உற்பத்திக் காரணிகளிற்குரிய சார்பளவு, முழு அளவு வருமானங்களைச் சமப்படுத்தும் என்பதாகும். அதாவது ஒரேதன்மையான உழைப்பிற்குரிய கூலி வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகளிற்கிடையே சமனாக இருக்கும் என்பதாகும். உதாரணமாக A, B என்ற இரு நாடுகள் உள்ளதென எடுத்தால் A ஊழிய வளம் கூடிய நாடாகவும், B மூலதன வளம் கூடிய நாடாகவும் உள்ளது எனின் Aயைப் பொறுத்து இரு பொருட்கள் உற்பத்தியிலும் K/L விகிதம் அல்லது W/r விகிதம் குறைவாகவும் B நாட்டில் உயர்வாகவும் இருக்கும். இதனால் நாடு A யில் ஊழிய செறிவும், கூலியும் உயர்வாக இருக்க நாடு B இல் மூலதனச் செறிவும் வட்டியும் உயர்வாக இருக்கும். இந்நிலையில் வர்த்தகம் நடைபெறும்போது நாடு A யில் K/L விகிதம் அல்லது W/r விகிதம் அதிகரித்தும் நாடு B யில் K/L விகிதம் குறைவடைந்தும் இரு நாடுகளிலும் K/L விகிதம், சமப்படும் வரை சிறப்புத் தேர்ச்சி இடம் பெறும்.

நவீன பொருளாதரத்தில் சர்வதேச வர்த்தகம் ஒரு தொழிலில் மாறுபட்ட உற்பத்திகளிற்கிடையிலேயே இடம் பெறுகின்றதைக் காணமுடிகிறது. வளர்முக நாடுகளை விட வளர்ச்சியடைந்த நாடுகளிலேயே இது முனைப்பாக உள்ளது. வளர்முக நாடுகள் பெருமளவிற்கு விவசாயப் பொருளாதாரங்களாகக் காணப்படுவதால் அந்நாடுகளில் உற்பத்தி வேறுபடுதல் குறைவாக உள்ளது. ஆனால் வளர்ச்சியடைந்த நாடுகள் கைத்தொழில்வளர்ச்சியடைந்தவைகளாகஇருப்பதால் தொழில் நுட்பரீதியில் உற்பத்தி வேறுபடுத்தலில் முனைப்பாக உள்ளன. அத்துடன் நுகர்வோரிடையே வெவ்வேறுபட்ட சுவைகள் காணப்படுவதால் சர்வதேச வர்த்தகம் நுகர்வோரது தெரிவின் வீச்சை அகலப்படுத்துவதுடன் உற்பத்தியாளர்களிற்கிடையே போட்டி மட்டத்தையும் அதிகரித்து வருகிறது. இதனால் முழுமையாக ஒரு பொருளை உற்பத்தி செய்ய ஒப்பீட்டு நயம் இல்லாதபோதும் அந்நாடு அப் பொருளின் சிறு கூறுகளை உற்பத்தி செய்யக் கூடிய ஒப்பீட்டுநலன் காணப்படும் இடத்து பல்தேசிய நிறுவனங்களை உருவாக்கி ஒவ்வொரு நாடுகளிலிருந்தும் அப்பொருளை உற்பத்தி செய்வதற்கான உதிரிப் பாகங்களைப் பெற்று அப்பொருள் உற்பத்தி மற்றைய நாடுகளுடன் போட்டியிடக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலைகளை உருவாக்கி வருவதை நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது. எனவே இன்றைய காலகட்டத்தில் H-O

தேற்றம் சர்வதேச வர்த்தகத்தைப் பொறுத்து வெறும் கோட்பாட்டு அடிப்படையிலேயே பிரதிபலிப்பதைக் காணலாம்.

## Refence.


* Dominick Salvatore, International Economics (Macmillan Publishing co-inc, Newyork. Collier Macmillian Publishers - London - 1983)
* Sidney J. Wells, International Economics (George Allen & Unwin Ltd. Ruskin House, Museum Street,)
* Robert Heller, International Trade (Prentice - Hall of India Pvt. Ltd. M - 97 Connaught circus Nlew Delhi - 110001, 1979)


## மானிட அபிவிருத்திச் சுட்டெண்

மானிட அபிவிருத்திச் சுட்டெண் என்பது ஆயுள் எல்லை, கல்வி மற்றும் வருமானம் ஆகிய மூன்றுமாறிகளின் ஒரு தொகுப்பு சுட்டெண் ஆகும். இதில் இந்த மூன்று கூறுகளும் சமமான நிறையைக் கொண்டுள்ளன. இந்த சுட்டெண் 0.000 தொடக்கம் 1.000 வரையில் வேறுபட்டுச் செல்லும். இதன் அடிப்படையில் 173 நாடுகளையும் பிரதேசங்களையும் வரிசைப்படுத்துகின்றது. இதில் இலங்கை 86 ம் இடத்தில் உள்ளது. இலங்கையின் மானிட அபிவிருத்திச் சுட்டெண் 0.663 ஆகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அரசியல் - ஒரு நோக்கு
# International Politics - A View

என். சிவகௌரி

சர்வதேச அரசியல் எனும்போது அது ஒரு சர்வதேச அரசியல் கோட்பாட்டின் அடிப்படையிலே நின்று தேசிய அரசுகளிற்கிடையே, நிகழும் உறவுமுறைகளைப்பற்றிக் கூறுகிறது. சர்வதேச அரசியல் கோட்பாடானது சர்வதேச அரசியல் செயற்பாடுகளுக்கு அடிப்படையாகவும் நிலையானதாகவும் அமைய சர்வதேச உறவுகள் என்பவை கால, தேவை, சூழ்நிலைக்கேற்ப நடைபெறுபவை. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் சர்வதேச அரசியல் கற்கை நெறி முக்கியத்துவப்படுத்தப்பட்டாலும், பதினேழாம் நூற்றாண்டுகளிலேயே சர்வதேச அரசியல் பற்றிய ஈடுபாடு ஆரம்பித்துவிட்டது. ஆனால் சர்வதேச அரசியல் அன்று பன்னாட்டு அரசியல், சர்வதேச தொடர்புகள், சர்வதேச உறவுகள் என்ற தலைப்பில் நோக்கப்பட்டு வந்திருக்கின்றது. எனினும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்துதான் சர்வதேச அரசியலில் முக்கிய நிகழ்வுகள் நடந்தன. முன்பு சர்வதேச அரசியல் பற்றிய அக்கறை பிரதானமாக மேற்குலக நாடுகளின் ராஜ தந்திர நடவடிக்கையேயாகும். அக்காலத்தில் எழுச்சி பெற்றிருந்த வல்லரசுகளின் தொடர்புகளோடும் நின்றுவிட்டது. பின் முதலாம் உலக மகாயுத்தம் ஏற்படுத்திய உலகளாவிய தாக்கமும், அதன் பின்னணியில் உருவாக்கப்பெற்ற சர்வதேச சங்கம் [League of Nation] சர்வதேச அரசியல் ஈடுபாட்டினை பரவலாக்கியது. சர்வதேச தொடர்புகளிலும் போக்குவரத்திலும் ஏற்பட்ட புரட்சிகர மாற்றம் இதன் ஈடுபாட்டினை ஆழமாக்கியது. அடுத்தடுத்து நிகழ்ந்த உலகமகாயுத்தங்கள் உலக மக்களின் கவனத்தை உலக சமாதானத்தின் பக்கம் இழுத்தது. அதனால் அண்மைக்காலங்களில் சர்வதேச அரசியல் ஆராய்ச்சியில் பரவலான ஈடுபாடு தோன்றியது' இவ்வாறாக நாம் பார்க்கும்போது சர்வதேச அரசியல் என்பது நீண்ட வரலாற்றைக் கொண்டு பலவகை மாற்றங்களையும் தாக்கங்களையும் உள்ளடக்கிய ஒன்று எனலாம்.

சர்வதேச அரசியலிலே பங்களிப்புச் செய்பவை தேசிய அரசுகள். தேசிய அரசுகள் எனும் போது உள்ளூர சர்வ வல்லமையும் வெளி உறவுகளில் பூரண சுதந்திரமும் கொண்டவை. இவ்வாறான தேசிய அரசுகள் ஆரம்ப காலத்தில் மேற்குலகில் 1648 இல் செய்துகொள்ளப்பட்ட வெஸ்டப்பிலியா ஒப்பந்தத்தின் (Treaty of Westaphalia) மூலமே உதயமாகியவை. அக்காலத்தில் சர்வதேச அரசியலில் ஈடுபாடு உடையவையாக ஸ்பெயின் பிரான்ஸ், போர்த்துக்கல், இங்கிலாந்து, போன்ற ஐரோப்பிய வல்லரசுகளே ஈடுபாடுடையனவாகவும் முக்கியத்துவம் வாய்ந்தாகவும் இருந்தன. இந்த நூற்றாண்டில் ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், சீனா போன்ற நாடுகள் முதன்மை பெற்

சிவகௌரி நற்குணசிங்கம்
அரசறிவியல் சிறப்புக்கலை
இறுதி வருடம்
யாழ். பல்கலைக் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுள்ள இவ்வேளையில், அதனுடன் இணைந்தால் போல் இரண்டாம் உலக யுத்தத்தின் பின் ஏகாதிபத்தியப்பிடியில் இருந்து விடுதலை பெற்றுக்கொண்ட ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளும் பல உருவாகி சர்வதேச அரசியலில் பூரண சுதந்திர முடைய தேசிய அரசுகளாக (National State) இயங்கி வருகின்றன. இவற்றுக்கு பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவாகிய சர்வதேச சட்டங்கள் (International Law) என்பன அக்காலத்தில் நிலவிய தேசிய அரசுகளிற்கு அங்கீகாரம் அளித்தன. இந்த சர்வதேச சட்டங்கள் முறைப்படுத்தப்பட்டு வகைப்படுத்தப்படுவதற்கு ஹேக் மகாநாடு (Hague Conference) போன்ற சர்வதேச சம்மேளனங்கள் உதவின. இன்று சர்வதேச அரசியல் நூற்றி தொண்ணூற்றிற்கும் மேற்பட்ட அரசுகள் ஈடுபடுகின்றன. சிறிதும் பெரியதுமான அரசுகள் பக்கபலமாக இருந்து சுதந்திரமாக செயற்படுகின்றன. இதுதான் சர்வதேச அரசியலின் கோட்பாட்டுப் பார்வையுமாகும்.

தேசிய அரசுகள் எப்பொழுதும் தமது நலனை முன்னெடுத்துச் செல்வதாகவே தமது தொடர்புகளை — உறவுகளை ஏற்படுத்துகின்றன. அரசுகளுக்கிடையே தொடர்புகள் ஏற்படுவது எவ்வளவு இயற்கையோ அந்த தொடர்புகளில் உடன்பாடும் முரண்பாடும் ஏற்படுவதும் இயற்கை. எனவே சர்வதேச அரசியல் என்பது நாடுகளிற்கிடையே உடன்பாடுகளையும் முரண்பாடுகளையும் உள்ளடக்கிய ஒரு செயற்பாடு. அதனால்தான் ''சர்வதேச அரசியலிலே, நிரந்தர நண்பனும் இல்லை, எதிரியும் இல்லை'' என்று சொல்லப்படுகிறது. முரண்பாடுகளைப்போக்கவும் - ஒருமைப்பாட்டினை வளர்க்கவும் அதிகாரம் பயன்படுத்தப்படுகின்றது. இந்த அதிகார செயற்பாடே அரசியல் என குவின் ஸிறைற் (Wrsght Quincy) என்பவர் கூறுகின்றார். எனவே சர்வதேச அரசியல் என்பது வழிநடத்தப்படுவதற்கும் அதிகாரம் என்பது அவசியமாகின்றது. சர்வதேச அரசியலில் பாத்திரம் வகிப்பவர்கள் — பங்களிப்புச் செய்பவர்கள் அனைவருமே இறைமை வாய்ந்த அரசுகளே. எனினும் சர்வதேச அரசியலை வழிநடத்தும் அதிகாரம் வல்லரசுகளிடமே காணப்படுகின்றது. இதனை நாம் யதார்த்த பார்வையுடன் நோக்கும் போது புலப்படும்.

சர்வதேச அரசியல்துறை ஒன்று முதன் முதலாக 1919ஆம் ஆண்டு இங்கிலாந்தின் வேல்ஸ் பல்கலைக் கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டபோதும், முதலாம் உலக மகாயுத்தத்தின் முன்பு சர்வதேச அரசியலானது சர்வதேச தொடர்புகள் என்ற தலைப்பில் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நோக்கப்பட்டது. ஐரோப்பிய அரசியல்தலைவர்களாக விளங்கிய முடிமன்னர்களின் தொடர்புகளும் நாடுகளிற்கிடையே ஏற்பட்ட ராஜதந்திர உறவுகளும் ஆராயப்பட்டன. தேசிய அரசுகள் வெளிநாட்டு தூதர்களை ஏற்று அவர்கள் மூலம் அந்த நாடுகளோடு தொடர்பு கொண்டார்கள், இதுவே ஆரம்ப கால சர்வதேச கற்கை நெறியின் முதற்படியாக காணப்பட்டது.

முதலாம் உலகமகா யுத்தமும்—அதனால் ஏற்பட்ட தாக்கமும் உலக அரசியலை அமைதியற்ற சூழ்நிலையை உருவாக்கியது. எங்கும் போர்மேகங்கள் சூழ்ந்தன. மாறாக அமைதிக்கான வழிவகைகள் ஆராயப்படவில்லை. நான்கு ஆண்டுகள் யுத்தத்தின்பின் 1919ஆம் ஆண்டில் சர்வதேச சங்கமானது ஜெனிவாவில் ஏற்படுத்தப்பட்டது. இதில் அமெரிக்க தலைவரான வூட்டோ வில்சன் (Woodrow Wilson) மிகவும் அக்கறையெடுத்து யுத்தத்தில் ஈடுபட்டிருந்த தலைவர்களை சமாதானப்படுத்தி இந்த சர்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேச சங்கத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கோரினார். ஐரோப்பாவில் இந்த யுத்தம் ஏற்படுத்திய அழிவு ஐரோப்பிய மக்களை சிந்தனைக்குள்ளாக்கியது. தனி அரசுகளும் தலைவர்களும் தம்மிச்சையாக செயற்படுவதனால் இத்தகைய மகாயுத்தம் தவிர்க்க முடியாது. எனவே நாடுகளையும் வேட்கைத் தலைவர்களையும் கட்டுப்படுத்தவும் உலகில் இது போன்ற இன்னுமொரு யுத்தமும் ஏற்படாத வகையில் இதில் கைச்சாத்திட்ட உறுப்பு நாடுகளின் கூட்டு ஒத்துழைப்புடன் சமாதான அரசியலை வழிநடத்தவும் என இச் சர்வதேச சங்கம் உதயமாகியது. சர்வதேச சங்கமானது (League of Nation) பலநாடுகளிடையே ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் ஏற்பட வழிவகுத்தது. இதனால் இதுவரை காலமும் நிலவிவந்த வரலாற்று ரீதியான அணுகுமுறை புறந்தள்ளப்பட்டு சர்வதேச சட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு சர்வதேச அரசியல் ஆராயப்பட்டது. இது சர்வதேச அரசியலின் இரண்டாவது படி எனலாம்.

எனினும் இந்த அணுகுமுறைகளோ தொடர்புகளோ அதிக காலம் நீடிக்கவில்லை. சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டு முதலாம் உலக யுத்தத்தில் ஈடுபட்ட முக்கிய நாடுகளான ஜேர்மனியும், இத்தாலியும், ஜப்பானும் கண்டிக்கப்பட்டன. தமக்கு வழங்கப்பட்ட தீர்ப்பில் திருப்தியுறாத ஜேர்மனியும் இத்தாலியும் மற்றும் ஜப்பானும் நாடுகள் பலவற்றை அத்துமீறி அடக்கியும், வழிப்படுத்தவும், தலைப்பட்டன, இந்நிலையிலே சர்வதேச அரசியலில் சர்வாதிகார அரசுகளின் தோற்றம் சர்வதேச சங்கத்தின் நோக்கத்தை மாற்றி அமைத்தது. நாடுகளின் ஒத்துழைப்புடன் ஒரு கூட்டுப் பாதுகாப்பு அடிப்படையிலே நிறுவிய சர்வதேச சங்கம் இயங்கமுடியாமல் போன நிலையில் அந்நாடுகளின் அதிகார செயற்பாடு ஒரு குறுகிய காலத்தில் சர்வதேச அரசியலை ஆட்டிப்படைத்தன. எனவே இப்பகுதி சர்வதேச அரசியற் கற்கையின் நான்காவது படியாக அமைந்து கொண்டது.

சர்வதேச சங்கத்தினையும், சர்வதேச சட்டங்களையும் பாதுகாக்க மேற்குலக நாடுகள் ஒன்றிணைந்தன. நாடுகளிற்கிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு என்பவற்றோடு "உலக சமாதானம் நிலைக்க வேண்டி போராடுவது" என்ற புதிய எண்ணக்கரு அமெரிக்க பல்கலைக் கழகங்களில் பெருமளவில் தோற்றுவிக்கப்பட்டது. 1955 ம் ஆண்டு இந்தியாவில் Indian School of International Studies என்ற ஆராய்ச்சி நிலையம் உருவாகியது. ஆனால் இன்று வரை இலங்கையில் இதற்கான முக்கியத்துவம் பல்கலைக்கழகத்தின் ஒருபாடஅலகாக மாத்திரமே இருக்கின்றது. எது எவ்வாறு இருந்த போதும் இக் காலத்தில் உலக மக்களின் நலன்களை ஒன்றிணைத்து உலக சமாதானத்திற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டன.

சர்வதேச அரசியலில் முன்னைய காலத்தில் உலக சமாதானம் அமைதி என்பது உணரப்பட்ட ஒன்றுதான். நாடுகளின் ஒத்துழைப்புடன் அமைதி பேண விரும்பிய காலமாகவும் காணப்பட்டது. எனினும் அத்தனையையும் மீறிய நிலையில் சர்வதேச அரங்கிலே பாரியளவிலான உயிர், உடமை அழிவுகளோடு, உளவியல் ரீதியில் நீண்ட பாதிப்பையும் இரண்டாம் மகாயுத்தம் ஏற்படுத்தி முடித்தது என்பது இக்கால சர்வதேச அரசியலின் கசப்பான ஒரு உண்மை.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் சர்வதேச அரசியலில் சில புரட்சிகரமான மாற்றங்களும் தாக்கங்களும் ஏற்பட்டன. இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்து இனியும் இப்படி ஒரு அனர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் சர்வதேச அரங்கில் ஏற்படக் கூடாது என வல்லரசுகள் பலவற்றாலும், அரசியல் தலைவர்கள் பலராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டது. இதுவரை காலமும் சர்வதேச அரங்கிலே ஒதுங்கியிருத்தல் கொள்கையைக் கடைப்பிடித்த ஐக்கிய அமெரிக்காவானது இக்கால கட்டத்தில் நேரடியாக சர்வதேச அரசியலில் இறங்கி அதனை வழிப்படுத்த தலைப்பட்டது. இது சர்வதேச அரசியலில் ஒரு முக்கிய நிகழ்வாக கருதப்பட்டது. அத்தோடு நாடுகள் (Nations) பல ஒன்றிணைந்து, சர்வதேச சங்கம் என்ற பெயரில் இயங்கிவந்த அமைப்பைக் கலைத்து, அதன் பல அம்சங்களையும், மற்றும் பரந்துபட்ட ரீதியிலுமாக அதாவது உலக அமைதி, உலக சமாதானம் என்பனவற்றினூடாக நாடுகளின் அரசியல், சமூக பொருளாதார அம்சங்களையும் கருத்தில் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை (United Nation Organisation) எனும் பலமான ஒரு நிறுவனத்தை நிறுவிக் கொண்டனர்.

இது இவ்வாறிருக்க, சர்வதேச அரசியலிலே எல்லா நாடுகளுமே சுதந்திரமாக செயற்படுகின்றன. எனினும் நடைமுறையில் சர்வதேச அரசியலை நிர்ணயிப்பவர்களாக வல்லரசுகளே காணப்படுகின்றது. இரண்டாம் உலக யுத்த காலத்திற்கு முன்பு எல்லாம் உலக அரசியலை நான்கு, ஐந்து வல்லரசுகள் வழிப்படுத்திவந்தன. ஆனால் இரண்டாம் உலக மகாயுத்தமும் அதனால் ஏற்பட்ட தாக்கங்களும் உலக அரசியலை வழிநடத்தும் வல்லரசுகளாக ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் போட்டி போட்டன. அத்தோடு இதுவரை காலமும் நான்கு, ஐந்து வல்லரசுகளினால் பேணப்பட்டு வந்த வலுச்சமநிலை என்பது போய் இக்காலம் இரு – துருவ அரசியல் வழிப்படுத்தலாக மாட்டிக் கொண்டது. ஐக்கிய அமெரிக்காவிற்கும் சோவியத் ஒன்றியத்திற்குமிடையே ஏற்பட்ட இராணுவ ரீதியானதும், கோட்பாட்டு ரீதியானதுமான ஆதிக்கப் போட்டியில் தீவிரமாக ஈடுபட்டன. இந்தப் போட்டி நிலையால் உலக அமைதி என்பது மிகவும் இக்கட்டுக்குள் உள்ளாகியது. உலக சமாதானம் என்பது ஐ.நா. அமைப்பின் செயற்பாட்டில் ஊசலாடியது. எனினும் அவ்வமைப்பு மறந்துவிட்டது என்றோ, முற்றிலும் செயலிழந்து விட்டது என்றோ பொருள் அல்ல.

உலக சமாதானம் என்பது எவ்வாறான ஓர் இக்கட்டுக்குள் நுழைந்த போதும், நாடுகளிற்கிடையே ஏற்பட்டயுத்தம் என்பது சர்வதேச ரீதியில் பரவாது அதனை உள்ளூர் மட்டத்திலேயே நின்று விட்டதென பொதுவாக கூறிவிடலாம். இதற்கு ஐ.நாவின் குறிக்கோள் என்பதும் அதற்கு வல்லரசு நாடுகளின் ஒத்துழைப்பும், பல நாட்டுத் தலைவர்களின் அவாவும் சேர்ந்து உலக யுத்தமற்ற ஓர் அரசியலை ஏற்படுத்த உதவுகின்றது. இவற்றுக்கு மேலாக உலக சமாதானம் என்பதும் உலக அபிப்பிராயத்தின் வயப்பட்டதாக அவதானமாக பேணப்பட்டு வருகின்றது. இந்த உண்மை என்னவெனில் 'உலக சமாதானம்' என்பது இன்றைய நிலையில் வலுவுள்ள ஒன்றாக உள்ளது என்பதோடு, அவற்றின் நிலைப்பிற்கும் வல்லரசுகளின் தயவும் இன்றியமையாதனவாக விளங்குகின்றன.

இன்றைய சர்வதேச அரங்கிலே எத்தனையோ அமைப்புகளும், நிறுவனங்களும் உருவாகி செயற்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையில் எத்தனையோ துணை அமைப்புக்கள் காணப்படுகின்றன. அத்துடன் பிராந்திய ரீதியிலும் உருவாகிய பல நிறுவனங்களும் காணப்படுகின்றன உதாரணமாக சார்க் (SAARC) ஒபெக் (OBC) ஆசியான் (ASEAN) போன்றவற்றைக் கூறிக் கொள்ளலாம். ஒவ்வொரு அமைப்புக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது அங்கத்துவ நாடுகளின் பூரண ஒத்துழைப்பின் தன்மையிலேயே அதன் அமைப்பும், செயற்பாடும் உள்ளதால் நாடுகள் தமது வெளி இறைமையில் ஓரளவு விட்டுக் கொடுப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் ஐ. நா. சபை வலியுறுத்தும் கூட்டுப் பாது காப்பு என்பதும் நாடுகளிற்கிடையேயான ஒரு விட்டுக்கொடுப்பு - பரஸ்பரம் - புரிந்துணர்வு என்பவற்றின் மூலமே எதிர்பார்க்கப்படுவதாலும் தேசிய அரசுகளின் பாரம்பரிய இறைமை என்பது இன்று சற்று மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. இருந்தபோதும் தென்னாசிய நாடுகளும் ஆபிரிக்க நாடுகளும் தமது இறைமை என்ற பழமைவாதத்தில் ஊறிநிற்கின்றன. என்பதும் மறைக்க முடியாத உண்மை.

சர்வதேச அரசியலிலே இன்று பல சர்வதேச சமூக நல அமைப்புக்களும், பொருளாதார கூட்டுக்களும் உருவாகி நாட்டின் பல பாகங்களிலும் தமது கிளைகளை நிறுவி செயற்பட்டு வருகின்றன. உதாரணமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (I.C.R.C) அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலயம் (UNHCR) ஐ. நா. சிறுவர்கள் நிதியம் (UNICF) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றின் உலகளாவிய செயற்பாடு இன்று ஒரு உலக சமுதாயத்தை உருவாக்கும் நிலையில் உள்ளது. அத்துடன் சர்வதேச நிறுவனங்களினதும், அமைப்புக்களினதும் - முக்கியத்துவமும். செயற்பாடும் காரணமாக இன்றைய சர்வதேச அரசியலில் நாடுகளிற்கிடையேயான தொடர்புகள் என்பவற்றைவிட சர்வதேச அமைப்புக்களிற் கிடையே ஏற்படும் - ஏற்படுத்தும் தொடர்புகள் - உறவுகள் என்பது சர்வதேச அரசியலில் முக்கிய அம்சமாக உள்ளது.

அத்துடன் இன்று விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக நாடுகளிற்கிடையேயான தொடர்புகள் வளர்ச்சியடைந்துள்ளன. போக்குவரத்து சாதனங்களில் ஏற்பட்ட முன்னேற்றம், தொடர்பு சாதனங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி போன்றன காரணமாக தேசங்களிற்கிடையேயான தொடர்புகள் - உறவுகள் என்பன மிகவும் நெருக்கமாக உள்ளதோடு அரசியல் வளர்ச்சி காரணமாக செய்மதி தொடர்புகள் கணனி (Computure) மற்றும் இன்ரர் நெற் (Inter - Net) போன்றவற்றின் செயற்பாடுகளால் சர்வதேச அரசியல் ஒரு கவர்ச்சிகரமானதாகவும் சர்வதேச சமூக பரப்பையும் அகலமானதாகவும் ஆக்கியுள்ளது.

சர்வதேச அரசியலில் பங்குபற்றுவதற்கு எல்லா தேசிய அரசுகளுக்கும் சமசந்தர்ப்பமும், அதிகாரமும் உரிமையும் உண்டு. சர்வதேச சட்டத்தின் முன் நாடுகள் அனைத்தும் சமனானவை. ஆனால் நடைமுறையில் பெரிய நாடுகளின் வல்லமையும் சிறிய நாடுகளின் இயலாத்தன்மையும் காணப்படுகிறது. இன்று உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள் ஏதோ ஒரு வல்லரசுகளின் தயவிலேயே வாழ்கின்றது. அரசியல் ரீதியிலோ, இராணுவ ரீதியிலோ, பொருளாதார ரீதியிலோ எந்தவொரு நிலையிலும் நாடுகள் ஒன்றையொன்று சார்ந்து ஒன்றில் ஒன்று தங்கி வாழும் யதார்த்தத்தை உணர்ந்து கொள்ள முடிகிறது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் சர்வதேச அரசியல் பனிப்போர் அரசியலாக மாறியது. கம்யூனிச சித்தாந்தத்தைக் கொண்ட சோவியத் யூனியன் பல நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய மட்டங்களில் தனது சோஷலிச கோட்பாட்டைத் திணித்தது. இந்நிலையில் அச்சம் கொண்ட அமெரிக்கா சோவியத் சோஷலிச கோட்பாட்டை எதிர்த்து, முதலாளித்துவக் கோட்பாட்டை புகுத்துவதில் பல ஐரோப்பிய நாடுகள் மட்டத்தில் வெற்றி கொண்டு பல நாடுகளை தனது கட்டுப்பாட்டிற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்தது. இவ்வாறு வல்லரசுகளின் கோட்பாட்டு திணிப்புக்களால் பல தேசிய அரசுகள் தமது தனித்துவத்தை இழந்தது.

இராணுவரீதியில் தம்மைப் பலப்படுத்த ஒவ்வொரு நாட்டுக்கும் உரிமையுண்டு ஆனால் எல்லா நாடுகளும் ஒரே வல்லமை பெற்றதென்று கூறமுடியாது. அத்துடன் வல்லரசுகளின் இராணுவ முஸ்தீபு பலம் குன்றிய நாடுகளை தம் செல்வாக்கின் கீழ் அல்லது ஆக்கிரமிப்பின் கீழ் கொண்டு வந்தது. இந்நிலையில் பல நாடுகள் தாம் ஆக்கிரமிக்கப்படுவோம் என்ற நிலையில் வல்லரசுகளின் ஓர் அணியில் சார்ந்தே தேசிய அரசுகள் சர்வதேச அரசியலில் இயங்கும் நிலையைக் காணலாம். அந்த வகையில் தான் அமெரிக்காவின் இராணுவக் கூட்டாகிய நேட்டோ (NATO) அணியிலும் சோவியத்தின் வார்சோ (WARSAW) அணியிலும் சேர்ந்து இயங்கி வருவதைக் காணலாம். இருந்த போதும் இந்த இரு அணிகளையுமே சாராது நடுவுநிலமை வழியிலே பல புதிய அரசுகள் இணைந்து அணிசேரா அமைப்பை (Non - Alignment) ஏற்ப்படுத்தி இயங்கி வருவதைக் காணலாம்.

முன்பு போல் இப்போதும் தேசிய அரசுகள் பல பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றன. இந்நிலையிலே தமது பிரச்சனைகளைத் தீர்க்க ஏனைய நாடுகளின் உதவியை நாடுகின்றன. அரசியல் பொருண்மிய சமூக ரீதியில் உள்நாட்டு மட்டத்தில் ஏற்படும் குழப்பங்களால் அவை யுத்தங்களாக மூழ்கின்றன. அந்த சந்தர்ப்பத்தில் வெளிநாடுகள் உள்நாட்டு பிரச்சனைகளில் தலையிடுவதற்கும், சர்வதேச மயப்படுத்தவும் முயல்கின்றன. இலங்கை, இஸ்ரேல், பாலஸ்தீனம், காஸ்மீர் போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளை உதாரணமாக கூறலாம். அத்துடன் அடக்கப்படும் ஒரு இனத்திற் கெதிராக ஆளும் இனம் வன்முறையைக் கையாளும்போது மனித உரிமைகளை மீறும் அநேக சந்தர்ப்பங்களை அரசுகளோ, அமைப்புக்களோ தெரிந்தோ தெரியாமலோ செய்கின்றன. இவற்றை தட்டிக் கேட்கவும், சுட்டிக்காட்டவும் ஏனைய நாடுகள் உரிமை பெற்றுள்ளன. இது மட்டுமன்றி சர்வதேச அரசியலிலே தனித்து அரசாங்கங்களுடான தொடர்புகள் மட்டும் ஆராயப்படுவதில்லை. மாறாக ஓர் அரசில் வாழும் மக்கள் எவ்வாறு வாழ்கிறார்கள், மக்களுக்கும் அரசுக்கும் இடையிலே இருக்க வேண்டிய கடமைகள் என்ன உரிமைகள் என்ன என்ற ரீதியில் எல்லாம் இன்று சரவதேச அரசியலில் நோக்கப்படுகிறது. மனித உரிமைகள் மீறப்படும் பட்சத்தில் தட்டிக் கேட்கும் உரிமையை சர்வதேச சட்டங்கள் ஏனைய நாடுகளுக்கும் வழங்கியுள்ளமையால் சர்வதேச அரசியலில் தேசிய அரசுகள் அவற்றின் அபிப்பிராயங்களுக்கும் மதிப்பளித்தே செயற்படுகின்றன, செயற்பட வேண்டி இருக்கின்றது.

உள்நாட்டு அரசியல் பிரச்சனைகளை எதிர் நோக்கும் அரசானது, தன்னுடைய இராணுவ இயலாத் தன்மையிலோ, போராட்டத்தை முன்னெடுக்கவோ, மழுங்கடிக்கவோ அயல் நாட்டு உதவியை நாடுகின்றன. உதாரணம் இலங்கை–இந்தியா; வியட்னாம் - அமெரிக்கா; ஆப்கானிஸ்தான்–சோவியத் போன்றவற்றைக் கூறிக் கொள்ளலாம். இவ்வாறு இராணுவ கையாலாகாத்தனத்தால் பிறநாடுகள் உள்நாட்டு அரசியலில் தலையிட வழிவகுக்கின்றது. இவற்றை நோக்கும் போது சர்வதேச அரசியலின் இயல்பை உணர்ந்து கொள்ள முடிகிறது.

இதே போல பொருளாதார ரீதியிலே பார்க்கும் போது உலகின் மூன்றில் ஒரு பகுதி நாடுகள் வறுமையில் வாட சில நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் செல்வச் செழிப்பில் திளைத்துள்ளது. இந்நிலையில் பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கும் நாடுகளுக்கு அந்நிலையில் விருத்தியடைந்த நாடுகள் பணரீதியிலோ பொருள் ரீதியிலோ உதவி வழங்குகின்றன. அதாவது வழங்கப்படும் உதவி நன்கொடை அடிப்படையிலோ, கடனடிப்படையிலோ வழங்கப் படும்போது உதவி பெற்ற நாடுகள் உதவிவழங்கும் நாடுகளின் சொல்லை செவிமடுக்க வேண்டியுள்ளது. இவற்றை பல புதிய அரசுகளில் காணலாம்.

இவ்வாறான தன்மைகளைக் கொண்டு பார்க்கும் போது இன்றைய அணுசக்தி யுகத்தில் மனித வர்க்கத்தின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் தேசிய அரசுகளிற்கு இருக்கும் வல்லமையை ஜோன் ஹேர்ஸ் போன்ற சிந்தனையாளர்கள் கேள்விக் குறியாக்கியுள்ளனர். அதாவது அரசியல் தீர்மானங்களை எடுப்பதில் மட்டும் இறைமைத் தன்மையை நாடும் தேசிய அரசுகள் ஏனைய யாவது தமது பொருளாதார மற்றும் பாதுகாப்பு பிரச்சனைகளைத் தீர்க்க முடிகின்றதா? இவை எல்லா நிலைகளிலும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலுகிறதா? இன்று வல்லரசுகள் கூட தம் பொருளாதாரத்திற்கு இன்னும் பல நாடுகளில் தங்கி இருக்கின்றன. இன்று வறுமை உலகளாவிய வறுமை ஒழிப்பு, சுகாதாரவசதி, உயர் கல்வி வாய்ப்பு, பாரிய குடியேற்றத் திட்டங்களை உருவாக்குவதிலும் சர்வதேச நிறுவனங்களே பெரும் அக்கறை காட்டுகின்றன. ஆகவே சர்வதேச சமூகம் உருவாகி வருகிறது என்பதே யதார்த்தம் சொல்லும் உண்மையாகும்.

இவ்வாறு சர்வதேச அரசியலில் தேசிய அரசுகளின் இறைமைத் தன்மையைப் பார்க்கும் போது சர்வதேச உறவுகளின் அடிப்படையிலே தேசிய அரசுகளின் செயற்பாடு மிகவும் நெருக்கமானதாகவும் - ஒரு தங்கு நிலை, அரசியல் போக்கையும் அளித்துள்ளது. இதுதான் இன்றைய சர்வதேச அரசியல் நிலமை.

எவ்வாறெனினும் சர்வதேச அரசியலில் வல்லமையைப் பெற எல்லா நாடுகளுமே விரும்புகின்றன. அவற்றை வளர்ப்பதற்கு பல பிராயத்தனங்களை மேற்கொள்கின்றன ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை இராணுவ தளபாட ரீதியிலும், பொருண்மிய உயர்ச்சியிலும் போட்டி போட்டு வந்த அரசுகள் இப்போது உருவாகியுள்ள விஞ்ஞான யுகத்தில், தொழில் நுட்பத்தைப் பெருக்கி தமது வல்லமையைப் பெருக்க விளைகின்றன. அதற்காக இன்று சர்வதேச அரசியலிலே அதற்கான பலபிரயத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இன்று உலகில் இராணுவ ரீதியில் ஒதுங்கி நிற்கும் ஜப்பான் பொருளாதார ரீதியிலே தனது தொழில் நுட்ப அறிவால் முன்னிற்கின்றது. இந்நிலையில் ஜப்பானை ஒத்து வருவதற்கு பல இராணுவ வல்லரசுகளே போட்டிபோடும் நிலையை அவதானிக்கலாம்.

இவ்வாறான அரசியல் சூழ்நிலையிலே நகர்ந்து வந்த சர்வதேச அமைப்பிலே 1989, 90களில் ஏற்பட்ட வியக்கத்தக்க மாற்றம் சர்வதேச அரங்கில் ஒரு புதிய ஒழுங்கை அமைத்துள்ளது. 1991இல் ஏற்பட்ட சோவியத்துடைவு இதுவரை நிலவிவந்த பனிப்போர் அரசியலுக்கு முற்றுப்புள்ளிவைத்தது. அதாவது இதுவரை காலமும் அதிகார அரசுகள் மூலம் சர்வதேச அரசியலிலே வலுச்சமநிலை பேணப்பட்டு வந்திருக்கின்றது. இதுவரை காலமும் ஒன்றுக்கு மேற்பட்ட வல்லரசுகளின் செயல்பாடுகளால் வழிநடத்தப்பட்டு வந்த அரசியல் நிலைமை போய் இந்நூற்றாண்டின் இறுதி ஏக வல்லரசின் பிடியில் (ஐக்கிய அமெரிக்கா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்துள்ளது. இங்கேதான் சர்வதேச அரசியலின் முக்கியத்துவமும் அக்கறையும் புதியகோணத்தில் ஆராயப்படுகின்றது. சோவியத்யூனியன் மறைவு - பனிப்போர் முடிவு — தனித்த நிலையில் காணப்படும். ஐக்கிய அமெரிக்கா - இதன் மத்தியில் நிகழும் சர்வதேச அரசியல் போன்ற எண்ணங்களின் அடிப்படையில் சர்வதேச அரசியல் ஆய்வு பல சர்ச்சைகளின் மத்தியில் ஆராயப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்கா தனித்த நிலையில் வல்லரசுகளாக விளங்கும்போது ஐக்கிய நாடுகள் சபை என்பது அதன் கைப்பொம்மையாக மாறும் வாய்ப்பு ஏற்படுமா? சர்வதேச அரசியல் அரங்கில் ஒரு வலுச்சம நிலையைப் பேணும் நிலையில் ஐக்கிய அமெரிக்காவிற்கு எதிராக எந்தவொரு நாடும் இன்னும் வெளிப்படையாகச் செயற்பட முன்வராத போதும் சனத்தொகையிலும் நிலப்பரப்பிலும், பொருண்மிய முன்னேற்றத்திலும் முன்னணியில் நின்று பொதுவுடைமைச் சித்தாந்தத்திலே விசுவாசமும் கொண்டுள்ள சீனாவின் சர்வதேச பிரவேசமும் செயற்பாடும் ஐக்கிய அமெரிக்காவின் ஏக போகத்தைக் கட்டுப்படுத்துமா? என்பது தான் இன்றைய சர்வதேச அரசியலையும் ஆய்வாளரையும் முடுக்கி விட்டுள்ள ஒரு காலமாக இன்றையபகுதி விளங்குகிறது.

எனவே நாம் சர்வதேச அரசியலை ஆராயும்போது அதன் முன்னைய நிலைப்பாடு எப்படி இருந்தது. அதனைத் தொடர்ந்து வந்த காலங்களில் நிகழ்வுகள் என்ற சர்வதேச அரசியலையும் ஆய்வையும் எவ்வாறு நடத்தியுள்ளது, என்ற கோணத்திலே பார்க்கும்போது சர்வதேச அரசியல் என்பது நேற்றைய வரலாற்றைச் சொல்லும் அரசியலாகவும், நிகழ்காலப் போக்கை சித்தரிக்கும் ஒரு இயலாகவும், எதிர்கால நிகழ்வைப்பற்றிய அக்கறையுள்ள ஓர் ஆய்வாகவும் உள்ளது. எனவே சர்வதேச அரசியல் பற்றிய ஆய்வு இடம், சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப பல்வேறு பரிமானம் பெற்று தொடர்ந்து வளர்ந்து வருவதை அவதானிக்கலாம்.

## Reference


* Rama S. Melkote, Narasimha Rao, A International Relations, ( Sterling Publishers Private Limited — 1993 )
* தார். எஸ். என். 1919 முதல் சர்வதேச உறவுகளும் உலக அரசியலும் – 1, Translation. Rajagopal. N. J. – (தமிழ் வெளியீட்டுக் கழகம் - தமிழ்நாடு. 1967)
* திருநாவுக்கரசு மு; புதிய சர்வதேச அரசியல், (நியூ ஏரா பதிப்பகம், July - 1991)
* நாதன். எஸ். கே. எஸ். சர்வதேச அரசியல்


வயிற்றுப்போக்கு, மலேரியா, சயரோகம் போன்ற தொற்றுநோய்களினாலும் ஒட்டுண்ணி நோய்களாலும் ஒவ்வோராண்டிலும் சுமார் 1 கோடியே 70 இலட்சம் மக்கள் மரணித்து வருகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தில் "பணவீக்கம்"
## Inflation in Economy

ஜே. தயாபரன்

பண்டமாற்றுப் பொருளாதாரத்தின் பின்னரான பொருளாதார நடவடிக்கையில் பணப் பொருளாதாரம் தோற்றம் பெற்றது. இவ்வகைப் பொருளாதாரத்தின் அறிமுகத்தினால் செயற்றிறன் வாய்ந்த, இலகுபடுத்தப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்கு பணம் இன்றியமையாத பொருளாதார செயற்பாட்டுக் கருவியாக மாறியது. எனினும் இவ்வாறான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்ற பணமானது பக்கவிளைவுகளையும் உருவாக்குகின்றது. இப்பக்கவிளைவுகளில் மிகவும் முக்கியத்துவமானதும், குறிப்பாக வளர்முக நாடுகளை அதிகளவிற்கு அச்சுறுத்தும் பிரச்சனையாகவும், தேசிய பொருளாதார முகாமைத்துவத்தில் அதிகளவிற்கு அலசப்படும் விடயமாகவும் பணவீக்கம் அமைந்துள்ளது. எனவே நாம் இப்பணவீக்க பிரச்சினைகளை ஆராயும் முன் பணவீக்கம் என்றால் என்ன என்ற கருத்து ரீதியான விளக்கத்தினை முதலில் குறிப்பிடுவது பொருத்தமானது.

ஒரு நாட்டில் பொருட்கள், சேவைகளின் சராசரி விளைவுகளில் தொடர்ச்சியாக ஏற்படுகின்ற அதிகரிப்பே பணவீக்கம் என்பர். எனினும் இதனை விரிவாக நோக்கின், பொதுவாக் சிறிதான விலை அதிகரிப்பை பணவீக்கம் என கூறுவதில்லை. மேலும் குறுகிய காலத்தில் ஏற்படும் அதிகளவான விலை அதிகரிப்பும் பணவீக்கமாகக் கருதுவதில்லை. எனவே ஒரு நாட்டின் பொருட்கள் சேவைகளின் சராசரி விலை மட்டமானது தொடர்ச்சியாகவும், பெருமளவாகவும் நீண்டகாலத்தில் அதிகரித்துச் செல்லுமாயின் அதனை பணவீக்கம் என்பர். இப்பணவீக்கத்தினால் பணத்தின் கொள்வனவு ஆற்றல் அல்லது பெறுமதி தொடர்ந்து குறைவடைந்து செல்கிறது. இதன் தொடர்பாக பணவீக்கவீதம் என்பது பொது விலை மட்டத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பு வீதத்தினை நூற்று வீதமாக மதிப்பிட்டுக் கூறுவது ஆகும். அதாவது தொடர்ச்சியான இரு ஆண்டு காலத்தில் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பினை நூற்றுவீதமாகக் கூறுவதாகும்.

மேலும் பணவீக்கத்தினைப் பற்றிய அறிஞர்களது கருத்தினை நாம் நோக்குகின்ற வேளை, கிரௌதர் என்ற அறிஞரது கருத்துப்படி ''பணமதிப்பு குறைந்து கொண்டு செல்லுதல் பணவீக்கம்'' என்றார். பிகு (A. C Pigeu) என்பவர், ''மிகையான பண வெளியீட்டுப் பெருக்கத்தினால் தான் பணவீக்கம் ஏற்படும்'' என்றும் ''விலை அதிகரிப்பு நிலையினை பணவீக்கம் என உடன் கருத முடியாது'' என்றார். எனவே பண்டங்களின் கேள்வியும் நிரம்பலும் அதிகரித்து அதன் விளைவாக பொருளாதாரத்தில் முழு வேலைவாய்ப்பு (Full Employment) அடைந்த பின் விலை உயருவது விலை வீக்கம் (Price Inflation) என குறிப்பிடப்படும்.

---

ஜெ. தயாபரன்
பொருளியல் சிறப்புக்கலை
மூன்றாம் வருடம்
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பணவீக்கம் ஏற்படுத்தும் காரணிகள் ஒன்றிலொன்று தங்கி இருப்பதோடு நெருங்கிய தொடர்பும் உடையனவாகக் காணப்படுகின்றன. இவற்றினை வரையறை செய்யுமுன் பண வீக்கத்தின் வகையினை நோக்குவோம்.

i) கோட்பாடு ரீதியான பணவீக்கம்

ii) ஒரு நாட்டின் நாணய நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும் விளைவாக ஏற்படும் பணவீக்கம்

iii) ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பினைச் சீராக்குவதிலும், வர்த்தக நடவடிக்கை என்பவற்றாலும் ஏற்படும் பணவீக்கம்.

I. கோட்பாடு ரீதியான பணவீக்கம் :


இக் கோட்பாட்டு ரீதியான பணவீக்கம் இருவகைப்படும்.

1) கேள்வித்தூண்டல் பணவீக்கம்
2) செலவுத்தூண்டல் பணவீக்கம்

## கேள்வித்தூண்டல் பணவீக்கம்
(Demand Pull Inflation)

ஒரு நாட்டின் பொருட்கள் சேவைகள் மீது நுகர்வோன் கேள்வியானது மிகையாக காணப்படுமாயின் அங்கு பணவீக்கம் தோன்றும் அதாவது பொருட்கள் சேவைகளின் மொத்த நிரம்பலிலும் பார்க்க மொத்த கேள்வியானது அதிகரிக்குமாயின் இந்நிலை காணப்படலாம்.

கெயின்ஸ் என்னும் பொருளியல் அறிஞர் கூற்றுப்படி "ஒரு நாட்டில் முழு வேலைவாய்ப்பு ஏற்படும் முன் பொருட்கள் சேவைகளின் கேள்வி அதிகரித்து விலை கூடுமாயின் முதலீடு தூண்டப்படும் இந்நிலை விலையதிகரிப்பை ஏற்படுத்தினாலும் இந்நிலையினைப் பணவீக்கம் என்று கூறப்படுவதில்லை எனவே முழு வேலைவாய்ப்பு (Full Employment) ஏற்பட்ட பின் கேள்வி ஏற்படுமாயின் உற்பத்தி அதிகரிப்பதற்கான வாய்ப்பு இன்மையால் நிரம்பலை விஞ்சி கேள்வி அதிகரிக்கும் நிலை காணப்படும் போது விலை தொடர்ச்சியாக அதிகரிக்குமாயின் பணவீக்கம் ஏற்படும் இதுவே கேள்வித் தூண்டல் பணவீக்கம் ஆகும் இதனை பின்வரும் வரைபடம் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.





படம் 1

இவ்வரைபடத்தின்படி கேள்வி D இலிருந்து $D_1$, $D_2$ அதிகரிக்கின்றவேளை நிரம்பலானது $Y_*$ என்ற புள்ளியில் சமநிலை அடைகின்றது. இங்கு நிறை தொழில் மட்டத்தினை புலப்படுத்தும் புள்ளி E ஆகும். எனவே இந்நிறை தொழில்மட்டத்திற்கு பின்வரும் கேள்வியானது $D_3$, $D_4$ என அதிகரிக்கின்றது. இதனால் விலை P, $P_1$,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$P_2$ என்ற விலை அதிகரிப்பு நிலையைத்தாண்டி $P_3$, $P_4$ என விலை அதிகரிக்கின்றது இங்கு $P_3$, $P_4$ என்ற நிறை தொழில் மட்டத்திற்குப் பின்பு அதிகரிக்கும் விலையே பணவீக்கத்தினை ஏற்படுத்தும். இதுவே கேள்வித்தூண்டல் பணவீக்கம் எனலாம். இவ்வாறான பணவீக்கத்தினை மெய்ப் பணவீக்கம் (True Inflation) என்பர் இவ்வகையில் ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு, பண நிரம்பல் அதிகரிப்பு என்ற காரணிகளால் இது ஏற்படலாம்.



படம் 2 உற்பத்தி அளவு (தொகை)

## செலவுத்தூண்டல் பணவீக்கம்
Cost Push Inflation


செலவுத்தூண்டல் பணவீக்கம் என்பது பொருளை உற்பத்தி செய்யும் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பினால் ஏற்படும் பணவீக்கமே இதுவாகும் இந்நிலையானது மூலப்பொருள் விலை உயர்வு, இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீட்டின் விலை உயர்வு, தொடர்ச்சியான வரட்சி போன்றவற்றால் ஏற்படும். எனினும் ஊழியத்தினை எடுத்து நோக்குகையில் ஊழியர்கள் தமக்கு சம்பள உயர்வு கோரி நிற்கின்ற வேளையில் அவர்களுக்கான கூலியை உயர்த்த வேண்டி இருக்கும் இதனால் உற்பத்தி செலவு அதிகரிக்க, பொருட்களின் விலை மேலும் அதிகரித்து மீண்டும் தொழிலாளர் சம்பள உயர்வு கோரி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவர் இதனால் சம்பள உயர்வு, விலை உயர்வு என்பவற்றினால் ஏற்பட்ட செலவினங்களினால் இலாபநோக்கம் கருதி உற்பத்தியாளர் பொருட்கள் சேவைகளின் விலையை மீண்டும் உயர்த்துவர் இந்நிலையினை பின்வரும் வரைபடம் மூலம் நோக்குவோம்.

இங்கு வரைபடத்தின்படி கூலி உயர்வினால் உற்பத்திச் செலவு அதிகரித்து நிரம்பல் $S_1$ ஆனது $S_2$, $S_3$ ஆகக் குறைகிறது; இதனால் ஆரம்ப நிறை தொழில் மட்ட உற்பத்தி அளவு $M_1$ இலிந்து; $M_3$ ஆக குறைவடைகின்றது. எனவே மிகைக் கேள்வி (Excess Demand) ஏற்பட்டு விலையானது $P_1$ இலிந்து $P_2$, $P_3$ ஆக அதிகரித்துச் செல்வதை காணமுடிகின்றது.

கூலி அதிகரிப்பினால் பொருளின் மீது கேள்வி அதிகரிக்கின்ற அதே நேரம்; பொருளின் நிரம்பல் அதிகரிக்கவில்லையெனில், பொருளின் விலை அதிகரிக்கும் இதனால் மீண்டும் கூலி உயர்த்தப்படுமாயின் விலை அதிகரித்து பணவீக்கத்தினை ஏற்படுத்தும் இதனை ''கூலி விலைத் திரட்சி என்பர் இந்நிலையினை நாம் பின்வரும் வரைபட மூலம் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 3 கூலி

இவ்வரைபடத்தின்படி கூலியானது அதிகரிக்கப்பட அது விலையில் அதிகரிப்பினை ஏற்படுத்தி, அதன் விளைவாக ஏற்படும் பணவீக்கமானது முடிவில்லாது அதிகரித்துச் செல்லும் அதாவது கூலியானது $W_1$, $W_2$, $W_3$, $W_4$ என அதிகரிக்கின்ற வேளை விலையும் $P_1$, $P_2$ $P_3$, $P_4$ என அதிகரித்துச் செல்லுகின்றது இதுவே "கூலி விலை திரட்சி" ஆகும் இதனை அம்புக் குறிகள் காட்டுகின்றன.


## பணவீக்க இடைவெளி
## Inflationary Gap

முழுவேலைவாய்ப்பின் செலவு, விலை, என்பன அதிகரிக்கின்ற வேளை உற்பத்திக் காரணி நெகிழ்ச்சி அற்ற தன்மையில் காணப்படுமாயின் விலையானது அதிகரித்து பணவீக்கம் ஏற்படுமெனின் அது தூய பணவீக்கம் (Pure Inflation) எனப்படும்.

எனவே திட்டமிட்ட வருமானமும் திட்டமிட்ட செலவும் சந்திக்கின்ற புள்ளியில் உத்தம சமநிலை(Optimul Equilibrium) நிர்ணயிக்கப்படும் இந்நிறை தொழில்மட்ட சமநிலையின் பின் கேள்வி அதிகரிக்குமாயின் அங்கு வீக்க இடைவெளி காணப்படும் இவ்வீக்க இடைவெளியானது பணவீக்கத்திற்கு காரணமாக அமைவதால் இது பணவீக்க இடைவெளி எனப்படும் இது $45^0$ வருமானக் கோட்டினை வெட்டிச் செல்லும் புள்ளிக்கு அப்பால் காணப்படும் இதனை பின் வரும் வளையி மூலம் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 4 வருமானம்

இங்கு a, b என்பது வீக்க இடைவெளியைக் காட்டி நிற்கின்றது b என்ற உத்தம புள்ளி (நிறை தொழில் மட்டம்) யின் பின்பும் செலவு C + I + G இல் இருந்து (C + I + G)' என அதிகரிப்பது பணவீக்கத்திற்கு தூண்டுகோலாக காணப்படுகின்றது. இவ்வாறு ஏற்படும் பணவீக்கத்தினை கட்டுப்படுத்துவது கடினம் ஆகும்.

பணத்தின் வீக்க அதிகரிப்பு வேகத்தினை அடிப்படையாகக் கொண்டு பின் வருமாறு வகைப்படுத்தலாம் இதற்கு ஆதாரமாக 'கல்பிரயித்' என்ற பொருளியல் அறிஞருடைய கருத்து அமைகிறது இவர் ஒரு குழந்தையின் கர்ப்பத்தினை அடிப்படையாக் கொண்டு விளக்குகின்றார். அதாவது கர்ப்பம் ஏற்பட முன்னர் தடுக்க முடியும்; ஆனால் அது முதிர்ச்சியடைந்து குழந்தையாகிப் பிறந்த பின்னர் அதனை தடுக்க முடியாதது போன்று பணவீக்கம் ஏற்படமுன்பே அதனைக் கண்டறிந்து தடுக்க வேண்டும் இல்லையேல் அது தோன்றி பல பிரச்சனைகளைத் தோற்றுவிக்கும் என்றார்.

அதாவது குழந்தை தவழ்வதும், பின் நடப்பதும், பின் ஓடுவதும், பாய்வதும் போன்று பணவீக்கம் பின்வருமாறு வகைப் படுத்தப்படுகின்றது.

1. தவழும் பணவீக்கம்/ஊரும் பணவீக்கம் (Creeping Inflation)
2. நடக்கும் பணவீக்கம் (Walking Inflation)
3. பாயும் பணவீக்கம் (Galloping or Hyper Inflation)

### 1. தவழும் பணவீக்கம்/ ஊரும் பணவீக்கம் (Creeping Inflation)

தவழும் பணவீக்கமானது உற்பத்தி அளவிற்கு மேல் கேள்வி அதிகரிக்கும் நிலைமையிலும், நாட்டில் பணநிரம்பல் அதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரித்து இருப்பதிலும் இது காணப்படலாம். ஏறக்குறைய ஒரு சத வீதத்திற்கும் மூன்று சதவீதத்திற்கும் குறைவான விலை அதிகரிப்பு வீதத்திற்கும் இவ்வகைப் பணவீக்கமானது ஓரளவு ஆபத்தினை தோற்றுவிக்கும்.

### 2. நடக்கும் பணவீக்கம் (Walking Inflation)

இவ்வகைப் பணவீக்கமானது மூன்று முதல் நான்கு சதவீதத்திற்கு இடையில் விலை அதிகரிப்பு காணப்படும். சில வேளைகளில் இது அதிகரித்து ஓடும் பணவீக்கமாக (Running Inflation) ஆகவும் அமைந்துவிடும்.

### 3. பாயும் பணவீக்கம் (Galloping or Hyper Inflation)

இப்பணவீக்கமானது மிகையான பணவீக்கமாக கருதப்படும். இது பணப் பெறுமதியின் முகப் பெறுமதியானது தொடர்ச்சியாக வீழ்ச்சி அடையும். இவ்வகைப் பணவீக்கமானது உலக நாடுகளில் போர் ஏற்படுவதன் காரணமாக ஏற்படும். இதனைக் கட்டுப்படுத்துவது கடினம்.

### பணவீக்கச் சுழலேறி (Inflationary Spiral)

பணவீக்கமானது ஆரம்பத்தில் கேள்வித்தூண்டல் என்றும், செலவுத்தூண்டல் என்றும், கூலித்தூண்டல் என்றும் பாகுபடுத்தப்பட்டது. ஆனால் பணவீக்கமானது தொடர்ச்சியாக நிலவும்போது இவ்வாறு பாகுபடுத்த முடியாது. எவ்வாறெனில் இப்பணவீக்கமானது எதனால் ஏற்பட்டது என வரையறுக்கப்படமுடியாதவாறு கூலி அதிகரிக்க, அதனால் பொருட்களின் கேள்வியும் அதிகரிக்கின்ற அதே நேரம் பொருவின் விலையும் அதிகரிக்கின்றது. இதனால் மீண்டும் கூலி உயர (தொழிலாளர் பேரம் பேசி கூலி உயர்த்தல்) பொருளின் உற்பத்திச் செலவும் அதிகரிக்கின்றது. இவ்வாறு ஒன்றிலொன்று தங்கியிருந்து பக்கவிளைவினை ஏற்படுத்தும். பணவீக்கத் தினையே பணவீக்கச் சுழலேறி எனலாம். இது நாட்டிற்கு பெரும் ஆபத்தினை ஏற்படுத்தும்.

### II. பொருளாதாரத்தில் நாணய நடைமுறைகளை ஒழுங்கு படுத்துவதனால் ஏற்படும் பணவீக்கம்:-

இதுபற்றி இலங்கை பொருளாதாரத்திலும் ஆராய முடியும். உள்நாட்டு நாணய வெளியீட்டில் ஏற்படும் அதிகரிப்பு நாணயத்தின் உள்நாட்டு வெளிநாட்டுப் பெறுமதியில் மாற்றத்தினை ஏற்படுத்துவதோடு மட்டுமன்றி அரசு வரவு செலவுத் திட்டத்தின் சமமின்மைக்கு நிதியீட்டம் செய்யும் முகமாக வெளிநாட்டுக் கடன்கள் வங்கிசார் மூலகங்கள், பணநிலுவையின் பயன்பாடு போன்றவற்றுடன் வெளிநாட்டு 'இணைக்கிணை' நிதியத்திலிருந்து பெறப்படும். பணம் என்பனவும் பணவீக்கத்தினை ஏற்படுத்தும் (வங்கிசாரா மூலகங்களிலிருந்து பெறப்படும் நிதியானது பணவீக்கத்தினை ஏற்படுத்த மாட்டாது).

மேலும் வணிக வங்கியானது மக்களுக்கு வழங்குகின்ற பல் வேறுவகையான கடன்கள் போன்றவற்றாலும் பணநிரம்பல் அதிகரித்து பணவீக்கம் ஏற்படுத்தும். இது வணிக வங்கிகளின் வைப்பாக்கத்தின் மூலமான பணவீக்கமாகும்.

### III. ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பினைச் சீரமைப்பதிலும் வர்த்தக நடவடிக்கையினாலும் ஏற்படும் பணவீக்கம்:-

ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பினை சீரமைப்பதன் காரணமாக அங்கு வெளிநாட்டு உதவிகள் பெறப்படுவது அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியமாகும். உதாரணமாக இலங்கையானது ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றிடம் இருந்து உதவிகளைப் பெற்று நாட்டின் அபிவிருத்திக்கு பயன் படுத்துவதனால் பணவீக்கம் தோன்றுவதற்கு வழிகோலுகின்றன.

மேலும் வர்த்தக தொடர்புடைய நாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்வதனால், அங்கு இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கமும் ஏற்பட வாய்ப்புண்டு. அதாவது வெளிநாட்டில் இருந்து பொருட்களினை இறக்குமதி செய்யும்போது அந்நாட்டில் பணவீக்கம் காணப்படுமாயின் உள்நாட்டில் அப்பொருளின் விலை உயர்வாகக் காணப்படும் இது இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கம் எனப்படும்.

இலங்கையை எடுத்துக் கொள்வோமாயின் தாராள பொருளாதாரக் கொள்கையின் நாணய மாற்று விதத்தினை மிதக்க விடுவதால் தொடர்ச்சியான இலங்கையின் நாணய பெறுமதி வீழ்ச்சியினால் உள்நாட்டில் பொருளின் விலை உயர்வாக இருக்கும். அத்துடன் வரியும் விதிக்கப்படின் பொருளின் விலை மேலும் மேலும் கூடிச் செல்லும்; இது பணவீக்கத்தினை ஏற்படுத்தும்.

## வெளிப்படையான பணவீக்கம் Open Inflation

அரசானது பொருளாதாரச் செயற்பாட்டில் எவ்வித தடையும், கட்டுப்பாடும் இல்லாததன் காரணமாக, சந்தை சக்திகளான கேள்வியும் நிரம்பலும் சந்தை நிலமைக்கேற்ப சுயமாக மாற்றமடைந்து செல்லும். இதனால் விலை உயர்வடைந்து செல்லுமாயின் அந்நிலையில் அரசு தொடர்ந்தும் தலையிடாக் கொள்கையை கடைப்பிடிக்குமாயின் அதன் விளைவாக பொருட்களின் விலைகள் அதிகரிப்பதன் மூலம் ஏற்படும் பணவீக்கமே இவ் வெளிப்படையான பணவீக்கம் எனலாம்.

## அமுக்கிய பணவீக்கம் Suppressed Inflation

அரசானது கட்டுப்பாடுகளை விதித்து சந்தை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்ற வேளை ஏற்படும் பணவீக்கமே அமுக்கிய பணவீக்கம் ஆகும். அதாவது சந்தையில் பொருளின் விலையை அரசு நிர்ணயிக்கின்றபோது (உத்தரவாதவிலை / கட்டுப்பாட்டு விலை) விற்பனையாளர் இலாப நோக்கம் கருதி பொருட்களினை பதுக்குவர். இந்நிலையில் விலை முன்பிலும் மலிவாகக் காணப்படுவதால் மிகைக்கேள்வியானது காணப்படும். இவ் அதிகரித்த கேள்வியானது கறுப்புச் சந்தையில் பொருட்களின் விலையை அதிகரிக்கச் செய்யும். இவ்வாறு கட்டுப்பாட்டு விலையின் தூண்டுதலால் ஏற்படும் பணவீக்கமே அமுக்கிய பணவீக்கம் எனப்படும்.

இந்நிலையை நீக்குவதற்கு அரசு சிறந்த கண்காணிப்பினை மேற்கொண்டு நிரம்பலின் அளவினை பங்கீடு செய்ய வேண்டும் அல்லது தட்டுப்பாடான மிகைக் கேள்வி அளவு பொருட்களினை கட்டுப்பாட்டு விலைக்கு இறக்குமதி செய்து வழங்க வேண்டும்.

## பணவீக்கமும் பிலிப்ஸ் வளைகோடும் Inflation and Phillips Curve


ஃபிலிப்ஸ் என்ற அறிஞர் விலைமட்டம், கூலி வீதம், வேலையின்மை வீதம் என்பவற்றினை ஆராய்ந்து அவற்றினூடாக விளக்கிய வளைகோடே அவரது பெயரால் ஃபிலிப்ஸ் வளைகோடு (Phillips Curve) எனப்பட்டது. இவருடைய கருத்தின் படி, இம்மூன்றும் ஒன்றிலொன்று தங்கியிருந்து பல பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது வேலையின்மையை (Unemployment) குறைப்பதற்கு கூலி வீதத்தினை உயர்த்த வேண்டும். இந்நிலையில் இக்கூலிவீதமானது நாட்டின் பொதுவிலை மட்டத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்துவனவாகவே அமைகிறது. இது பணவீக்கத்திற்குத் தூண்டுகோலாக அமையும். இம் மூன்று முரண்பட்ட நிலைகளில் இருந்து சமநிலையடைவதன் மூலம் நாட்டின் பண வீக்கமானது ஓரளவு கட்டுப்படுத்தப்படும்.

இதனை பின்வரும் வளைகோடு காட்டுகின்றது.




படம் 5 $\frac{\Delta u}{u}\%$ Rate of Unemployment (u)

Page 48 Phillips Curve
Inflation, Saving & Growth in Developing Economies
by A. P. Thirlwall

மேற்படி வரைபடமானது கூலிவீதம், விலைவீதம், வேலையின்மை வீதம் என்ற மூன்று முரண்பட்ட நிலைகளிலிருந்து சமநிலைபடைவதன் மூலம் நாட்டின் பணவீக்கத்தினை பாதுகாக்கலாம்.

அதாவது கிடையச்சில் வேலையின்மை வீதமும் $\left(\frac{\Delta U}{U}\right)$ குத்தச்சில் கூலி வீதமும் $\left(\frac{dw}{w}\right)$ அதன் எதிரே உள்ள குத்தச்சில் விலை வீதமும் $\left(\frac{dp}{p}\right)$ காட்டப்படுகின்றது.

இதன்படி ஒரு நாடானது வேலையின்மையை 3% ஆக குறைக்கவேண்டுமெனின் கூலி வீதத்தினை 3% ஆக வைத்திருக்க வேண்டும். இந்நிலையில் விலைவீதமானது '0' (பூச்சியம்) ஆக காணப்படுவதால் இந்நிலையில் பணவீக்கம் ஏற்படமாட்டாது. எனவே 3% என்ற கூலிவீதமும் 3% வேலையின்மையும் இங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இதற்குமேல் கூலி வீதத்தினை அதிகரித்தால் அவ்வதிகரிப்பானது விலை மட்டத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் இவ்வதிகரிப்பு பணவீக்கத்தினை ஏற்படுத்தும் இதனை படம் 1.5 காட்டுகிறது (P P Curve)

இலங்கையில் பணவீக்கமானது கடந்த காலங்களில் பின்வருமாறு காணப்பட்டது என்பதனை மத்திய வங்கியின் தரவுகள் விளம்புகின்றன. (கொழும்பு நுகர்வோன் விலைச் சுட்டெண்ணின்படி பணவீக்கப்போக்கு காட்டப்படுகின்றது:

| ஆண்டு | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1995 | 1986 | 1987 | 1988 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பணவீக்க வீதம் | 26.1 | 18.0 | 10.8 | 14.0 | 16.6 | 1.5 | 8.0 | 7.7 | 14.0 |

| ஆண்டு | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | — |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பணவீக்க வீதம் | 12.2 | 21.5 | 12.0 | 11.0 | 12.0 | 8.4 | 7.7 | 15.96 | |

பணவீக்க வீதமானது 1980ஆம் ஆண்டில் 26.1% ஆகவும் 1990ஆம் ஆண்டில் 21.5% என்ற உயர்வான தன்மை காணப்பட்டது.

இலங்கையில் பணவீக்கத்தினை அளவிடும் குறிகாட்டிகள்.

1. கொழும்பு நுகர்வோன் விலைச் சுட்டெண் (1952 = 100) (Colombo Consumers' Price Index)
2. மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (1974 = 100) (Wholesale Price Index)
3. மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி (1982 = 100) (GNP Deflatior)
4. மத்திய வங்கியின் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் (1978 = 100) (Central Bank Cost of Living Index)
5. தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களின் கொழும்பு சில்லறை விலைகள் (Colombo Retail Prices of Selected Commodities)
6. கொழும்பு பெரும்பாக நுகர்வோன் விலைச் சுட்டெண் (1989 = 100) (Greater Colombo Consumer's Price Index)

குறிப்பு : கொழும்பு நுகர்வோன் விலைச் சுட்டெண்ணும், மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணும், தேசிய உற்பத்திச் சுருக்கியும் முக்கியமானவை

## பணவீக்க விளைவுகள்
## The Effects of Inflation

இவ்வகையில் பணவீக்கத்தின் மூலம் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பின்வருமாறு சுருக்கமாக பார்ப்போமாயின்

1. ஒரு பொருளாதாரத்தில் முதலீட்டு நடவடிக்கையும், பொருள் உற்பத்தி நடவடிக்கையும், வேலைவாய்ப்பும் பணவீக்கத்தின் ஆரம்பத்தில் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் முழு வேலை வாய்ப்பின் பின் ஏற்படும் விலையதிகரிப்பே கூடிய பணவீக்கத்தினை ஏற்படுத்தும். இது அதிக தீமையினைப் பயக்கும்.

2. கடன்பட்டோர் பணவீக்கத்தினால் நன்மையினைப் பெற, கடன் கொடுத்தோர் தீமையினை அனுபவிப்பர். அதாவது கடன்பட்டோரிற்கு வட்டி வீதமானது நிலையானதா சுகாணப்படுவதால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடனுக்கான செலவு குறைவாக காணப்படும். அத்துடன் வருமானமானது இக்காலத்தில் உயர்வாக இருப்பதால் கடனைத் திருப்பிச் செலுத்தும் போது கொள்வனவு ஆற்றல் குறைந்த பணத்தினை செலுத்துவதால் நன்மை அடைவர்.

கடன் கொடுத்தவர்கள் பணவீக்கத்திற்கு முன்பு கொடுத்திருப்பின் வட்டி வீதம் நிலையானதாக இருப்பதால், வருமானம் குறைவாக இருப்பதுடன் கொள்வனவுச் சக்தி குறைந்த பணத்தினை பெறுவதால், நட்டம் அடைவர்.

3. உற்பத்தியாளர் நன்மையினைப் பெற்றுக் கொள்வர். அதாவது உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் விலையானது பணவீக்க காலத்தில் அதிகமாகக் காணப்படும். இதனால் இலாபம் அதிகரிக்கும். அத்துடன் இருப்பின் பெறுமதி, விலை என்பன அதிகரிப்பதால் இலாபத்தினையே பெறுவர்.

4. சம்பளம், இளைப்பாற்றுச் சம்பளம், உணவு முத்திரை போன்ற நிலையான வருமானம் பெறுபவர்கள் இதனால் தீமையினையே அனுபவிப்பர். ஆனால் இவை அதிகரிக்கப்படினும் பணவீக்க அதிகரிப்பு இவற்றின் அதிகரிப்பு வீதத்திலும் உயர்வாக காணப்படுவதால் தீமையினையே அனுபவிக்க நேரிடும்.

5. உள்நாட்டுப் பொருளின் விலை அதிகரிப்பதால் ஏற்றுமதிக்கான கேள்வி குறைவடைந்து அதன் விளைவாக ஏற்றுமதி வருமானம் குறைய, இறக்குமதிக்கான கேள்வி கூடி, இறக்குமதிகள் அதிகரித்து சென்மதி நிலுவை பாதகநிலையினை ஏற்படுத்தும்.

6. பணவீக்கமானது விவசாயிகளைப் பொறுத்த வரையில் நன்மையினையே பெறுவர். ஏனெனில் கடனைப் பெற்று விவசாயம் செய்தாலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் விலையானது அதிகரிப்பதால் இலாபம் அதிகரிக்கும். கடனை மீண்டும் திருப்பிச் செலுத்துவது இலகுவாக அமையும்.

7. நிலையான வட்டி வீதம் தரும் கடன் பத்திரங்களில் முதலீடு செய்பவர் தீமையினை அனுபவிக்க நேரிடும். ஆனால் ஆவணங்கள், பங்குகள் என்பனவற்றில் முதலிடுவோர், இலாபம், பங்குலாபம் என்பன பெறுவதனால் இலாபத்தினை அனுபவிக்க முடியும்.

8. உள்நாட்டில் பொருட்களின் விலை அதிகரித்துக் காணப்படும் சூழ்நிலையில் மக்களது சேமிப்பு வீதமானது குறையும். இதனால் உள்நாட்டு சேமிப்பு வீதம் வீழ்ச்சி அடையும். இது எதிர்கால மூலதனத்திற்கான வாய்ப்பினைக் குறைக்கும்.

9. நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களினை நீண்டகாலத்திற்கு இழுத்துச் செல்லும், அல்லது இடையில் கைவிடச் செய்யும்.

## பணவீக்கத்தினை கட்டுப்படுத்தும் காரணிகள்
## Control of Inflation

பணவீக்கத்தில் ஏற்படும் விளைவுகளில் இருந்து பொருளாதாரத்தினை மீட்டெடுக்க பல கட்டுப்பாடுகளை மேற்கொள்ளலாம் அவையாவன

1. பணத்துறை நடவடிக்கை / நாணயக் கொள்கை
2. அரசிறைக் கொள்கை
3. உற்பத்திக் கொள்கை
4. ஏனைய நடவடிக்கைகள்

என்பவையாகும், இவற்றை விரிவாக நோக்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I. பணத்துறை நடவடிக்கை
Monetary Measures

இந்நடவடிக்கையினை நோக்குகின்ற வேளை இது மத்திய வங்கியின் நடவடிக்கையின் மூலம் பண நிரம்பல் கட்டுப்படுத்தப்பட்டு பணவீக்கம் கட்டுப்படுத்தப்படுகின்றது. எனவே இம் மத்தியவங்கியின் கட்டுப்பாட்டு கருவிகளினை இருவகைப் படுத்தி நோக்கலாம்.

i) மரபுவழிக்கட்டுப்பாடுகள்/தொகைக் கணியக் கட்டுப்பாடுகள்

ii) மரபுவழியற்ற / தெரிவுக் கட்டுப் பாட்டுக் கருவிகள்

### i) தொகைக்கடன் கட்டுப்பாடு
Quantitative Credit Control

வணிக வங்கியின் கடன் நடவடிக்கைகளை மொத்தமாக கட்டுப்படுத்துவதனையே இது குறிக்கின்றது. பொதுவாக கீழ்வரும் வழிகளில் இக்கட்டுப்பாடு மேற்கொள்ளப் படுகிறது

அ) வங்கி வீதம்

ஆ) ஒதுக்கு வீதம்

இ) பகிரங்கச் சந்தை நடவடிக்கை

### அ) வங்கி வீதம் Bank Rate

மத்திய வங்கியினால் வணிக வங்கிகளுக்கு வழங்கப்படுகின்ற கடனுக்கு அறவிடுகின்ற வட்டி வீதமே வங்கி வீதம் எனப்படுகின்றது. மத்திய வங்கி வங்கி வீதத்தினை உயர்த்தும் போது வணிக வங்கிகளும் வழங்குகின்ற கடனுக்கான வட்டியினை உயர்த்தும். இதனால் மக்கள் கடன் பெறும் அளவு குறையும். இதனால் வணிக வங்கிகளின் பண நிரம்பல் குறையும். மாறாக வங்கிவீதம் குறையும் போது பண நிரம்பல் உயரும்.

### ஆ) ஒதுக்கு வீதம்
Statutory Reserve Ratio

வணிக வங்கியின் திரவத்தன்மையை பாதுகாப்பதற்காக பொதுமக்களின் வைப்புக்களில் குறிப்பிட்ட வீதத்தினை மத்திய வங்கியில் வைப்பிலிட வேண்டும் என வலியுறுத்தப்படுவதே வங்கி வீதம் ஆகும். ஒதுக்கு வீதத்தினை உயர்த்தும் போது ஏனையவை மாறாதபோது வணிக வங்கிகள் வழங்குகின்ற கடன்கள் குறைவதால் நாட்டின் பணநிரம்பல் குறையும். மாறாக ஒதுக்கு வீதத்தினை குறைக்கும் போது பண நிரம்பல் உயர்வாக காணப்படும்.

### இ) பகிரங்கச் சந்தை நடவடிக்கை
Open Market Operations

மத்திய வங்கியினால் முறிகள் (Bond) உண்டியல்கள், ஆவணங்கள் கொள்வனவு விற்பனை மேற்கொள்ளப்படுவதனையே பகிரங்கச் சந்தை நடவடிக்கை எனப்படும். மத்தியவங்கி ஆவணங்களினை விற்பனை செய்யும் போது வங்கிகளிடம் உள்ள பணம் மத்திய வங்கியை சென்றடைகின்றது. இதனால் மத்திய வங்கி வழங்குகின்ற கடன் அளவு குறையும். எனவே பணநிரம்பல் குறைவடையும். மாறாக ஆவணங்களைப் பகிரங்கச் சந்தையில் கொள்வனவு செய்யும் போது பண நிரம்பல் அதிகரிக்கும்.

### ii) தெரிவுக் கடன் கட்டுப்பாடு
Selective Credit Control

வணிக வங்கிகள் என்னென்ன துறைக்கு எவ்வளவு பணம் என்னென்ன நோக்கத்திற்கு வழங்குகின்றது என்பதனை ஆராய்ந்து கட்டுப்படுத்துவதே தெரிவுக் கடன் கட்டுப்பாடாகும். மரபு ரீதியான கட்டுப்பாட்டுக் கருவிகளால் எல்லாத் துறைக்கும் ஒரே வகையாகக் கட்டுப்படுத்தப்படுவதால் விவசாய அபிவிருத்தி போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான துறைகளின் வளர்ச்சி பாதிக்கப்படுவதாலேயே தெரிவுக் கடன் கட்டுப்பாடு அநேக நாடுகளால் கடைப்பிடிக்கப்படுகின்றது. இது பின்வருமாறு வகைப்படும்.

அ) நுகர்வுக் கடன் கட்டுப்பாடு

ஆ) எல்லை கடன் கட்டுப்பாடு/எல்லை ஒதுக்குத் தேவை

இ) கடன் பங்கீடு

ஈ) நேரடிக் கடன் கட்டுப்பாடு

உ) தார்மிக கடன் கட்டுப்பாடு/அறவழி இணக்கம்

**அ) நுகர்வுக்கடன் கட்டுப்பாடு :-**
Regulation of Consumer Credit

வணிக வங்கியானது நுகர்வுப் பொருட்கள், சேவைகளை கொள்வனவு செய்வதற்காகவும் கடனை வழங்கும். இக்கடன் உடனடியாகவே பொதுவிலை மட்டத்தை அதிகரிக்கச் செய்து பணவீக்கத்தினை ஏற்படுத்துவதனால் மத்திய வங்கியானது இவற்றுக்கான கடன்களை கட்டுப்படுத்துகின்ற நடவடிக்கையே இதுவாகும்.

**ஆ) எல்லைக்கடன் கட்டுப்பாடு**

வாணிக வங்கிகள் வழங்குகின்ற ஒவ்வொரு கடனிலும் எந்தளவு இருக்க வேண்டும், எந்தக்காலப் பகுதியில் இந்த மட்டத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்று தீர்மானித்தலை இது குறிக்கும். இதன் மூலம் கடனானது ஓரளவு கட்டுப்படுத்தப்படும்.

**இ) கடன் பங்கீடு:-**
Rationing of Credit

வணிக வங்கிகள் ஒவ்வொரு துறைக்கும் எந்தளவு கடன்கள் வழங்கப்பட வேண்டும் என தீர்மானிப்பதே கடன் பங்கீடு ஆகும்.

**ஈ) நேரடிக்கடன் கட்டுப்பாடு:-**
Direct Action

குறிப்பிட்ட துறைக்கு குறிப்பிட்ட காலம் வரைக்கும் எந்தளவு கடனையும் வழங்கக் கூடாது என அறிவிப்பது நேரடிக் கடன் கட்டுப்பாடு எனப்படும்.

**உ) அறவழி இணக்கம் அறிவுறுத்தல்கள்** Moral Suasion

மத்தியவங்கி வணிகவங்கிக்கு ஆலோசனைகளையும், அறிவித்தல்களையும், கருத்துரைகளையும் வழங்குவதன் மூலம் கடனானது ஓரளவு கட்டுப்படுத்தப்படுமாயின் அது அறவழி இணக்கம் எனப்படும்.

இவற்றின் மூலம் வணிக வங்கியின் கடன்கள் நெறிப்படுத்தப்படுகின்றன.

**2. அரசிறை நடவடிக்கை** Fiscal Measures

2. 1) அரசிறை நடவடிக்கை என்பது அரசானது உற்பத்தியாளருக்கு வரியினை விதித்து அவர்களின் வருமானத்தினை, (இலாபத்தினை) குறைக்க முற்படுவதும் உயர்வருமானத்தவரிடம் வரிகளை (Excess Profit fax) பெற்று நுகர்வு நடத்தையைக் கட்டுப்படுத்தல். அத்துடன் தனியார் நுகர்ச்சியையும், முதலீடுகளையும் கட்டுப்படுத்தல் என்பனமூலம் பண நிரம்பலைக் கட்டுப்படுத்த முற்படல் தனியார் செலவு, பொதுச் செலவு என்பவற்றையும் கட்டுப்படுத்த முனைதல் என்பன.

2. 2) அரசானது பொதுச் செலவுகளைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும். மேலும் வரவு, செலவுத் திட்டப்பற்றாக்குறையைக் குறைக்க முயல்வதும் அவசியமாகும். அத்துடன் நாட்டின் ஏற்றுமதியினை அதிகரித்து இறக்குமதியினைக் குறைக்க முயல்வதும்' வெளிநாட்டுக் கடன்களினையும், பற்றாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறை வரவு செலவுத்திட்டத்திற்கு நிதியீட்டம் செய்வதற்கான கடன்களைக் குறைக்க முயலுதல். அத்துடன் இவற்றுக்கு வங்கித் துறைக் கடன்களை கூடியளவிற்கு தவிர்த்தல். ஏனெனில் இக்கடனானது பணவீக்கத்தினை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் செயற்படல்.

2. 3) பொது மக்களிடம் சேமிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்தல், அதாவது பணவீக்க காலங்களில் கட்டாய சேமிப்பினை (Compulsory Saving) அமுல் செய்தல் சிறந்தது. மேலும் கடன் பத்திரங்கள் வழங்குதல் என்பவற்றுடன் நாட்டின் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தலும், தானே நேரடியாக கண்காணிப்பு நடவடிக்கைகளில் இறங்கல்.

3. உற்பத்திக் கொள்கை

இக் கொள்கையானது உள்நாட்டில் பொருட்களிற்கு மிகைக் கேள்வி காணப்படுமாயின் அம் மிகைக் கேள்வி அளவினை இறக்குமதி செய்து வழங்கலாம், ஆனால் இது பாதக நிலையைத் தோற்றுவிப்பதால் இப் பொருளினை உள்நாட்டில் உற்பத்தி செய்ய நடவடிக்கையினை மேற்கொள்ளல். இதன் மூலம் பணவீக்கம் ஏற்படாமல் தடுக்க மேற் கொள்கின்ற நடவடிக்கைகள் ஊடாக பொருளாதாரத்தில் பணவீக்கமூலம் ஏற்படுகின்ற விளைவுகளை கட்டுப்படுத்த அல்லது குறைக்க முடியும்.

## References


1. விசுவநாதன், ப. — "பணவியல் பொருளாதாரம்" (Monetary Economics) (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்)
2. வேலாயுதம், சி. — "பணவியலும் பாங்கியலும்" (இரண்டாம் பாகம்) (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் Revised Edition October 1975)
3. சிவஞானம், கோ. — "பணவியல் (Currency)" (தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் 1973)
4. Suraj B. Gupta — "Monetary Economics" (Institutions, Theory and Policy S.Chand & Company (Pvt) Ltd. New Delhi Second Edition 1988)
5. Thirlwall, A. P. — "Inflations, Saving & Growth In Developing Economics" (First Published 1974 by The Macmillan Press Ltd)
6. Vaish, M. C. — 'Monetory Theory'
7. பொருளியலாளன் செல்வவடிவேல் ஏ. — (மலர் 3, 4 செப்ரெம்பர்/ டிசம்பர் 1989, மார்ச் 1990 "இலங்கையில் பணவீக்கம்" (Page 41-50 Yong Economists Association)
8. மத்திய வங்கி அறிக்கைகள்— பல்வேறு வெளியீடுகள் (இலங்கை மத்திய வங்கி வெளியீடு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமடையும்

# 'அபிவிருத்தி எண்ணக்கருக்கள்'

# Changing Concepts of Development

ரி. கிருசாந்தி

## அறிமுகம்

அபிவிருத்தி பொருளியல் தொடர்பான கற்கைநெறி இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் பல மூன்றாம் உலக நாடுகள் காலனித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றதையடுத்து தோற்றம் பெறலாயிற்று. பொருளியல் என்பது பொதுவானதாக கருதினாலும், இப் பொருளியலானது பல்வேறு கிளைகளை தன்னகத்தே கொண்டதாகவும் அவற்றில் அண்மைக் காலத்தில் ஒரு முக்கியமான கிளையான அபிவிருத்தி பொருளியலானது அரசியல் பொருளாதார கட்டமைப்புக்களை தன்னகத்தே உள்ளடக்கிய வகையில் பொருளியலினது ஏனைய கிளைகளுடன் ஒப்பிடுமிடத்து ஒரு சவால்விடும் தன்மையினை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

அவ்வகையில் அபிவிருத்தி எனும் பதம் குறித்து பல்வேறுபட்ட அறிஞர்கள் கருத்துக்களை கூறியுள்ளனர். முதலில் அபிவிருத்தி என்பதன் பொருளை சரியாக விளங்கிக் கொள்வது அவசியமாகும். இதனை பின்வருமாறு Denis Goulet கூறியுள்ளார்.

"It matters little how much information we possess about development, if we have not grapsed its inner meaning."

Miss. Krishanthy Thavaratnam
Ecomomics Special
Final year
University of Jaffna.

பெரும்பாலானோர் பொருளாதாரத்துறையிலே முன்னேற்றமடைந்துள்ள நாடுகளை அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகள் எனக் கருதுகின்றனர். பொருளாதார அபிவிருத்தி என்பது குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியினுள் ஒரு சமுதாயத்தில் அல்லது ஒரு பொருளாதார முறையில் நுகர்வு செய்யப்படும் பொருட்கள் என்பன தரத்திலும் தொகையிலும் உயர்வதைக் குறிக்கும். இதன் பொருட்டு பயன்படுத்தப்படும் தொழில் நுணுக்கமும் அதன் முன்னேற்றமும் இவ் வரைவிலக்கணத்தினுள் அடங்கும். ஆனால் ஒரு நாடு பொருளாதாரத் துறையில் வளர்ச்சியுற்றிருப்பதைக் கொண்டு அந்நாடு அபிவிருத்தி அடைந்துள்ளது எனக் கூற முடியாது. பொருளாதார வளர்ச்சியுடன் மக்களின் சமூக பண்பாட்டு அரசியல் வாழ்க்கையில் அபிவிருத்தி ஏற்பட்டிருத்தல் வேண்டும். எனவே அபிவிருத்தி என்பது தொகைவடிவில் அளவிடக்கூடிய வளர்ச்சியை மாத்திரமன்றி, பண்பு ரீதியான அம்சங்களாகிய வருமானப்பரம்பல், கேள்வி, தொழிற்படையின் சேர்க்கை, கைத்தொழில் அமைப்பு, அரசாங்க கொள்கை என்பவற்றிலும் முன்னேற்றத்தை வெளிப்படுத்தும் அமைப்பு ரீதியான உருமாற்றத்தை குறித்து நிற்கின்றது. ஒரு நாட்டின் மூலவளம், மனிதவலு, மூலதனம் என்பவற்றின் பயன்பாடு அதிகரிப்பதனால் அங்கு பொருளாதார அபிவிருத்தி உண்டாகும் எனினும் நாட்டின் மொத்த அபிவிருத்தியில் ஒரு அங்கமே பொருளாதார அபிவிருத்தியாகும். எனவே தான் ''பொருளாதார சனத்தொகை கார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணிகளில் மட்டுமன்றி சமூக பயன்பாடு ஒழுக்கநெறி ஆகிய காரணிகளிலும் மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்படுத்துகின்றதொரு செயன்முறையே அபிவிருத்தியாகும்'' என யுனெஸ்கோ (Unesco) நிறுவனம் வரைவிலக்கணப்படுத்தியுள்ளது.

அந்த வகையில் 1960 களை ஐ. நா. சபையானது அபிவிருத்தி தசாப்தமாக பிரகடனப்படுத்தியுள்ளது. உண்மையான அபிவிருத்தி என்பது வறுமை, வருமானச்சமயின்மையை ஒழித்தல், வேலையின்மையைக் குறைத்தல் என்று ஐ. நா நிபுணர்கள் கூறியுள்ளனர். மேலும் அபிவிருத்தி பற்றி Todaro குறிப்பிடும்போது பொருளாதார முன்னேற்றம் அபிவிருத்தியின் அடித்தளமாக விளங்குகின்றபோதும், இவற்றுக்கு அப்பால் பொருளாதார சமூக மாற்றங்களை மீளமைக்கின்ற மாற்றியமைக்கின்ற ஒழுங்குமுறை அபிவிருத்திக்கு தேவையானது எனவும் அபிவிருத்திப் பரிமாணங்களாக 4 அம்சங்கள் முக்கியம் பெறுகின்றன எனவும் கூறப்படுகின்றது. அவையாவன

(1) அபிவிருத்தியின் பன்முகத்தன்மை

(2) மெய்த்தேசிய வருமானத்துடனான வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியாக விளக்கப்படுகின்றது.

(3) பொருளாதார அபிவிருத்திப் பண்பில் சமூக பொருளாதார மாற்றங்களை விளைவிக்கும் பண்பு முக்கியமானது.

(4) பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய குறிக்கோள்களை அடைவதில் வருமான ஏற்றத் தாழ்வினைக் குறைத்தல், வறுமை ஒழிப்பு என்பவை முக்கிய அம்சங்களாகும். இவற்றைக் குறைக்க அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல் அவசியமாகும்.

இவற்றைவிட Prof Goulet என்பவரின் கருத்து மக்கள் தமது மதிப்புடன் கட்டுப்பாடுகளிலிருந்து சுதந்திரமாக சிந்திக்கவும் செயற்படவும் முடிகின்றதா என்ற முடிவுகளிருந்தே உண்மையான அபிவிருத்தியை மதிப்பிட முடியும் எனக் குறிப்பிடுகின்றார். எனவே ஏனையவற்றின் பிடியிலிருந்து விடுபட்டு தன்மதிப்புடன் வாழக்கூடிய நாடும் சமூகமும் விருத்தியுற்றவை எனக் கருதலாம். சுதந்திரம் மனித உரிமை என்பன முக்கியமான அபிவிருத்தியின் அம்சங்களாக தற்போது விதந்துரைக்கப்படுகின்றது. இன்றைய மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்திக் கொள்கைகள் இதனை மிகவும் வற்புறுத்துகின்றது.

குறைவிருத்தி நாடுகளின் பொதுவான பண்புகள்

அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருவானது குறைவிருத்தி நாடுகளின் மட்டத்தில் இருந்து எழுகின்ற பொருளாதார சமூக அமைப்பு மாற்றங்களில் இருந்து எழும் பிரச்சனைகளை பூர்த்தி செய்வது இதனது முக்கிய நோக்கமாகும். அவ்வகையில் குறைவிருத்திப் பொருளாதாரங்கள் சில இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்படுகின்றன. அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு.

(1) குறைந்த வாழ்க்கைத்தரம்

— குறைந்த தேசிய வருமானமும், தலா வருமானமும், குறைந்த வளர்ச்சி வீதம்.

— வருமானப் பங்கீட்டில் சமமின்மை

— வறுமை

— குறைந்த சுகாதார வசதிகள்

— குறைந்த கல்வியறிவு வீதம்.

(2) குறைந்த உற்பத்தித் திறன்

— ஊழியத்தின் உற்பத்தித்திறன் குறைவு

(3) உயர் சனத்தொகை வளர்ச்சி வீதமும் தங்கியிருத்தலும்

(4) உயர் வேலையின்மையும் கீழ் உழைப்பும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) முதல்தர உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் தங்கியிருத்தல், அதிகரித்த நுகர்வு இறக்குமதி

(6) சர்வதேச தொடர்புகளில் தங்கியிருத்தல்

மேற்குறிந்த இயல்புகளின் தொடர்ச்சியான தன்மையினால் ''வறுமை அறியாமை, நோய்'' (Poverty, Ignorance and disease) இக் குறைவிருத்தி நாடுகளின் வாழ்க்கையில் பெருமளவு பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றன. இதனை ஒரு நச்சுவட்டமாக பின் வருமாறு விளக்கலாம்.




இத்தகைய பொதுவான இயல்புகளைக் கொண்ட நாடுகளையே பொதுவாக குறைவிருத்தி நாடுகள் அல்லது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என வகைப்படுத்திக் கொள்கின்றோம். இவ்வாறான ஒத்த தன்மையான பண்புகளைக் கொண்டிரிப்பினும் இந்நாடுகளிற்கிடையே பல்வேறுபட்ட வேற்றுமைகளையும் காணக்கூடியதாய் இருக்கின்றது. அவையாவன.

1) நாட்டின் பருமன் (புவியியல், குடித்தொகை வருமானம்)

2) பெளதீக பண்பாட்டு வளவாய்ப்புக்கள்

3) வரலாற்றுப் பின்னணி

4) பொது தனியார் துறையின் சார்பு ரீதியான முக்கியத்துவம்

5) கைத்தொழில் அமைப்பின் இயல்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) வெளிநாட்டு பொருளாதார அரசியல் வலுக்களில் தங்கியிருத்தல். இவ்வேற்றுமைகளையும் ஒற்றுமைகளையும் ஆதாரமாகக் கொண்டு ஒரு நாடு தனது தன்மைக்கும் நிலைக்கும், சூழலுக்கும் ஏற்றவாறான கொள்கைகளை நடைமுறைப் படுத்த முடியும்.

அபிவிருத்தி பற்றிய சிந்தனையின் வளர்ச்சிப் போக்கு

பொதுவாக அபிவிருத்தி பற்றிய சிந்தனைகள் குறைவிருத்தி நாடுகள் என்ற நிலையில் வைத்தே நோக்கப்படுகின்றது. அவ்வகையில் அபிவிருத்தி பற்றிய பரிமாணங்கள் காலத்திற்கு காலம் பலவகை உருமாற்றங்களைப் பெற்று இன்று அபிவிருத்தி தளத்தில் ''நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி'' (Sustainable Development) என்பது பரவலாகக் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

அபிவிருத்தி பொருளியலினது தேவை குறைவிருத்தி நாட்டினதாக இருந்த போதும் அபிவிருத்திப் பொருளியல் கோட்பாடுகள் அபிவிருத்தியடைந்த நாட்டுப் பொருளியலாளர்களினாலேயே முன்வைக்கப்பட்டது. இது குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தி வளர்ச்சிக்கு எவ்வளவு தூரம் பங்களித்துள்ளது என்பது சர்ச்சைக்குரியது. அத்துடன் அபிவிருத்திக் கொள்கை வளர்ந்த முறைமையில் மேனாடுகளில் ஏற்பட்ட அபிவிருத்தி முறைக்கும் மூன்றாம் உலகில் ஏற்பட்ட அபிவிருத்திக்கும் இடையில் முக்கிய வேறுபாடாக அமைவது அபிவிருத்தியில் அரசியல் பெற்ற இடமாகும். எனவே இவற்றினைப் பொறுத்து அபிவிருத்தி பற்றிய சிந்தனைப் பரிமானங்கள் காலத்திற்குக் காலம் வேறுபட்டதாக காணப்படுகின்றது.

அவ்வகையில் அபிவிருத்தியின் ஆரம்ப காலங்களில் அதாவது 1950, 1960 களில் சேமிப்பு, முதலீடு, மூலதனவாக்கம் என்பவற்றினூடாக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி அதனூடாக அபிவிருத்தியை அடைய முடியும் என்பதனை மையமாகக் கொண்டுதான் W. W. Rostow, Harrod - Domar போன்றவர்களின் அபிவிருத்தி மாதிரிகள் காணப்படுகின்றது. ஆனால் இக்கோட்பாடுகளை நடைமுறைப் படுத்திய போது எதிர்பார்த்தற்கு மாறான நிலைமைகளே காணப்பட்டன. அதாவது விரைவான பொருளாதார வளர்ச்சி வீதம் இந்நாடுகளில் ஏற்பட்டபோதும் சமூகத்தின் கீழ்மட்டத்தில் இருப்பவர்களுக்கு அபிவிருத்தியின் சமமான பகிர்வு சென்றடையவில்லை. இவை மட்டுமன்றி வறுமை வருமானச் சமமின்மை, வேலையின்மை போன்ற பிரச்சனைகள் சிறப்பாக இக் குறைவிருத்தி நாடுகளில் எழலாயின. இந் நிலையில் 1960 களின் பின்னரும் 1970 களிலும் அபிவிருத்தி என்பதற்கு புதிய விளக்கம் கொடுக்கப்பட்டது. அதாவது ஐம்பதுகளிலும் அறுபதுகளின் ஆரம்பத்திலும் வளர்ச்சி முன் அபிவிருத்தி பின்னர் என்ற சிந்தனை உருமாற்றம் பெற்று வளர்ச்சியும் அபிவிருத்தியும்சமமாக இருக்க வேண்டும் என்ற எண்ணக்கரு முன்னேறிச் செல்வதைக் காணலாம். ''பகிர்வுடன் கூடிய வளர்ச்சி'' என்ற கருத்து Gundar Frank, Samir Amin போன்றவர்களால் முன்வைக்கப்பட்டது. மேலும் Duddy Siyers என்பவர் ஒரு நாட்டில் வறுமை, வருமானச்சமமின்மை, வேலையின்மை என்பவற்றை குறைப்பதற்கு சாதகமான விடை கிடைத்தால் அந்நாடு அபிவிருத்தியை நெருங்குகின்றது என்பது கருத்தாகும் என்று விளங்குகின்றார்.

இதனைத் தொடர்ந்து அபிவிருத்தியில் விவசாயம் என்ற அம்சம் வலியுறுத்தப்பட்டது. கூடிய சனத்தொகை கிராமப்புறத்தில் காணப்படுகின்றது. அவர்கள் வறுமை, வேலையின்மை என்பவற்றால் பாதிப்புற்றவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே இவற்றை ஒழிப்பதற்காக குறைந்த தரத்தில் உள்ள ஒரு துறையான விவசாயம் முதன்மைப்படுத்தப்படுகின்றது. மேலும் Arthur Lewis இன் இரட்டை பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி (Dual economy model) அமைப்பினூடாக விவசாயத்துறையில் காணப்படும் மிகை ஊழியத்தை கைத்தொழில் துறைக்கு மாற்றுவதனூடாக அத்துறையை வளர்ச்சியடையச் செய்து வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதுடன் விவசாயத்தின் பூச்சிய எல்லை உற்பத்தியை நேர்கணியமாகமாற்ற முடியும் எனவும் எதிர்பார்க்கப் பட்டது. இந்நிலையில் "பசுமைப்புரட்சி" என்பது 70 களில் இருந்து விவசாய முன்னேற்றத்திற்காக கொண்டுவரப்பட்டது. அத்துடன் 60களின் இறுதிப்பகுதியில் இருந்து "கைத்தொழில் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்" என்பதும் முன்வைக்கப்பட்டது. எனினும் இவை பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியது. பசுமைப்புரட்சி மீண்டும் உயர்வருமானம் பெறுபவர்களுக்கே சாதகமாகக் காணப்பட்டது.

இந் நிலையில் 1970 களின் இறுதிப் பகுதி 80 களில் வெளிமுகம் நோக்கிய அரசு கட்டுப்பாடற்ற ஏற்றுமதிக்கு முக்கியம் அளிக்கும் திறந்த பொருளாதார சிந்தனை ஊற்றெடுத்தது. இந் நிலைமையானது பொருளாதாரத்தில் வெளிநாட்டு முதலீடு, சர்வதேச வர்த்தகத்தில் பெருமளவுக்கு தங்கியிருக்கும் நிலைமையினையும் அத்துடன் ஒரு சிலரின் கைகளில் செல்வம் குவிவதை மேலும் சாதகமாக்கியது. எனவே இந் நிலைமையானது வருமானச் சமமின்மையை மேலும் அதிகரித்து வறுமைக் கோட்டுக்கு கீழ் இருப்பவர்களை மேலும் பாதிப்புள்ளாக்கியது.

இப் பின்னணியில் அபிவிருத்திப் பாதையில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி பற்றிய எண்ணக்கரு அண்மையில் வலுப்பெற்று வருகின்றமையினை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. வளர்ந்த நாடுகளில் பெற்றுக் கொண்டதும், வளர்முக நாடுகளில் பெற முயற்சிப்பதுமான அபிவிருத்தி நீண்ட காலத்திற்கு இவ்வுலகில் நிலைத்து நிற்க வேண்டும். அவ்வாறு ஏற்பட்டால்தான் அபிவிருத்தியின் இறுதி இலட்சியமான மனித நலமேம்பாட்டை பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நிலைத்து நிற்கும் அபிவிருத்தியும் வளர்முக நாடுகளும்

நிலைத்து நிற்கும் அபிவிருத்தியானது 1992ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட உலக அபிவிருத்தி அறிக்கையில் (World development Report in 1992) முக்கியப்படுத்தி ஆராயப்பட்டது. 1987இல் சூழல் ஆணைக்குழு (World Commission on Environment and Development Brant land) " எமது பொது எதிர்காலம்" என்ற தலைப்பில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்பது" வருங் காலத் தலைமுறையினர் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கான ஆற்றல் களை பங்கப்படுத்திவிடாது தற்காலத் தலைமுறையினரின் தேவைகளை நிறைவு செய்து கொடுக்கும் ஓர் அபிவிருத்தியாகும்" என்று இவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. உணவு விவசாய நிறுவனம் (F. A. O.) நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்பது " இயற்கை வளங்களின் அடிப்படைமுகாமைத்துவத்தையும், நிகழ்கால எதிர்கால சந்ததியினரின் தேவைகள் அவற்றின் கிடைப்பனவுகளை நிச்சயப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் தொழில் நுட்பரீதியான மாற்றங்களை நெறிப்படுத்துவதாகும் என வரையறை செய்கின்றது. இதனை இன்னும் மிகத் தெளிவாகக் கூறினால் இன்று அதிகரித்த சனத்தொகையின் தேவைகளை நிறைவுசெய்வதற்காக வளங்கள் கட்டுப்பாடின்றி பயன்படுத்தப்படுகின்றது. இதனது இறுதி விளைவானது சூழல் மாசடைவதாகும். எனவே இன்றைய மனிதன் இவ் வளங்களை பயன்படுத்தி எவ்வாறு வளமாக வாழ்கின்றானோ அதுபோல் எதிர்கால சந்ததியினரும் உயிர்வாழ்வதற்கு வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்துவதே நிலைத்து நிற்கும் அபிவிருத்தியாகும்.

அபிவிருத்தியானது நிலைத்து நிற்க வேண்டுமாயின் இவ் நிலைத்து நிற்கும் வளர்ச்சியானது வேலைப்படையினரை உள்வாங்குவதற்கான போதுமான இயலளவு கொண்ட விரைவான வளர்ச்சியை உற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியில் எட்டப்பட வேண்டும். அத்துடன் வளர்ச்சிப்போக்கு சமமானதாக இருக்க வேண்டும். வறுமையானவர்களின் உற்பத்தி இயலளவிலும், வருமானம் தரும் சொத்துக்களிலும் நிலையான அதிகரிப்புக்கு வழிவகுக்க வேண்டும். கிராமிய பிரதேச மாகாண மட்டங்களில் நிறுவன ரீதியான கட்டமைப்புக்களை தீர்மானம் எடுப்பதற்கு பன்முகப்படுத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதன் ஊடாக ஒவ்வொரு மட்டங்களிலும் பொருளாதார சூழல் வளங்களை பயன்படுத்துவதிலும் முகாமை செய்வதிலும் உள்ளூர் சமூகங்களின் பங்களிப்பினை பெறமுடிகின்றது.

1992ம் ஆண்டில் றியோடி ஜெனிரோவில் நடந்த பூமி பற்றிய உச்சிமகாநாடு உலக மக்களுக்கு அளித்த செய்தி மிகத் தெளிவானது. சிறந்த சூழல் கண்காணிப்பின்றி அபிவிருத்தி பாதிக்கப்படும். வளர்முக நாடுகளில் துரித அபிவிருத்தியின்றிச் சூழல் கொள்கைகள் தோல்வியடையும். ஆபிரிக்காவின் உபசகாரா பகுதிகளில் சனத்தொகை வளர்ச்சி அதிகரித்துக் காணப்பட்டாலும் விவசாயத்தில் காடழிப்பு தொடர்ந்து இடம் பெறுகின்றது. இதனால் மண்ணரிப்பு, நீர்நிலைகள் வற்றிப் போதல், மண்ணின் வளம் குறைந்து போவதுடன் அது உற்பத்தியை பாதிக்கின்ற நிலமை ஒரு நச்சுவட்டமாக இயங்குகின்றது. சாயோப்போலோ, மெச்சிக்கோ நகரம், பாங்கொங் நகரங்களில் அசுத்தமான காற்று, நீர் போன்றவற்றினால் சுகாதாரத்திற்கு கடுமையான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. கைத்தொழில் நாடுகளின் பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றமானது அடுத்த நூற்றாண்டுக்குள் பூகோள வெப்பநிலை 2.4 °C உயர்வை ஏற்படுத்தும் என அச்சுறுத்தப்பட்டுள்ளது மேலும் ஓசோனில் ஏற்பட்டுள்ள துவாரம், அமில மழை, கழிவுகளை வெளியேற்றுவதில் உள்ள பிரச்சனை, நகரமாசடைவு இவை எல்லா வற்றுக்கும் மேலாக உயிரின பல்லினதன்மைக்கு ஏற்பட்டுவரும் அச்சுறுத்தல் (Boi Diversity) என்பன நிலைத்து நிற்கும் அபிவிருத்தி பற்றிய சிந்தனையினை அர்த்தமுள்ளதும் விவேகமுள்ளதுமாக மாற்றியுள்ளது.

எனவே நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு பேரின பொருளாதார பங்கீட்டு வினைத்திறன் (Macro economic allocative efficiency) ஒரு அத்தியவசிய நிபந்தனையாக விளங்குகின்றபோதும் அது போதுமானதாக இல்லை. ஏனெனில் அது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மூலதனத்தின் தேய்மானத்தை மட்டுமே கவனத்தில் கொள்கின்றது. ஆனால் இயற்கை மூலதனத்தின் சுருக்கத்தையும் அபிவிருத்திக்கான உயிரினச் சூழல் செலவினங்களையும் (Ecological cost) நிராகரிக்கின்றது. உற்பத்தித்திறன் வெளியீடு தொடர்பான வினைத்திறன்மிக்க வளப் பயன்பாடு பற்றிய கொள்கைகளும், உயிரினச் சூழல் சமனிலை வளங்களின் நிலைநிற்றல் தொடர்பான கொள்கைகளும் ஒன்றையொன்று சார்ந்து செல்லுதலே நிலைத்து நிற்கும் அபிவிருத்தியின் நோக்கமாகும்.

இந்நிலையில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி குறித்து வளர்முக நாடுகளில் அதன் சாத்தியப்பாட்டு தன்மையானது எவ்வளவு தூரத்திற்கு பொருந்தும் என்பது சர்ச்சைக்குரியது. வளர்முக நாடுகளில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி தொடர்பான கண்ணோட்டம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்து வருகின்றது. மொத்த குடித்தொகையில் முக்கால் பங்கிற்கு மேற்பட்டோர் குறைவிருத்தி நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தமது அடிப்படைத் தேவைகளையே நிறைவு செய்ய முடியாது உள்ளனர். இந்நிலையில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்ற தாற்பரியத்தை இவ்வறிய நாடுகள் செல்வந்த நாடுகள் புரிந்து கொள்ளும் விதத்தில் உணர்ந்து கொள்ளக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளனர். மேலும் வளர்முக நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் பெரும்பாலான மக்கள் தமது அன்றாட தேவைகளையே பூர்த்தி செய்யப்படாத சூழ்நிலையில் இன்னமும் பிறந்திராத மனிதர்களின் தேவைகள் குறித்து மிதமிஞ்சிய அளவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவது யதார்த்தமற்றதாகவேயுள்ளது.

அத்துடன் வளர்முக நாடுகளில் பரந்துபட்டு காணப்படும் வறுமை, போசாக்கின்மை, சுகாதார மருத்துவ வசதிகளின் குறைவு, மூளைசாலிகளின் வெளியேற்றம், தொழில்நுட்ப ஆற்றலின்மை, அதிகரித்த சனத்தொகை, இருப்பிடவசதியின்மை வறிய மக்கள் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலமை, கிராம மக்களின் நகர்ப்புறம் நோக்கிய இடப்பெயர்வு அதிகரித்தமை, மேலும் முதல்நிலைப் பொருட்களின் ஏற்றுமதியில் தங்கியிருப்பதோடு விலைத்தளம்பலுக்கும் உள்ளாகின்றது எனவே இவ்வாறான பொருளாதார, பௌதிக, உயிரியல் பிரச்சனைகளால் பின்னிப்பிணைந்துள்ள வளர்முகநாடுகள் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி பற்றி ஆலோசிக்கவே முடியாதவையாய் உள்ளன. மேலும் வளர்ந்த நாடுகளில் உலக சனத்தொகையில் 20% வாழ்கின்றனர், ஆனால் உலக வளங்களில் 80% வளர்ந்த நாடுகளினாலேயே நுகரப்படுகிறது, ஆனால் 80% மக்களை கொண்டுள்ள வளர்முக நாடுகளில் 20% வளங்களைப் பாதுகாப்பது என்பது நடைமுறைச் சாத்தியமில்லாத விடயமாகும். அத்துடன் வளர்ந்த நாடுகளின் அபிவிருத்தி திட்டங்கள் யாவும் வளர்முக நாடுகளின் முன்னேற்றத்தில் காணப்படும் படுகுழிகளாக உள்ளன இதனால் வளர்முக நாடுகள் இயல்பாகவே பின்தங்கி விடுகின்றன.

எனினும் வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை வேளாண்மைத் துறை கைத்தொழில் துறை அபிவிருத்திக்கு பொருத்தமான தொழில்நுட்பத்தை உறுதிப்படுத்துவது, மனிதவளத்தின்மீதான முதலீட்டை அதிகரித்து மனித வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்துவதனூடாக இயற்கை மூலவளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மீதான மிக மோசமான தாக்குதல்களை தவிர்த்துக் கொள்ளல், குறைந்தபட்ச சுகாதார முதலீடுகளை மேற்கொண்டு அதேசமயம் அரசின் சமூக நல செலவினங்களை குறைப்பதனால் ஏற்படும் சேமிப்புக்களை கல்வி, பயிற்சி தொழில் நுட்பம் போன்ற துறைகளுக்கு திசைதிருப்புதல் மற்றும் வறிய மக்களுக்கு பொருத்தமான இருப்பிட வசதிகளை அளிப்பதனூடாக வறியவர்கள் தமது வாழிடங்களில் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கு உறுதி செய்வதனூடாக நகர்புற இடப்பெயர்வினை குறைத்தல், மேலும் வளங்களின் வீண் விரயத்தைக் குறைத்து உற்பத்திப் பொருட்களுக்கு நிலையான சந்தையொன்றினை தோற்றுவித்தல், சூழல் தாக்கங்களில் இருந்து நாட்டைப் பாதுகாத்தல் போன்ற அடிப்படை நிலைகளில் உறுதிப்பாட்டை ஏற்படுத்தி இந்நாடுகளை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்துச் செல்ல வாய்ப்புண்டு. அத்துடன் இந்நாடுகளின் பலம் வாய்ந்த அரசியல் அமைப்பு வறிய மக்கள் தமது விசச்சூழலை உடைத்து எறிவதற்கும் அருமையான மூலவளங்கள் மீது அல்லது சமூகத்தின் மீது சுமைகளை திணிக்காது கண்ணியமான ஒரு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கு உண்மையான அர்ப்பணிப்புடன் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் போது நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை பேணமுடியும்.

முடிவுரை

அபிவிருத்தி பற்றிய சிந்தனைகள் காலத்திற்கு காலம் உருமாற்றங்களை பெற்று இன்று அபிவிருத்தியின் தளமான நிலைத்து நிற்கும் அபிவிருத்தியானது வளப் பயன்பாட்டை வலுவிழக்கச் செய்த கடந்த கால அபிவிருத்திப் போக்குகள் கொள்கைகள் ஒரு புறத்திலும் விவசாய விரிவாக்கம், ஆரம்பகால சனத்தொகை துரித வளர்ச்சியும் கொள்கை சட்டமும் (Policy frame

work) வினைத்திறனற்ற வளப்பங்கீடுகளை உருவாக்கி, தொழிலாளர் உறிஞ்சலுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையிலான சமமின்மையானது வலுவடைந்தது, மறுபுறம் சமூகத்துறை தொடர்பான கொள்கைகளும் அவற்றின் விளைவாக மனிதவலு அபிவிருத்தியும் சனத்தொகை மாற்றங்களையும், சனத்தொகை வளர்ச்சியில் சீரான வீழ்ச்சியையும் தோற்றுவித்து எதிர்கால பிரச்சனைகளை தோற்றுவிக்கக்கூடிய காலப் பகுதியில் தோற்றம் பெற்றது. எனவே நிலைத்து நிற்கும் அபிவிருத்தி தொடர்பான திறமுறைகள் சகல முக்கிய அபிவிருத்திக் கொள்கைகளையும் தழுவியுள்ளது. அனைத்து நாடுகளும் தமது சுயநலக் கொள்கைகளை வகுத்து அபிவிருத்தியின் அவசியத்தை உணர்ந்து செயற்பட முடியுமாயின் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியைப் பேண முடியும்.

# Reference


(1) ஜனனி ரகுராகவன் :- 'அபிவிருத்தி பொருளியலும் குறைவிருத்தி நாடுகளும் மார்க்கம் இதழ் 2 மலர் 3 1996

(2) கொட்பிரே குணதிலக:- ''நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கான திறமுறைக் கொள்கைகளும் ஆரம்ப முயற்சிகளும்'' மார்க்கம் இதழ் 1 மலர் 4 1993

(3) Michel P. Todaro :- Economic Develo-p ment in the Third world

(4) மல்லிகா கருணாரத்ன:- "நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி வளர்முக நாடொன்றின் கண்ணோட்டம் - பொருளியல் நோக்கு Aug 1992, Sep 1992


இனம் மற்றும் பால் அடிப்படையில் குடியகல்வு ( ஜூலை - செப். 1993 )

| பால் / இனம் | பெண் | | ஆண் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | எண் | % | எண் | % | எண் | % |
| சிங்களவர் | 6.398 | 51.8 | 22, 123 | 68 2 | 28, 521 | 64.0 |
| தமிழர் | 1, 117 | 9.2 | 927 | 2.8 | 2, 044 | 4.6 |
| முஸ்லிம் | 4, 565 | 37.7 | 9 ,344 | 28.8 | 13, 909 | 31.2 |
| ஏனையன | 33 | 1,3 | 59 | 0.2 | 92 | 0.2 |
| மொத்தம் | 12, 113 | 100.0 | 32, 453 | 100.0 | 44, 566 | 100.00 |

ஆதாரம் : விமான நிலைய மதிப்பீடு, வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பணியகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அனோமி"
# எண்ணக்கருவும் கோட்பாடுகளும்
## "ANOMIE" Theory and Concept

அ. எ. றிச்சேட்

இன்றைய நவீன சமூகங்களில் 'அனோமி' வளர்ந்து வரும் ஒரு பாரிய சமூகப் பிரச்சனையாக உள்ளது. இதனால் பல் வேறு சமூகவியலாளர்கள், உளவியலாளர்களினுடைய கவனத்தினை இது ஈர்த்துள்ளது. எனவே 'அனோமி' தொடர்பான எண்ணக்கருக்கள், கருத்துக்கள் மற்றும் கோட்பாடுகள் இன்றைய சமூகவியலில் முக்கியத்துவம் பெறுகின்றது. இக் கருத்து நிலை தொடர்பாக டூர்கெயம், மேட்டன், பார்சன்ஸ் போன்ற சமூகவியலாளர்களின் வரையறைகள், மற்றும் உயர்தரக் கோட்பாடுகள் முக்கியம் பெறும்.

சமூக விதிகளை ஏற்றுக் கொண்டு சமூகத்தில் ஒன்றிப்போன சமூக மரபுகள், பாரம்பரியங்கள் ஆகியவற்றை பின்பற்றும் வழமையான போக்கு ஒவ்வொரு சமூகத்திலும் காணப்படுகின்றது. ஆயினும் மனவிரக்தி கொண்டு வேறுபட்ட முறையில் நடப்போரும் சமூகத்தில் காணப்படுகின்றனர். அவ்வாறான வேறுபட்ட நடத்தை 'அனோமி' என விசேடமாக விபரிக்கப்படுகின்றது. இவ்வாறான விலகல் நடத்தை அனோமியின் வெளிப்பாடே ஆகும்.

'அனோமி' தொடர்பாக சமூகவியல் அறிஞர்கள் தத்தம் வரைவிலக்கணங்களை கொடுத்துள்ளனர். அறிஞர் டூர்கையிம் (Durkhiem) "அனோமி என்பது நியமங்களின் இயல்பு நிலையின்மையே" (Anomie is a condition of Normlessness) என்று வரையறை செய்கின்றார். சமூகத்தில் வேரூன்றிய சமூக சிந்தனைகள் ஒழுங்குகள் ஆகியவற்றில் இருந்து வேறுபட்டு நடக்கும் மனிதர்களின் நடத்தையை விலகல் நடத்தை (Deviant Behavior) என்றும், சமூகத்திலே சடுதியான மாற்றம் ஏற்படுகின்ற போது சமூக முறைமை ஒழுங்குகளை, பின்பற்றுவதில் தளர்வுப் போக்கு ஏற்பட்டு, சரி எது, பிழை எது என்பதை இனம் காண்பதில் இடர்பாடு தோன்றுவதுடன், சமூகத்துடன் ஒன்றிணைந்து தனது அபிலாசைகளை அடைய முடியாததாகின்ற நிலையில் அனோமி உருவாகின்றது என்கின்றார் சமூகவியலாளர் றொபர்ட் மேட்டன் (Robert Merton). "ஒருவரின் எதிர்பார்ப்புக்களும், சமூகத்தின் பண்பாட்டு ஒழுங்குகளும் ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமாக காணப்படும் நிலையில், சமூக பண்பாட்டு கட்டமைப்பில் ஏற்படுகின்ற ஸ்தம்பித நிலையே" அனோமி என்கின்றார். அதாவது ஒருவரின் இலக்குகள் அல்லது அபிலாசைகட்கும், சமூக நிறுவனரீதியான சாதனங்கட்கும் இடையே ஏற்படும் மோதல்கள் அல்லது முரண்பாடுகளின் வெளிப்பாடே 'அனோமி' நிலை என்கின்றார். மேலும் ரல்கொட் பார்சன்ஸ் (**Talcott Parson** 'அனோமி எண்ணக்கருவை வரையறுக்குகையில் "இயல்பு முறைமை பிறழ்தலும், ஒழுங்கு முறைமை தலைகீழாதலுமே அனோமி நிலையாகும்" என்கின்றார்.

அ. எ. றிச்சேட்
சமூகவியல் சிறப்புக்கலை,
இறுதி வருடம்,
யாழ். பல்கலைக் கழகம்.

சில கோட்பாடுகள் காலத்தினால் முந்தியவை, ஆனால் அவற்றினை நிறுவும் நுட்பம் பின்னாலே வரலாம். முன்னைய காலத்து வைக்கப்பட்ட கருத்துக்கள் மற்றுமொரு மொழிக்கு மாற்றம் செய்யப்பட வேண்டியிருக்கலாம். பின்னைய தலைமுறை பரிசோதனை, மீளாக்கம், புதுமையாக்கம் என்பவற்றின் ஊடாக அக்கோட்பாட்டினை நிலைநாட்டலாம். இந்நிலைமைகள் அனைத்துக்கும் பொருந்துவதாக 'அனோமி' என்னும் எண்ணக்கருவினைக் காணக்கூடியதாக உள்ளது. முதன் முதல் 1897 ம் ஆண்டில் இவ் எண்ணக்கருவானது எமில் டூர்கெயிமினுடைய தற்கொலைக் கோட்பாட்டில் காணப்பட்டது. (Emil Durkhiem Study of Suicide Published in France in 1897)

1951 இல் இது பிரான்சியமொழியில் இருந்து ஆங்கில மொழிக்கு மாற்றப்பட்டது. ஏறக்குறைய இவ் 50 வருட காலப்பகுதிக்குள் பல ஆய்வுகள் இக் கோட்பாட்டை நிறுவும் பாதையில் நடைபெற்றிருக்கின்றன. இவர் தற்கொலை தொடர்பான வகைப்பாட்டை (Typology of Suicide) முன்வைத்தார். இவரது தற்கொலைக் கோட்பாடு மூன்று வகையாக பாகுபடுத்திக் காட்டப்பட்டது. அவையாவன

1 - அதியகப்பட்ட நிலை (Egoistical)
2 - பாரிய மாற்றில் ஒவ்வா நிலை (Anomigue)
3 - உன்னதமானவை (Altruistic suicide) ஆகும்.

இவற்றின் பாரிய மாற்றத்தில் ஒவ்வாநிலை (Anomigue Suicide என்னும் தற்கொலையை அனோமியின் வெளிப்பாடாகக் காண்கின்றார். திடீரென்று ஏற்படுகின்ற பாரிய சமூக மாற்றங்களினாலும் சமூகத்திலே காணப்படுகின்ற எல்லா அம்சங்களும் தனக்கு சீரழிந்து விட்டது என்னும் எண்ணம் ஏற்பட்டு சீரான வாழ்க்கை தன்னால் வாழமுடியாது என்று கருதி தற்கொலைக்கு ஆளாகின்றார். மேலும் தனிமனிதர்கள் எல்லையற்ற அபிலாசைகளை அடைய முயற்சிப்பர். ஆனால் அவற்றை அடைவதற்கு வழிவகைகள் இல்லாதபடியினால் அவற்றை அடைய முடிவதில்லை. இந்நிலையில்தான் அனோமி தற்கொலை நிலை உருவாக முடியும். அவனது அபிலாசைகள் சமூகத் தேவைகளுடன் ஒரு போதும் இணங்கமாட்டாது. அவன் அபிலாசைகளை அடையாதபடியால் பெரும் மன உபாதைக்குள்ளாகின்றான். எப்படியும் தன் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற வேட்கையில் சமூக ஒழுக்காற்றினை மீறத் துணிகின்றான். அதிகாரத்தையும், செல்வத்தையும் பெறவேண்டுமென்ற அவா மேலும் ஓங்கி வளர்கின்றது. இவ்வாறான எல்லையற்ற ஆசை உரிய நேரத்தில் கட்டுப்படுத்தப்படாவிடின் இதுவே தற்கொலைக்கான காரணமாக அமைந்து விடுகின்றது. ஆனால் இவர் ஒரு முக்கிய அம்சத்திலே கவனம் செலுத்த தவறிவிட்டார். அதாவது மனிதன் இயற்கையாகவே மாறும் தன்மையுடையவன் என்பது மறுக்க முடியாத உண்மை. (Man is dynamic in nature). சமூக மாற்றங்கள் எப்படியிருப்பினும், மனிதன் அதற்கு இயைந்து போகும் ஆற்றல் படைத்தவன் என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றே கூறலாம். இருந்தாலும் முதன் முதலில் டூர்கெயம் என்பவரே 'அனோமி' என்ற எண்ணக்கருவினை சமூகவியலில். புகுத்தி அதன் முக்கியத்துவத்தினை உணர்த்தியவர் என்ற பெருமையைப் பெறுகின்றார்.

தொடர்ந்தும், ஹாவாட் பல்கலைக்கழக மாணவன் ஆன றொபட் மேட்டன் (Robbert Mertdon) தன்னுடைய 'சமூக அமைப்பும், அனோமியும்' (Social structure and Anomie) என்னும் ஆய்வுக்கட்டுரையை முன்வைத்திருந்தார். டூர் கெயிமினுடைய கோட்பாட்டினை வளர்க்கும் விதமாக, சமூக அமைப்புடன் தொடர்புபடுத்தி இவரது கட்டுரை அமைந்தது. இவருடைய கருத்துப்படி, சட்டபூர்வமான வழிமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அடைக்கப்பட்ட நிலையில் ஒரு சமூகத்தினுடைய பண்பாட்டு இலக்குகள் அழுத்தப்படுகின்ற போது குறித்த சமூகத்தின் ஒரு பகுதி மக்களிடையே 'அனோமி' நிலை தோன்றுவது இயல்பானது என்றார். மனிதனின் வாழ்வியல் ரீதியான உந்தல்கட்கும் சமூகத்தலைகட்குமிடையில் தொடர்ச்சியான மோதல் நடைபெறுகின்றது. சமூக அமைப்புக்கும், பண்பாட்டு விழுமியங்கட்கும் இடையில் ஏற்படும் முரண்பாடே அனோமியாகும். அனோமி சூழ்நிலையை ஏற்படுத்தும் காரணிகள் சமூகத்துக்குள்ளேயே காணப்படுகின்றன. சமூக ஒழுக்கக் கோவைகளை மீறவேண்டிய சூழ்நிலைகளை அக் காரணிகளே உருவாக்குகின்றன. பண்பாட்டு இலக்குகட்கும், நிறுவனமயநெறிகட்குமிடையில் சமநிலை காணப்படின் பிரச்சனை ஏதும் எழவாய்ப்பில்லை. ஆனால் இலக்குகளை அடைவதற்கு நிறுவனமய ஒழுங்குகள் ஏணியாக அமையாதபோதே பிரச்சனை எழுகின்றது.

இவ்வாறான சூழ் நிலையில் தனிநபர்கள் தாமே தமது ஒழுங்குகளையும், வழிவகைகளையும் தீர்மானித்து நோக்கங்களை அடைய முயற்சிப்பார்கள். இருப்பினும் இன்றைய சமூகம் மிகவும் சிக்கல் வாய்ந்தது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மக்கள் தமது நடிபங்குகள் பற்றி தெளிவற்றவர்களாகவே உள்ளனர். அவர்களினுடைய பண்பாட்டு இலக்குகள் காலத்துக்கு ஒவ்வாதவையாக இருப்பதால் அனோமிச் சூழ்நிலை உருவாகின்றது.

மேலும் சமுதாயத்தில் பல விதமான வெவ்வேறுபட்ட நிலைகளில் இருப்போர், பண்பாட்டு ரீதியாக வரையறுக்கப்பட்ட இலட்சியங்களை எய்த வெவ்வேறு வகையான தனிப்பட்ட இசைவு முறைகளைக் கொண்டுள்ளனர். அவைகளை 5 வகையாகப் பிரித்துக் காட்டுகின்றார். அவை பின்வருமாறு:

**A TYPOLOGY OF INDIVIUAL ADAPTATIONS**

| | Modes of Individual Adaptations | Cultural goals [பண்பாட்டு இலக்குகள்] | Institutional Means [நிறுவனமயப்படுத்தப்பட்ட வழிவகைகள்] |
|---|---|---|---|
| 1- | ஒத்துப்போதல் | + | + |
| 2- | புத்தூக்கம் | + | — |
| 3- | சடங்குநிலை | — | + |
| 4- | பின்வாங்கல் | - | - |
| 5- | புரட்சிநிலை | ± | ± |

(+ Acceptance, ± Acceptance or rejection
— rejection,)

அட்டவணையின் பிரகாரம், அறிஞர் மேட்டன் பண்பாட்டு இலக்குகட்கும், நிறுவன ஒழுங்குகள் ஆகியவற்றுக்கும் இடையில் சீராக்கலை மேற்கொள்ளுவதில் உள்ள பிரச்சனைகள் பற்றி ஆய்ந்துள்ளார்.

உதாரணமாக;

இலக்குகள், நிறுவன ஒழுங்குகள் இரண்டுக்குமிடையில் பூரண சீராக்கல் காணப்படும்போது அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணக்கப்பாடு (conformity) காணப்படும். இலக்குகளில் சீராக்கலும் ஒழுங்குகளில் சீராக்கமின்மையும் காணப்படின் அந் நிலையை புத்தாக்கம் (Innovations) என்கின்றார். இலக்குகளில் சீராக்கமின்மையும், ஒழுங்குகளில் சீராக்கமும் காணப்படின் அதனை சடங்குநிலை (Ritualism) என்கின்றார். சில சமயங்களில் ஒருவர் இலக்குகளையும், ஒழுங்குகளையும் கைவிடும் சூழ்நிலையும் உருவாகலாம். இந்நிலையை பின்வாங்கல் (Ritreatism) என்கின்றார். இப்படிப்பட்டவர் சமூகக்கட்டுப்பாடுகளுடன் அதிருப்தி கொண்டவராகையால் சமூகப் பொறுப்புக்களில் இருந்து விடுபட முயற்சிக்கின்றார். இந்நிலையை தீவிர விரக்தி தன்மையென விபரிக்கும் மேட்டன் இந்நிலையையே அனோமிக்கான பிரதான காரணம் என்கின்றார். வாழ்க்கையின் இலக்குகளை அடைய முடியாது என மனவிரக்தி நிலைக்கு தள்ளப்பட்டவர்கள் இவர்கள்; தோல்வி மனப்பக்குவத்தினால் மன நோயாளிகள் ஆகின்றவர். குடித்தனமும் போதை வஸ்துக்கும் அடிமையாகி சமூகத்திலே விலக்கப்பட்ட வர்களாக அலைந்து திரிபவர்களாக காணப்படுவார்கள். உதாரணமாக ஹிப்பிஸ், பிச்சைக்காரர், உளநோயாளர்கள் குடிகாரர்கள்.

இறுதியாக பண்பாட்டு இலக்குகளிலும், சமூக ஒழுங்குகளிலும் மாற்றங்கள் புகுத்தப்பட வேண்டும் என தனிநபர் குரல் எழும்பும்கட்டமே மேற்கூறிய அனோமி ஏற்படும் சந்தர்ப்பம் என்கின்றார். எனவே இவர்கள் புதிய ஒழுங்குகளையும், இலக்குகளையும் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இவர்களை மேட்டன் புரட்சியாளர் (Rebelliors) என்கின்றார். இவற்றினை அடிப்படையில் மேட்டன் தன்னுடைய விலகல் இசைவில் (Deviant adaptations) பின்வாங்கலும் கிளர்ச்சியும் அதிதீவிர அனோமியின் வெளிப்பாடு என்று நிறுவிக் காட்டுகின்றார்.

மேலும் 'சைண்டர்' (Synder) என்னும் அறிஞர் அனோமியை மூன்று ஆக வகுத்துக் காட்டுகின்றார். அவையாவன,

1. ஆதிக்க பண்பாட்டு அனோமி (Dominant culture anomie)

2. சமுதாய அனோமி (Community Anomie)

3. உப பண்பாட்டு அனோமி subculture anomie) ஆகும்

மேலும் '**Robert Dureins**' என்னும் அறிஞர் அனோமி பற்றிக் குறிப்பிடுகையில் ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு தனிநபரும் மூன்று சூழ்நிலைகளை எதிர் கொள்ளுகின்றனர் அவையாவன,

(அ) இலக்குகளை நிர்ணயித்தல்

(ஆ) இலக்குகளை அடைவதற்கான வழிவகைகள்

(இ) தனிநபரின் விழுமியங்கள் அல்லது சிந்தனைகள் ஆகும்.

இவரது கருத்துப்படி; ஒவ்வொரு தனிநபரும் மூன்று சூழ்நிலைகளையும் முற்றாக ஏற்பர் அல்லது சிலவற்றை ஏற்பர் அல்லது முற்றாக நிராகரிப்பர். நிராகரிப்போர் மாற்றுச் சூழ் நிலைகளை அல்லது புதிய கோட்பாடுகளை முன்மொழிவர். ஆனால் மாற்றுச் சூழ்நிலைகளை அல்லது புதிய கோட்பாடுகளை சமூகம் ஏற்றுக் கொள்ளாத நிலையில் அவரின் நடத்தை விலகல் நடத்தையாக மாறுகின்றது. இதுவே அனோமிக்கான காரணியாகின்றது என்கின்றார்.

அனோமி தொடர்பாக டுர்கைம், மேட்டன் ஆகியோரது வழியில் இவ் எண்ணக்கருவை கோட்பாட்டு இயக்கத்தில் இணைத்தவர் பார்சன்ஸ் (Parsons) சமூக நிறுவனங்களை இணைத்து அனோமியை விளக்குவார்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 — உறவு நிலையான நிறுவனம்;

2 — ஒழுங்கு ரீதியான நிறுவனம்;

3 — பண்பாட்டு ரீதியான நிறுவனம்;

4 — உறவு ரீதியானதும், பண்பாட்டு ரீதியானதுமான நிறுவனங்கள், என நான்கு வகையாக சமூகத்தை வகைப்படுத்துகின்றார். இந் நான்கு நிறுவனங்களும் தனிநபர் மீதும், சமூகம் மீதும் பயன் உறுதி வாய்ந்த கட்டுப்பாடுகளைப் பிரயோகிப்பின் அனோமிப்பிரச்சனை எழவே வாய்ப்பில்லை என்கின்றார். கட்டுப்பாடுகள் தளரும் போது அனோமி சூழ் நிலை உருவாகின்றது. ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு தனிநபரும் பல நடிபங்குகளையும், அந்தஸ்துக்களையும் கொண்டிருக்கின்றார்கள். நடிபங்குகள் தொடர்பான முன்னுரிமைப் பிரச்சனையும் எழுகிறது. சமூகத்தில் வேரூன்றிய ஒழுங்குகள் மூலம் இப் பிரச்சனைக்கு தீர்வுகாண தனிநபர் முயலுகின்றனர். ஆனால் நிறுவனமய முன்னுரிமைகள் குறைவாக உள்ளமையினால் நடிபங்குகளில் ஏற்படுகின்ற முன்னுரிமைப் பிரச்சனைக்கு தீர்வுகான முடியாது போகவே திக்குமுக்காடுகின்றான். இந் நிலையில் 'அனோமி தோன்றுகின்றது என்கிறார் பார்சன்ஸ் தொழிற்பாட்டு. வாதியான 'பார்சன்ஸ்' தன்னுடைய பிரதான படைப்பாகிய 'சமூக செயல்களின். கட்டமைவு' [Structure of Social Action] எனும் நூலில்; சமூக செயல் அமைப்பின் கூறுகள் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். சமூக அமைப்பினை விளங்கிக் கொள்ளுவதற்கு சமூகச் செயற்பாடுகளின் கூறுகளைப் பற்றிய தெளிவான விளக்கம் முக்கியமானதாகும். சமூகத்தில் உள்ள பெரும்பான்மையான மக்களின் தேவைகளை செயற்பாட்டுக் கூறுகள் நிறைவேற்றுகின்றன. ஒரு சமூக அமைப்பின் வெற்றியானது கூறுகள் தத்தமக்கென்று ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளை பயன்உறுதி வாய்ந்த முறையில் செயற்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. மாறாக இவைகள் செயலற்றுப் போகின்ற போது சமூதாயத்தில் அனோமி நிலை உருவாகும் என்பது தொழிற்பாட்டு வாதியான பார்சனுடைய கருத்தியலாக அமையும்.

சமூகவியலாளர்கள் ' அனோமி ' தொடர்பாக பயன்தருகருத்துக்களை முன்வைத்துள்ளனர். அனைவருமே அனோமி பெரும் சமூகப்பிரச்சனை என்பதனை ஏற்றுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் அனோமிக்கான காரணங்களையும் அவற்றுக்கான தீர்வுகளையும் காண முற்பட்டுள்ளனர். ஆனால் இவர்களின் கோட்பாடுகள் விமர்சனங்களுக்கு உட்பட்டுள்ளது. அதாவது அனைத்துச் சமூகங்களிலும் நடிபங்குகளும் [Roles] அந்தஸ்துக்களும் ஒரே விதமாக உள்ளன என்கின்ற அடிப்படையில் நடிபங்குகட்கும், அந்தஸ்துக்கும் உச்ச அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவறானது என்கின்றனர், விமர்சகர்கள். அதாவது ஒவ்வொரு சமூகத்திலும் மக்களின் நடிபங்குகளும், அந்தஸ்துக்களும் வேறுபடுகின்றன. சமூகம் வரையறுத்துக் கொள்ளும் நியமங்களே நடிபங்குகளையும், அந்தஸ்துக்களையும் நிர்ணயிக்கின்றன. ஒவ்வொரு சமூகத்திலும் அவர்களுக்கே உரித்தான விழுமியங்கள் உள்ளன. எனவே சகல சமூகங்களிலும் ஒரே தன்மையதான விழுமியங்கள், அந்தஸ்துக்கள் நடிபங்குகள் இருக்க முடியாது. எனவே இவற்றை ஒரே தன்மையில் மதிப்பீடு செய்ய முடியாது.

இவை தொடர்பாக சமூகவியலாளர்களும், விமர்சகர்களும் வேறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளனர். குறிப்பிட்ட சில சமூக தொடர் நடவடிக்கைகளே அனோமிக்கான காரணமாகும் என்கின்றனர் சமூகவியலாளர்கள். ஆனால் தொடர் நடவடிக்கைகட்கும் சமூக நடத்தைகட்கும் முழுக்கவனம் செலுத்தப்பட வில்லை. அனோமிக் கான காரணங்கள் சமூகத்திற்கு சமூகம், ஆளுக்காள் வேறுபடுகின்றது என்பது விமர்சகர்களுடைய கருத்தாகும். விலகல் நடத்தையானது வெவ்வேறு இடங்களில் ஒரே விதமாக இருக்கமுடியாது. அதேபோன்று பண்பாட்டு இலக்குகளும் ஒரே விதமானதும் சகல சமூகங்களிலும் சமமாகவே கணப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது என்று சமூகவியலாளர்கள் கூறு வதை விமர்சகர்கள் விமர்சித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும், அனோமி பற்றிய கோட்பா டுகள் சமூகவியலில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. சமூக முறைமைகள் பற்றிய ஆய்வில் இவைகள் முக்கியமானவைகளா கும். குறிப்பாக இன்றைய எமது சமூகங்களில் விலகள் நடத்தைகள் தொடர்பான ஆய்வுக ளிடையே அனோமிக் கோட்பாடுகளின் முக் கியத்துவம் உணரப்படுகின்றது. அரசியல் சமூக, பொருளாதார தாக்கங்களிடையே பெரும்பாலானவர்கள் இந்நிலைக்கு உட் பட்டிருக்கின்றார்கள். இவை இன்று பாரிய சமூகப்பிரச்சனையாக உருவாகக் கூடிய வாய்ப்புக்களும் நிறையவே உண்டு. எனவே 'அனோமி' தொடர்பான கோட்பாடுகள் மற்றும் ஆய்வுகள் எம்முடைய புலங் களில் நிறையவே தேவைப்படுகின்றன. இந்த வகையில் சமூகவியலாளர்கள் இதற்கு பெரும்பங்காற்றியுள்ளார்கள். அதன் மூலம் சமூகப் பிரச்சனை பற்றிய ஆய்விற்கு புதிய பரிமாணத்தையும் வழங்கியுள்ளனர். சமூகக் காரணிகள், சமூக அமைப்புக்களே விலகல் நடத்தைக்கான காரணங்கள் என்பதே இவர் களின் பிரதான பங்களிப்பு எனச் சிறப் பாகக் கூறலாம்.

## Reference. (உசாத்துணைகள்)


1. Dr. G. Das; **Advanced Sociological Theories**; ('Educational publishers' Delhi, 1992 -1993
2. Earl Rubinston and Martin Weingburg; **'The study of social problems** (Newyork, Oxford Univesity Press, 1981;)
3. Don. C. Gibbons and; JosephF. Jones **The study of deviance** (perspectives and problems) (1975, Prentice) Hall, Inc Englewood Cliffs, New Jersey)
4. நான் - உளவியல் மஞ்சரி — 1990, இதழ் 16, யாழ்ப்பாணம்.


### இலங்கை ஏற்றுமதி முதலீட்டு வலயங்கள் ஆரம்பம்

| ஆண்டு | இடம் |
|---|---|
| 1) வது 1978 | கட்டுநாயக்கா |
| 2) வது 1986 | பியகம |
| 3) வது 1991 | கொக்கலை |
| 4) வது 1993 | மிகிந்தலை |
| 5) வது 1994 | பள்ளேகலை |

ஆதாரம் : இலங்கை முதலீட்டுச் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் தோற்றம், நோக்கம், செயற்பாடு

— சிறு ஆய்வு —

# A Brief Study of the Origin, Objectivies, and Activities of the World Bank and the International Monetary Fund

எஸ். எஸ். உதயகுமார்

## 1. அறிமுகம் :- (Introduction)

பல்வேறு நாடுகளின் அபிவிருத்தி தொடர்பான முயற்சிகளுக்கு 'நிதிப்பற்றாக் குறை' ஒரு பாரிய பிரச்சனையாகவே இருந்து வருகின்றது. எனவே இம் முயற்சிகளுக்கு நிதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இதனால் இத்தகைய நிதிப்படுத்தல் நோக்கில் சர்வதேச ரீதியாக செயற்பட்டு வருகின்ற அமைப்புக்களாக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன தொழிற்படுகின்றன, இவ்வகையில் இந்த அமைப்புக்கள் புதிது புதிதாக எழுச்சியடைந்து வருகின்ற பல நாடுகளின் அபிவிருத்தி முயற்சிக்கென வளர்முக நாடுகளுக்குப் பல கோடிக்கணக்கான டொலர்களை வருடாந்தம் பெற்றுக் கொடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் புனருத்தாரணத்துக்கும், அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கியான உலக வங்கியும் அதன் பிரிவுகளான சர்வதேச அபிவிருத்திச் சங்கமும், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனமும், இவற்றோடு சர்வதேச நாணய நிதியமும் உலகப் பொருளாதார நலன்களைப் பேணுகின்ற இரு தூண்களாக விளங்குகின்றன.

சு. சி. உதயகுமார் **B. A. (Hons) Jaffna**
*தற்காலிக விரிவுரையாளர்*
*பொருளியற்றுறை*
*யாழ். பல்கலைக்கழகம்.*

## 2. உலகவங்கி. சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் தோற்றம் (Origin of world Bank and International Monetary Fund)

இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்த பின் பல நாடுகள் பொருளாதார சீரழிவுக்குட்பட்டு வீழ்ச்சிப்போக்கில் சென்று கொண்டிருந்தன. இந்நிலையில் இவ்வாறு வீழ்ச்சிப் போக்கில் பாதிப்புள்ளாகிக் கொண்டிருந்த நாடுகளுக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டிய தேவை காணப்பட்டது. அத்துடன் 1920, 1930 களில் முதலாளித்துவ நாடுகளில் ஏற்பட்ட பாரிய பொருளாதார மந்தமும், அதன் விளைவால் ஏற்பட்ட நாணயச் சீர்குலைவும் மீண்டும் ஒருமுறை தோன்றலாம் என்ற அச்சமும் எல்லோரிடமும் காணப்பட்டது. எனவே இந்த அச்சத்தில் இருந்து விடுபட்டு நாணய சீரழிவு ஏற்படாது உறுதி நிலையினை ஏற்படுத்த வேண்டிய தேவையும் உணரப்பட்டது. இவ்வாறு உணர்ந்த பிரதான மேற்கத்தைய நாடுகள் 1944 ஆம் ஆண்டு யூலை மாதம் ஐக்கிய அமெரிக்காவில் நியூஹம்ப் செயரில் ( Newhompshire ) இருக்கும் பிரெட்டன் வூட்ஸ் ( Bretton Woods ) என்ற இடத்தில் மாநாடு ஒன்றை நடாத்தினார்கள், இம் மாநாட்டில் சீரழிவுக்குட்பட்டிருந்த சர்வதேச பொருளாதாரத்துக்கு புனர்வாழ்வளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக்கூடிய தீர்வினை காணும் பொருட்டும், நாணயச்சீரழிவில் இருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளை காணும் பொருட்டும் கவனம் எடுக்கப்பட்டது. இதன் விளைவாக சர்வதேச ரீதியில் புனர்நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (தற்போதைய உலகவங்கி) நாணய உறுதிப்பாட்டினை மேற்கொள்ள சர்வதேச நாணய நிதியம் என்ற இருபிரதான நிறுவனங்களின் அமைப்புக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு 28 நாடுகளால் கைச்சாத்திடப்பட்டது. தொடர்ந்து 1945ஆம் ஆண்டு டிசம்பரில் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் ஸ்தாபிக்கப்பட்டது. அன்றுதொடக்கம் இன்றுவரையும் உலக பொருளாதார ரீதியில் மிகவும் கூடிய செல்வாக்கினைச் செலுத்தி வருவதோடு சர்வதேச அபிவிருத்திக்கும் புனர்வாழ்வுக்கும் உதவி வருகின்ற இரு தூண்களாக செயற்படுகின்றது.

இவ்வாறு 1945 முதல் செயற்படத் தொடங்கிய இந்த நிறுவனங்கள் போரின் காரணமாக சீர்குலைந்து காணப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரங்களுக்கு நீண்டகால கடன்கள் வழங்குவதன் ஊடாக உயிரூட்டுவதையே புனர்நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கியான உலகவங்கியின் ஆரம்பகால பிரதான குறிக்கோளாகக் காணப்பட்டது. அதே போல் 1920, 1930 களில் ஏற்பட்ட நாணயச் சீரழிவு போல மீண்டும் ஒரு முறை ஏற்பட இடமளிக்காது நாணயத் தொழிற்பாட்டில் ஓர் உறுதியான நிலையைக் கடைப்பிடிக்கக்கூடிய வகையில் செயற்படும் தன்மையை ஆரம்பத்தில் சர்வதேச நாணய நிதியம் பிரதான குறிக்கோளாக கொண்டு செயற்பட்டது. எனினும் இவ்வாறு இரு நிறுவனங்களும் வெவ்வேறு நோக்குகளில் செயற்படுகின்ற தன்மை ஆரம்பத்தில் காணப்பட்டது. ஆனால் இன்று இவ்விரு நிறுவனங்களும் செயற்படுகின்ற செயற்பாடுகள், கொண்டுள்ள நோக்கங்களை உற்று நோக்கும்போது இவ்விரு நிறுவனங்களும் எதிர்காலத்தில் ஒன்றாகி ஒரே நோக்கத்தில் செயற்படுமோ என்ற வகையில் பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத்தக்கது. எனவே இவற்றின் நோக்கங்கள் பற்றிப் பார்ப்போம்.

## 3. உலகவங்கியின் நோக்கங்கள்/ குறிக்கோள்கள் :-

## (Aims and Objectivies of the World Bank)

1944 ஆம் ஆண்டு யூலை, மாதம் பிரெட்டன் வூட்ஸ் என்ற இடத்தில் நடைபெற்ற மகாநாட்டில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் பிரேரிக்கப்பட்டு 28 நாடுகளால் கைச்சாத்திடப்பட்டது. பின்பு 1945 டிசம்பர் தொடக்கம் சர்வதேச புனர்நிர்மாணத்திற்கும் அபிவிருத்திக்குமான வங்கி (I B R D) தாபிக்கப்பட்டது. இது பின் விரிவடைந்து வந்து 1978களில் சுமார் 132 அங்கத்துவ நாடுகள் கொண்டு செயற்பட்டதோடு 1990களில் 153 அங்கத்துவ நாடுகளைக் கொண்டு செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதன் செயற்பாடு ஆரம்பத்தில் இரண்டாம் உலக யுத்தத்தால் சீரழிவுக்குட்பட்டிருந்த ஐரோப்பிய நாடுகளுக்கு உதவுகின்ற தன்மை காணப்பட்டது. பின்னர் 1950களில் இருந்த இதன் உதவி 3ஆம் உலக நாடுகள் பக்கம் திரும்பியதையும் அவதானிக்கலாம். இதுமட்டுமன்றி இம் மூன்றாம் உலக நாடுகளுக்கு விசேடமான நிதிச் சேவைகள் வழங்க வேண்டிய தேவை. ஏற்பட்டது. இந்த நோக்கத்தினை செயற்படுத்த இலகுவாக 1956ஆம் ஆண்டு யூலை மாதம் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC) என்பதை உருவாக்கி அதனை தன்னிச்சையாகச் செயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவிட்டது. பின் இது 1957இல் பெப்ரவரி மாதம் தொடக்கம் ஐ. நாவுடன் இணைந்து விசேட நிறுவனமாகச் செயற்படத் தொடங்கியது. அதனைவிட 1960ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதத்தில் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA) உருவாக்கப்பட்டது. ஆனால் இதனை நிர்வகிக்கும் பொறுப்பை உலக வங்கி தன் கையிலேயே கொண்டு செயற்பட்டது. எனவே IBRD ஆன தற்போதைய உலக வங்கியினதும் அதன் பிரிவுகளான சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனம் (IFC) சர்வதேச அபிவிருத்தி சங்கம் (IDA) என்பனவற்றினதும் நோக்கங்கள் என்ற வகையில்:

1. உற்பத்தி நோக்கங்களுக்கான முதலீடுகளுக்கு தேவையான மூலதனத்தை அங்கத்துவ நாடுகளுக்கு வழங்குவதன் மூலம் அந்நாடுகளில் புனரமைப்பையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்த வழி செய்தல்.

2. தனியார் வெளிநாட்டு மூலதனங்களை ஊக்குவித்தல்.

3. நியாயமான நிபந்தனைகளுடன் கூடிய தனியார் மூலதனம் கிடைக்காதபட்சத்தில் உற்பத்தி நோக்கங்களுக்கான கடன்களை வழங்குதல். (வங்கி தனது வளங்களில் இருந்து இதனை வழங்கும்)

4. சர்வதேச வர்த்தகத்துக்குச் சமமான வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம் அங்கத்துவ நாடுகளின் உற்பத்தி மூலங்களின் அபிவிருத்திக்கான சர்வதேச முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் சென்மதி நிலுவைச் சமநிலையினை நிலை நிறுத்தல் என்ற வகையில் ஆரம்ப நோக்கங்களைக் கொண்டு, உலக வங்கி செயற்பட உலக வங்கியின் பிரிவுகளில் ஒன்றான சர்வதேச அபிவிருத்திச் சங்கம் பின்வரும் பல நோக்கங்களைக் கொண்டு செயற்படுகிறது.

1. நெகிழ்வுத்தன்மையுடைய (அதாவது பாரம்பரிய கொடுகடன் நிபந்தனைகளுக்கு மாறான) கடன்களை அங்கத்துவம் வகிக்கின்ற குறைவிருத்தி நாடுகளுக்கு வழங்குவதன் மூலம் பொருளாதார விருத்தியை ஏற்படுத்தி,

ஆ) வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

ஆ) உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல் ஊடாக விருத்தியை உயர்த்துகின்றபிரதான நோக்கத்தினை கொண்டு செயற்படல்.

2. உலக வங்கியின் ஏனைய கருமங்களில் ஒத்துழைப்பு வழங்குதல்.

3. பல சலுகைகள் கொண்ட வளைந்து கொடுக்கக்கூடிய நிபந்தனைகளின் பெயரில் கடன்கள் உதவிகளை வழங்குதல்.

4. குறித்த நாட்டின் சென்மதி நிலுவையை பாதிக்காத வகையிலும் அதேநேரம் அங்கத்துவ குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவி வழங்குவதன் மூலமும் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்தல், உற்பத்தித்திறனை உயர்த்தி வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

5. மிகவறிய நாடுகளுக்கு தானாகவே முன்வந்து உதவுதல் போன்றனவாகும்.

அடுத்து உலகவங்கியின் பிரிவுகளில் ஒன்றான சர்வதேசநிதிக்கூட்டுத்தாபனம் ஆனது உலகவங்கியின் நிதியினை விட வேறுபட்ட நிதியினைக் கொண்டு உள்ளதுடன் ஐ. நாவுடன் இணைந்து விசேடித்த நிறுவனமாக செயற்படுகின்ற அதே நேரம் வங்கியுடன் மிக நெருக்கமாகவும் உள்ள இத்தாபனத்தின் நோக்கங்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அங்கத்துவ குறைவிருத்தி நாடுகளில் தனியார் உற்பத்திகள் முயற்சிகளின் வளர்ச்சியை ஊக்குவித்தல் அதனூடாக பொருளாதார விருத்தியை ஏற்படுத்தல்.

2. நியாயமான நிபந்தனைகள் உடன் போதியளவு தனியார் மூலதனம் கிடைக்காத சந்தர்ப்பத்தில் திருப்பிக் கொடுப்பது தொடர்பாக அரச உத்தரவாதம் இல்லாத நிலையிலும் முதலீட்டினை மேற்கொள்ளல்.

3. குறைவிருத்தியை சேர்ந்த உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய வகையில் தனியார் முயற்சிகளின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தல் ஊடாக அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

4. முதலீட்டுக்கான வாய்ப்புக்களையும் வெளிநாட்டு, உள்நாட்டு தனியார் முதலீட்டையும் அனுபவம் உள்ள முகாமையினையும் ஒன்றுசேர்க்கின்ற ஒரு நிறுவனமாகத் தொழிற்படல் போன்ற பல நோக்கங்களைக் கொண்டு செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது.

## 4. சர்வதேச நாணயநிதியத்தின் நோக்கங்கள்/குறிக்கோள்கள் :-

## (Aims and Objectives of the International Monetary fund)

1944ஆம் ஆண்டு யூலை மாதம் பிரெட்டன்வூட் இடத்தில் நடைபெற்ற மாநாட்டின் மூலம் உருவான மற்றைய நிறுவனமாக சர்வதேச நாணயநிதியம் விளங்குகின்றது. சர்வதேச ரீதியாக 1920, 1930 களில் உலகப் பொருளாதாரங்களில் ஏற்பட்ட பாரிய பொருளாதார மந்தத்தின் விளைவால் ஏற்பட்ட "நாணயச் சீர்குலைவு" மூலம் பெற்ற அனுபவத்தை பல நாடுகள் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இரண்டாம் உலக யுத்தமுடிவின் பின் மீண்டும் ஒருமுறை இப்படியான ஒரு நாணயச் சீர்குலைவு உருவாகக்கூடும் என்ற அச்சநிலையை அனேகமான நாடுகள் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், முன்னர் ஏற்பட்ட நாணயச் சீர்குலைவில் இருந்த நாடுகளை விடுவிக்கவும், சர்வதேச ரீதியாக எதிர்காலத்தில் பொருளாதாரங்களுக்கிடையே ஒரு உறுதியான நாணயத் தொழிற்பாட்டினை மேற்கொள்ளும் வகையிலும் 1944 இல் பிரிட்டன்வூட் மாநாட்டைத் தொடர்ந்து 1945 டிசம்பர் தொடக்கம் நாணய அமைப்புக்குப் பொறுப்பான ஒரு ஸ்தாபனமாக ஸ்தாபிக்கப்பட்ட ஒரு நிதியமே சர்வதேச நாணய நிதியமாகும். இதில் ஆரம்பத்தில் குறைந்த அளவு நாடுகள் அங்கத்துவம் வகித்தாலும் தற்போது 150ற்கு மேற்பட்ட நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. அதுமட்டுமன்றி 2000ற்கு மேற்பட்ட நிரந்தர ஊழியர்களையும் கொண்டு செயற்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் இந்த நிதியத்தின் நோக்கங்களை பார்ப்போமாயின் குறிப்பாக,

1. சர்வதேச ரீதியாக பொருளாதாரங்களுக்கிடையே நாணய ஒத்துழைப்பினை உருவாக்குதல்.

2. சர்வதேச ரீதியில் நாடுகளுக்கிடையிலான சர்வதேச வர்த்தகத்தினை விஸ்தரித்தல் தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவித்தல், சென்மதி நிலுவைப் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுதல்.

3. சர்வதேச ரீதியில் நாடுகளுக்கிடையிலான அந்நிய செலாவணி உறுதிப்பாட்டினை ஊக்குவித்தல்.

4. சர்வதேச ரீதியில் ஒரு ஒழுங்கான செலாவணி அமைப்பினை பேணுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வர்த்தகத்தினை கட்டுப்படுத்தக்கூடிய வெளிநாட்டு செலாவணி கட்டுப்பாடு களை நீக்குதல்.

6. அங்கத்துவ நாடுகளுக்கிடையே ஏற்படு கின்ற நாணயக் கொடுப்பனவு விட யங்களில் உதவி புரிதல்.

7. நாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற போட்டி அடிப்படையினை நாணயப் பெறுமதி இறக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படாது தடுத்தல், என்ற வகையில் பல நோக்கங்களை கொண்டு செயற்படுகின்றது.

மேற்படி நோக்கங்களைக் கொண்ட சர்வதேச நாணய நிதியமானது அங்கத்துவ நாடுகளிடமிருந்து திரட்டுகின்ற சந்தாப் பணம் (அங்கத்துவநாட்டு நாணயத்தில் 75% உம், IMF இனால் விதிக்கப்படும் நாண யத்தில் 25% உம் ஆக பெறப்படும் சந்தாப் பணம்) மற்றும் பெற்றுக் கொள்கின்ற கடன்கள், உதவிகள் மூலமும் பல்வேறு வழிகளில் கடனாகவும், உதவியாகவும் நாடு களுக்கு வழங்க வசதிகளை ஏற்படுத்தி செயற்பட்டு வருகின்றது. இவ்வாறாக அங் கத்துவ நாடுகள் செலுத்துகின்ற சந்தாப் பணத்திற்கு ஏற்ப IMF இன் செயற்பாடு கள் தொடர்பாக அளிக்கப்படும் வாக்குக ளின் எண்ணிக்கையும் பகிரப்பட்டுள்ளது. இதன்படி உலகின் முக்கியமான 7 நாடுகள் கூடிய வாக்குகளை பெறுகின்றது. அதி லும் அமெரிக்கா மட்டும் 20% வாக்கினை கொண்டுள்ளது. இது இவ்வாறிருக்க IMF ஆல் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு செயற் திட்டங்களுக்கும் 85% பெரும்பாண்மை காட்ட வேண்டும். ஆகவேதான் அமெரிக்கா தன் 20% வாக்குகளை பயன்படுத்தி சில நேரங்களில் ''வீட்டோ'' அதிகாரம் மூலம் சில திட்டங்களைச் செயற்படுத்த அனுமதி மறுக்கின்றது.

மேலும் நாடுகளுக்கு உதவும் நோக் கில் நிதிப்பிரச்சனை ஏற்பட முன்னரேயே அவற்றை அறிந்து கொள்ள இந்நிதியம் உதவுகிறது. அத்துடன் சென்மதி நிலு வைப் பிரச்சனைகளை அனுபவிக்கும் நாடு களுக்கு உதவிபுரியவென பல ''கணக்குக களையும், வசதிகளையும்'' உருவாக்கி உள்ளதோடு மட்டுமன்றி உறுதியாக்கற் திட்டங்களை வகுக்கவும் ஆலோசனைகள் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இவ் வாறாக வழங்கப்படும் நிதிவசதிகள் ஆனது சென்மதி நிலுவையின் தன்மையைப் பொறுத்தும், சென்மதி நிலுவை பிரச்ச னையைத் தீர்க்க முன்வைக்கும் கொள் கைகளைப் பொறுத்தும் வேறுபட்டு அமை யும். நிதியத்தின் அடிப்படை நிதிவழங்கும் கொள்கையின்படி கடன் தொகுதி (Credit Tracle) யின் கீழ் நான்கு தொகுதியின் கீழ் கோட்டாவின் 25%, 25% ஆக கடன் வசதி கள் மேற் கொள்ளப்படும் இதனைவிட சென் மதி நிலுவைப் பிரச்சனையைத் தீர்க்க நிரந்த ரமான கொள்கைகள் (Permanant Policies) ஊடாக சிறுகுறிப்பிட்ட தேவைகளுக்கு நிரந்தர வசதிகள் (Permanent Facilities) என்ற வகையில் உதாரணமாக

1. விரிவாக்கப்பட்ட நிதிவசதி (EFF)
2. நட்ட ஈட்டு நிதிவசதி (CFF)
3. தாங்கியிருப்பு நிதிவசதி (BFF)
4. குறைநிரப்பு நிதிவசதி (SFF)
5. விரிவாக்கப்பட்ட வாய்ப்பளிக்கும் கொள்கை (EAP)
6. எண்ணெய் வசதி (OF)
7. வறிய நாடுகளுக்கு உதவுவதற் கான சலுகை அடிப்படையிலான வசதிகள் (CFAPC) போன்ற பல

வசதிகளை ஏற்படுத்தி அதனூடாக வளர் முக நாடுகளுக்கு உதவி வருகின்றது. இது மாத்திரமன்றி நம்பிக்கை நிதியிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கின்ற நிதிமூலம் குறை வருமான நாடுகளுக்கு விசேட எடுப்பனவு கணக்கின் கீழ்.

அ) அமைப்பு ரீதியான செம்மையாக்கல் (சீராக்கல்) வசதி (SAF)

ஆ) விரிவாக்கப்பட்ட அமைப்பு ரீதியான சீராக்கல் வசதி (ESAE)

இ) விசேட கொடுப்பனவின் கணக்குகள் ஊடாக சலுகை அடிப்படையிலும் சென்மதி நிலுவை பிரச்சனையைத் தீர்ப்பதற்கான அல்லது குறைப்பதற்கான கொடுப்பனவுகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக உலகவங்கியானது புனரமைப்பு அபிவிருத்தி கருதி நீண்டகால கடன்களை வழங்க சர்வதேச நாணய நிதியம் தற்காலிக சென்மதி நிலுவை பிரச்சனைகளை தீர்க்கும் நோக்குடன் அதிகளவு குறுங்கால கடன்களை வழக்கி வருகின்றது. அதே போல் வங்கியானது சிறப்பாக அபிவிருத்தி குறைந்த நாடுகளுக்கு கடன் வழங்க IMF ஆனது அபிவிருத்தி அடைந்த, அடைந்து வருகின்ற நாடுகளுக்கும் கடன் வழங்குகின்றது. எனினும் வங்கியில் இருந்து கடன்களை வறிய நாடுகள் இலகுவாக பெறக்கூடியதாக உள்ளது. அதேநேரம் IMF இடம் இருந்து வறிய நாடுகள் இலகுவாக கடன் பெற முடியாதநிலை காணப்படுவதும் சுட்டிக்காட்டப்படக்கூடிய ஒன்றாகும்.

### 5. உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் செயற்பாடுகள்;-

### (Activities of the World Bank and the International Monetary Fund

ஆரம்பத்தில் வங்கியானது அபிவிருத்தி, புனர்நிர்மான செயற்பாடுகளை மேற்கொள்ள, நிதியமானது நாணய உறுதிப்படுத்தல் தொடர்பான செயற்பாடுகளில் சென்மதி நிலுவைப் பிரச்சனைகளைத் தீர்க்கின்ற வகையில் செயற்பட்டது. தொடர்ந்து 1970 களில் ஏற்பட்ட (1973-1974) பெற்றோலிய விலை உயர்வு மூலம் உலகநாடுகள் 1980 களில் சென்மதி நிலுவை தொடர்பாகவும், பேரின பொருளாதார ரீதியாக அனுபவித்த நெருக்கடிகள் காரணமாகவும் இவ்விரு நிறுவனங்களும் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கின்ற வகையில் ஒன்றின் செயற்பாட்டுக்கு மற்றயது வழிவிட்டுக் கொடுக்கவேண்டிய வகையில் இணைந்து செயற்படுகின்ற தன்மையை கொண்டிருப்பதுடன் ஆலோசனைகளைப் பரிமாறியே கடன்கள், உதவிகள் வழங்கும் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றன.

1980 களின் ஆரம்ப கால கட்டத்தில் இருந்து பிரிட்டன் வூட்ஸ் நிறுவனங்களான WB. IMF என்பன சென்மதி நிலுவைப் பிரச்சனைகளை திருத்தியமைக்கவும் வளர்முக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான நிபந்தனைகளை பற்றி உணர்ந்து கொள்வதற்குமான அமைப்பு சீராக்கல் கடன்களையும் உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களையும் அறிமுகப்படுத்தியிருந்தன. 1980 களின் பிற்பகுதியில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்ற எண்ணக்கரு நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்பதைப் பேணுவதற்கு அரசாங்கத் தோல்விகள், சந்தைத் தோல்விகள் என்பவை இடையூறுகளாகக் காணப்படுகின்றன. எனவே அரசாங்க சந்தை தோல்விகளை திருத்துவதற்கு அவசியமாக சொத்துரிமைகளை அறிமுகம் செய்தல் என்றநோக்கில் நிறுவன ரீதியான மாற்றங்கள் அவசியமாகும். இவ்வாறு நிலைத்து நிற்கும் அபிவிருத்தி எனும் கருதுகோள் கொள்கை மட்டத்தில் முக்கியத்துவம் பெற்று வித்தியாசமான வளர்ச்சியை தரும் வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்ட வளர்ச்சியை நோக்கமாக கொண்டிருந்தது. இந்த வகையில் வருங்கால அபிவிருத்தி வளங்களை (பெற்றோல்) பாதுகாத்தல் மற்றும் நிச்சயமான மிகக் குறைந்த சூழல் தாக்கங்களையும், வளங்களையும் நீண்டகால நோக்கில் பேணுகின்ற நோக்கம் என்றவகையிலும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியில் சூழல் அம்சங்களுக்கு கவனம் செலுத்தி, உலக வங்கி சர்வதேச தொழிற்பாடுகளில் மேல் எழுந்துள்ளதை காணலாம்.

பிரிட்டன் வூட்சின் தலையீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்களுக்கும், அபிவிருத்திக்கும் இடையிலான தொடர்பை கருத்திற் கொண்டு தீட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சீராக்கல் திட்டங்கள் 3 வேறுபட்ட நிலைகளின் ஊடாக தோற்றம் பெறுகின்றன. 3 வது கட்டத்தில் தோற்றம் பெறும். நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியின் சுற்றாடல் தேவைப்பாடு களுக்கு கவனம் செலுத்தப்படுகிறது. மேலும் விசேட திட்டமிடல்களில் உண்மையான மாற்றங்களுக்கும் அவற்றை முழுமையான மாற்றங்களுக்கும் உட்படுத்தாமல் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி நிலையில் சாத்தியமான WB, IMF ஆகியவற்றின் சீராக்கல் தந்திரோபாயங்களின் வளர்ச்சி தொடர்பாக சிபார்சுகள் மேற் கொள்ளப்படுகின்றன. ரொபேட் மக்னமாராவின் கூற்றுப்படி (1972 Policy Options) "தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சி இருக்க வேண்டுமா? என்பது கேள்வியல்ல, அது இருக்கவேண்டும்; சூழலில் அது ஏற்படுத்தும் தாக்கம் மதிப்பிட வேண்டுமா? என்பதும் கேள்வியல்ல. அது மதிப்பிடப்படல் வேண்டும். கடைசியாக இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவையா? என்பதும் கேள்வியல்ல. அவை பின்னிப்பிணைந்தவை தான்" என்ற கூற்று குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மேலும் அமெரிக்கர் ஒருவரை பாரம்பரியமாக தலைவராக கொண்ட உலக வங்கியும், பாரம்பரியமாக ஐரோப்பியர் ஒருவரை நிர்வாகப்பணிப்பாளராக கொண்ட சர்வதேச நாணய நிதியமும் முறையே அமைப்புரீதியான சீராக்கல் கொள்கை (SAP) உறுதிப்படுத்தல் கொள்கை (SP) என்பனவற்றைக் கடைப்பிடித்து வருகின்ற நிலை அண்மைக் காலத்தில் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுகின்ற வகையில் இவற்றில் புதிதாக உருவாக்கப்பட்ட உறுதிப்படுத்தல் அமைப்பு சீராக்கல் கொள்கை (SSAP)யைக் கடைப்பிடித்து வருகின்றது. சென்மதி நிலுவைப் பிரச்சனைத் தீர்வு, கடன் சுமை குறைப்பு, நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்தலை பிரதான நோக்கமாகக் கொண்ட இச்செயற்பாடு எதிர்காலத்தில் இவ்விரு நிறுவனங்களும் ஒன்றாகிவிடுமோ என்ற ஊகத்தினை ஏற்படுத்துவதோடு, 1990 களில் ஏற்பட்ட சோவியத் ஒன்றிய உடைவினால் இவற்றின் உதவி மூன்றாம் உலக நாடுகளை விட்டு திசைதிரும்பி உடைந்த சோவியத் ஒன்றிய நாடுகள் பக்கம் சென்றுவிடுமோ என்ற அச்ச உணர்வும் குறைவிருத்தி நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் இன்றைய உலகில் சர்வதேச ரீதியாக செயற்படுகின்ற பாரிய நிறுவனங்கள் என்ற வகையிலும், பல கோடிக்கணக்கான டொலர்களை வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுக்கு வழங்கி வருகின்ற வகையிலும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய இரு நிறுவனங்களும் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. ஆகவே இத்தகைய பாரிய நிறுவனங்களான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் பற்றி பரந்தளவில் ஆராய முற்படின் பரந்த ஆய்வாக மாறிவிடும் என்பதால் இந்நிறுவனங்களின் தோற்றம், நோக்கம், செயற்பாடு பற்றி மிகவும் சுருக்கமாகவே இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ABBREVIATIONS

| | |
|---|---|
| I B R D | – International Bank for Reconstruction and Development |
| W B | – World Bank |
| I M F | – International Monetary Fund |
| I D A | – International Development Association |
| I F C | – International Finance Corporation |
| E A P | – Enlarged Access Policy |
| E F F | – Extended Fund Facility |
| C F F | – Compensatory Financing Facility |
| B F F | – Buffer Stock Financing Facilities |
| CFAPC | – Concessional Facilities Assist Poorer Countries |
| SSAP | – Stabilisation and Structural Adjustment Policy |
| SFF | – Supplementary Financing Facility |
| O F | – Oil Facility |
| ESAF | – Enlarged Structural Adjustment Facility |
| SAF | – Structural Adjustment Facility |
| SP | – Stabilisation Policy |
| SAP | – Structural Adjustment Policy |

## Reference


1. Environment and Development Economics. Volume 1 Part 2, May 1996 Policy Options "Bretton Woods intervention Programmes and Sustainable development"– J. B. Opschoor and S. M. Jongma. Page – 143–144,183–201
2. Theory and Problems of International Economics. Third edition – 1990 Dominick Salvatore Chapter - 12 "The International monetary System Past and Present, Page – 216–219, 221–228
3. Trade and developing Countries. Kathryn Morton and Peter Tulloch –1978 Chapter – 07. "Finance and International Trade" Page - 278–280, 292.
4. International Economics. Kindleberger and Lindert six edition - 1978 Part IV Adjustment Policies. Chapter 21 - "The debate over Fixed and Flexible exchange rates" Page – 396-401
5. Mentor Volume – I January /95 Part - I. "சர்வதேச நாணய நிதியம் – சிராக்கல் கொள்கைகளும் பொருளாதார அபிவிருத்தியும்" செல்வி கமலகுமாரி பரமசாமி. Page - 41-46.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பொருளியலாளன் மலர் – 3 இதழ் — 1 ஏப்ரல் 1989 "சர்வதேச நாணய நிதியமும் கடன் வசதிகளும்" இ. நந்தகுமாரன் Page - 54 60.
7. சிந்தனை தொகுதி V, இதழ் I, IIபங்க ஆனி 1993 "கிராமிய வறுமை தணிப்பு உலக வங்கியின் அணுகுமுறை" சி. அம்பிகாதேவி Page - 67-80.
8. மார்க்கம் "உலக வங்கியின் அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கையும் வறுமை தணிப்பும்" சி. அம்பிகாதேவி Page - 32-36, 48.
9. பொருளியல் நோக்கு செப் / ஒக்ரோபர் / 1978 பக் - 03-12, 16, 17, 22
10. பொருளியல் நோக்கு ஆகஸ்ட் / 1988 பக் - 20-23.
11. பொருளியல் நோக்கு ஜன / பெப் / 1995 பக் – 03-27.
12. Macro Economic Theory and Policy William H. Branson Third Edition Page — 419.
13. The International Monetary Fund 1966–1971 The System under Stress Volume – II Documents Edited by Margaret Garritsen devries Washington–1976.
14. The International monetary Fund 1945–1965 Twenty years of Internationa Monetary Volume – I Chronicle Co-operation by J. Kerth Horse Field Washington – 1969.

கல்வி சுகாதாரத்திற்கான அரச செலவினம்
(மொத்தச் செலவின் சதவீதமாக)

| நாடுகள் | கல்வி | சுகாதாரம் | நாடுகள் | கல்வி | சுகாதாரம் |
|---|---|---|---|---|---|
| இலங்கை | 10.1 | 4 8 | தாய்லாந்து | 21.1 | 8.1 |
| இந்தியா | 2.1 | 1.6 | பிரேசில் | 3.7 | 6.9 |
| பாகிஸ்தான் | 1.6 | 1.0 | மலேசியா | 19.6 | 5.9 |
| நேபாளம் | 10.9 | 4.7 | சிங்கப்பூர் | 23.9 | 6.2 |
| பூட்டான் | 10.7 | 4.8 | ஐ. இராட்சியம் | 13.2 | 13.8 |
| பிலிப்பைன்ஸ் | 15.0 | 4.1 | ஐ. அமெரிக்கா | 1.8 | 16.0 |

(ஆதாரம் : World Development Report, 1994)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் விவசாய அபிவிருத்தியில் நிலச்சீர்திருத்தச் சட்டங்களும் அதன் விளைவுகளும்

# Land Reform Legislations and its Impacts on Agricultural Development of Sri Lanka

எம். சிறிதங்கராஜா

ஒரு நாடு பொருளாதார விருத்தியை மேற்கொள்ளும் போது அந்த நாட்டில் இருக்கும் மூலவளங்களைப் பயன்படுத்தியே அபிவிருத்தியை மேற்கொள்ளமுடியும். அந்தவகையில் இலங்கையின் விவசாயத் துறையாவது முக்கிய பங்கு வகிக்கின்றது. இவ் விவசாயத் துறைக்கான அபிவிருத்தியில் இயற்கை மூலவளங்களான நிலம், நீர், சூரிய ஒளி என்பன முக்கியமானதாகும். இவற்றுள் சூரிய ஒளி, நீர் என்பன தேவைக்கு ஏற்ப கிடைக்கக் கூடியன, ஆனால் நிலத்தின் நிரம்பல் மட்டும் நிலையானது. இந்நிலையில் உலகின் சனத்தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதனால் தலா ஒருவருக்கான நிலத்தளவு குறைந்து செல்கின்றது. இதனால் நிலம் பற்றாக்குறை தொடர்பாக பல பிரச்சினைகள் தோன்றி வருவதைக் காணலாம். இதன் ஒரு வெளிப்பாடே இன்னொரு நாட்டில் படையெடுப்பதும் அரசியல் புரட்சிகள் ஏற்படுவதும் வரலாற்றின் மூலம் அறிகின்றோம். இவ்வாறாக விவசாய அபிவிருத்தியில் நிலம் முக்கிய காரணியாக காணப்படுகிறது. நிலத்தின் முக்கியத்துவத்தினை 1989 ஆண்டு கொப்பச்சோவ் சோவியத் யூனியனின் கம்யூனிஸ் கட்சியின் மத்திய குழு நிறைவுக் கூட்டத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடும் போது ''பன்னெடுங்காலமாக மனித குலத்தின் ஜீவிதம் முன்னேற்றம் என்பவற்றுடன் காணி நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருந்து. இதன் விளைவாக காணி தொடர்பான பிரச்சனைகளும் மனித சமூகத்தில் மிக முக்கியமான இடத்தை வகித்துத்துள்ளன. எந்த நாட்டிலும் எந்த யுகத்திலும் எத்தகைய சமூகப் பொருளாதார நிலையிலும் இதே நிலை காணப்பட்டு வந்துள்ளதைக் காணலாம்'' எனக் குறிப்பிட்டார்.

1796ம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையை கைப்பற்றியதன் பின்னர் பெருந்தோட்ட விவசாயத் துறையை விருத்தி செய்வதற்காக 1840ம் ஆண்டு முடிநில அபகரிப்புச் சட்டம் மூலம் நிலங்கள் முழுவதும் முடிக்குரியதாக்கப்பட்டது. இச்சட்டம் நிலமற்ற விவசாயிகளை உருவாக்கியது. இதன் பின்னர் 1931ம் ஆண்டு இலங்கை டொமினியன் அந்தஸ்தை பெற்றதன் பின் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ள வழிவகுத்தது. அமைச்சுப் பொறுப்பு ஏற்றதனால் நிலச் சீர்திருத்தத்தை மேற்கொண்டு விவசாய அபிவிருத்தியினை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. நிலச் சீர்திருத்தம் என்னும் போது விவசாயத்துறையில் நிலம் சம்மந்தமாக காணப்படுகின்ற குறைபாடுகளை நீக்குதல் பொருட்டு நில ஆட்சிமுறை, குத்தகை வரிமுறை, நில வரிமுறை என்பன அரசின் அல்லது நிறுவனத்தின் தலையீட்

மு. சிறிதங்கராஜா
பொருளியல் சிறப்புக்கலை
இறுதி வருடம்
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டால் ஒழுங்கு படுத்தும் நடவடிக்கையாகும். அதாவது ஒரு சிலருடைய நிலச்சொத்தை பரவலாக்கி சொத்துடைமையின் சமத்துவத்தைப் பேணி சமூக நீதியை நிலை நாட்டுதல், விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்தல், வேலைவாய்ப்பை விருத்தி செய்தல், இடையீட்டாளர்களை ஒழித்து அரசிற்கும் விவசாயிற்கும் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்தல் என்பன நிலச்சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கமாகும். இந் நோக்கம் வெற்றியடைய சில சீர் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

1) மரபு ரீதியான தவறான நிலவுடமை முறையை ஒழித்தல்
2) குத்தகை முறைகளை சீர்திருத்தல்
3) நிலத்திற்கு உச்சவரம்பு விதித்தல்
4) கூட்டுறவு விவசாய பண்ணைகள் அமைத்தல்.

இவ் நடவடிக்கையை மேற்கொண்ட சில நாடுகளில் சமூக பொருளாதாரத்தில் மிக விரைவான வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றன. இவ்வாறான வளர்ச்சியை இலங்கையிலும் ஏற்படுத்த இயற்றப்பட்ட நிலச்சீர் திருத்தச் சட்டங்களையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் சுருக்கமாக நோக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையில் விவசாயிகளின் நிலப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு 1935ம் ஆண்டு இயற்றப்பட்ட காணி அபிவிருத்திச் சட்டமானது பல்வேறு வகையான தேவைகளுக்கு முடிக்குரிய காணிகளை முறைப்படி வழங்குவதற்கான நிறுவன ரீதியான படிமுறையொன்றினை வகுத்துத் தந்தது, பிறிதோர் நோக்கில் 1930ம் ஆண்டு இலங்கையில் நிலச்சீர்திருத்தம் ஏற்பட்டதெனலாம். அதாவது இக்காலத்தில் வரண்ட பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தத்துடன் நிலச்சீர்திருத்தம் ஆரம்பமாயிற்று எனினும் 1935ம் ஆண்டுச்சட்டத்துடன் குடியேற்றத்திட்டங்கள் விரைவுபட்டன. வரண்ட வலயப் பிரதேசங்களில் அரச செலவில் நீர்பாசன விருத்தி ஏற்படுத்தப்பட்டு குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன இச்சட்டம் சனத்தொகை செறிவு குறைவாகவுள்ள விருத்தியடையாத பிரதேசங்களிலும் வரண்டபிரதேசங்களிலும் குடியேற்றங்களை அமைத்து விவசாயிகளை நிலவுடமையாளன் ஆக்குவதுடன் உணவு உற்பத்திப் பெருக்கம், கூடிய வேலை வாய்ப்பு, அன்னியச் செலவாணியை மீதப்படுத்தல், வருமான ஏற்றத்தாழ்வை குறைத்தல் போன்றவற்றை ஏற்படுத்துவதாகச் சட்டம் காணப்படுகின்றன.

அரசாங்கத்தால் வகுக்கப்பட்ட குடியேற்றங்களாக இளைஞர் குடியேற்றத் திட்டங்கள், கிராமிய விஸ்தரிப்புத் திட்டங்கள், பல நோக்குத் திட்டங்கள், பாரிய குடியேற்றத் திட்டங்கள் என்பன சிலவாகும். உ-மாக பலநோக்குத் திட்டத்தின் கீழ் 1947 ம் ஆண்டில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா அபிவிருத்தித்திட்டம் குறிப்பிடக் கூடியதாகும். இக் குடியேற்றத் திட்டங்களில் ஆரம்பத்தில் ஒவ்வொரு குடியேற்ற வாசிக்கும் 5 ஏக்கர் தாழ் நிலமும் 3 ஏக்கர் மேட்டுநிலமும் வழங்கப்பட்டது. இது பின்னர் 3 ஏக்கர் தாழ் நிலமாகவும் 2 ஏக்கர் மேட்டு நிலமாகவும் குறைக்கப்பட்டது. இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் சில சமூக நலனை அதிகரித்தபோதும் பொருளாதார ரீதியில் எதிர் பார்த்த வெற்றியினை அளிக்கவில்லையென கூறலாம். முடிக்குரிய காணிகளற்ற சனத்தொகை அமுக்கமும் வேலையின்மையும் கூடிய இடங்களில் குடியானவர் பிரச்சனைகளுக்கு இது ஏற்ற தீர்வாக அமையவில்லை. சனத்தொகை குறைந்த விருத்தியடையாத பிரதேசங்களில் குடியானவர்களைப் பெருமளவு குடியேற்றுவதில் பல பிரச்சனைகள் காணப்பட்டதுடன் குடியேற்றத் திட்டங்களும் திருப்திகரமானதாக செயற்படவில்லை. அதாவது அரச ஊழியர்கள் அக்கறையின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால் திட்டங்கள் முறையாக மேற்பார்வை செய்யப்படாமை குடியேற்ற வாசிகளை தெரிவு செய்யும் போது அனுபவம், ஊக்க உழைப்பு மனப்பான்மை என்பவற்றைப் பாதுகாக்காது தவறிழைத்தமை குடியேற்ற வாசிகள் பழைய கிராமத்துடன் இருந்த தொடர்பை துண்டிக்காத நிலமை, போக்கு வரத்து, பாசன வசதி. சமூக சேவை வசதிகள் என்பவற்றை முறைப்படி செய்து கொடுக்காமை போன்ற காரணங்களால் குடியேற்றத் திட்டங்கள் திருப்திகரமான பலனை அளிக்கவில்லை. எனினும் அண்மைக் காலங்களில் இக்குறைபாடுகள் நீக்கப்பட்டு வருகின்றதெனலாம்.

குடியேற்ற அபிவிருத்திச் சட்ட மூலம் பொருளாதார ரீதியாக எதிர்பார்த்த விளைவு கிடைக்காமையால் விவசாய விருத்தியினை மேற்கொள்வதற்கு 1958 ம் ஆண்டு மாசி மாதம் 1 ம் திகதி நெற்காணிச் சட்டம் உருவாக்கப்பட்டது ஏழை விவசாயிகளை சுரண்டும் குத்தகை முறையை ஒழுங்குபடுத்துவதாக அமைவதோடு ஏனைய சில விவசாய நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாக அமைகின்றது. 1958 ம் ஆண்டு 400,000 ஏக்கர் நெற்காணியில் 300,000 குடியானவர்களால் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இவ்விவசாய குடியானவனுக்கு நிவாரணமளிப்பதையே நெற்காணிச் சட்டம் முக்கிய குறிக்கோளாக கொண்டு இருந்தது.

இச்சட்டம் பின்வரும் அம்சங்களைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

1) விவசாய குடியானவனுக்கு சாகுபடி நிலத்தில் நிரந்தரமான பாதுகாப்பு அளித்தல்
2) குடியானவன் நிலச்சுவானுக்கு கொடுக்கப்படும் வாடகையை வரையறை செய்தல்
3) சாகுபடி குழுக்களை அமைத்தல்
4) நிலம் துண்டாடப்படுவதை தடுத்தல்
5) விவசாயக் கருவிக்கான வாடகையும் விவசாயக் கடனுக்கான வட்டியையும் விவசாய கூலிவிகிதத்தையும் ஒழுங்குபடுத்தல்

இவ்வாறான நன்மையை இலங்கையில் கிராமிய விவசாயிகளுக்கு ஏற்படுத்துவதற்காக இச்சட்டம் உருவாக்கப்பட்டது. எனினும் நுணுகி நோக்குகையில் இது பலவீனமான அம்சங்களைக் கொண்டுள்ளது உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்கும் சமூக நீதியைப் பேணவோ சுரண்டல் குத்தகை முறையை ஒழிக்கவோ முடியவில்லை, மாறாக நிலக்குத்தகை முறையை சீர்படுத்துவது என்ற சிறு நோக்கத்தையே உள்ளடக்கி இருந்தது. இச் சீர்திருத்த சட்டம் பரந்த நோக்கில் குத்தகை குடியானவனுக்கு சாதகமான பயனைப் பெற்றுக்கொடுக்கும் ஒன்றாக காணப்பட்ட போதும் சட்டத்தை நடைமுறைப்படுத்திய போதும் குடியானவர் இதன் பயனை நன்கு அனுபவிக்க முடியாதபடி பல பிரச்சனைகள் தோன்றின. உ-மாக பல விவசாயிகள் தாம் பயிர் செய்த விவசாய நிலத்துக்குரிய குத்தகை அளவை குறைத்துக் கொடுக்க முனைந்ததால் நிலவுடமையாளரால் நிலத்தில் இருந்து வெளியேற்றப்படலாம் என அஞ்சினர். எனவே இச்சட்டத்தால் குடியானவர்களின் நியாயமான இவ் அச்சத்தை போக்க முடியவில்லை. இதனைவிட நிலம்தவிர்ந்த ஏனைய உள்ளீட்டுப் பொருட்களுக்கும் (முதல், இயந்திரம், தெளிகருவி) நிலச் சுவாந்தர்களில் தங்கி இருக்க வேண்டி இருந்ததால் அதற்கான வாடகையை அளவுக்கதிகமாக செலுத்த வேண்டி இருந்தது. இது போன்ற காரணங்களினால் இச்சட்டம் வலிமை குறைந்து திறம்பட செயற்பட முடியாது போயிற்று எனலாம். நிலக் குத்தகையை சீர்படுத்தும் சிறிய நோக்கம் கூட செயற்படுத்த முடியவில்லை. பொதுவாக எமது விவசாயிகளுக்கும் அரசாங்க அதிகாரிகள், திட்டமிடுவோர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் போன்றவர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகமாக இருந்ததனால் உண்மையான சமூக பொருளாதார பிரச்சனைகள் உணரமுடியாது உள்ளமையே இவ்வாறான பிரச்சினைக்கெல்லாம் அடிப்படைக் காரணமாக அமைகிறது என்னும்

இச்சட்டம் கிராமமட்டத்தில் நன்மையான விளைவுகளையும் விளைவித்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. அதாவது ஒவ்வொரு கிராம மட்டத்திலும் விவசாய குழக்களை அமைப்பதில் இச்சட்டம் வெற்றியடைந்துள்ளது. விவசாயிகள் தங்கள் பிரச்சினைகளை தாங்களே உணர்ந்து அதற்கான தீர்வுகளை ஆலோசிப்பதற்கும் விவசாயிகளிடையே கூட்டுறவு மனப்பாங்கு ஓங்குவதற்கும் விவசாயிகளுக்கும் அரச உத்தியோகத்தவர்களுக்குமிடையே நெருங்கிய இணைப்பு ஏற்படவும் விவசாயக்குழு என்னும் நிறுவன அமைப்பு பெரிதும் உதவியது.

இலங்கையில் விவசாய அபிவிருத்திக்கு ஏற்படுத்தப்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்டங்களில் 1958 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சட்டம் எதிர்பார்த்த பயனை அளிக்காததனால் 1972 ம் ஆண்டு ஆவணிமாதம் 26 ம் திகதி தேசிய அரசுப் பேரவையில் இயற்றப்பட்ட சட்டமே உச்சவரம்புச் சட்டமாகும். இச்சட்டமானது 1970 ஆம் ஆண்டு தேர்தவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டு முன்னணி அரசாங்கமானது தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணிச் சீர்திருத்தம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. 1972 ம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் கிளர்ச்சியே 1972 ம் ஆண்டு உருவாக்கப் பட்ட காணிச் சீர்திருத்தச் சட்டத்திற்கு காரணமாயிற்று. ஆகவே நிலச் சொந்தக்காரர் நிலத்தை இழப்பதற்குரிய மனப் பான்மையை ஏற்படுத்திய தென்றும் அத்துடன் சட்டத்தை அமுலாக்கக் கூடிய சாதகமான அரசியல் சமூக சூழ்நிலைகளை ஏற்படுத்தித் தந்தது எனவும் கூறப்படுகிறது. 1972 ம் ஆண்டு உருவாக்கப்பட்ட உச்சவரம்புச் சட்டமானது கூடுதலான நிலம் உள்ள நிலச் சுவாந்தர்களிடம் இருந்து நிலத்தை பறிமுதல் செய்து நிலமற்ற, சிறிய நிலமுடைய விவசாயிகளுக்கு நிலத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இருந்தது. இச் சட்டத்தின் நோக்கங்களை இரண்டு வகையாக வரையறை செய்ய முடியும்.

1) எவரும் உச்சவரம்பிற்கு மேற்பட்ட கமத் தொழில் காணிகளுக்கு சொந்தக்காரராக இருத்தல் ஆகாது என்பதனைத உறுதிப்படுத்தல்.

2) ஒருவருக்கு சொந்தமாக இருக்கும் உச்சவரம்பிற்கு மேற்பட்ட கமத் தொழில் காணிகளை கையேற்றலும், அவற்றில் உற்பத்தி பெருக்கமும் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கும் வகையிலும் பயன் படுத்தல்.

மேற் குறிப்பிட்ட சட்டத்தின் உச்சவரம்பானது முழுவதும் நெற்காணியாயின் 25 ஏக்கரும் மேட்டுக்காணியைப் பொறுத்தவரை 50 ஏக்கர் எனவும் வரையறை செய்யப்பட்டு இருந்தது இவ் 50 ஏக்கரில் நெற்காணியும் உள்ளடக்கி இருப்பின் 25 ஏக்கருக்கு மேல் தனிநபருக்கு இருக்கக் கூடாது எனவும் இவ்வாறு உச்சவரம்பு விதிக்கப்படுகையில் பொதுக்கம்பனிகள் மத நிறுவனங்கள் போன்றவற்றிற்கு சொந்தமான நிலம் இச்சட்டத்தின் வரையறைக்குள் கொண்டு வரப்பட வில்லையென்பது குறிப்பிடத் தக்கதாகும். உச்சவரம்புச் சட்டத்தை முறியடிக்கும் நோக்கில் காணி உரிமைகளில் மாற்றம் செய்யப்பட்டதென காணி ஆணைக் குழு கருதுமாயின் அவ்வித உரிமைமாற்றங்களை இரத்துச் செய்ய முடியும். இக்காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் இரண்டாவது அம்சம் அரசால் பொறுப்பேற்க்கப்பட்ட காணிகளுக்கு நட்ட ஈட்டினை வழங்கும் நடவடிக்கையாகும். அதாவது கடந்த ஐந்தாண்டுகளில் அக்காணியில் பெற்ற சராசரி ஆண்டு இலாபத்தில் 15 மடங்கிற்கு மேற்படாததாகவும் அல்லது உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்ட அல்லது ஆணையாளரால் மதிப்பிடப்பட்ட காணியின் பெறுமதியிலும் எத்தொகை கூடியதோ அத்தொகையே நட்ட ஈட்டுத் தொகையாக கருதப்படும் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1972ம் ஆண்டுச் சட்டம் கிராமிய விவசாயிகளின் நிலத்தேவையை பூர்த்தி செய்வதற்கு ஏற்றதாக அமையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் 1973ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட விவசாய விளை பெருக்கச் சட்டமும் 1975ம் ஆண்டு ஐப்பசி 17ம் திகதி இயற்றப்பட்ட 19ம் இலக்க நிலச்சீர் திருத்த (திருத்தச்) சட்டமும் முக்கியம் பெற்றது. 1973 ஆம் ஆண்டுச் சட்டமானது விவசாய விளை பெருக்கக்குழு என்ற நிறுவன அமைப்பு கிராமிய விவசாயிகளிடம் தோன்ற வழிவகை செய்வதோடு விவசாய சேவை நிலையங்களை கிராம மட்டத்தில் வங்கி வசதிகளுடன் இணைத்து துரிதமாக இயங்கவைத்தது. பின்னைய சட்டம் அதாவது 1975ம் ஆண்டுச் சட்டம் பகிரங்க கப்பனிகளுக்கு சொந்தமாக இருக்கும், அல்லது அதன் உடமையில் இருக்கும் காணி ஒவ்வொன்றும் நில ஆணைக்குழுவின் உடமையாவதற்கு வழிசெய்யப்பட்டது இச் சட்டத்தின்படி. பயிர் செய்கைப் பரப்பும் பயிர் செய்கையற்ற பரப்புமாக 974885 ஏக்கர் காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன. இதில் பெரும் தோட்டக் காணி 415508 ஏக்கரும் நெற்காணி 559377 ஏக்கருமாகும். மேற்படி ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்ட பெரும் தோட்டங்கள் துண்டாடப்படாது அரச பெரும் தோட்ட கூட்டுத்தாபனம் ''உசவசம'' [Usawasama] என்றழைக்கப்படும் கூட்டுறவுச் சபைகள் என்பவற்றின் முகாமைத்துவத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டன இக் குடியானவர் வருடாவருடம் செலுத்தும் குத்தகைப் பணமே காணியை அவர்களது உடமையாக்கும் கொள்வனவுப் பணமாகவும் காலக்கிரமத்தில் அக்காணி உடமையாக்கும் நடவடிக்கையாகவே அமைந்துள்ளது.

1972ம் 1975ம், ஆண்டு சீர்திருத்தச் சட்டமானது கிராமிய விவசாயப் பொருளாதாரத்தில் எதிர்பார்த்த வெற்றியை ஈட்டியுள்ளது எனக் குறிப்பிட முடியாது. அதாவது இச்சட்டங்கள் மூலம் காணிகள் அரச உடமையாக்கப்பட்ட போதும் மத நிறுவனங்களுக்கு சொந்தமான பயிரிடக் கூடிய பெருமளவு ஏக்கர் நிலப்பரப்பு பயிரிடப்படாமல் இருந்தது. உதாரணமாக புத்தசமய நிறுவனங்களுக்கு 375000 ஏக்கர் காணிகள் சொந்தமாய் இருந்தன. அதே போல ஏனையமத நிறுவனங்களும் அரச உடைமையாக்கப்படாது காணப்பட்டுள்ளன. இவற்றில் சிறுபகுதி காணிகளே குத்தகையாளனால் பயிரிடப்பட்டன.

கிராம மட்டத்தில் காணப்படும் நெற்செய்கைக் காணிகள் மிகச் சிறிய காணி உடமையாகவே காணப்படுகின்றன. அதாவது $\frac{1}{3}$ ஏக்கர் பரப்பை கொண்டதாக காணப்படுகின்றன. ஆனால் நெற்காணியின் உச்சவரம்பு 25 ஏக்கர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு 25 ஏக்கருக்கு குறைந்தளவான பரப்பைக் கொண்டோராக 95 % மானவர்கள் காணப்படுகின்றார்கள். இவ்வாறான நிலை காணப்பட்டதனால் அரசினால் எதிர்பார்த்த நன்மை கிடைக்கவில்லை எனலாம்.

நிலச் சீர்திருத்தச் சட்டமூலம் விவசாயிகளை, காணிகளின் எசமானர்களாக ஆக்கும் தீவிரமாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதே புதிய சீர்திருத்தக் கொள்கையாகும். இந்த அம்சம் முன்னைய காணிச் சீர்திருத்தங்களில் காணப்படவில்லை. 1977ன் பின்னர் இப்பிரச்சனை குறித்து புதிய அணுகுமுறையொன்று கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது எனக்கூறப்படுகின்றது எனினும் புதிய அணுகுமுறையென அழைக்கப்படும் முறையானது பழைய அணுகுமுறையை விடச் சற்று வேறுபட்ட ஒன்று மட்டுமே என்பதற்கான ஆதாரங்களும் உள்ளன. 1979ம் ஆண்டின் காணிக் கொடை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் அரச உடமையாக இருக்கும் காணிகள் காணியற்றோருக்கு பகிர்ந்தளிக்கப்படுவது அவசியம் என்பதை அங்கிகரித்து இருந்தது. ஆனால் ஒரு ஏக்கருக்கு உட்பட்ட காணிமட்டுமே ஒதுக்கீடு செய்யப்படலாம் என அதில்வரையறை செய்யப்பட்டிருந்தது. பொருளாதார சாத்திய வளத்தை ஏற்படுத்த இயலாத அளவிற்கு இது மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதாகும். இந்த வரையறையின் காரணமாக 1985 முடிவுவரை 21027 ஏக்கர் காணிகளை குறைந்த வருமானம் பெறும் காணியற்றவர்களிடையே பகிர்ந்தளிக்கக் கூடியதாக இருந்தது.

எனினும் சீர்திருத்தத்தின் கீழ் அரசால் காணிகள் பொறுப்பேற்கப்பட்ட போது அரசியல் ரீதியாக பழிவாங்கப் பட்டவர்களுக்கு 1983 ஏப்ரல் வரை 43489 ஏக்கர் காணிகள் திருப்பி வழங்கப்பட்டு இருந்தன. முக்கியமாக 1981ம் ஆண்டின் 39ம் இலக்க காணி சீர்திருத்த (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின்படி வர்த்தக ரீதியான விவசாய நோக்குகளுக்கு என அரசின் உடமையாக இருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் அன்னிய நாட்டுக் கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன புக்கிஸ் சர்வதேச விவசாய நிறுவனத்தின் பங்களிப்புடன் கூட்டமைக்கப்பட்ட பெல்வத்த சீனிக்கம்பனிக்கு 25901 ஏக்கர் காணியும் மொனராகல சீனிக் கம்பனிக்கு 12500 ஏக்கர் காணியும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிட்டுக் கூறத் தக்கதாகும்.

அத்துமீறிக் குடியேற்றம் பற்றி சற்றுத் தாராளமான போக்கு கடைப்பிடிக்கப் பட்டது. இதனை மட்டும் கொள்கையில் ஏற்பட்ட உண்மையான மாற்றம் என வர்ணிக்க முடியும். காணியற்ற விவசாயிகளுக்கு அரச காணிகள் மறு பகிர்வு செய்யும் விடயத்தில் குறைந்த முக்கியத்துவம் மட்டுமே வழங்கப்பட்டு இருந்தது. அத்துடன் வழங்கப்பட்ட சிறு அளவு காணிகள் தொடர்பாகவும் அசிரத்தையே காட்டப் பட்டு வந்துள்ளது. இவற்றின் விளைவுகள் தெளிவாக தென்படத் தொடங்கியுள்ளன. காணி தேவைப்படுபவர்களுக்கு அரச காணியை பகிர்ந்து அளிப்பதற்காக ஜனாதிபதி செயற்படை ஒன்று தற்போது அமைக்கப் பட்டுள்ளது. இது காணி உடமைபற்றி கொள்கை வகுப்பாளர்களிடையே ஏற்பட்ட தீவிர சிந்தனை மாற்றத்தை குறிப்பதாக உள்ளது.

இவ் விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றியை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கக் கூடியதாக இரு முக்கிய அம்சங்களைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

1) ஒதுக்கீடு செய்யப்படவுள்ள பொருத்தமான அலகை சரியாக இனம் காணுதல்

2) காணிக்கு மிக அதிகமாக கேள்வி காணப்படும் வேளையில் பகிர்ந்தளிக்கக் கூடிய காணியின் அளவு மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. எனினும் பொருளாதார ரீதியில் சாத்தியவளம் கொண்டிராத அளவிற்கு பகிர்ந்தளிக்கப்படும் காணியின் அளவு சிறிதாக இருக்குமானால் இச் செயற்பாடு தோல்வியையே தழுவ நேரிடும்.

இந்த இரண்டு அம்சங்களையும் கவனத்தில் கொண்டு காணிப்பகிர்பு மேற் கொள்ளப்படுமாயின் எதிர்பார்த்த பயனை அடைய முடியும், அதாவது உயர் விளைதிறன், கிராமிய வறுமையை போக்குதல், வேலையில்லாப் பிரச்சனைக்கு பரிகாரம் காணுதல் என்பவை காணிப்பகிர்வின் இலக்குக்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

நிலச் சீர்திருத்த நடவடிக்கையால் மட்டும் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியாது. நிலச் சீர்திருத்தத்துடன் சில குறைந்தபட்ச அடிப்படை வசதிகளையும் அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன் மக்களும் விவசாய உற்பத்தியில் அக்கறையுடன் ஈடுபட வேண்டும். அதாவது நீர்பாசனவசதி விவசாய உற்பத்தி ஆலோசனைகள், விவசாயக் கடன் வழங்குதல், உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்த வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், தொழில் நுட்ப அறிவைப் புகுத்தல், பயிர் காப்புறுதி விவசாயிகளுக்கு ஓய்வூதியத் திட்டம் போன்ற விவசாய அபிவிருத்திச் சேவைகளை அக்கறையுடன் செயற்படுத்துவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் நிலச் சீர்திருத்தத்துடன் இணைந்து செயற்பட்டு வறுமை, வேலையின்மை, வருமான ஏற்றத்தாழ்வு போன்றவற்றோடு பசுமைப் புரட்சி கண்டு உலக நாடுகள் வியக்கும் வண்ணம் உயர்வடைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள் :-


1) ஜெயரத்தினராசா. R :- இலங்கைப் பொருளாதாரம். [காணிச் சீர்திருத்தம் Page :- 75-93]

2) சிவச்சந்திரன். R :- (புவியியற் கழகம்.) யாழ்ப்பாண புவியியலாளன் [இதழ் 3 1985-1986 Page 57-63]

3) மத்திய வங்கி 1950 - 1975 வருடகால வெள்ளிவிழா வெளியீடு ''காணிச் சீர்திருத்தம்''

4) பொருளியல் நோக்கு

I. திசரனி குணசேகர :- புதிய நிலச் சீர்திருத்தம் [Page :- 3-6]

II. ஜெயவர்த்தனா ஒ. சி :- இலங்கையின் காணிக் கொள்கையில் முக்கிய கட்டங்கள் [Page -9-21 ஜனவரி - 1990]

5) Abeysinghe Ariya. S :- **Land reform in Sri Lanka** [1505-1975 Quest Series 46, The Centre of Society and Religion, Colombo- 1975]


தலைக்குரிய மொ.தே.உ.யின் கொள்வனவு சக்தி விகிதங்கள்
(ஐ . அமெரிக்கா) = 100

| ஆசிய நாடுகள் | 1987 | 1993 |
|---|---|---|
| இந்தியா | 4.2 | 4.9 |
| இலங்கை | 10.7 | 12.1 |
| பிலிப்பைன்ஸ் | 10.6 | 10.8 |
| மலேசியா | 23.8 | 32.1 |
| இந்தோனேசியா | 10.1 | 13.7 |
| தென்கொரியா | 27.7 | 38.9 |
| தாய்லாந்து | 16.7 | 25.3 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பரவலாக்கமும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியும்

## Decentralization of Power and Attempt to Solve Ethnic Crisis

ரி. சுமங்களா

இலங்கையில் குடியேற்றவாதயுகம் முடிவடைந்து சுதந்திரம் பெற்ற பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மாறிமாறிக் கடைப்பிடித்த இனரீதியான அரசியல் நடவடிக்கைகள் காரணமாக சிறுபான்மை இனத்தவர்கள் தமது உரிமைக்காக போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதுவே நாளடைவில் தேசிய இனப்பிரச்சனையாக உருவெடுத்தது. இந்த இனப்பிரச்சனையை தீர்க்குமுகமாக காலத்துக்கு காலம் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் பல்வேறு விதமான தீர்வுத்திட்ட யோசனைகளை முன் வைத்தன. இந்த வகையில் 1940 களில் S. W. R. D பண்டாரநாயக்காவினால் முன் வைக்கப்பட்ட பிரதேச சபை முறை (Regional Councils) 1957 இல் கைச்சாத்திட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், 1967 இல் கொண்டுவரப்பட்ட மாவட்ட சபை (District Councils) 1981 இல் கொண்டுவரப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபை (District development councils). 1987 இல் கொண்டுவரப்பட்ட இலங்கை - இந்தியா ஒப்பந்த அடிப்படையிலான மாகாணசபைத் தீர்வுத் திட்டம் (Provincial Councils) போன்ற முயற்சிகள் எதுவுமே பயனளிக்காது போய்விட்டன. ஆனால் 19 4 ம் ஆண்டு பதவிக்கு வந்த ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா இனப் பிரச்சினையை தீர்க்குமுகமாக அதிகாரப் பரவலாக்கல் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தார். புதிய அரசியலமைப்பில் இணைக்கப்படவுள்ள இந்தத் தீர்வுத் திட்டம் இது வரையில் வெளியான திட்டங்களுள் சிறப்பானதும், வரவேற்கத்தக்கதுமான அம்சங்கள் பலவற்றைக் கொண்டுள்ளன என பலராலும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இந்த தீர்வுத் திட்ட அம்சங்களை ஆராய்வதற்கு முன்னர் அதிகாரப் பரவலாக்கல் என்றால் என்ன என்பது பற்றி நோக்குவோம்.

அதிகாரப் பரவலாக்கல் பெருமளவுக்கு சமஷ்டி முறையில்தான் உருப்பெறுகின்றது. இங்கு தன்னாட்சிப் பிரதேசங்கள் அரசியல் திட்ட ரீதியாகத் தோற்றுவிக்கப்பட்டு அதற்கென்று சில அதிகாரங்களும் வரையறுத்து வழங்கப்படுகின்றன. அதாவது மத்திய அரசாங்கத்தை சுற்றி வரையறுக்கப்பட்ட தன்னாட்சிப் பிரதேசங்களை அரசியல் திட்ட ரீதியாக தோற்றுவித்து அதிகாரங்களை பரவலாக்கிக் கொள்வதே அதிகாரப் பரவலாக்கல் எனப்படுகின்றது. இந்த அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தினால் மேல் இருந்து கீழ் நோக்கி பரிமாற்றப்படுகின்றது. இந்த அதிகாரக் கைமாற்றம் ஆனது வெவ்வேறு நாடுகளில் அந்நாட்டின் அரசியல் அபிவிருத்தியின் நிலைமைக்கேற்பவும், மத்திய அரசின் தன்மைக்கேற்பவும் நாட்டின் அடிமட்ட நிலையில் இருந்து எழுகின்ற சக்திகளின் தாக்கத்திற்கேற்பவும் வெவ்வேறு சாயல்களை

---

செல்வி சுமங்களா திருநாவுக்கரசு
அரசறிவியல் சிறப்புக்கலை
இறுதி வருடம்
யாழ். பல்கலைக் கழகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு காணப்படும். இந்த அதிகாரக் கைமாற்றம் பற்றி மட்றிக் (Maddick) என்ற அறிஞர் குறிப்பிடுகையில் சம்பிரதாய பூர்வமாக அரசியல் யாப்பிற்கமைவாக உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களால் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக குறிப்பிட்ட செயல்பாட்டை நடைமுறைப் படுத்துவதற்காக சட்டபூர்வமான முறையில் அதிகாரங்களை கைமாற்றுதல் அல்லது அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் எனக் குறிப்பிடுகின்றார். ஸ்சேர்வூட் (Sherwood) என்ற அறிஞர் குறிப்பிடுகையில் உள்ளூராட்சி மன்ற பூகோள அமைப்புக்கு ஏற்றவாறான வகையில் அதிகாரங்களை மாற்றி அமைத்து அரசியல் அமைப்பின் முழுமையான நிலையில் இருந்து பிரிவுபடுத்தி உருவாக்கும் ஒன்றை இந்த முறையானது பிரதிநிதித்துவம் செய்வதாகும் என குறிப்பிடுகின்றார். எனவே பொதுவாக நோக்கும் போது மத்திய அரசில் குவிந்துள்ள அதிகாரங்கள் பிராந்திய, உபபிராந்திய அலகுகளுக்கு பரவலாக்கப்படுவதையே அதிகாரபகிர்வு குறிக்கின்றது.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலேயே அதிகாரப் பரவலாக்கல் ஆரம்பித்து, இன்றுவரை தொடர்ந்து வந்துள்ளது. 1835ம் ஆண்டு கோல்புறாக் ஆணைக்குழுவின் விதப்புரைக்கு ஏற்ப 5 மாகாணங்களாக பிரிக்கப்பட்டு பரவலாக்கல் நடவடிக்கை இடம் பெற்றுள்ளது. ஆனால் 1930 களின் பின்னர்தான் நாம் அதிகாரப் பரவலாக்கல் விடயங்களை தெளிவாக உணரக் கூடியதாக உள்ளது. 1967ம் ஆண்டுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட அதிகாரப்பரவலாக்கல் திட்டங்கள் பெருமளவுக்கு நிர்வாகப் பரவலாக்கலாகவே அமைந்து காணப்பட்டது. இவையாவும் சிங்கள பேரினவாத சக்திகளின் எதிர்ப்புக்கள், அழுக்கக் குழுக்களின் எதிர்ப்புக்கள் காரணமாக கைவிடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. 1967ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மாவட்ட சபை முறை சிறுபான்மை இனங்களின் உரிமைகளை பேணுவதற்காக அதிகாரங்களை பரவலாக்கும் நடவடிக்கையாகவே காணப்பட்டது. இக் காலப்பகுதியில் ஐக்கிய தேசியக்கட்சி அரசு ஆட்சியில் இருந்தது. இந்த மத்திய அரசின் அதிகாரங்களை சிறுபான்மை இனங்களின் நலன்களைப் பேணக் கூடிய வகையில் மாவட்ட சபைகளிடம் பகிர்ந்து கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அன்று பிரதம மந்திரியாக இருந்த டட்லி சேனநாயக்கா எதிர்க்கட்சிகள், சிங்கள அழுக்கக் குழுக்கள், மற்றும் பெரும்பான்மை மக்களின் எதிர்ப்பு காரணமாக இத் திட்டத்தையும் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது.

1980ம் ஆண்டு காலப்பகுதியில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் (District Development Councils) ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் விதப்புரைக்குஅமைய 35ம் இலக்கச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்டது. இம் மாவட்ட அபிவிருத்தி சபை ஊடாக அதிகாரங்களை பரவலாக்குவதன் மூலம் ஓரளவு இன முரண்பாடுகளை நீக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. மற்றும் நிர்வாகத்தை பரவலாக்குவதன் மூலம் மாவட்ட அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும் எனவும் நம்பப்பட்டது. உண்மையிலேயே உத்தேசிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபையானது இனப்பிரச்சனையுடன் நேரடியாக எந்தவிதத் தொடர்பினையும் கொண்டிருக்கவில்லை. இது மாவட்ட மட்டங்களில் நிர்வாகத்தை பரவலாக்குவதன் மூலம் மாவட்ட வளங்களை கண்டுபிடித்து மாவட்ட அபிவிருத்தியை ஏற்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும். கல்வி, விவசாயம், கைத்தொழில் குடியேற்றம் போன்றவற்றின் அதிகாரம் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு வழங்கப்படும் என ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தாலும் பின்னர் எந்த விதமான அதிகாரங்களையும் வழங்கவில்லை. இது சிறுபான்மையினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. மற்றும் மாவட்ட அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட

நிதி தேவையற்ற விடயங்களில் வீண்விரயம் ஆக்கப்பட்டது. இவ்வாறு மாவட்ட அபிவிருத்தி சபையின் அதிகார மையவாக்க செயற்பாடு அதன் தோல்விக்கு வழிவகுத்ததோடு நாட்டின் இனமுரண்பாட்டை நீக்கும் என்ற எதிர்பார்ப்பையும் தவறாக்கியது. அதிகார மையவாக்கத்தால் வடக்கு - கிழக்கு பிரதேச மாவட்ட அபிவிருத்தி சபைகளின் செயற்பாட்டால் நம்பிக்கையில்லாத தன்மை ஏற்பட மக்களின் அதிருப்தி காரணமாக 1983 இன் பின் வடக்கு - கிழக்கு பிரதேசங்களின் தீவிரம் கொண்ட உரிமைப் போராட்டம் இம் முறையை மேலும் முற்றாக செயலிழக்க வைத்தது.

மாவட்ட அபிவிருத்தி சபைகளின் தோல்வியைத் தொடர்ந்து இனப் பிரச்சனை தீவிரம் அடையத் தொடங்கியது. இந்தக் கால கட்டத்தில் தான் இலங்கைத் தமிழரின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் இந்தியாவின் தலையீடும் அதிகரித்தது. இவற்றின் விளைவாகவே இலங்கை - இந்திய ஒப்பந்த அடிப்படையிலான மாகாண சபைத் தீர்வுத் திட்டம் (Provinicial Councils) உருவாக்கப்பட்டது. அரசாங்கம் இது பற்றிய முன் மொழிவை 1986 June 25 ம் திகதி கட்சிகளின் கலந்துரையாடல் ஒன்றில் முன் வைத்தது. இலங்கை அரசியல் வரலாற்றில் ஓரளவு பயனுடைய அதிகாரப்பரவலாக்கல் திட்டங்களின் முதற்படி இதுவாகும். இது 1986 இல் முன்மொழியப்பட்டாலும் 1987 இல் இந்தியா - இலங்கை ஒப்பந்தப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு 9 மாகாணங்களுக்கும் 9 மாகாண சபைகள் உருவாக்கப்படும் என்றும் கூறப்பட்டது. மேலும் வடக்கு -கிழக்கு பகுதிகள் தற்காலிகமாக இணைக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் என்றும் குறிப்பிட்ட காலத்தின் பின்னரான இணைவின் தொடர்ச்சியான தேவை பற்றிய சர்வஜன வாக்கெடுப்பு கிழக்கு மாகாணத்தில் நடத்தப் பெற்று முடிவு தீர்மானிக்கப்படுமென்றும் கூறப்பட்டது. இந்த அடிப்படையிலேயே இலங்கை அரசியலமைப்பு சாசனத்தின் 13 வது திருத்தச் சட்டம் மூலம் மாகாண சபை முறை ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு மாகாண சபைக்கும் உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும். ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள ஒவ்வொரு மாவட்டமும் தேர்தல் மூலம் தொகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறு மாவட்ட அபிவிருத்தி சபைகளும், மாகாண சபைகளும் அரசியல் சட்டரீதியாக கொண்டுவரப்பட்ட போதிலும் இவை எதிர்பார்த்த வெற்றியினை அளிப்பதற்கு பதிலாக மீண்டும் பிரச்சினைகள் தீவிரம் அடையவே வழி வகுத்துள்ளன.

இவ்வாறு ஒவ்வொரு முறையும் அரசுக்கு எதிரான சக்திகள் எதிர்ப்பு ஏற்பட அப்பிரேரணைகள் கைவிடப்பட்டு இனப் பிரச்சனை தீவிரம் அடைய வழி திறக்கப்பட்டது. இந்த வகையில்தான் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நிம்மதியற்ற பதற்றம் நிறைந்த வாழ்க்கையையும், அழிவுகளையும் சந்தித்த மக்கள் சமாதானப் பாதையின் கதி அவலமானது என்ற அங்கலாய்ப்புடன் வாழ்ந்த காலத்தில் தான் பதவிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு இனப்பிரச்சனை தீர்வுக்கான தீர்வுப் பொதியை முன்வைத்தது. ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னனி அரசாங்கம் முன்வைத்த அதிகாரப் பரவலாக்கல் அமைப்பு முறை பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

1 அதிகாரப் பரவலாக்கல் அமைப்பு முறை

- 1. 1 பரவலாக்கல் கூறு
- 1. 2 பிராந்திய சபைகள்
- 1. 3 ஆளுநர்
- 1. 4 முதலமைச்சரும், அமைச்சரவையும்
- 1. 5 தலைநகர ஆள்புலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நிதி
3. சட்டமும் ஒழுங்கும்
4. காணியும் காணிக் குடியேற்றமும்
5. கல்வி
6. நீதித்துறை நிர்வாகம்
7. பகிரங்க சேவை
8. அதிகாரப் பரவலாக்கல் ஆணைக்குழு
9. தலையங்கம் தரப்படவில்லை ஆனால் சில விபரங்கள் தரப்பட்டுள்ளன.
10. பரவலாக்கலின் பொருள்

இனப்பிரச்சனைத் தீர்வுக்காக முன்வைக்கப்பட்ட இந்த அதிகார பரவலாக்கல் அமைப்பு முறையில் சில வரவேற்கத்தக்க அம்சங்களும் இடம் பெற்றிருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. பொது ஜன ஐக்கிய முன்னனி அரசு இனப்பிரச்சனைக்கு ஒரு முடிவைக் காண்பதற்காக அதிகாரப்பரவலாக்கல் பொதி ஒன்றை முன் வைத்து அதனை ஆதாரிப்பதன் மூலம் ஒத்துழைப்பை தமக்கு நல்கும்படி பொது மக்களைக் கேட்டுக் கொண்டிருப்பது வரலாற்றில் இதுவே முதல் தடவை என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். மற்றும் தீர்வுத் திட்ட யோசனைகள் பற்றி இலங்கையின் சகல சமுகங்களிடமிருந்தும் கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் கோரியிருப்பதும் வரவேற்கத்தக்க ஓர் அம்சமாகும். இதற்கு முன்னையகாலப்பகுதிகளில் கொண்டுவரப்பட்ட தீர்வுத் திட்ட யோசனைகளுக்கும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்ட யோசனைகளுக்கும் இடையில் சில அடிப்படை வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன, ஆரம்ப காலப் பகுதிகளில் கொண்டுவரப்பட்ட தீர்வுத்திட்ட யோசனைகள் யாவும் அப்போதைய பதட்ட நிலையை தணிப்பதற்காகவும் தமிழ் மக்களை திருப்திப் படுத்துவதற்காகவும் அரசியல் லாப நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டவையாகும். இது மட்டுமன்றி இவை இனப்பிரச்சனைக்கான தீர்வுத்திட்ட யோசனையாக இவ்வாறு பெருமளவுக்கு நிர்வாகப் பரவலாக்கமாகவே அமைந்திருந்தது. ஆனால் சந்திரிகா அரசு முன்வைத்திருப்பது இனப்பிரச்சனை தீர்வுத்திட்ட யோசனையாக மாத்திரம் இருப்பது ஒரு குறிப்பிடக் கூடிய அம்சமாகும். மற்றும் அதிகாரப்பரவலாக்கல் அமைப்பு முறையில் 1.2 இல் பிராந்திய சபைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஒரு பிராந்திய சபையானது சட்டத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒரு பிராந்திய சபை முன்னதாகவே கலைக்கப்பட்டாலொளிய 5 ஆண்டு காலப்பகுதிக்கு தொடர்ந்திருக்கும். ஒவ்வொரு சபைக்கும் சபாநாயகர் ஒருவரும் பிரதிச் சபாநாயகர் ஒருவரும் இருப்பார். இவ்வாறு கலைக்க முடியாத பிராந்தியங்களின் கூட்டாக பிராந்திய சபைகள் காணப்படுவது அதிகாரப் பரவலாக்கல் அமைப்பு முறையின் ஒரு நல்ல அம்சமாகவே காணப்படுகின்றது. மேலும் இந்த அமைப்பு முறையில் ஆளுநர் தொடர்பான ஏற்பாடுகள் 1.3 இல் கூறப்பட்டுள்ளன. இங்கு ஆளுநருக்கு அனேகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மற்றும் அத்தியாயம் இரண்டில் நிதி தொடர்பான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. 2.3 இல் கடன் எடுக்கும் முறைகள் பற்றியும் 2.4 இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. இவை யாவும் பிராந்திய சபைகளின் அதிகாரங்களை ஒரளவு கூட்டுவதாக காணப்படுகின்றன இத்தகைய வரவேற்கத்தக்க சில நல்ல அம்சங்களையும் அதிகாரப்பரவலாக்கல் அமைப்பு முறையில் நாம் இனம்காணக் கூடியதாக காணப்படுகின்றது.

இவ்வாறு சில நல்ல அம்சங்களை அதிகாரப்பரவலாக்கல் அமைப்பு முறையில் அவதானிக்கக் கூடியதாக இருந்தாலும் சில அம்சங்கள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முட்டுக்கட்டையாக இருந்து வருவதனையும் நாம் உணரக் கூடியதாக உள்ளது. இந்த தீர்வுத் திட்ட யோசனைகளை அமுல் படுத்துவதற்கு தடையாக பல சக்திகள் பல கோணங்களில் இருந்து அழுத்தம் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றன. பேரினவாத சக்திகளின் எதிர்ப்புக்கள், இராணுவ முட்டுக்கட்டைகள் சமாதானப் போக்கை தடை செய்ய முயலும் பல்வேறு சக்திகள் போன்றவற்றின் முட்டுக் கட்டைகளுக்கு நடுவில் இந்த தீர்வுத் திட்டம் எவ்வளவு தூரம் சிறுபான்மையினரின் பிரச்சனைக்கு தீர்வாக அமையும் என்பது சந்தேகமே.

மற்றும் சந்திரிக்கா அரசினது தீர்வுத் திட்ட யோசனைகளில் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை மீள அமைத்தல் என்பது முக்கியமான ஓர் அம்சமாகும். மாகாண எல்லைகளை மாற்றி அமைக்கும் போது சகல இன மக்களது நலன்களும் கவனத்தில் கொள்ளப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் மாகாண எல்லைகளை வரையறுக்க முற்படும் போது இவ் இணைப்பை கடுமையாக எதிர்க்கும் பேரினவாத தலைமைகள் எவ்வளவு தூரம் இதை ஏற்றுக்கொள்ளும் என்பது சந்தேகமே. வடக்கு - கிழக்கை இணைப்பதாக அரசு அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தில் கூறப்பட்டிருந்தாலும் அந்த இணைப்பு ஒரு அர்த்தம் அற்ற நடவடிக்கையாகவே எமக்கு தெரிகின்றது. மணலாற்றை வெலி ஓயாவாக அரசு மாற்றியதுடன் அம்பாறை மாவட்டத்தையும் சிங்கள பகுதியுடன் இணைத்து திகாமடுல்ல என பெயரிட்டுள்ளது. உத்தேச தீர்வுத்திட்டத்தின் மூலம் மாற்றி அமைக்கப்படவுள்ள புதிய பிராந்திய எல்லைகள் இவ்வாறு அமைத்தால் வடக்கும் - கிழக்கும் இரண்டு துண்டங்கள் ஆகிவிடும். இந் நிலையில் இணைப்பு என்பது அர்த்தமற்றுப் போவதுடன் சிறுபான்மையினரின் பலம் மேலும் பலவீனப்படும் நிலை ஏற்படும். வெலி ஓயாவை அரசு வடக்கு கிழக்கு பிரதேசத்திக்கு விட்டுக் கொடுக்க பேரினவாத அமைப்புக்கள் ஒரு போது சம்மதிக்க மாட்டாது. மற்றும் முஸ்லிம் கட்சிகள் (SCMC) வடக்கு கிழக்கு இணைப்பு ஏற்பட்டாலும் தமக்கு கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மாகாண நிர்வாக அலகு வேண்டும் எனக் கூறுகின்றது. இந்நிலையில் இந்த தீர்வுத் திட்டம் எவ்வளவு தூரம் சமாதானத்தை ஏற்படுத்தும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இலங்கை குடியரசு கலைக்க முடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாக இருத்தல் வேண்டும் என தீர்வுப் பொதியில் கூறப் பட்டுள்ளது. அவைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. இதனிடையே ஒற்றையாட்சி முறைமையை எக்காரணம் கொண்டும் நீக்கி விட மாட்டோம் என ஜனாதிபதி சந்திரிக்க பண்டாரநாயக்கா குமாரதுங்கா கூறி உள்ளார். இதே கருத்தையே எதிர்க்கட்சியும் கொண்டுள்ளது. ஆனால் நாம் கடந்த கால வரலாறுகளை எடுத்து நோக்கும்போது சிறுபான்மை மக்களின் பிரச்சனைக்கான தீர்வு சமஷ்டி அமைப்பு முறையே என்பது தெளிவாக உணரப்பட்ட போதிலும் சந்திரிக்கா அரசு தனது தீர்வுப் பொதியில் அத்தகைய எண்ணக்கருவை உள்வாங்க தயங்குகின்றது. இந்நிலையில் ஒற்றையாட்சியின் கீழ் கொண்டு வரப்படும் எந்தவொரு அதிகாரப் பகிர்வும் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூரணமாய் பூர்த்தி செய்ய முடியாது. இந்நிலையில் அதிகாரப்பரவலாக்கல் அமைப்பு முறையில் 2, 4, 7, 6 ஷரத்துக்களில் திருத்தம் கொண்டுவர முயல்வது வீணான செயலாகவே அமையும். மற்றும் அதிகாரப் பரவலாக்கல் அமைப்பு முறையில் அதிகாரங்கள் எவ்வாறு பிராந்தியங்களுக்கு பரவலாக்கல் செய்யப்படுகின்றது என்பதும் மத்திய அரசினது தலையீட்டுக்கான சாத்தியக்கூறுகள் எவ்வளவு தூரம் உள்ளன என்பதும் முக்கியமான விடயமாகும்.

ஒரு பிராந்தியத்தின் அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்களுக்கு கல்வி என்பது அடிப்படைக் காரணியாக அமைகின்றது. எனவே கல்வி தொடர்பான அம்சங்கள் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படல் வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். கடந்த காலங்களில் மத்திய அரசே கல்விப் பாடத்திட்டங்களையும் 9 பயிற்சித் திட்டங்களையும் வகுத்து நடைமுறைப் படுத்தி வந்துள்ளன. ஆனால் இதன் மூலம் நாடு அரசியல் பொருளாதார சமூக விஞ்ஞான தொழில்நுட்பங்களையும் அடைந்ததாக தெரியவில்லை. ஆனால் இப்போது புதிய அரசியல் அமைப்பு தேசிய பிராந்திய பாடசாலைகள் என இரண்டு வகைப் பாடசாலைகளை அறிமுகம் செய்துள்ளது. இதில் தேசிய பாடசாலைகளை மத்திய அரசு தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகக் கூறுகின்றது. ஆனால் இது ஒவ்வொரு பிராந்தியத்திலும் மாணவர்கள், ஆசிரியர்கள், மத்தியில் ''உயர்வு, தாழ்வு'' என்ற மனநிலையை ஏற்படுத்தும் முறையில் உருவாக்கி ஒரு குறிப்பிட்ட பகுதியினரின் மீது மத்திய அரசு தனது செல்வாக்கை வைத்திருப்பதனையே இது காட்டுகின்றது. சகல மாணவருக்கும் சமமான கல்வி வாய்ப்பினைக் கொடுக்க முடியாத நிலை தொடரவும் மாணவர்கள் இடையே ஓர் உயர் வர்க்கத்தினை உருவாக்கும் வகையிலும் இருப்பதுடன் தெளிவானதாகவும் இல்லை. மேலும் கல்வியானது கீழ்மட்டம் முதல் உயர்கல்வி வரை சீரான முறையில் உயர்த்த முடியாது தடைகளை ஏற்படுத்தும் வகையில்தான் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும் பொருளாதார அபிவிருத்திக்கான உற்பத்தி அதிகரிப்பினைப் பொறுத்த மட்டில் சந்திரிக்கா அரசினது தீர்வுத் திட்ட யோசனைகளில் சக்தி ஆராய்ச்சிகள், கல்வியும் பயிற்சிகளும் தொடர்பான யோசனைகள் பிராந்தியங்களின் உற்பத்திகளை உச்சப்படுத்துவதில் தடைகளையும் கட்டுப்படுத்தல்களையும் ஏற்படுத்தும் வகையில்தான் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிராந்தியங்களின் அதிகாரங்கள் மைய அரசினால் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இத்தீர்வுத் திட்ட யோசனைகள் எவ்வளவு தூரம் சிறுபான்மையினரின் தேவைகளை நிறைவு செய்யும் என்பது கேள்விக்குரியதாகும்.

மேலும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காகுமாரதுங்காவால் முன்வைக்கப்பட்ட அதிகாரப்பரவலாக்கல் அமைப்பு முறையை அமுல் படுத்துவதற்கு தடையாக பல காரணிகள் விளங்குகின்றன. பல்லின மக்கள் வாழும் நாட்டில் ஓரினம் பெரும்பான்மையாக இருந்தால் இனப்பிரச்சனை ஏற்பட வாய்ப்புண்டு. அரசாங்கம் அளவுக்கு மீறி அதிகாரங்களை பரவலாக்கம் செய்து விடுமோ என்று ஆட்சியில் உள்ள பெரும்பான்மை இனத்தவரும் எதிர்கட்சிகளும் அஞ்சுவது எமக்கு தெளிவாக விளங்குகின்றது. மற்றும் இவை மத, குழு சார்ந்த பிரச்சனைகள் காணப்படும் நாட்டில் அதிகாரப்பரவலாக்கம் தேசிய ஒருங்கிணைப்பை குறைத்து நாட்டை பிளவுபட வைத்து விடுமோ எனவும் அஞ்சுகிறார்கள். இந்நிலையில் தீர்வுத்திட்ட யோசனைகள் எவ்வளவு தூரம் இனப்பிரச்சனைக்கு தீர்வாக அமையும் என்பது கேள்விக்குறியாகும்.

இந் நிலையில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவினால் முன்வைக்கப்பட்ட இந்த தீர்வுத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு உள்ள வழி முறைகள் எவை என்பது பற்றியும், அந்த வழிமுறைகள் எவ்வளவு தூரம் தீர்வுத்திட்டத்தினை அமுல் படுத்த உதவும் என்பது பற்றியும் நாம் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும். தீர்வுத் திட்ட யோசனைகள் கொண்டு வரப்பட்டாலும் அதனை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற வேண்டும். ஆனால் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாதபடியால் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியின (எதிர்க்கட்சியின்) ஆதரவு அவசியம் தேவை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் விடயத்தில் தன்னுடைய தெளிவான கருத்தை இதுவரை கூறவில்லை. அரசு முன்வைத்துள்ள யோசனைகளை யிட்டு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடான கருத்துக்கள் உருவாகியுள்ளதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிகின்றது. பேரினவாதக் கருத்துக்களை முன்னிலைப்படுத்துபவர்கள் ஒரு புறமும் அமைதியான சமாதானக் கருத்தை வலியுறுத்துபவர்கள் மற்றொரு புறமும் என்ற இரு வேறு உலகம் அங்கு காணப்படுகின்றது. எனவே அரசின் யோசனைகளை எந்த அளவுக்கு ஆதரிக்கப்போகின்றது என்பது கேள்விக்குறியாகும். அடுத்து சர்வ ஜன வாக்கெடுப்புக்கு விடுவதன் மூலம் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய ஒரு வழி முறையும் இங்கு காணப்படுகின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காத பொழுது மக்களின் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்போவதாக ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால் இதில் இரண்டு சிக்கல்கள் காணப்படுகின்றன. ஒன்று இத் திட்டம் தோல்வி அடைந்தால் அரசு கலைக்கப்படுமா என்பது கேள்விக்குறியாகும் இல்லாவிட்டால் அரசுக்குள் பல நெருக்கடிகள் தோன்றுவதை தவிர்க்க முடியாது இதில் அரசாங்கம் வலு நிதானத்தன்மையோடு சிந்தித்து வருகின்றது.

நீண்ட காலப் பிரச்சனை ஒன்றுக்கு தீர்வாக முன்னேற்றகரமான திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதன் மூலம் வரலாற்றில் ஒரு திருப்பு முனைக்கு இலங்கை வந்துள்ளது என்பது உண்மைதான். ஆனால் பிரச்சினைக்கு நீண்டகால தீர்வு காணும் நோக்கில் இந்தத் தீர்வுத்திட்டத்தை அரசியல் சக்திகள் எவ்வாறு நடைமுறைப்படுத்த வாய்ப்பளிக்கப் போகின்றன என்பதிலேயே வெற்றி தோல்வி தங்கியுள்ளது. எனவே நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் பல தடைகளை தாண்டிச் செல்ல வேண்டியதாகவே இத் திட்டம் உள்ளது. மேலும் இந்த தீர்வுத் திட்டத்தில் பல திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்யப்பட வேண்டிய நிலையையும் நாம் அவதானிக்க முடிகின்றது. இவை அனைத்தும் செய்யப்படும் நிலமையிலேயே சிறுபான்மையின மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளின் பளுவைத் தீர்க்கக் கூடியதாக இத் திட்டம் அமையும். அதாவது உண்மையில் அரசு இந்த பிரச்சனையை நியாயமான முறையில் தீர்க்க வேண்டுமாயின் அடிப்படையில் சில மாற்றங்களை செய்ய வேண்டும். ஒற்றையாட்சியை மாற்றி அமைப்பதுடன், தமிழ் குழுக்களுக்கும் இந்த தீர்வுத் திட்டம் போலியானதல்ல நல்ல எண்ணத்துடன் உருவாக்கப்பட்ட ஒன்று என்பதை உணர்த்தி அவர்களுடன் பேசும் நிலையை உருவாக்க வேண்டும் மற்றும், தமிழ் முஸ்லிம் கட்சிகளின் ஆலோசனைகளையும் பெற்று பேரினவாத சக்திகளின் ஆதரவையும் பெறும் நிலை எப்போது தோன்றுமோ அப்போது தான் இந் நாட்டின் தேசிய இனங்களின் பிரச்சனைக்கு முழுமையான தீர்வொன்றை ஏற்படுத்தலாம்.

இது விடயத்தில் நியாயமான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்ளாவிட்டால் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட திட்டங்களின் கதியே இதற்கும் நேரிடும் என்பதில் சந்தேகம் இல்லை. இது வரை காலமும் தீர்வுகள் ஏதும் கிடைக்காதா என ஏங்கிய தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்புகள் மீண்டும் பரிதாபத்துக்குரியவையாகவே அமையும்.

## உசாத்துணை நூல்கள் :


1. மாவட்ட அபிவிருத்தி சபைகளும் இலங்கை தமிழர் பிரச்சனைகளும் கருத்தரங்குக் கட்டுரைகள் - (தென்னாசியா கருத்தரங்கு யாழ்ப்பாணம் June 1990)

2. தத்துவ பரவலாக்கல் பற்றிய பிரேரணைகள் அடங்கிய இலங்கை அரசாங்கத்தின் அரசியலமைப்பு ஏற்பாடுகள் - (நீதி அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சின் வெளியீடு, இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப் பெற்றது)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொருளியல் நோக்கு - July - 1990 மக்கள் வங்கி வெளியீடு

4. வீரகேசரி - கொழும்பு பல்வேறு வெளியீடுகள்

5. Sunil Bastian, Devolution And Development in Sri Lanka, (Konark Publishers PVT LTD, A - 149 Main vilcas Mary, Delhi 1100 92 (India) 1994.)

6. Nadaraja Sundaram - M Decentrali sation And Devolution in Sri Lanka. (Administrative And Political Dimensions)

7. Sri Lanka The Devolution Debate - International Centre for Ethnic studies (Colombo 8, Sri Lanka First published February 1996. Second Edition June 1996 Typeset by Unique Graplics 33, 2/3, Galle Road Colombo 6, Sri Lanka).

## தற்கொலைக்குரிய காரணங்கள் (1975 — 93 வரை)

| காரணம் | எண்ணிக்கை |
|---|---|
| காதல் தோல்வி | 17,135 |
| வறுமை | 9,124 |
| பரீட்சையில் தோல்வி | 1,380 |
| வேலையின்மை | 3,000 |
| மனநோய் | 7,151 |
| பெற்றோர் — ஆசிரியரின் கண்டிப்பு | 5,480 |
| இடமாற்றம் | 388 |
| வேறுகாரணங்கள் (நோய்க் கொடுமை கடன் மீளச் செலுத்தாமை) | 49,050 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்துறை செலவினங்களின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் 'கோட்பாட்டு ரீதியிலான காரணிகள்'

## Theoretical Determinants of Public Expenditure Growth.

ரி. ஸ்ரீ முரளிதரன்

அரசாங்க கொள்கை தெரிவுகளை பொதுத்துறைச் செலவினம் பிரதிபலிக்கிறது. எவ்வகையான பண்டங்கள் சேவைகளை வழங்கப்பட வேண்டும், என்பதையும் அவை உற்பத்தி செய்யப்பட வேண்டிய அளவு, தரம், என்பவற்றையும் அரசாங்கம் தீர்மானித்தவுடன், இக் கொள்கைகளை நடைமுறை படுத்துவதற்கான செலவினங்கள் தொடர்பான விபரங்களை பொதுத்துறை செலவினம் வெளிப்படுத்துகிறது. பொதுத்துறை பாதீட்டின் ஊடாக பொருட்கள் சேவைகளை வழங்குவதை பொதுவாக பொதுத்துறை செலவினம் என்பார்கள். அதாவது பொதுத்துறை கணக்கில் காணப்படும் தொகையை இது குறிக்கும். அத்துடன் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்படுகின்ற சட்டங்கள், விதிகள் என்பன தனியார் துறை செலவினத்திலேயே பிரயோகிக்கப்படுகின்றன.

உதாரணமாக:- உணவு விடுதி ஒன்றில் குறைந்தபட்ச தீ தடுப்பு முன்நடவடிக்கைகள் தொடர்பான சட்டத்தின் பிரகாரம் அவ்விடுதி உரிமையாளர் அதிக பணம் செலவிட வேண்டிய நிலைக்குள்ளாகின்றார்.

த. ஸ்ரீ முரளிதரன்
பொருளியல் சிறப்புக்கலை
இறுதிவருடம்.
யாழ். பல்கலைக்கழகம்

இத்தகைய தனியார் துறைச் செலவினங்கள் பொதுத் துறை தீர்மானங்கள் காரணமாக ஏற்படுத்தப்படுகின்றமையினால், சில பொருளியல் அறிஞர்கள் இத்தகைய தனியார் துறை செலவினங்களையும், ஏனைய பொதுத்துறைச் செலவினங்களுக்கு இணையாகவே கருதுகின்றார்கள்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் கொள்கைசார் காரணங்களினால் எழுகின்றன. ஆனால் சந்தை தோல்வி காரணமாக ஏற்படும் வினைத்திறன் இன்மையைச் சமாளிப்பதற்கான முயற்சிகளினாலும் அவை தோற்றம் பெறலாம். எவவே அரசாங்கமானது ஒரு பொருளாதாரத்தின் கூட்டுமொத்த தேவைகளுக்காக பொதுத் துறையினருக்கு வேண்டிய பொதுப் பொருட்களையும், அரைப் பொதுப் பொருட்களையும் பாதீட்டின் ஊடாக மாற்றல் கொடுப்பனவுகளையும் சேர்த்து வழங்குகின்றது.

அரசாங்கத்தின் வளர்ச்சி பற்றிய வினாவை அணுகுவதற்குப் பல்வேறுவகையிலான மாற்றுவழிகள் உள்ளன.

உதாரணமாக:- பொதுத்துறை செலவினத்தின் முழுமையான தொகையில் ஏற்படும் வளர்ச்சிபற்றி அறியலாம். குறிப்பாக ஐக்கிய ராச்சியத்தில் பொதுத்துறைச் செலவினமானது 1900 ம் ஆண்டில் £ 230 மில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியனிலிருந்து 1976 இல் £ 58,506 மில்லியனாக அதிகரித்துள்ளது. பொதுத்துறைச் செலவினத்தில் ஏற்பட்ட இப் பாரிய அதிகரிப்பானது பொதுவிலை மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு, மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி, சனத்தொகை மாற்றங்கள் போன்றன ஏனைய பிற பொருளாதார தோற்றப்பாடுகளில் ஏற்படும் அதிகரிப்புக்கள் தொடர்பாக நோக்கப்பட வேண்டியதொன்றாகும்.

உதாரணமாக:- மொத்த தேசிய உற்பத்தியானது வருடம் ஒன்றுக்கு (நடைமுறை விலைகளில்) 5.3% மாக அதிகரித்த அதே வேளையில் பொதுச் செலவினமானது 1900 ற்கும் 1976 இற்கும் இடையில் (நடைமுறை விலையில்) வருடம் ஒன்றுக்கு 7.3% மாக அதிகரித்துள்ளது.

தேசியவருமான கணக்குகளில் இடம் பெறும் பொதுச் செலவினங்கள் அரசாங்க செயற்பாட்டின் இருபெரும் பிரிவுகளுள் அடக்கப்படுகின்றது. முதலில் முழுமையான பொதுச் செலவினத்தை (Exhaustive Public Expenditures) கருத்தில் கொள்வோம். இச் செலவினங்கள் அரசாங்கத்தின் நடைமுறை பொருட்கள் சேவைகள் (உ-ம் உழைப்பு, நுகர்வுப் பொருட்கள் என்பன) மற்றும் முதலீட்டுப் பொருட்கள் சேவைகள் (உ-ம் வீதிகள், பாடசாலைகள், வைத்திய சாலைகள் போன்றவற்றின் மீதான பொதுத்துறை முதலீடுகள்) ஆகியவற்றின் கொள்வனவுகளுடன் தொடர்புடையன. எனவே முழுமையான செலவினத்தை பொதுத்துறையினால் மேற்கொள்ளப்படும் உள்ளீட்டு கொள்வனவுகள் (Purchases of Inputs) எனக் குறிப்பிட முடியும். மேலும் இதனை உள்ளீட்டு அளவுகளை, உள்ளீட்டு விலையினால் பெருக்குவதன் மூலம் இதனை கணிக்கமுடியும்.

மேலும் முழுமையான பொதுத்துறை செலவினங்கள், பொருளாதார மூலவளங்களுடன் தொடர்புடையது. பொதுத்துறையினர் தவிர்ந்த ஏனைய துறையினர் இம் மூலவளங்களைப் பயன் படுத்துவதிலிருந்து தடுக்கப் படுகின்றனர். பொதுத் துறையினரால் மூலவளங்கள் உறிஞ்சப்படுவதன் விளைவாக; இப் பொதுச் செலவினங்களின் சந்தர்ப்ப செலவானது (Opportunity Cost) ஏனைய துறைகளின் சிறந்த வெளியீடாக அமைகிறது.

தேசிய வருமான கணக்கில் உள்ள நுகர்வோர் செலவினம், இறுதி வெளியீட்டின் மீதான நுகர்வோர்களின், செலவினத்தை குறிக்கின்றது. இதன் கருத்து யாதெனில் அரசாங்க செலவினத்தில் ஏற்படும் ஒரு அதிகரிப்பானது பொதுத்துறை வெளியீட்டில் அதிகரிப்பை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதாகும்.

பொதுத்துறை செலவினத்தின் இரண்டாவது வகையானது மாற்றல் செலவினம் (Transfer Expenditure) ஆகும். உதாரணமாக ஓய்வூதியங்கள், மானியங்கள், கடன் வட்டிகள், வேலையற்றோருக்கு வழங்கும் உதவித்தொகை போன்றவற்றின் மீதான பொதுச் செலவினங்களாகும். முழுமையான பொதுச் செலவினத்தில் காணப்படுவது போன்று, பொதுத்துறையினருக்கு சமூகத்தின் மூலவளங்கள் மீது இச் செலவினங்கள் தொடர்புபட்டிருக்கவில்லை. பதிலாக மூல வளங்களை சமூகத்தின் தனிநபர்களுக்கு இடையில் மீள விநியோகம் செய்யப்படுகின்றது. இங்கு இடைநிலை ஊடகமாக அரசு தொழிற்படும். அதாவது பொதுத் துறையின் ஊடாக மூலவளப் பாய்ச்சல் நடைபெறுகிறது.

பொதுச் செலவினத்தின் வளர்ச்சி பற்றி ஆராயும்போது பொதுச் செலவினத்தின் இவ்விரு வகைகளையும் (முழுமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவினம், மாற்றல் செலவினம்) வேறாக கருதிக்கொள்ளல் பயன் தரக் கூடியதாக கும். அதாவது ஒருவகையை பாதிக்கும் காரணி மற்றைய வகையையும் அதே வேகத்தில் பாதிக்கும் என்று கூறமுடியாது. எனவே பொதுச் செலவினத்தின் வளர்ச்சியின் முழுமையான மட்டத்தின் மீதும், பொருளாதாரத்தின் ஏனைய துறைகள் தொடர்பாக நோக்கும்போது பொதுத் துறையின் அளவு மீதும் செல்வாக்கு செலுத்துகின்ற காரணிகள் பற்றி நாம் அறிய வேண்டும்.

எனவே பொதுச் செலவினங்களைத் தீர்மானிக்கும் பொருளாதார, அரசியல், சமூக உந்து சக்திகளை ஒருங்கிணைக்கும் ஆய்வியல் ரீதியான மாதிரி ஒன்றை உருவாக்குதல் அவசியமாகும். இரு வகையான மாதிரிகளை இங்கு ஆராயப்பட முடியும். முதலாவது மாதிரி பேரின மாதிரிகள் (Macro Models) என்பது ஆகும். இம் மாதிரிகள் பொதுச் செலவினம் தொடர்பான தரவுகளுடன் ஆரம்பித்து மொத்த தேசிய உற்பத்தி அல்லது பணவீக்க வீதம் போன்ற கூட்டு மொத்த மாறிகளின் அடிப்படையில் பொதுச் செலவினங்களின் கால அமைப்புப் பற்றி விளக்க முனைகின்றது. இரண்டாவது மாதிரி "சிற்றின மாதிரி" அல்லது "தீர்மான நிகழ்வு மாதிரி" (Micro Model or Decision Process) என்பது ஆகும். இறுதியாகப் பொதுச் செலவினமாகத் தோற்றம் பெறும், தீர்மானங்கள், சிற்றின பொருளியல் அடித்தளம் பற்றி விளக்க முயல்பவையே ஆகும். இவ்விரண்டிலும் நாம் பேரின மாதிரியினை விரிவாக ஆராய்வோம்.

**பொதுச் செலவின் பேரின மாதிரிகள்:** Macro Models of Public Expenditure:-

நீண்டகாலப் பகுதியில் அரசாங்கச் செலவினங்களின் போக்குப் பற்றிப் பேரின மாதிரிகள் விளக்க முற்படுகின்றன. பொதுச் செலவினத்தின் கால அமைப்பு பற்றியும் ஆராய்கின்றது. மூன்று வகையான பேரின மாதிரிகள் பற்றி இங்கு நோக்க முடியும்.

1. பொதுச் செலவின வளர்ச்சியில் அபிவிருத்தி மாதிரிகள் Development Models of Public expenditure Growth
2. வைக்னரின் விதி Wagner's Law
3. பீக்கொக், வைஸ்மன் என்போரின் ஆய்வு Peacock and Wiseman's Analysis

### 1. பொதுச் செலவின வளர்ச்சியின் அபிவிருத்தி மாதிரிகள்:-

இப் பேரின மாதிரியினை மஸ்கிறேவ் (Musgrave) றொஸ்ரவ் (Rostow) ஆகியோர் ஆய்வுசெய்தனர், றொஸ்ரவ் என்பவர் பொருளாதார வளர்ச்சியை விளக்குவதற்கு வரலாற்று கட்டங்களை கொண்டு பல கட்டங்களாக பிரித்து விளக்கினார். பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றின் ஆரம்ப நிலைகளில் (Early Stages) மொத்த முதலீட்டில், பொதுத்துறை முதலீடானது மிக உயர் மட்டத்தில் காணப்பட்டுள்ளது. எனவே பொதுத் துறையானது வீதிகள், போக்குவரத்து அமைப்புக்கள், சுகாதார அமைப்புக்கள், சட்டமும், ஒழுங்கும், மற்றும் கல்வி போன்ற முதலீடுகளை மனித முதலீட்டில் வழங்கியுள்ளதை அவதானிக்கமுடியும் இப் பொதுத்துறை முதலீடானது பொருளாதாரத்தை சமூக, பொருளாதார அபிவிருத்தியின் நடு நிலைக்கு (Take off into the Middle Stages) உந்துவதற்கு அவசியமாகும். இந்தவகையில் அரசாங்கம் முதலீட்டுப் பொருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தொடர்ந்து வழங்கி வருகின்றது. ஆனால் இந் நிலையில் தனியார் முதலீட்டு வளர்ச்சிக்கு ஒரு பக்கபலமாக பொதுத் துறை முதலீடு அமைகிறது. அடுத்து அபி விருத்தியின் அனைத்து நிலைகளிலும் முதிர்ச்சி கட்டத்தை ( Maturity Stages ) நோக்கி நகர்த்தப்படும். இந்நகர்வை பல வீனப்படுத்தும் சந்தை தோல்விகளும் இடம் பெறும் எனவே இத்தகைய சந்தை தோல்வி களுக்கு முகம் கொடுப்பதற்கான அரசாங்க செலவீனமும் அதிகரிக்கின்றது.

அபிவிரித்திக் காலத்தின்போது மொத்த தேசிய உற்பத்தியின் விகிதாசார மாக மொத்த முதலீடு அதிகரிக்கும்போது மொத்த தேசிய உற்பத்திக்கான பொதுத் துறை முதலீட்டின் பங்கு வீழ்ச்சியடைகி றது என்று மஸ்கிறேவ் குறிப்பிட்டார். பொருளாதார முதிர்ச்சி நிலையை எட்டி யதும். பொதுச் செலவீனங்கள் அடிப் படைத் தேவைகள் மீதான செலவினங்களி லிருந்து கல்வி, சுகாதாரம் நலச் சேவைகள் போன்றவற்றின் மீதான அதிகரித்த செல வீனங்களுக்கு நகரும் இறுதிக்கட்டமான பெரு நுகர்ச்சி கட்டத்தில் (Mass Consumption Stages) பொதுநிதி மீள் விநியோ கத்திற்கென உருவாக்கப்பட்ட வருமானத் திட்டமிடல் கொள்கைகள், பொதுச் செல வீனத்தின் ஏனைய அம்சங்கள் தொடர் பாகவும், மொத்தத் தேசிய உற்பத்தி தொடர்பாகவும் கணிசமானளவு வளர்ச்சி யடையும் என்று ''றொஸ்ரவ்'' குறிப்பிட் டார். இந்த கட்டங்கள் வழியேதான் ஏற் கனவே வளர்ச்சியடைந்த பொருளாதாரங் கள் வந்துள்ளன என்றும், தற்போது வளர்ச்சியடையும் பொருளாதாரங்களும் இந்த கட்டங்கள் வழியேதான் வளர வேண் டும் என்றும் கூறினார்.

இவ் ஆய்வு அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களின் எண்ணற்ற வித்தியாசமான ஆய்வுகளின் பொதுமை யாக்கங்கள் ஆகும்.

## 2. வைக்னரின் விதி
## Wagner Law

19 ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜேர்மன் நாட்டு பொருளியல் அறிஞரான அடோல்வ் வைக்னர் (Adolf Wagner) பொதுத்துறையில் மொத்த தேசிய உற் பத்தி பற்றி விளக்குவதில் ஆர்வம் காட்டி னார். வைக்னர் தமது கருத்துக்களை விதி வடிவத்தில் தெரிவிக்கவில்லை. ஆனால் அவ ருக்கு பிற்பட்டவர்களால் அது ஒரு விதி யாக கருதப்பட்டது. இவர்வளர்ச்சியை அர சாங்க செலவினத்தை மொத்த தேசிய உற் பத்திக்கான விகிதாசாரத்தில் குறிப்பிட் டாரா அல்லது மொத்தவளர்ச்சியை கருதி னாரா என்பது தெளிவில்லை. அதாவது வைக்னர் கருதிக் கொண்டது பொதுத் துறையின் சார்பு வளர்ச்சியா அல்லது பொதுத் துறையின் முழுமையான வளர்ச் சியா என்பது தெரியவில்லை, மஸ்கிறேவின் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பொதுத்துறையின் சார்பளவு வளர்ச்சி பற்றி விளக்கமாக வைக்னரின் விதியை கொள்ளமுடியும். வைக்னரின் விதியை பின் வருமாறு கூற முடியும். அதாவது பொருளாதாரம் ஒன்றில் தலா வருமானம் வளர்ச்சி அடையும் போது பொதுத்துறை யின் சார்பளவு செலவினங்களும் வளர்ச்சி டை யடையும் என்றார்.

வைக்னர் 19 ம் நூற்றாண்டில் பொதுத்துறைகளின் வளர்ச்சியை ஐரோப் பிய நாடுகளிலும், யப்பானிலும் இது போன்ற பல நாடுகளிலும் அவதானித்தார். மொத்தத் தேசிய உற்பத்தியில், பொதுத் துறையின் செலவினங்கள் என்ற விகிதா சாரத்தில் அதிகரிப்புக்களைத் தீர்மானிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் காரணிகள், அரசியல் காரணி, பொருளாதார காரணி என்ற ரீதியில் விளக்கப் பட்டது.

## பொதுத்துறை செலவினம்

அரசாங்க செயற்பாடுகளின் அளவு திட்டம் ("Scale of the States Activities") என்பதன் விரிவாக்கம் பற்றிய விளக்கமாக உள்ளது, 19 ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சந்தைத் தோல்விகள், (Market Failure) வெளிவாரி விளைவுகள் (Externality) போன்ற நவீன பொருளாதாரத்திற்குரிய ஆரம்ப விளக்கங்கள் அவரிடம் காணப்பட்டது. பொருளாதாரம் ஒன்று கைத்தொழில் மயமாகும் போது விரிவடையும் சந்தைகளுக்கும் இச் சந்தை முகவர்களுக்கும், இடையிலான உறவுகளின் தன்மை மேலும் சிக்கலடைவதை இனங் கண்டார். சந்தை இடைத் தொடர்புகளின் இச் சிக்கல் தன்மையானது வர்த்தக சட்டங்கள், ஒப்பந்தங்கள் ஆகிய வற்றுக்கு இட்டுச் செல்கிறது. இத்தகைய சட்டங்களை நெறிப் படுத்து வதற்குரிய நீதி முறைமை ஒன்றின் உருவாக்கத்துற்கு இது வழிவகுக்கும். நகரமயமாதலும், மக்கள் நெருக்கமாக வாழ்தலும் காரணமாக வெளிவாரி நெருக்கடிகள் ஏற்பட்டு அதன் மூலம் அரசாங்க தலையீடும், ஒழுங்கமைப்பும் தோன்ற வாய்ப்பு ஏற்படும்.

சட்டத்துறைச் சேவைகள், பொலிஸ் சேவைகள், வங்கிச் சேவைகள் போன்ற பொதுத் துறைச் சேவைகளின் அவசியத்தை இவர் வலியுறுத்தினார். மேலும் கல்வி, சுகாதாரம், பொழுது போக்க கலை, கலாச்சாரம், பொது நல சேவைகள் மீதான பொதுச் செலவினங்களின் வளர்ச்சி அவற்றின் கேள்வியின் வருமான நெகிழ்ச்சி அடிப்படையில் இவர் விளக்கினார். இவரைப் பொறுத்தவரையில் இச் சேவைகள் மேல் மட்டத் தேவைகளாக அல்லது வருமான நெகிழ்ச்சித் தேவைகளாக அமைந்தது. எனவே பொருளாதாரத்தின் உண்மை வருமானம் (GNP) உயருமாயின் இச் சேவைகள் மீதான பொதுச் செலவினமும் அதிகளவில் உயரும். இதன் விளைவாக மொத்த தேசிய உற்பத்தியில் அரசாங்க செலவினத்தின் அதிகரித்த விகிதாசார நிலை காணப் படும்.

வைக்னரின் மாதிரியானது பல விளக்கங்களைக் கொண்டிருந்த போதிலும், பொதுத்துறை தெரிவுக் கோட்பாடு பற்றிய சிறந்த விளக்கத்தை கொண்டிராதமையினால் இது குறைபாடு உடைய மாதிரியாக காணப்படுகின்றது. "அரசின் உயிரியற் கோட்பாடு" (Organic Theory of the State) ஒன்றை பிரயோகிப்பதன் மூலம் வைக்னர் பொதுத் துறை தெரிவுப் பிரச்சனைகளை விளக்கினார். அரசானது ஒரு தன்னியக்கமாகச் செயற்பட்டு சமூக அங்கத்தவர்களுக்காகத் தீர்மானங்களை சுயமாக மேற்கொள்வதாகக் கருதப்பட்டது.

### 3. பீக்கொக், வைஸ்மன் ஆய்வு

Peacock and Wiseman's Analysis:-

பொதுச் செலவினங்களின் கால அமைப்புப் பற்றிய மிகச் சிறந்த ஆய்வுகளுள் ஒன்றாக பீக்கொக் வைஸ்மன் ஆய்வு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவர்கள் தமது ஆய்வை பொதுச் செலவினத் தீர்மான அரசியல் கோட்பாடு ஒன்றின் மீது நிலை நாட்டினார். அதாவது "அரசாங்கங்கள் கூடியளவு பணத்தை செலவிட விரும்புகின்றன. ஆனால் பொதுமக்கள் கூடிய ளவு வரியை இறுக்க விரும்பவில்லை. அரசாங்கங்கள் தமது பொதுமக்களின் விருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் மீது அக்கறை செலுத்த விரும்புகின்றன.'' எனவே அவை வாக்குப் பெட்டியின் செல்வாக்குடன் பொதுச் செலவின் நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

பீக் கொக்கும், வை ஸ்மனும் வாக்காளனை பொதுத்துறை பொருட்கள், சேவைகளின் நன்மைகளை அனுபவிக்க விரும்புகின்ற ஆனால் வரிகள் செலுத்துவதை வெறுக்கின்ற ஒரு தனி நபராகக் கணிக்கின்றனர். எனவே அரசாங்கமானது அதன் பாதீட்டின் செலவுப் பக்கம் பற்றித் தீர்மானிக்கையில் எதிர் பார்க்கப்படும் வரிகள் தொடர்பாகத் வாக்குத் தொகுதிகளின் மீது மிதந்த அவதானமாக இருக்கும். அரசாங்க நடவடிக்கைக்கு உந்துதலாக அமையவல்ல ''தாங்கப்பட வல்ல வரி மட்டம்'' (Tolerable Level of Taxation) இருக்க வேண்டும் என குறிப்பிட்டார்கள்.

ஒரு பொருளாதாரத்தில் வருமானங்கள் அதிகரிக்கும் போது, மாறாத வரி வீதங்களில் சேகரிக்கப்படும் வரிப்பணமானது அதிகரித்து, மொத்தத் தேசிய உற்பத்திக்குச் சமாந்தரமாகப் பொதுச் செலவினமும் வளர்ச்சியடைகின்றது. பொருளாதாரத்தினுள்ளேயே பொதுத்துறைச் செலவினத்தின் விருப்பத்திற்குரிய மட்டம் எனவும், வரியிறுப்பின் விருப்பத்துக்குரிய மட்டம் எனவும் மக்களால் கருதப்படும். இருநிலைகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றபோதிலும், சாதாரண காலங்களில் பொதுத்துறைச் செலவினமானது படிப்படியாக மேல் நோக்கிய போக்கைக் காட்டி நிற்கிறது. சமூகப் புரட்சி இடம் பெறும் காலங்களில் பொதுத்துறைச் செலவினத்தின் மேல் நோக்கிய போக்குப் பாதிப்பிற்கு உள்ளாகலாம். இத்தகைய காலங்கள் போர், பஞ்சம், பாரிய அளவிலான சமூக அனர்த்தங்கள் போன்றன அதிக அளவில் பொதுத்துறை செலவினத்தை ஏற்படுத்தும் நிகழ்வுகள் ஆகும். பொதுச் செலவினத்தின் அதிகரிப்புக்கு நிதியீட்டம் செய்வதற்காக அரசாங்கம் வரிமட்டத்தை உயர்த்த வேண்டி ஏற்படும். இவ்வாறான அதிகரித்த வரிமட்டம் நெருக்கடியான காலகட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒன்றாக கருதப்படுகிறது. இது ''இடம் பெயர்வு விளைவு'' (Displacement Effect) எனக் இவர்கள் குறிப்பிட்டார்கள்.

பொதுச் செலவினமானது. மேல் நோக்கி இடம் பெயர்க்கப்பட்டு, நெருக்கடியான காலகட்டத்தில் பொதுத்துறை செலவினங்களுக்காகத் தனியார் துறைச் செலவினங்கள் இடம் பெயர்க்கப் படுகின்றன. நெருக்கடிக்காலத்தின் பின் பொதுத் துறைச் செலவினங்கள் அதன் பழைய மட்டத்திற்கு வீழ்ச்சியுறுவதில்லை. ஒரு போரினால் ஏற்படும் செலவினங்கள் வரியிறுப்பின் மூலம் முழுமையாகத் தீர்க்கப் படுவதில்லை. எந்தவொரு தேசிய இனமும் அத்தகைய பாரிய வரியிறுப்புக் கொள்வனவைப் பெற்றிருப்பதில்லை. எனவே நாடுகள் கடன் பெற்று; குழப்பச் சூழல்கள் நிறைவு பெற்ற பின்னர் கடன் கட்டணங்கள் இறுக்கப்படுகின்றது.

இவர்கள் கருதிய மற்றொரு விளைவு ''பரிசோதனை விளைவு'' (Inspection Effect) ஆகும். குழப்பமான காலங்களின் போது, சமூகப் பிரச்சனைகள் பற்றி வாக்காளர்கள் சிறந்த முறையில் அறிந்திருப்பதன் காரணமாக இவ்விளைவு ஏற்படுகிறது. எனவே அரசாங்கமானது சமூக விளைவுகளை சீர் திருத்துவதற்காக அதன் சேவைகளை விஸ்தரிக்கிறது. தாங்கப்பட வல்ல வரி இறுப்பு மட்டம் பற்றிய வாக்காளர் தொகுதியின் அகநோக்கானது அதன் முன்னைய நிலைக்கு திரும்பாததன் காரணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தினால் இவ் உயர் மட்ட செலவினங்களுக்காக அரசாங்கம் நிதியீட்டம் செய்யக் கூடியதாகவுள்ளது. இச் செலவினங்கள் அரசாங்கத்தின் விரிவாக்கப்பட்ட சேவை, கடன் கட்டணங்கள் ஆகியவற்றில் ஆரம்பிக்கின்றன.

அரசாங்க செலவினங்கள் மீது செயற்பட வல்ல போர்ச் செலவினங்களின் மூன்று வகையான செல்வாக்குகள் கீழ்உள்ள (A, B, C) படங்கள் காட்டுகின்றது. போர் தொடர்பான செலவினங்களில் ஏற்படும் அதிகரிப்பு பொதுத்துறை மற்றும் தனியார் செலவினங்கள் ஆகிய இரு செலவினங்களையும் அப்புறப்படுத்து கின்றது. அதாவது மொத்த பொதுத்துறைச் செலவினமானது மிக அதிகரிக்கும் போது, இது போர் தொடர்பான அதிகரிப்பை காட்டிலும் குறைவாகவே காணப்படும்.

போருக்குப் பிற்பட்ட காலத்தில் செலவினங்களுக்கு என்ன நிகழும் என்பதை பல்வேறு விதமாக குறிப்பிடுகிறார்கள். இம் மாற்றீடான பதில்கள் கவனமாகவே பீக்கொக் வைஸ்மன் ஆகியோருக்கும் அவர்களின் விமர்சகர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

போருக்குப் பிற்பட்ட காலத்தில் பொதுமக்கள் பொதுத்துறை செலவினம் பழைய வளர்ச்சிப்பாதைக்கு மீளும் நிலையை படம் (A) காட்டுகிறது. அதே சமயம்


படம் A







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் B




படம் C




பொதுத் துறைச் செலவினமானது போருக்குப் பிற்பட்ட காலத்திலும் தொடர்வதையும், குடிசார் பொதுத்துறை செலவின மட்டத்தின் மேல் நோக்கிய நகர்வொன்று காணப்படுவதையும் படம் (B) காட்டுகிறது. இறுதியில் போருக்கு பிற்பட்ட குடிசார் பொதுத்துறைச் செலவினங்களில் ஒரு அதிகரிப்புக் காணப்பட்ட போதிலும் ஒரு தற்காலிக தோற்றப்பாட்டுடன் மீண்டும் பழைய நிலையை அடையும் நிலையை படம் (C) காட்டுகிறது. இப்படங்களில் படம் A, படம் C என்பவையில் காட்டப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலப் போக்குகள் ஒத்தவையாக அமைவதுடன் படம் B,யில் காட்டப்பட்டது போன்ற நீண்ட காலப் பெயர்வு விளைவு இல்லை என்பதும் காட்டப்படுகிறது. படம் Bயில் குடிசார் பொதுத்துறைச் செலவினத்தால் தனியார் செலவினமானது நிரந்தரமாகப் பெயர்க்கப்பட்டுள்ளது.

இம் மூன்று மாற்றீட்டு நிலைகளில் எது ஐக்கிய ராச்சியத்தில் 1939 – 45 காலப் பகுதியில் இடம்பெற்ற போருக்கு பிற்பட்ட அனுபவத்தை பிரதிபலிக்கிறது என்பது சர்ச்சைக் குரியது ஆகும். பீக்கொக் வைஸ்மன் ஆகியோரின் விளக்கங்கள் படம் (B.யை ஆதாரமாகவுள்ளபோது மாஸ்கிறேவ் போன்றோர் படம் (C)க்கு சார்பாகவும் உள்ளனர். போருக்கு உடனடியாகப் பிற்பட்ட காலத்துச் செலவினங்கள் தொடர்பான விளக்கங்களில் முரண்பாடுகள் காணப்பட்டாலும் பீக்கொக் வைஸ்மன் ஆகியோரின் விளக்கமானது ஐக்கிய ராச்சியத்தில் 1958 வரையிலான காலப் பகுதியில் ஏற்பட்ட பொதுத்துறைச் செலவினம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாபெரும் முன்னோடியான ஆய்வு எனக் கொள்ளமுடியும்.

தொகுத்து நோக்கின் மஸ்கிறேவ் றொஸ்ரவ் ஆகியோரின் மாதிரிகளில் அடிப்படைத் தேவைகளுக்கான முதலீட்டையும் சமூகத்தினருக்குரிய முதலீட்டையும், வழங்கி விசேடமாக சந்தைகள் நிலைத்து இயங்க முடியாத நிலையில் சந்தை தோல்வியடையும் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க அரசாங்கத்தின் பங்களிப்பை பொதுத் துறைச் செலவின வளர்ச்சி பிரதிபலிக்கிறது. மறுபுறத்தில் வைக்னர் மாதிரியில் பொதுத் துறை வெளியீடுகளின் கேள்விக்கான வருமான நெகிழ்ச்சிமீது அதிக கவனம் செலுத்தியதுடன் சந்தை தோல்வி தொடர்பான அம்சங்களையும் இனங்கண்டு கொண்டார். மற்றும் பீக்கொக், வைஸ்மன் மாதிரியில் பொதுத்துறை செலவினத்தின் கால அமைப்புக்குரிய காரணிகளை அறிந்து கொள்ளும் முயற்சியில், வரி இறுப்பு முறையின் பின்னணியில் தொழிற்பட்ட அரசியல் கொள்கைகள் ஆராயப்பட்டன.

**உசாத்துணை :-**

Brown. C. V. & Jackson. P. M, Public Sector Economics, Printed and Bound by Richard Clay (The Chaucer Press) LTD. Bungay, Suffolk-1978.

| குடித்தொகை (பத்து இலட்சம்) | |
|---|---|
| இலங்கை | 17.4 |
| கொரியா | 42.1 |
| தாய்வான் | 19.1 |
| ஹொங்கொங் | 5.6 |
| சிங்கப்பூர் | 2.6 |

ஆதாரம் : உலக அபிவிருத்தி அறிக்கை - 1990
World Development Report - 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சனத்தொகையும் சமூக பொருளாதார, அபிவிருத்தி நிலமைகளும்

## Sri Lankan Population and Socio Economic Development Position

என். கிருபாகரன்

ஒவ்வொரு நாட்டினதும் சனத்தொகையானது, அந் நாட்டின் சமூக, பொருளாதார நிலமைகளில் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறுவதில்லை. இந்த வகையில் இலங்கையின் சனத்தொகையின் படிமுறை வளர்ச்சியினையும், அதனூடாகச் சமூக பொருளாதார நிலமைகளையும் ஆய்வதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும். சனத்தொகையானது, பொருளாதார அபிவிருத்திக்கு சார்ந்த மாறியாகவும், சாராத மாறியாகவும் தொழிற்படுகின்றது. பிறப்பு வீதங்கள், இறப்பு வீதங்கள், குடியகல்வோர் வீதங்கள், சிசுமரண வீதங்கள், கருவாள வீதங்கள், தங்கியிருப்போர் நிலமைகள், வேலையின்மை, சுற்றுப்புறச் சூழல் நடவடிக்கைகள், கல்வி போன்றன பொருளாதார நடவடிக்கையின் அபிவிருத்தியில் எடுத்து வரும் தாக்கத்தினை நோக்குவோம்.

இலங்கையின் சனத்தொகை பற்றி நோக்கும் போது முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் கரையோர மாகாணங்களில் 1789 ம் ஆண்டு மேற்கொள்ளப் பட்டது. இதன்படி 8,17,000 பேர் அம் மாகாணங்களில் வாழ்ந்தனர். முழு நாட்டினதும் சனத்தொகை 15 இலட்சமாக இருந்து வந்திருக்கும் என மதிப்பிடப்பட்டது. தொடர்ந்து 1814, 1824ல் பிரிட்டிஸ் ஆட்சியின் கீழ் குடித்தொகைக் கணிப்புக்கள் மேற் கொள்ளப்பட்டன. இவை வரியறவிடும் நோக்கத்திற்காக மேற் கொள்ளப் பட்டமையால் ஓரளவு நம்பகத்தன்மையுடையனவாகவே இருந்தன. தொடர்ந்தும் 1821ல் வெளியிடப்பட்ட "Blue Book" என்ற தொகுப்பு மூலம் கணிப்பீடுகளை அறிய முடிகின்றது.

குடித்தொகை தொடர்பான கட்டளைச் சட்டம் 1869 ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1871 லிருந்து இலங்கை தனது குடித்தொகைக் கணிப்பீட்டினை முறையாக மேற்கொண்டு வருகின்றது. இதன் பின்னர் ஒவ்வொரு 10 ஆண்டுகளிற்கு ஒரு முறை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இறுதியாக 1981ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. 1991ம் ஆண்டுக் கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. ஏனெனில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டு வரும் உள்நாட்டு கலவரங்களால் கணிப்பிட முடியவில்லை. 1871 ம் ஆண்டு 24 இலட்சமாக இருந்த சனத்தொகை 1981ம் ஆண்டு 1 கோடி 48 இலட்சமாக 6 மடங்கு அதிகரித்துள்ளது. 1991 ம் ஆண்டிற்கான மதிப்பிட்ட சனத்

ந. கிருபாகரன்
பொருளியல் சிறப்புக்கலை
இறுதி வருடம்
யாழ். பல்கலைக் கழகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை 1 கோடி 76 இலட்சமாகும். இது 1997ல் 1 கோடி 86 இலட்சத்து 44 ஆயிரமாக இருக்கும் எனவும் 2000 ம் ஆண்டளவில் 1, 92, 250 000 ஆக இருக்கும் எனவும் மதிப்பிடப் பட்டுள்ளது.

இலங்கையின் சனத்தொகைக் கணிப்பீடுகளில் 1946ம் ஆண்டு ஒரு பிரிகோடாகக் காணப்படுகின்றது. 1946 ற்கு முன்னர் குடித்தொகைக் கணிப்புக்களில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஓரளவு நம்பகத் தன்மையுடையதாக இருந்தது. 1946ன் பின்னர் கணிப்புக்களில் நம்பகத் தன்மை அதிகரித்ததால் இது பிரிகோடாக அமைகின்றது. 1946ன் முன்னர் குடிசன வளர்ச்சி 1.4% என்ற வருடாந்த வளர்ச்சி வீதமாக அதிகரித்து வந்தது. 1946ன் பின்னர் 2.3% மாகத் துரிதப்படுத்தப்பட்டிருந்தது. குறிப்பாக 1953-1963க்கு இடைப்பட்ட காலம் இலங்கையின் சனத்தொகையில் ஆகக் கூடிய வளர்ச்சி வீதத்தை (2.8%) கொண்ட காலமாகும். 1996ல் சனத்தொகை வளர்ச்சி வீதம் 1% எனமதிப்பிடப் பட்டுள்ளது.

இலங்கையின் குடித்தொகை வளர்ச்சிப் போக்குகளைப் சுகாதார மகளிர் விவகார அமைச்சின் ''இலங்கையின் குடித்தொகை தொடர்பாக எழுச்சியடைந்து வரும் பிரச்சனைகள்'' என்பதிலே பின்வருமாறு காட்டப் பட்டுள்ளதை அவதானிக்கலாம்.




மூலம்:- இலங்கையில் குடித்தொகை தொடர்பாக எழுச்சியடைந்துவரும் பிரச்சனைகள், சுகாதார மகளிர் விவகார அமைச்சு

இலங்கையின் சனத்தொகையை உலக சனத் தொகையோடு நோக்குவோம். 1990ம் ஆண்டில் உலக சனத்தொகை 530 கோடியாகும். 1992ம் ஆண்டு 542 கோடி எனவும் மதிப்பிடப் பட்டுள்ளது. இது 1.7% ஆல் அதிகரித்து வருகின்றது. உலக குடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையினை நாம் இரு தசாப்தங்கள் முன்னோக்கிப் பார்த்தால் 400 கோடி அளவையே எட்டி இருந்தது இக் காலப் பகுதியில் ஆண்டொன்றிற்கான வளர்ச்சி 2.5% என்ற உச்ச மட்டத்தை எட்டியிருந்தது. குடித்தொகை வளர்ச்சியில் பிராந்தியங்களின் இடையே தளம்பல்களும் வேறுபாடுகளும் நிலவி வருகின்றன. உலக சனத்தொகையும் நாடுகளினிடையே சமமற்ற வகையில் பரம்பியுள்ளது. வளர்முக நாடுகளைப் பெருமளவிற்கு உள்ளடக்கிய, ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்கப் பிராந்தியங்களில் கூடியளவு சனத் தொகையும், ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளில் குறைந்தளவு சனத்தொகையும் காணப்படுகின்றது. 1990 களில் வளர்ச்சியடைந்த நாடுகளில் குறைந்தளவு சனத்தொகையும் காணப்படுகின்றது. 1990 களில் வளர்ச்சியடைந்த நாடுகளில் 23 சதவீதத்தினரும், வளர்ந்து வரும் நாடுகளில் 77 சதவீதத்தினரும் வாழ்ந்து வருகின்றனர்.

சனத்தொகை வளர்ச்சியானது வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொறுத்தவரை பொருளாதார அபிவிருத்திக்குச் சார்ந்த மாறியாகத் தொழிற்படுகின்றது. இலங்கை போன்ற ஆசிய, ஆபிரிக்கா, போன்ற வளர்முக நாடுகளிற்குப் பாதகமாகவும் காணப்படுகின்றது. Kuznot என்பவரது கருத்துப்படி சனத்தொகை அதிகரிக்கின்ற போது இவ் அதிகரிப்பின் அமுக்கத்தின் விளைவாக, நாடுகளின் கைத் தொழிலாக்கம், தொழில் நுட்ப முன்னேற்றம், தொழிற்பகுப்பு, நகர மயமாக்கல் போன்றன ஏற்படலாம் எனவும், சனத்தொகை அதிகரிப்பினால், சமூக பொது முதலீடுகளின் தொகை அதிகரிக்கும் எனவும் கூறப்படுகின்றது. இவரது கோட்பாட்டு விளக்கங்கள், வளர்ச்சியடைந்த, வட அமெரிக்கா, ஐரோப்பா போன்றவற்றிக்கே பொருந்தும், அந் நாடுகளின் வரலாற்று ரீதியான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அந் நாடுகள் வளர்ச்சியடைகின்ற போது, குடித்தொகை அதிகரிப்பு என்பது உள்நாட்டு கைத்தொழிலாக்கத்திற்கு உறுதுணையாக விளங்குகின்றது. இதேவேளை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சனத்தொகை அதிகரிப்பானது, பொருளாதார அபிவிருத்தி என்பதன் கீழ் எதிரான தாக்கத்தையே ஏற்படுத்தி வருகின்றது. வரையறுக்கப்பட்ட நிலங்களையும், முதலீடுகளையும் கொண்ட இந் நாடுகளின் சனத்தொகை அதிகரிப்பானது, எவ்வாறு பொருளாதார அபிவிருத்தியின் மீது எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனை பின்வருமாறு இனங்காணலாம்.

1. சேமிப்பில் ஏற்படும் தாக்கம்
2. முதலீட்டு முறையில் ஏற்படும் தாக்கம்
3. கீழுழைப்பு வேலையின் மீதான தாக்கம்
4. அரச செலவில் ஏற்படும் தாக்கம்
5. நாட்டு வறுமையில் ஏற்படும் தாக்கம்
6. சூழலில் ஏற்படும் தாக்கம்

மேற்குறிப்பிட்ட விடயங்கள் சனத்தொகை அதிகரிப்பின் விளைவாக, பொருளாதார எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்.

சனத்தொகை அதிகரித்துச் செல்லும் போக்கிற்கேற்ப தேறிய பொருளாதார வளர்ச்சி வீதம் இருக்குமாயின் சனத்தொகைப் பெருக்கம் பொருளாதாரத்திற்கு இடையூறாக இருக்க மாட்டாது. பொருளாதார வளர்ச்சி வீதத்திலிருந்து சனத்தொகை வளர்ச்சி வீதத்தினை கழித்து வருவதே தேறிய பொருளாதார வளர்ச்சி வீதமாகும். தேறிய பொருளாதாரவளர்ச்சி வீத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும், சனத்தொகை, வளர்ச்சி வீதமும் அதிகரிக்கும் போக்கு காணப்பட்டால் அங்கு சனத்தொகை பொருளாதார வளர்ச்சிக்குச் சார்ந்த, மாறியாக, பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் மாறியாக இருக்கின்றது எனலாம். சனத்தொகை வளர்ச்சி வீதமும், பொருளாதார வளர்ச்சி வீதமும் சமமாக அமையுமாயின் அது பூச்சிய வளர்ச்சியாக அதாவது அந் நாட்டின் பொருளாதாரம், அந் நாட்டு மக்களிற்கே ஈடு செய்யப் போதுமான வளர்ச்சியைக் கொண்டுள்ளதைக் காணலாம். எனவே ஒரு நாட்டின் சனத்தொகை பொருளாதார அபிவிருத்திக்குச் சார்ந்த, சாராத மாறியாகத் தொழிற்படுகின்றது என்பதை தேறிய, பொருளாதார, வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தே கூறமுடியும்.

மொத்த சனத்தொகையில் உழைப்பாளியில் தங்கியிருப்போர் வீதத்தையும் நோக்க வேண்டும். இதன்படி தங்கியிருப்போர் வீதம் அதிகமாக இருந்தால் உழைப்பாளரின் வருமானம் முழுவதும் நுகர்விற்காக கரைக்கப்படும் நிலை காணப்படும். இதனால் சேமிப்பு குறைவடைந்து முதலீடு வீழ்ச்சியடையும். எனவே முதலீட்டைப் பெறுவதற்கு அரசு பல பொருளாதார செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. அதாவது உள்நாட்டு வங்கிகளின் கடன் அளவு அதிகரித்தல், பண நோட்டுக்களை அதிகளவில் வெளியிடல், போன்றவற்றால் பணவீக்கம் அதிகரித்து, அதிகரித்து சனத்தொகை வறுமை நிலைக்குத் தள்ளப்பட வழிவகுக்கும். அத்துடன் உள்நாட்டின் முதலீட்டு அளவை அதிகரிப்பதற்காக வெளிநாட்டுக் கடன்களை எதிர்பார்க்க வேண்டிய நிலையும் ஏற்படும். இதனால் வெளிநாட்டு படுகடன் சேவைக்காக உள்நாட்டு உற்பத்திகளை வெளிநாடுகளிற்கு வழங்க வேண்டிய நிலையினால் நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகும். இவை அனைத்தும் தங்கியிருப்போர் தொகை அதிகமாக இருந்தமையே காரணமாகும். தங்கியிருப்போர் பிரிவினரை பின்வருமாறு பிரிக்கலாம்.

1) குழந்தைகள் (14 வயதுக்கு கீழ்)
2) முதியோர்கள் (65 வயதுக்கு மேல்)
3) உழைப்பாளர் படையில் அங்கவீனர்

சனத்தொகையில் தங்கியிருப்போர் வீதத்தை பின்வருமாறு காட்டலாம்.

| ஆண்டு | 0 — 4 | 15 — 64 | 65க்கு மேல் |
|---|---|---|---|
| 1881 | 43. 6% | 54. 2% | 2, 2% |
| 1946 | 37. 2% | 59. 3% | 3. 5% |
| 1991 | 31, 2% | 63, 4% | 5, 4% |
| 2000 | 25. 7% | 67. 6% | 6. 7% |

மூலம் :- இலங்கையின் குடித்தொகைத் தகவல் மையம்.

தங்கியிருப்போர் வீதம் 1971 ற்குப் பின்னர் படிப்படியாகக் குறைந்து வந்துள்ளதைக் காணலாம். இதற்கு இரு காரணங்களைக் குறிப்பிடலாம்.

1) சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவடைந்ததால் சிறுவர்களின் வளர்ச்சி வீதமும் படிப்படியாகக் குறைந்தது.

2) முதியோர்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்து தங்கியிருப்போர் அதிகரித்தனர்.

ஒரு நாட்டின் கருவள விகிதத்தில் ஏற்படும் மாற்றங்கள் அந் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினை மாற்றியமைக்கும். இலங்கையின் கருவள விகிதம் 1953க்கு முன்னர் உயர்வானது, எனினும் 1953க்குப் பின்னர் மொத்த பிறப்புவீதத்தில் தெளிவான ஒரு வீழ்ச்சியைக் காணக் கூடியதாக இருந்தது 1946 — 1980 இடையில் கருவளத்தில் ஒட்டு மொத்தமாக 27 % வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கருவள விகிதம் என்பது வயது குறித்த கருவள வீதம், மொத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவள விகிதம், பொதுக் கருவள வீதம் எனப் பாகுபடுத்தலாம். இலங்கையின் கருவள விகிதத்தில் ஏற்பட்டு வந்த படிப்படியான வீழ்ச்சிக்கு மகளிர் வயது கட்டமைப்பில் ஏற்பட்டு வந்த மாற்றம், திருமணம் செய்து கொண்டவர்களின் விகிதாசாரத்தில் ஏற்பட்ட மாற்றம், நவீன கருத்தடை சாதனங்கள், சமூக நலச் செலவீடுகள் உயர்ந்தமை, பெண்களின் கல்வித்தரம் உயர்ந்தமை, போன்ற காரணங்களைக் குறிப்பிடலாம். இலங்கையின் மொத்த கருவள விகிதம் 1950 களில் 5.3% மாக இருந்து 1988 -- 1993 காலப் பகுதியில் 2.3% மாக வீழ்ச்சியடைந்தது. பெண்களின் திருமண வயது 1963ல் 21.1 வருடங்களாக இருந்து 1987ல் 24.7 வருடங்களாக அதிகரித்தது, ஆனால் கடந்த இரு தசாப்தங்களின் போது திருமணம் செய்தவர்களிடையே கருத்தடைச் சாதனங்களின் பரவலான பயன்பாடு அதிகரித்து வந்தமை கருவள விகிதம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வந்தமைக்கு காரணமாகும். 1995—2000 இடையில் கருவள விகிதம் 2.1% மாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே கருவள வீதத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பொருளாதார அபிவிருத்தியை மாற்றியமைக்கும். 1985/90 களில் வளர்ச்சியடைந்த நாடுகளின் கருவள விகிதம் 1.9% மாக இருக்கும் போது வளர்முக நாடுகளில் 3.9% மாக உள்ளது.

மரண விகிதத்தில் ஏற்படும் மாற்றங்களும் பொருளாதார அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும். இலங்கையின் மரண விகிதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டு வந்துள்ளது. இதற்கு நேரடியான காரணமாகப் பொதுத் துறையின் விஸ்தரிப்பும், சுகாதார சேவையின் அதிகரிப்பும் முக்கியமானதாகக் கொள்ளப் படுகின்றது. மறைமுகமாகச் சமூக, பொருளாதார காரணிகளைக் குறிப்பிடலாம். 1870 தொடக்கம் தடுப்பூசி முறையூடாக வயிற்றோட்டம் கட்டுப்படுத்தப் பட்டது. தடுப்பு, மற்றும், சிகிச்சை மருத்துவ முறைகள் 1926ல் சுகாதார அமைச்சின் கீழ் தமக்கு இணையாக்கப்பட்டன. 1940 களில் மலேரியா ஒழிப்பு D.D.T பாவனை மரண விகிதத்தில் செங்குத்தான வீழ்ச்சியை எடுத்து வந்தது. 1940 கள் தொடக்கம் ஆரம்ப சுகாதார மருத்துவ வசதிகளில் படிப்படியான முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது. 1946 தொடக்கம் மரண விகிதத்தில் கணிசமான வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. 1871 — 75 காலப் பகுதியின் 1000 பேரிற்கு 20.8 பேரும், 1971—75ல் 1000 பேரிற்கு 8.2 பேரும் 1992ல் 1000 பேரிற்கு 6 பேருமாக மரண விகிதம் உள்ளது. எனவே மொத்த மரண விகித வீழ்ச்சிக்கு பொது சௌக்கிய வசதிகள், போசாக்கு விருத்தி, உணவு, மானியம், இலவசக்கல்வி, மலேரியா ஒழிப்பு போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை குறிப்பிடலாம். மரணவிகிதத்தைக் குறைப்பதில் மலேரியா ஒழிப்பு முக்கியமான காரணியாக இருந்தது என "நிவ்மான்" வலியுறுத்தலில் வாதப் பிரதி வாதங்களும் உண்டு. 1946ன் பின்னர் சிசுமரண விகிதம், தாய் மரண விகிதம் என்பனவும் வீழ்ச்சி கண்டு வந்துள்ளது 1946ல் 1000 உயிர் பிறப்புகளிற்கு 141ஆக இருந்த சிசு மரண விகிதம் 1966ல் 51ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. இது 1990ல் 20.3 ஆக அமைந்தது. இதே போல் தாய் மரண விகிதமும் வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. பொருளாதார அபிவிருத்தியை அளவிடும் சிறந்த குறிகாட்டியாக சிசுமரண வீதத்தினைக் குறிப்பிடலாம் என்ற கருத்தும் உண்டு. ஏனெனில் வளர்ச்சியடைந்த நாடுகளின் பிறப்பு, இறப்பு வீதம், சிசுமரண வீதம், தாய் தந்தையரின் போசாக்கு மட்டத்தினைச் சுட்டுகின்றது. அதாவது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையில் உள்ளனரா? அல்லது போசாக் குணவு உண்ணக் கூடிய குடும்பநிலை கொண்டுள்ளனரா? எனக் காட்டுகின்றது. சமூகக் குறிகாட்டியினை, வறுமையினை இதன் மூலம் கண்டு கொள்ளலாம். எனவே சிசுமரண விகிதம் பொருளாதார அபிவிருத்தியுடன் சமூக அபிவிருத்தியையும் காட்டுவதாக அமைகின்றது. நாடுகளின் பிறப்பு, இறப்பு வீதப் போக்குகளை பின்வருமாறு காட்டலாம்.


**வளர்ச்சியடைந்த நாடுகள்**

*(மேற்கு ஐரோப்பிய நாடுகள்)*




**வளர்ச்சியடைந்து வரும் நாடுகள்**

*( இலங்கை, கியூபா, சீனா )*




Source : Based on the Growth of World Population Publication (1091)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் குடியகல்வு, குடிவரவு நடவடிக்கைகளும் பொருளாதாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இலங்கையின் மலைநாட்டுப் பிரதேசங்கள் 1830 தொடக்கம் பெருந்தோட்டச் செய்கைக்காகத் திறந்து விட்டதைத் தொடர்ந்து குடிவரவு ஆரம்பிக்கப் பட்டது. 1871—1901 இடைப்பட்ட காலப்பகுதியில் குடிவரவு நாட்டின் மொத்த குடித்தொகை வளர்ச்சியில் 58 சதவீதம் பங்களிப்பு செய்தது, 1948ம் ஆண்டு குடிவருவோர், குடியகல்வோர் சட்டம், குடித்தொகை, அசைவினை முதல் தடவையாகக் கட்டுப் படுத்தியது. 1948ன் பின்னர் பின் பற்றப்பட்டுவந்த கட்டுப்பாட்டு வழிமுறைகளையடுத்து குடிவரவு முக்கியத்துவம் குறைந்து வந்தது. இலங்கையின் குடியகல்வு சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலேயே இடம் பெறத் தொடங்கியது. 1950 களின் பின்னர் குடியகல்வு பொருளாதாரத்தில் எத்தகைய தாக்கத்தினையும் கொண்டிருக்கவில்லை 1948ம் ஆண்டு 20ம் இலக்க குடியகல்வோர் குடிவருவோர் கட்டளைச் சட்டம் 1949ன் பின்னர் பிரஜாவுரிமைச் சட்டம், 1964 இலங்கை இந்திய உடன்படிக்கை என்பன குடித்தொகை மீது செல்வாக்கு செலுத்தின. 1970—1980 களில் வெளிநோக்கிய குடியகல்வு குடித்தொகை மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த வகையில் 1991–2000 இடையில் ஆண்டொன்றிற்கு 38,000 பேர் குடிபெயர்ந்து செல்வர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு குடி பெயர்ந்து செல்வதால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புகின்ற ஊழியப்படை இல்லாது போகின்றது. முக்கியமாக மூளைசாலிகள் வெளியேற்றம் குறிப்பிடத் தக்கது. எனினும் இலங்கையில் தற்போது நிலவும் வேலையின்மையை (15%) குறைக்கின்றது.

இலங்கையின் குடித்தொகை கல்வி அபிவிருத்தியிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. கருவளம் தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டு வருவதன் விளைவாக ஒவ்வொரு வருடமும் பாடசாலை செல்லும் மாணவர்களின் சதவீதம் தெளிவாக வீழ்ச்சி கண்டு வருகின்றது. இதனால் பாடசாலை அனுமதிகள் குறையும். பாடசாலை செல்லும் சிறுவர்களின் எண்ணிக்கை 2001ம் ஆண்டளவில் வீழ்ச்சியடைய இருப்பதனால் அதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அடுத்து வரும் 10 ஆண்டுகளில் நடுநிலை மற்றும் உயர் கல்விப் பிரிவில் 2,38,000 பேர் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இதனால் தொழிற் சந்தையின் நுழைவாயிலில் நிற்கக் கூடிய 35 இலட்சம் இளைஞர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு பெருமளவு மூல வளங்களும் திட்டமிடப்பட்ட கல்விக் கொள்கையும் அவசியம்.

நாட்டின் சனத்தொகை வளர்ச்சி ஊழியப்படை மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இலங்கையின் ஊழியப்படை 1963ல் 37 இலட்சமாக இருந்து 1980ல் 57 இலட்சமாகவும், 1990 களில் 70 இலட்சமாகவும் அதிகரித்தது. தற்போதைய ஊழியர்படை அதிகரிப்பு ஆண்டொன்றிற்கு 1.7% ஆகும். ஆனால் குடித்தொகை அதிகரிப்பு 1.0% ஒவ்வொரு வருடமும் 1,50,000 இளைஞர்களிற்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டியுள்ளது. ஏற்கனவே 10 இலட்சம் பேர் வேலையற்றவராக உள்ளனர். தற்போதைய வேலையில்லாத் திண்டாட்டத்தை 5% மாகக் குறைக்க வேண்டுமாயின் ஒவ்வொரு வருடமும் 2இலட்சம் புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். பொதுவாக வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார அபிவிருத்திக்கு இடையூறாக இருந்து வருவதுடன்

சமூகத்தில் கொந்தளிப்பு நிலையையும் உருவாக்குகின்றது. இதனைத் தடுக்க பாரியளவிலான முதலீடுகளை உருவாக்கி, கைத்தொழில் மயமாக்கல் கொள்கையுடன் இணைந்த வகையில் தொழில் வாய்ப்புக்களைத் தயார்படுத்தும் ஒரு கல்விக் கொள்கையினை உருவாக்க வேண்டும். கைத்தொழில் துறையினை உருவாக்கிய வேலையின்மையைப் போக்குவோமாயினும் நாட்டின் ஊழியர் படையில் 50%த்தினர் விவசாயத் துறையிலேயே வேலை செய்கின்றனர். நாட்டின் மொத்த ஊழியர் படையில் சுமார் அரைவாசிப் பகுதியினர் நாட்டின் மொத்த செல்வத்தில் 26%த்தை மட்டுமே உற்பத்தி செய்து வருகின்றனர்.

நாட்டின் சனத்தொகை வளர்ச்சி உணவு வழங்கல், நிலமையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். சனத்தொகை அளவின் அதிகரிப்பிற்கேற்ப உணவிற்கான கேள்வியும் அதிகரித்துச் செல்கின்றது. இதன்படி 1950ல் 300 மெற்றிக் தொன்னாக இருந்த நாட்டின் நெல் உற்பத்தி 1991ல் 2400 மெற்றிக் தொன்னாக அதிகரித்தது. எனினும் நாடு சுய தேவைப் பூர்த்தி நிலையை எட்டவில்லை. காரணம் கடந்த நான்கு தசாப்தத்திலும் நாட்டின் சனத்தொகை 1 கோடியால் அதிகரித்தது. இலங்கையின் உணவு நுகர்வு 2302 கலோரி ஆகும். இது குறைந்த பட்ச 2500 கலோரியிலும் குறைந்ததாகும். எனவே குடித்தொகைப் பெருக்கம் மக்களின் போசாக்கு மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மாறாகப் போசாக்கு மட்டத்தைப் பேண வேண்டுமாயின் அதிகளவு பணத்தை நுகர்விற்காக செலவிட வேண்டும். இதனால் நாட்டின் முதலீடு குறைவடைந்து பொருளாதார அபிவிருத்தி தடைப்படும்.

சுற்றுப்புறச் சூழல் மீதும் சனத்தொகை வளர்ச்சி செல்வாக்குச் செலுத்துகின்றது. சனத்தொகையின் பருமன், பரவல், செறிவு, வளர்ச்சி என்பன மண்ணரிப்பு, கரையோர அரிப்பு, நீர் மாசுபடுதல், காடுகள் அழிக்கப்படுதல், நீர் உறைதல் போன்ற சுற்றுச் சூழலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இயற்கைக் காடுகள் வீட்டுப்பபவனைக்காகவும், சாகுபடிக்காகவும் அழிக்கப்படுவதால் இயற்கை பாதிக்கப்படுகின்றது. இலங்கையின் இயற்கைவனப் போர்வை 1881ல் 84% இதிலிருந்து 1990ல் 23%மாக வீழ்ச்சியடைந்துள்ளது. இந் நூற்றாண்டின் முடிவில் 20%மாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. எனவே சனத்தொகை வளர்ச்சியினால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படும் போது அதனைச் சமநிலைப் படுத்த பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளதால், பொருளாதாரத்தில் முதலீட்டுத் திட்டங்கள் பாதிக்கப்பட்டு பொருளாதாரம் பின் தள்ளப்படும் நிலைக்கு உள்ளாகும். இதனைத் தடுக்க வேண்டுமாயின் சனத்தொகை வளர்ச்சியினை மட்டுப்படுத்த வேண்டும். பொதுவாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சனத்தொகை பொருளாதார அபிவிருத்திக்கு இடையூறாக இருக்கும் வேளை அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சனத்தொகையானது பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டப்படுவதாகவும் அமைந்துள்ளது.

எனவே சனத்தொகையானது சமூக, பொருளாதார, அபிவிருத்தி நிலமைகளில் சார்ந்த மாறியாகவும், சாராத மாறியாகவும் தொழிற்படுகின்றது. பிறப்பு, இறப்பு, குடியகல்வோர் வீதங்கள், தங்கியிருப்போர் நிலமை வேலையின்மை போன்ற பொருளாதார அபிவிருத்தியுடன் தொடர்புடைய மாறிகள் சில நாடுகளிற்குச் சார்ந்தவையாகவும், சில நாடுகளிற்கு சாராத மாறியாகவுமே காணப்படுகின்றது. பொதுவாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்து, மேற்குறிப்பிட்ட அம்சங்கள் பொருளாதார அபிவிருத்திக்குப் பிரச்சனையை உண்டு பண்ணுவனவாகவே காணப்படுகின்றது. இந்த வகையில் இலங்கையிலும் மேற்குறிப்பிட்ட காரணிகள் சமூக, பொருளாதார, அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. எனவே இலங்கையில் படிப்படியாக அதிகரித்து வரும் சனத்தொகை சமூக, பொருளாதார, அபிவிருத்தியில் எத்தகைய செல்வாக்கினை ஏற்படுத்துகின்றது என்பதை ஆராய்வதே எமது பிரதான நோக்கமாக இருந்தது.

## Reference


Michael. P. Todaro.

1. Economic Development in the third world. Second edition
2. பொருளியல் நோக்கு பெப்ரவரி 1994
3. பொருளியல் நோக்கு நவம்பர் 1994



### இலங்கை வர்த்தக வங்கிகளின் மின்னியல் பணமாற்றல் பணிகள்

மின்னியல் முறையில் ஒரு நாட்டில் இருந்து பிறிதொரு நாட்டிற்கு விரைவாக நிதிப் பரிமாற்றம் செய்தலை இது குறிக்கும். உலகளாவிய ரீதியில் வங்கிகளுக்கிடையில் நிதி, தொலைத்தொடர்பு வசதியளிக்கும் நிறுவனங்களில் உறுப்புரிமை பெறும் வர்த்தக வங்கிகள் இம்முறையில் நாடுகளுக்கிடையில் விரைவில் 'நிதிப் பரிமாற்றம்' செய்யலாம்.

இலங்கையின் மூன்று முறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவை

★ சேலான் வங்கி அமுல்படுத்தும் வெஸ்ரன் யூனியன் பணமாற்றல் முறை

★ ஸ்ராண்டட் சார்டட் வங்கியின் ஸ்விப்ட் முறை

★ ஹொங்கொங் சங்காப் வங்கியின் கெக்கோன் முறை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய வழிபாட்டு மரபுகளும் அவற்றின் ஏற்பட்டுவரும் மாற்றங்களும்

## — ஒரு சமூக மானிடவியல் பார்வை —

# The Changes Occurring in the Traditional Forms of Worship in Jaffna

## — A Socio Anthropological Study —

எஸ். கிருபானந்தன்

யாழ்ப்பாணச் சமூகத்தில் நிகழ்ந்து வருகின்ற சமூக பண்பாட்டு மாற்றங்களில் முக்கியமான ஒன்றாக கடந்த சில தசாப்தங்களாக பாரம்பரிய சமய வழிபாட்டு மரபுகள் சமஸ்கிருத மயமாகி வருவதன் வேகம் அதிகரித்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் இன்று பாரம்பரிய வழிபாடுகள் பலவும் சமஸ்கிருத மயமாகி வருவதற்கான சமூகக் காரணங்கள் என்ன? மக்களின் மனப்பாங்கு நிலையில் இதன் கணிப்பீடு எவ்வகையில் அமைகின்றது? சமஸ்கிருத மயமாக்கத்தைத் தூண்டுகின்ற, தடைசெய்கின்ற காரணிகள் எவை? சமஸ்கிருத மயமாதலுடன் மக்களின் வாழ்க்கைமுறை எவ்வாறு அமைகின்றது? மக்களின் வாழ்க்கைமுறை மாற்றங்கள் சமஸ்கிருத மயமாக்கத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பன போன்ற பல்வேறு சமூக அம்சங்களையும் அறிவது அவசியமாகின்றது.

யாழ்ப்பாணத்தில் இன்று நிலவுகின்ற இந்துக்களின் வழிபாட்டு மரபினை மூன்று பிரதான வகையினுள் வேறுபடுத்தி உள்ளடக்கலாம். அவை,

1) வேதங்கள் ஆகமங்கள் காட்டும் விதிமுறைகள், ஒழுங்குகள் என்பவற்றுக்கு ஏற்ப அமைந்த வழிபாடுகள் :—

இங்கு ஆலய அமைப்பு என்பது மூலத்தானத்திலுள்ள தெய்வத்தை மட்டும் கொண்ட தேவாலயமாகவோ, இறைவனையும் சக்தியையும் கொண்டமிச்ச ஆலயமாகவோ, அல்லது பரிவார தெய்வங்கள் எல்லாவற்றையும் கொண்ட சங்கீர்ண ஆலயமாகவோ இருக்கலாம் வேதாகம விதிப்படி அமைந்த ஆலயங்களில் பிராமண பூசாரியினாலேயே (ஒருசில இடங்களில் சைவக் குருக்கள் பூசை செய்வார்) பூசைகள் நிகழ்த்தப்படும். மேலும் புனிதம் பேணுதல், ஆசாரம் பேணுதல் என்றவகையில் பல்வேறு விதமான கட்டுப்பாடுகளும் அங்கு கடைப்பிடிக்கப்படுகின்றன.

2) வேதாகம விதிகளுக்குள் அமையாத வழிபாட்டு மரபுகள் அல்லது பாரம்பரிய வழிபாட்டு மரபுகள் ;—

இவற்றைச் சிலர் கிராமிய வழிபாடுகள், சிறுதெய்வ வழிபாடுகள், நாட்

---

எஸ். கிருபானந்தன் B. A (Hons)
தற்காலிக விரிவுரையாளர்
பொருளியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார் வழிபாடுகள் எனவும் குறிப்பிடுவர். வழிபாட்டு முறையில் இவற்றுக்கு என்று சில ஒழுங்கு விதிகளும் கட்டுப்பாடுகளும் இருந்தபோதிலும் வேதாகம விதிமுறை ஒழுங்குகள் என்பனவற்றுக்கு ஏற்ப அமைந்த வழிபாடுகள் போன்ற திடமான வரையறை காணப்படுவதில்லை: சமூகத்திற்குச் சமூகம் வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், அவைசார் ஐதீகங்கள் என்பவற்றிலே சில சில மாற்றங்கள் இருந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. பெரும்பாலான பாரம்பரிய வழிபாட்டுக்குரிய கோயில்களில் அவ்வூர் மக்களில் ஒருவரே பூசை செய்வது வழக்கமாகும். இங்கு மச்சமடை பரவுதல், காய்மடை, பூமடை பரவுதல், மிருகங்களைப் பலியிட்டு வேள்வி செய்தல், பொங்குதல், கலையாடுதல், கட்டுச் சொல்லுதல், பேய்க்குப் பார்த்தல், பில்லி, செய்வினை, சூனியம் அகற்றல் என்பன போன்ற பல்வேறு சடங்குகள் நடைபெறுகின்றன.

3) தமது பழமையான வழிபாட்டு மரபின் சில கூறுகளைப் பேணுகின்ற அதே வேளை வேதாகம விதிகளின் ஒரு சில கூறுகளையும் உள்வாங்கியதான வழிபாட்டு மரபுகள்;

இவற்றைச் சமஸ்கிருதமயமாகிவரும் வழிபாட்டு மரபுகள் எனலாம். இன்றைய யாழ்ப்பாணத்தில் பாரம்பரிய வழிபாட்டிடங்களிற் பலவற்றை இந்த வகையினுள் அடக்கலாம்.

யாழ்ப்பாணச் சமூகத்திலே பாரம்பரிய வழிபாட்டு மரபுகள் சமஸ்கிருதமயமாதல் என்ற செயற்பாட்டில் ஏற்கெனவே இருந்து வந்த பாரம்பரிய வழிபாட்டு முறைகள் வழிபாட்டிட அமைப்புக்கள், தெய்வத்தின் பெயர்கள், நம்பிக்கைகள், பூசை முறைகள் என்பன யாவும் சமஸ்கிருதமாதல், இவற்றில் ஒருசில பாரம்பரிய பண்பாட்டு மரபாக இருக்க வேறுசில அம்சங்கள் சமஸ்கிருதமயமாகுதல், முழு அம்சமுமே பாரம்பரிய வழிபாட்டு மரபினை (சமஸ்கிருதமயமாதல் இன்றி) பேணி வருகின்ற தன்மை, பாரம்பரிய வழிபாட்டு மரபுகள் நிலவி வந்து பின் அவை சமஸ்கிருதமயமாக்கப்பட்டு மீண்டும் பாரம்பரிய வழிபாட்டுமரபு பேணப்பட்டு வருதல், பாரம்பரிய வழிபாட்டு மரபினைத் தொடர்ந்து பேணுவதா அல்லது சமஸ்கிருத மயமாக்குவதா என்ற கருத்து நிலைப் போராட்ட இழுபறி நிகழுதல், படிப்படியாக பாரம்பரிய வழிபாட்டு மரபின் அம்சங்கள் ஒவ்வொன்றாக சமஸ்கிருத மயமாகி வருதல் பாரம்பரிய வழிபாட்டு மரபின் சில அம்சங்கள் சமஸ்கிருத வழிபாட்டு மரபினுள் சேர்த்துக் கொள்ளுதல். எச்ச சொச்சங்கள் நின்று நிலைத்தல் சமஸ்கிருதமயமாதலை விரும்பாத பகுதிகளிற்கூட சமஸ்கிருதமய வழிபாட்டு வடிவங்கள் பல பாரம்பரிய வழிபாட்டு மரபினுள் இணைக்கப்படுதல் என்பவற்றைக் காணக்கூடியதாக உள்ளது. மேலும் வழிபாட்டு நிலையில் இரட்டை நிலை காணப்படுதலையும் அவதானிக்க முடிகின்றது. பூசாரி சமஸ்கிருத தெய்வத்திற்கு பூசை செய்ய மக்கள் பாரம்பரிய தெய்வமாக வழிபடுவதாகவோ அல்லது மக்களில் ஒரு பகுதியினர் சமஸ்கிருத தெய்வமாக வழிபட மறுபகுதியினர் பாரம்பரிய தெய்வமாக வழிபடுவதாகவோ இது அமையலாம்.

சமயங்களின் வடிவமாற்றம் என்பது அச்சமூக மக்களின் தேவை, வாழ்க்கைமுறை, பண்பாட்டு மாற்றம், அபிலாசை, மனப்பாங்கு என்பவற்றின் அடிப்படையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் சமஸ்கிருதமயமாக்கத்திற்கான அடிப்படை நிபந்தனைகளாக மாற்றத்திற்கான ஊக்கல், பொருளாதார இலாபம் தொடர்பான விருப்பம், பெருமை, உயர்தரமான அந்தஸ்துப் போட்டி நிலைமைகளுக்கான ஆசை, நட்பு நிலையிலான கட்டுப்பாடும் அதுசார் இயக்க ஊக்கமும், சமூக நியமங்கள், விழுமியங்கள், மத்தியதர வகுப்பினரின் புதிய மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் தன்மையும் அதிகாரத் தன்மையும், பொருளாதார நிலைப்பாடு, சமூகக் கட்டமைப்பின் இயல்பு, குடும்ப சட்டக அமைப்பில் காணப்படும் பரஸ்பர கட்டுப்பாடு, சிறிய குழுக்களின் அசைவியக்கம், பொதுசன அபிப்பிராயம், முரண்பாடும் தனிப்பட்ட விருப்பமும்,குடும்பத்திற்குள் உள்ள அதிகாரத்தன்மை, அரசியலமைப்புக்களின் செல்வாக்கு போன்றன விளங்குகின்றன. சமஸ்கிருத மயமாக்கச் செயற்பாட்டினூடாக இவை ஒவ்வொன்றினதும் செல்வாக்கினை விரிவாக அறிந்து கொள்ளலாம்.

உண்மையில் சமஸ்கிருதமயமாதல் என்பது யாழ்ப்பாணச் சமூகத்தின் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் உயர் நிலையில் உள்ளவர்களைப் பார்த்து பின்பற்றுகின்ற ஒரு செயன்முறையாக இன்று அமைந்த போதிலும் இது ''சமஸ்கிருத மயமாதல் என்பதனை முழுமையாக விளங்கப் போதுமானதல்ல ஏனெனில் யாழ்ப்பாணச் சமூகத்தில் உயர் நிலையில் உள்ளவர்களும் ஏற்கெனவே சமஸ்கிருத மயமாதலை பின்பற்றியுள்ளனர் என்பது வெளிப்படையான உண்மை. இது அவர்கள் கொண்டிருந்த பிற பண்பாட்டு மாதிரிகள் தம்மிடம் உள்ள பண்பாட்டுக் கூறுகளைவிட உயர்வானது என்ற மனப்பாங்கினால் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆக உயர் நிலையில் உள்ளவை எனக் கருதப்படுகின்ற பண்பாட்டுக் கூறுகளை ஏனைய சமூகக் கூறுகளில் உள்ளவர்கள் பின்பற்றும் செயன் முறையின் வேகம் அச்சமுகத்தின் உயர் குழுவிடம் அதிகமாகக் காணப்பட தாழ்ந்த சமூகக் குழுக்களிடம் மந்தமாகக் காணப்படுகின்றது என்பதே இவ்வாறான சமூக மாற்றம் பற்றிய விளக்கத்தினைத் தெளிவாக்கும். இவ்வாறாக யாழ்ப்பாண சமூகத்தின் சமஸ்கிருத மயமாக்கத்தினை சமூக மாற்றம் என்ற அடிப்படையில் ஆராயும்போது அதன் சமூக கட்டமைப்புப் பற்றிய விளக்கம் முதன்மை பெறுகின்றது.

சமூகக் கட்டமைப்பில் தாழ்ந்த நிலையில் உள்ள சாதியினர் உயர் நிலையினை அடைவதற்கான எத்தனமாக சமஸ்கிருத மயமாதலை அவாவுகின்ற அதேவேளையில் சமஸ்கிருத மயமாக்கத்தினாலே பல புதிய சாதிகளும், புதிய அந்தஸ்துக்களும் யாழ்ப்பாணச் சமூகத்தில் தோற்றம் பெற்றுள்ளன. சைவக் குருக்கள், ஓதுவார், பண்டாரம் சிவிகையாளர், மடைப்பள்ளியார், நட்டுவர் போன்ற சாதி அமைப்புக்களை இதற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

வழிபாட்டு நடைமுறையில் செய்கைகள், நம்பிக்கைகள், ஐதீகங்கள் என்பன முக்கிய அடிப்படைகளாகின்றன. ஐதீகங்களினடியாக நம்பிக்கைகளும், நம்பிக்கைகளினடியாக செய்கைகளும் இடம்பெறுகின்றன.

பிரதேசரீதியாக பார்க்கும்போது சமஸ்கிருத மயமாக்கத்தின் வேகம் என்பது நகரப் பகுதிகளில் கூடுதலாகவும் ஒப்பீட்டு ரீதியில் கிராமப் பகுதிகளில் குறைவாகவும் நிகழ்ந்து வருகின்றது. இதனாலேயே இன்றும் கிராமப்பகுதிகளில் பாரம்பரிய வழிபாட்டு முறைகள் பெருமளவில் சமஸ்கிருத மயமாதல் இன்றிக் காணப்படுகின்றனஎனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு சமூகத்திலும் வாழுகின்ற மக்களுடைய வாழ்க்கை மூலங்கள், அவர்கள் கொண்டிருக்கும் எண்ணப்பாங்குகள் அவர்களது அபிலாசைகள் என்பவற்றிற்கு ஏற்றதாக அவர்களின் ஏனைய வாழ்க்கைப் பண்புகள் போன்று ஆன்மீக நோக்கும் வேறுபட்டதாக அமைந்துவிடுகின்றது மக்களின் வாழ்க்கையும் வாழ்வு வளமூலங்களும் மதத்தோடு பின்னிப் பிணைந்ததாக அமைந்திருக்கும் என்ற ''டுர் கைமின்' (Durkheim) கருத்திற்கு ஒப்ப யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய வழிபாட்டு நடைமுறைகளின் தன்மைகளைக் கண்டுகொள்ள முடிகின்றது.

வழிபடப்படும் புனிதப் பொருட்கள் என்ற வகையில் யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய வழிபாட்டு முறையில் கற்கள், மரங்கள், மண்புற்றுக்கள் முதலான இயற்கைப் பொருட்கள், சூலம் மற்றும், வாள், பொல்லு போன்ற ஆயுதங்கள், கயிறு, சிலம்பு முதலான பொருட்கள் பாம்பு முதலிய உயிரினங்கள், உயிரினங்களின் உருவங்கள், கல்லினாலோ அல்லது சீமெந்தினாலோ அமைக்கப்பட்ட மனிதவடிவ உருவங்கள், (சில இடங்களில் மரத்தினால் அல்லது, மண்ணினால் செய்யப்பட்ட மனித வடிவ, விலங்கு வடிவ உருவங்கள்) போன்றன வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் பாரம்பரிய வழிபாட்டு முறையினால் வழிபடப்பட்ட, வழிபடப்படுகின்ற தெய்வங்களிற் பல உள்ளன. இவை சமூகத்திற்கு சமூகம் பல்வேறு பெயர்களுடனும் பல்வேறு பண்புகளுடனும் வழிபடப்பட்டு வந்திருப்பதோடு அவை பற்றிய கருத்தாக்கங்களில் காலத்திற்குக் காலம் மாற்றங்களும் ஏற்பட்டு வந்துள்ளது. அவற்றில் அண்ணமார், பெரியதம்பிரான், ஐயனார், படைக்கலர், சேவுகர், வைரவர், வீரபத்திரர், காத்தவராயர். கழுவேறி, முதலி, பூதவராயர், அனுமான், கறுப்பன், காட்டேறி, மாடன், கிங்கிலியர், முனி, வீரமான், (வீரமானை சிலர் விறுமர் எனவும் அழைப்பர்) கூட்டத்தார், பேச்சியம்மன், மாரியம்மன், கன்னிமார். கண்ணகையம்மன், கொத்தியாத்தை, பிடாரிஅம்மன், வாலையம்மன், ஏழுகன்னியர். அடுப்பு நாச்சியார், காளி நாச்சிமார், சீதையம்மன், திரௌபதியம்பன், எல்லம்மன், நீலியம்மன், வதனமார் போன்ற தெய்வங்கள் குறிப்பிடத்தக்கவை.

பாரம்பரிய தெய்வங்களிற் பல வீரவழிபாட்டின் மூலமும் பயத்தின் மூலமும் தோற்றம் பெற்றன என்பது பல அறிஞர்களின் கருத்தாகும். ஐதீகக் கதைகள், புராணங்கள் என்பன சமஸ்கிருதமயமாக்கத்திற்கான ஒரு கருத்தேற்று சாதனமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் வழி பாரம்பரிய தெய்வங்கள் அனைத்தும் சமஸ்கிருத தெய்வங்களின் சிறு வடிவங்களாக, அல்லது அவதாரங்களாக அல்லது சமஸ்கிருத தெய்வங்களின் உறவினராக காட்டப்படுவது இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கது.

வழிபாட்டு முறை மாற்ற வேகம் என்பது பொதுவாக பிரதேச ரீதியாக நகரப்பகுதிகளில் அதிகமாக இருக்க கிராமப் பகுதிகளில் மந்தமாக இருப்பதுவும், வர்க்க ரீதியாக மேல் வர்க்கத்திடம் அதிகமாக இருக்க கீழ் வர்க்கத்திடம் மந்தமாக இருப்பதுவும், சாதி ரீதியாக உயர் சாதியினரிடம் வேகமாக இருக்க தாழ்ந்த சாதியினரிடம் மந்தமாக இருப்பதுவும், வயதுரீதியாக இளைய சமூகத்தினரிடம் வேகமாக இருக்க முதிய சமூகத்தினரிடம் குறைவாக இருப்பதுவும் அவதானிக்கப்படத்தக்கது.

பாரம்பரிய வழிபாடுகள் பலவற்றிலும் பூர்வீக மனித சமூகத்தின் குலக்குறிய (Totimism) தன்மைகள் பிரதிபலிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டுச் சின்னங்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் பலவற்றிலும் இத்தன்மைகளைக் காணலாம். மேலும் சமூக உறவு நிலைகளின் பிரதி பலிப்புக்களாகவும் இவ்வாறான வழிபாடுகளைக் காணமுடிகின்றது. இவ்வழிபாட்டு முறைகளை நுணுகி ஆராயும்போது அவர்களின் வாழ்க்கை முறைகளையும், அவர்களின் முன்னோர்களின் வாழ்க்கை முறைகளையும் அறியமுடிகின்றது.

Ralph Elinton சுட்டுவதுபோல் சமூகம், பழமைபேண் தன்மை, சமஸ்கிருத மயமாக்கம் என்ற இந்த மூன்று விசைகளிடையேயும் ஏற்படும் சமநிலை என்பது எந்த இடத்தில் அமைகின்றது என்பதைப் பொறுத்தே யாழ்ப்பாணத்தின் சமஸ்கிருதமயமாக்க நெறிமுறையினை விளங்கிக்கொள்ள முடியும்.

யாழ்ப்பாணத்தில் வர்க்கம் - சாதி என்பன அண்மைக்காலம்வரை நேர்த்தொடர்பினைக் கொண்டு இருந்துள்ளன. இந்நிலமை அண்மைக் காலத்தில் மாற்றங்களைக் கண்டு வந்துள்ளது. இலவசக்கல்வி, அனைவருக்கும் கல்வி போன்ற திட்டங்களால் கல்வியறிவு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கிடைக்கப் பெற்றது. இதனால் அரசாங்க உத்தியோகங்களை வகிப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டதுடன் உயர் சாதியைச் சேர்ந்த சக மாணவர்கள் சக உத்தியோகத்தர்களுடன் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மாணவர், உத்தியோகத்தர்களும் இடைவினை கொள்கின்ற பாத்திரப் பங்கின் தன்மை வேறுபட்டது. மேலும் நிலையான வருமானம் பெறுவதன் மூலமும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டதன் மூலமும், தாழ்த்தப்பட்ட சாதியினரில் ஒரு பகுதியினர் பொருளாதார நிலையில் மேம்பட்டமையும், காந்தியம் மற்றும் மாக்சிய பொதுவுடமைக் கருத்துக்களின் பரம்பலின் தாக்கம் என்பவற்றின் விளைவாக தாழ்த்தப்பட்ட சாதியினரிடத்தே தாமும் உயர் சாதியினரின் சமூக நிலைக்கு செல்ல வேண்டும் என்ற வகையில் மனப்பாங்கு ரீதியாக ஏற்பட்ட அவா என்பனவும் இம்மாற்றத்திற்கான காரணிகள் ஆகின்றன. இதனை நுணுக்கமாகப் பார்த்தால் சாதி முறையுடன் வர்க்க நிலையும் இணைந்திருந்த நிலையிலிருந்து சாதிமுறைக்கும் வர்க்க நிலைக்கும் இடையேயான நேர்த் தொடர்பு உடைகின்ற நிலையிலேயே அண்மைக்கால சமஸ்கிருதமயமாதல் நிகழ்ந்து வருகின்றது எனலாம்.

வேறுபட்ட சமூக அடுக்கமைவுக் குழுக்கள் தமக்கு என சில வேறுபட்ட மனப்பாங்குகளையும் வேறுவேறான சமூக வெகுமதிகளையும் சமூகத்திலிருந்து பெறுகின்றன. மேலும் தேவைகள், ஊக்கல்கள் என்பனவும் இடத்திற்கு இடம், மக்கட்கூட்டத்திற்குக் கூட்டம் வேறுபடும். இந்நிலையில் வேறுபட்ட சமூகக் குழுக்களைச் சேர்ந்த மக்களின் சமயத் தேவையும் வேறுபட்டு அமைந்து விடுகின்றது. ஆனால் சமூக அமைப்பு என்பது நிலையான ஒன்று அல்ல. அது பல்வேறுவகையில் அசைந்து கொண்டிருக்கும். இதனால் மக்களின் சமய வாழ்க்கையும் மாறி வருவதில் வியப்பதற்கு இடமேதுமில்லை.

## துணை நூல்கள்


1. கைலாசபதி. க. இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல் ஆய்வுகள், வந்தவையும் வரவேண்டியவையும்.
2. கைலாசபதி. க. நாவலர் நூற்றாண்டு மலர், மார்கழி, 1979.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சண்முகலிங்கன். என். யாழ்ப்பாணத்தில் அண்ணமார் வழிபாடு, பண்பாடுமலர் 3. இதழ் உ, 1993 புரட்டாதி.

4. முத்துத்தம்பிப்பிள்ளை அ. யாழ்ப்பாணச் சரித்திரம்.

5. வையாபாடல் எனப்படும் யாழ்ப்பாண நாட்டு வளப்பம் – 1921.

1. Ashley Montaque W. F,
Man's Most Dangerous Myth – the Fallacy of Race,
(" Unesco Paris, 1957, " Courior " July, August, 1950.)

2. Hoernle R. F. A, Studies in Contemporary Meta Physics

3. Man in India, Vol 73, (1993, P:1)

4. Nilakanta Sastri K. A,
Cultural Contacts Between Ariyans and Dravidians, Manakalalas, Bombay.

5. Rasanayagam. C Mudaliyar, Ancient Jaffna 1926.

6. Sivasamy V. is the Study of Sanskrit Relevant to Hindu Culture, The World Hindu Conference

7. Wheeler, the Indus Civilization.

எழுத்தறிவு விகிதம்.

| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1946 | 76.5 | 46.2 | 62.8 |
| 1963 | 76.8 | 67.1 | 76.8 |
| 1992 | 86.9 | 83.8 | 86.9 |

வேலையின்மை விகிதம்.

| ஆண்டு / பால் | 1990 | 1993 |
|---|---|---|
| ஆண் | 10.2 | 9.9 |
| பெண் | 24.1 | 21.0 |
| மொத்தம் | 15.2 | 13.6 |

(மூலம்:- தொகை மதிப்பு புள்ளி விபர திணைக்களம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் குடிசைத்தொகை வளர்ச்சியும் கல்வி வசதிகளும்

## Demographic Growth and Educational Facilities in SriLanka

எஸ். சஞ்சீவன்

ஒரு நாட்டின் குடித்தொகை வளர்ச்சியானது பொருளாதாரத்தில் சார்ந்த மாறியாகவும் சாரா மாறியாகவும் இருக்கின்றது. சனத்தொகை வளர்ச்சியானது ஒரு நாட்டில் அதிகரிக்கின்றபோது அந்நாட்டின் மனித வளம் அதிகரிக்கின்றது. மனித வள அதிகரிப்பானது அந்நாட்டின் அபிவிருத்திக்கு வசதியாக அமையும். ஒரு நாட்டின் மனித வளத்தினை அதிகரிக்க வேண்டுமாயின் அங்கு கல்வி வசதிகளும் அதிகரிக்கப்படுதல் வேண்டும். பொதுவாக அனேக வளர்ச்சி அடைந்து வருகின்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் "சமூக நல செலவீடுகள்" அதிகமாக காணப்படுகின்றமை கல்வி வசதி அதிகரித்தமைக்கு சான்றாக அமைகின்றது.

ஒரு நாட்டின் கல்வி என்பது எதிர்காலத்தின்மீதான முதலீடாக இருந்து வருகின்றது, இலங்கையைப் பொறுத்தவரை சுதந்திரத்திற்கு முன்னரேயே அனைவருக்கும் இலவச கல்வி வழங்கியதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு எவ்வாறு வித்திட்டுள்ளது என்பதை அறியமுடிகின்றது. மேலும் ஒன்றன்பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் கல்விக்கு எப்பொழுதும் முன்னுரிமை கொடுத்து வந்தன. இலங்கையின் சனத்தொகையானது 1946 இல் 66 இலட்சமாக இருந்து 1971 இல் ஒரு கோடியே 26 இலட்சமாக அதிகரித்து 1995 இல் ஒரு கோடி 78 இலட்சமாக அதிகரித்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. 1943 அளவிலேயே அனைவருக்கும் இலவசக் கல்வி என்ற கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

இக்குடித்தொகை வளர்ச்சியில் 5 வயது தொடக்கம் 19 வயதிற்கிடைப்பட்ட சிறுவர்களும் இளம் பிள்ளைகளும் அதிக எண்ணிக்கையில் இருந்து வந்தனர். இந்த நிலைமை அரசின்மீது கடும் சுமையை எடுத்து வந்திருந்தது. இதனால் 1992 இல் அரசாங்கம் கல்விக்கென 966·4 கோடி ரூபாவை செலவிட்டது. இது 1995 இல் 1890·8 கோடி ரூபாவாக அதிகரித்து காணப்பட்டது. இது முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது அரசாங்கத்தின் மொத்தச் செலவில் பெரும் பங்கினை வகிக்கின்றது.

இலங்கையின் கல்வி அமைப்பானது மூன்று அமைப்பாக வகுத்து நோக்கப்படுகின்றது. ஆரம்பக் கல்வி மட்டம் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரையிலும், இடைத்தர கல்வி ஆண்டு 6 தொடக்கம் ஆண்டு 13 வரையிலும் உள்ளது. உயர் கல்வி பல்கலைக் கழகங்களிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், கல்வியியல் கல்லூரிகளிலும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களிலும் கல்வி கற்கின்ற மாணவர்கள் அடங்குவர். இலங்கையில் 1991 இல் 4258697 மாணவர்கள்

செ. சஞ்சீவன்
பொருளியல் சிறப்புக்கலை
இறுதி வருடம்
யாழ். பல்கலைக்கழகம்.

கல்விகற்று வந்தனர். இத்தொகை 1981 ஆம் ஆண்டு தரவுகளுடன் ஒப்பிடும்போது 23.4 வீத அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. ஆனால் இத்தொகை 1995 இல் 4351022 மாணவராக காணப்படுகின்றார்கள்.

தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் பாடசாலையில் சேர்ந்து கொள்ளும் விகிதம் விகிதாசார அடிப்படையில் மிக உயர்வாக இருந்து வருவதைக் காண முடிகின்றது.

பாடசாலை நுளைழவு

| வருடம் | 5 — 19 வயது மொத்த குடித்தொகை | பாடசாலைகளில் நுழைவு | % |
|---|---|---|---|
| 1946 | 2296781 | 933358 | 40.6 |
| 1971 | 4639976 | 2779237 | 59.8 |
| 1981 | 5489000 | 3451353 | 62.9 |
| 1991 | 5709000 | 4258697 | 74.6 |

"பாடசாலை நுழைவானது" 1971 இல் 59.8% வீதமாக இருந்து 1991 இல் 74.6% வீதமாக அதிகரித்து செல்வதை காணக் கூடியதாக உள்ளது.

இலங்கையின் குடித்தொகையில் 1953 தொடக்கம் 1971 வரையிலான காலப்பகுதியில் உயரளவிலான சராசரி வருடாந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 1971 இன் பின்னர் 1990 வரையான காலப்பகுதியில் குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டம், கல்வி வளர்ச்சியில் ஏற்பட்ட அதிகரிப்பு போன்ற காரணங்களினால் சனத்தொகை வளர்ச்சி வீதமானது வீழ்ச்சி அடைந்து செல்வதை காணக் கூடியதாக உள்ளது. 1971இல் 2.2% ஆக இருந்த சனத்தொகை வளர்ச்சி வீதமானது 1995 இல் 1% ஆக குறைவடைந்துள்ளது. இதனால் சிறுவயதுப் பிரிவினர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது. ஆனால் பாடசாலையில் சேர்ந்து கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது. இதனால் புதிதாக சேர்வோரின் அளவு அனேகமாக மாறாமல் இருந்து வந்துள்ளது. எனினும் குடித்தொகை வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சியின் விளைவாக ஆரம்பக் கல்வியில் இருப்போரின் எண்ணிக்கையில் ஒரு வீழ்ச்சிப் போக்கு இடம் பெற்று வருகின்றது.

1991 இல் 5 வயதை அடையும் சிறுவர்களில் 97.9 வீதத்தினர் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டார்கள். இவ்வதிகரிப்பானது 1981 ஆம் ஆண்டு அதிகரிப்பினை விட உயர்வாகவே காணப்பட்டது. ஆரம்ப கல்வியுடன் நடுத்தர கல்வி பயிலும் மாணவர்களும் சேருகின்ற வீதம் அதிகமாகக் காணப்பட்டாலும் வறுமை காரணமாக பெரும்பாலான மாணவர்கள் இடைவிலகல் நிலையில் இருப்பதனைக் காணக் கூடியதாக உள்ளது. 5 தொடக்கம் 11 வயது தொகுதியினரும் 5 தொடக்கம் 14 வயது தொகுதியினரும் பாடசாலையில் பங்கேற்கும் விகிதமானது உயர்வாகக் காணப்படுகின்றது. ஆனால் 15 வயது தொடக்கம் 19 வயது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினர் பாடசாலையில் சேரும் வீதம் குறைவாக இருப்பதைக் காணமுடிகின்றது.

ஆரம்ப கல்வியுடன் ஒப்பிடும் போது இடைத்தரக் கல்விக்கு அரசு அதிகம் செலவு செய்தாலும் மாணவர் தொகை குறைவாகவே காணப்படுகின்றது. 1991 ஆம் ஆண்டு 5 தொடக்கம் 11 வயதிற்குட்பட்டவர்கள் பாடசாலையில் சேரும் வீதம் 94.6% ஆக காணப்படுகின்ற போது 5 தொடக்கம் 19 வயதுப் பிரிவில் சேரும் வீதமானது 59.2 வீதமாகக் காணப்படுகின்றது. இதனால் க. பொ. த (சாதாரணம்) க.பொ.த (உயர்தரம்) பரீட்சை எடுக்கும் மாணவர் தொகை குறைவாகக் காணப்படுகின்றது.

ஆரம்பக் கல்வி, இடைத்தரக் கல்வி வளக்குவிப்பிற்காக பாடசாலைகள், ஆசிரியர்களின் எண்ணிக்கையை அரசு அதிகரித்து வருகின்றது. 1981 ஆம் ஆண்டு நாட்டிலுள்ள மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கை 9867 ஆகக் காணப்பட 1992 இல் 10590 ஆகவும் 1995 இல் 10832 ஆகவும் அதிகரித்து காணப்பட்டது. இலங்கையில் அனேக பாடசாலைகள் அரசாங்கத்தின் உரிமையிலேயே காணப்படுகின்றது. நடுத்தர கல்வி தரத்தினை விருத்தி செய்வதற்காக மாகாண அளவில் முதலாம் தரப் பாடசாலைகள், இரண்டாந்தரப் பாடசாலைகள், சாதாரண பாடசாலைகளின் வீதமானது வேறுபட்டு காணப்படுகின்றது. பின்தங்கிய மாகாணங்களில் போதிய வசதிகளின்றி பாடசாலைகள் காணப்படுகின்றன.

கடந்த தசாப்தத்திலிருந்து ஆசிரியர் எண்ணிக்கையானது அதிகரித்து வந்துள்ளது. 1981 இல் 135869 பேராக இருந்து 1995 இல் 195210 பேராக அதிகரித்து காணப்பட்டது. எனினும் மாணவர் தொகை அதிகரித்தமையால் ஆசிரியர் மாணவர் வீதம் 1981 இல் 25.6 வீதமாக இருந்து 1995 இல் 22 வீதமாக வீழ்ச்சியடைந்தது. எனவே அரசினுடைய இலவசக் கல்வி வசதி சனத்தொகை அதிகரித்தாலும் கல்வி நிலையும் இலங்கையில் 89 வீதமாக உயர்வாக இருப்பதை எவராலும் மறுக்க முடியாது.

ஆரம்ப கல்வி, நடுத்தர கல்விகளுடன் ஒப்பிடும் போது மூன்றாம் நிலைக் கல்வியின் பங்கானது மிகவும் முக்கியமானது. ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் உயர் கல்வியின் பங்கு மனித வள அபிவிருத்தியை ஏற்படுத்துகின்றது. இக்கல்வியானது ஆண்டு 13 இற்கு அப்பால் நீடித்து செல்வதுடன் க. பொ. த (உயர்தரப்) பரீட்சையை வெற்றிகரமாக நிறைவு செய்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கின்றது. 1970 களில் இக்கல்வியானது பல்கலைக்கழகக் கல்வியுடன் மட்டும் தொடர்பு பட்டதாகக் காணப்பட்டது. இது அரசிற்கு சொந்தமான உயர்கல்வி அமைப்பாக இருந்து வந்தது. தொழில் நுட்ப நிறுவனங்கள், விவசாய பாடசாலைகள், சட்டக் கல் லூரி பட்டயக் கணக்காளர் நிறுவனம், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் போன்றனவும் உயர்கல்வி சேவையினை அளித்து வருகின்றன, அத்துடன் தேசிய உயர்கல்வி நிறுவனமும் அண்மையில் உருவாக்கப்பட்டது.

நாட்டின் குடித்தொகையில் 1950 களிலும் 1960 களிலும் ஏற்பட்ட தீவிரமான அதிகரிப்பும் 1960 களின் பிற்பகுதியில் உயர் கல்வியின் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டது. குடிசனவியல் அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களும் போதனா மொழி சிங்களமாகவும் தமிழாகவும் மாற்றி அமைக்கப்பட்டமையினால் பெரும்பான்மையானோர் உயர்கல்வியில் பிரவேசிக்க வழி கோலியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியானது 1981 இல் வடகொழும்பு மருத்துவ கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு அதனை தொடர்ந்து வந்த ஆண்டுகளில் பௌத்த சர்வகலாசாலையும் அமைக்கப்பட்டது. பின்னர் ஹீஸ்டன் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப கற்கை நிறுவனம் 1988 இல் உருவாக்கப்பட்டது. நில அளவை மற்றும் பட ஆக்க நிறுவனம் 1989 இல் பல்கலைக்கழக அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டது. 1980 களின் முடிவில் 9 பல்கலைக்கழகங்களும், 11 இணைக்கப்பட்ட பல்கலைக் கழககல்லூரிகளும், 9 பட்டப்பின் படிப்பு நிறுவனங்களும், 2 பட்டப்படிப்பு நிறுவனங்களும் செயற்பட்டு வந்தது.

உயர்கல்வி நிறுவனங்களில், தொழில் நுட்ப நிறுவனங்களில் சேர்ந்துகொண்ட மாணவரின் எண்ணிக்கை 1960 களில் 1000 பேருக்கும் குறைவாகவே கணப்பட்டது. ஆனால் இது 1990 அளவில் 4300 பேராக அதிகரித்திருந்தது. சனத்தொகை வளர்ச்சிக்கேற்ப கல்வி வசதிகளில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக கடந்த தசாப்தத்தில் 9 தொழிநுட்பக் கல்லூரிகளும் 5 இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரிகளும் பல்வேறு பாடநெறிகளை வழங்கும் நிறுவனங்கள் 28 ஆகவும் அதிகரித்து காணப்பட்டது. 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் பாடசாலையினை விட்டு வெளியேறும் போது தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்காக தொழில் திணைக்களம் பயிற்சி நிலையங்களை உருவாக்கியுள்ளது. தேசிய தொழில் பயிலுனர் சபை இளைஞர் பேரவையுடன் சேர்ந்து தொழிற்பயிற்சி பாடநெறிகளை வழங்கி வருகின்றது.

அத்துடன் அனைத்து மாகாண தலைநகரங்களிலும் கம்பியூட்டர் கல்வி பயிற்சி வசதிகள் அதிகரித்தளவில் நிறுவப்பட்டு

வருவதனை அடுத்து தொழிற்கல்வியில் தனியார் துறையின் பங்கேற்பு அதிகரித்து வருவதைக் காணலாம். சிறந்த பொருளாதாரமும், போட்டித் திறனும் இருந்து வர வேண்டிய அவசியமும் பயிற்சி நெறிகள் மீது அதிக முக்கியத்துவம் பெற காரணமாக அமைகின்றது.

ஆசிரியர் பயிற்சியும் தேசிய கல்வி நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கான உள்ளக பயிற்சி வசதிகளை வழங்கி வருகின்றது. பட்டதாரியல்லாத ஆசிரியர்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக தேசிய கல்வி நிறுவனம் நாடளாவிய கல்விக் கலைமாணி உள்ளக ஆசிரியர் பயிலுனர் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை தொடக்கி வைத்துள்ளது. ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பல்கலைக் கழகங்களும் இணைந்து செயற்பட்டன. இதில் பல்கலைகழகங்களில் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமாவும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த தசாப்தத்தின்போது மூன்றாம் நிலைக்கல்வி மட்டங்களில் பெருந்தொகையானோர் சேர்ந்துகொண்ட ஒரு நிலையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது 20—24 வயதுத் தொகுதியினரைப் பொறுத்தமட்டில் சேர்வு விகிதமானது 3.6 வீதமாக இருந்து வந்துள்ளது. பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளோடு ஒப்பிடும்போது இது குறைந்த ஒரு விதமாகவே இருந்து வருகின்றது. 3 ஆம் நிலைக்கல்வி சேர்வு விகிதமானது U.K இல் 20 வீதமும் U.S.A இல் 50 வீதமாகவும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகங்களிலும் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் வரையறுக்கப்பட்டளவிலேயே மூலவளங்கள் காணப்படுகின்றன. இங்கு தகைமை பெற்றிருக்கும் அனைவரும் கல்வியைத் தொடர்வதில்லை. உதாரணமாக 1992இல் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றவர்களில் 20 வீதத்தினர் மட்டுமே பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றனர். மருத்துவம், பொறியியல், பல் மருத்துவம், முகாமை போன்ற கல்வி நெறிகளில் போட்டி மிகவும் கடுமையாக இருக்கின்றது.

கல்வி கற்றவர்களுக்கென போதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவது பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது. தற்போதைய குடித்தொகை வளர்ச்சி உயர்வாக இருந்து வரும் ஒரு சூழ்நிலையில் உயர் கல்வி வசதிகளை வழங்குவது பிரச்சினையாகவே இருக்கின்றது. இதன் அடிப்படையில் 1965 இல் 14287 ஆக இருந்த பல்கலைக்கழக மாணவர் தொகை 1975 களில் 12000 பேராக குறைவடைந்தது. 1977 இன் பின் பல்கலைக்கழக மாணவர் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது. உயர்கல்வி நிறுவனங்களில் படித்துவிட்டு அதிகமானவர்கள் வேலையற்று இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை கல்வி வாய்ப்புக்களில் எற்படுத்தப்பட்ட அதிகரிப்பு மனிதவள அபிவிருத்தி ஏற்படகாரணமாக அமைந்தது. இதனால் சனத்தொகை குறைந்த, மேற்கு ஐரோப்பிய நாடுகள் மத்தியகிழக்கு நாடுகள் போன்றவற்றிற்கு அனேகமான மூளைசாலிகளின் வெளியேற்றம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகள் தொழில்நுட்ப ஆற்றலை இழந்து வருகின்றன. மூன்றாம் நிலைக் கல்வியில் வசதிகளையும், வாய்ப்புக்களையும் ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் உயர்கல்வி அமைச்சினை நிறுவி அதனூடாக ஆண்டுதோறும் மாணவர் தொகை அதிகரிப்பிற்கேற்ப உயர்கல்வி கற்கும் மாணவர் அளவினையும் அதிகரிக்கும் வகையில் திட்டங்களைத் தீட்டியுள்ளது.

இலங்கையின் குடித்தொகை வளர்ச்சிக்கேற்ப கல்வி வசதிகளை ஏற்படுத்தும்முகமாக பாடசாலைக்கு முன்னராக வசதிகளை உருவாக்குதல், மற்றும் நிறுவனங்களின் தரத்தினை உயர்த்துதல் போன்றவற்றோடு இலவச பாடசாலைச் சீருடை, இலவச பாடநூல், மதிய உணவுத்திட்டம், உதவிப் பணத்திட்டங்கள் போன்றவற்றினூடாக பல்வேறுபட்ட வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. ஆரம்ப கல்வியுடன் ஒப்பிடும்போது நடுத்தர, உயர்கல்விகளுக்கு அரசாங்கம் அதிக செலவினைச் செய்து வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டின் மனிதவள அபிவிருத்தியினை அதிகரிக்கச் செய்து பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்தலாம்.

## உசாத்துணை நூல்கள்


1. பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி வெளியீடு 1994 நவம்பர்.
2. பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி வெளியீடு 1979 மார்ச்.
3. பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி வெளியீடு 1994 மே/யூன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கிராமிய வங்கிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

## Evolution Growth of Rural Banks in Sri Lanka

வி. ஜீவாகரன்

கிராமியத்துறையில் பொருளாதார நடவடிக்கைகளை வளர்க்கும் நோக்குடன் கிராமிய வங்கிகள்தோற்றம் பெற்றுவளர்ச்சியடைந்தன. கிராமியத் துறையானது நாட்டில் பெரும்பகுதி மக்கள் தொகையினை கொண்டு காணப்படுகின்றது. இவர்கள் சிறு விவசாயம், குடிசைக் கைத்தொழில், சிறு கைத்தொழில்கள், மீன்பிடி வர்த்தகம் போன்ற பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். அத்துடன் தேசிய வருவாய்க்கு கணிசமானளவு பங்கினையும் நல்கி வந்தனர். எனவே இவர்கள் இந்நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு போதிய மூலதனமின்மை, முதலீடு, சேமிப்பு பழக்கங்கள் இன்மை இம்மக்களிடையே முக்கிய பிரச்சனைகளாகக் காணப்பட்டன. இவற்றினை நிவர்த்தி செய்வதை அடிப்படையாகக் கொண்டு கிராமிய வங்கிகள் தோற்றம் பெற்றன.

இலங்கையின் கிராமிய மக்கள் தமக்குத் தேவையான நிதியை நிறுவன ரீதியான அமைப்புக்களில் இருந்தும் நிறுவன ரீதியற்ற அமைப்புக்களில் இருந்தும் பெற்று வருகின்றனர். நிறுவன ரீதியான அமைப்புக்களில் குறைந்த வட்டி வீதம் காணப்பட்டபோதும் நிறுவன ரீதியற்ற அமைப்புக்களில் அதிக வட்டிவீதம் காணப்பட்டது. எனினும் கிராமிய மக்கள் நிறுவன ரீதியற்ற அமைப்புக்களிலேயே அதிகளவு கடன்களைப் பெற்றனர். எனவே அரசாங்கம் இதனைக் கருத்திற் கொண்டு இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் கூட்டுறவுத் துறையின் மூலமாக கூட்டுறவுக் கடன் சங்கத்தை உருவாக்கியது. இது கண்டி மாவட்டத்தில் உள்ள "தெல்தெனியா" விலும் மாத்தறை மாவட்டத்திலுள்ள "வெலிகம கோறளை" யிலும் அமைக்கப்பட்டது.

1909 இல் நியமிக்கப்பட்ட விவசாய வங்கித் தொழில் கமிட்டி கிராமியத் துறையின் கடன் சுமையினைச் சுட்டிக்காட்டியது. எனவே கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் வழங்கியது. விவசாயிகள் இக்கடனை தமது பொருளாதார நடவடிக்கைகளில் முதலிட்டு அதிக இலாபத்தைப் பெற்றனர். கூட்டுறவுக் கொடுகடன் சங்கங்கள் 1911 இல் 7ம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்டபூர்வமாக நிறுவப்பட்டன. இவ்வாறான சங்கம் 1912 இல் வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கூட்டுறவு கொடுகடன் சங்கமாகவும், கூட்டுறவு சிக்கன சேமிப்பு சங்கமாகவும் இரு வகையில் அமைக்கப்பட்டிருந்தது.

கூட்டுறவு சிக்கன சேமிப்புச் சங்கங்கள் அதிகளவில் அரசாங்க ஊழியர்களை அங்கத்தவராக கொண்டிருந்தமையினால் பெரும

வ. ஜீவாகரன்
பொருளியற் சிறப்புக்கலை
இறுதி வருடம்
யாழ். பல்கலைக் கழகம்.

ளவில் அவர்களுக்கே உதவியது. இவ்வங்கியின் முக்கிய நோக்கமாக சேமிப்பை ஊக்குவிப்பதாக இருந்த போதும் சேமிப்பின் 75 சதவீதம் வரையிலான கடன்களையும் வழங்கின. பிற்பட்ட வருடங்களில் இச்சங்கங்களில் பல வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கடன் சங்கங்களாக உருமாற்றப்பட்டமையின் காரணமாக இந்த அங்கத்தவர்களின் கடன் தகுதி விரிவாக்கப்பட்டது.

வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கடன் சங்கங்கள் நகர்ப்புறங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டு வர்த்தகர்கள், சிறுதொழிலதிபர்கள் போன்ற நடுத்தர வர்க்கத்தினருக்கு உதவின. எனினும் இந்தச் சங்கங்கள் கிராமிய விவசாயிகளிடையேயும் ஓரளவுக்கு வேரூன்றி இருந்தன. வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கூட்டுறவுக் கொடுகடன் சங்கங்கள் மட்டுமே கிராமிய விவசாயிகளுக்கு வரையறுக்கப்பட்ட மட்டங்களிலேனும் கடனுதவியை வழங்கின. காலப்போக்கில் இத்தகைய சகல வகையான கொடுகடன் சங்கங்களும் எண்ணிக்கையில் அதிகரித்தன. அதே போன்று அவற்றின் வழங்கப்படும் கடன்களின் தொகையும் அதிகரித்தன. கடன்களை வழங்குவதற்கு இச் சங்கங்களின் வளங்களில் பற்றாக்குறை இருந்தமையால் இதை ஈடுசெய்வதற்கு அரசாங்கத்தால் 1916 இல் நிறுவப்பட்ட உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியத்திலிருந்து நிதிகள் பெறப்பட்டன.

நீண்டகால கடன் வசதிகளை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் 1920 இல் அரச ஈட்டுவங்கி நிறுவப்பட்டது. ஆயினும் இவ் வங்கி கொழும்பில் இயங்கி கிராமியப் பிரதேசங்களில் கிளைகளைக் கொண்டிருந்தமையினாலும் இவ்வங்கியின் வசதிகளை கிராமங்களிலுள்ள சிறு அளவு விவசாயிகள் பெறமுடியவில்லை. மேலும் இவ்வங்கியினால் வழங்கப்பட்ட ஈட்டுக் கடன்களுக்கான காணிகளின் உறுதிகள் கடுமையாக பெறுமதி நிர்ணயத்திற்கும் பரீட்சித்தலுக்கும் உட்படுத்தப்பட்டன.

1920 ம் ஆண்டிறுதியில் உருவாக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகளுடன் கூட்டுறவுக் கொடுகடன் முறையில் ஒரு புதிய கால கட்டம் தொடங்கியது. இவ்வங்கிகள் கூட்டுறவு மாவட்ட வங்கிகள் அல்லது கூட்டுறவு மாகாண வங்கிகள் என்றழைக்கப்பட்டு அவ்வப் பிரதேசங்களிலுள்ள பிரதம கூட்டுறவு கொடுகடன் சங்கங்களுடன் இணைக்கப்பட்டன. இச்சங்கங்கள் இவ்வங்கிகளின் அங்கத்துவ அமைப்புக்களாகக் கருதப்பட்டன. இவ்வங்கிகள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் தவணை வைப்புக்களையும் சேமிப்பு வைப்புக்களையும் ஏற்றன. கேள்வி வைப்புக்கள் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து மட்டும் ஏற்கப்பட்டன. முதலாவது கூட்டுறவு வங்கியான யாழ்ப்பாண மத்திய வங்கி 1929 இல் தாபிக்கப்பட்டது. அடுத்த இரு ஆண்டுகளிலும் கொழும்பு கண்டிப் பிரதேசங்களில் மேலும் இரு வங்கிகள் நிறுவப்பட்டன. 1960 களின் ஆரம்பத்தில் நாட்டில் 4 கூட்டுறவு மாகாண வங்கிகளும் 11 கூட்டுறவு மாவட்ட வங்கிகளும் இயங்கின. எவ்வாறெனினும் நாட்டின் கூட்டுறவுத்துறைக்கு சேவை செய்யும் ஒரு தலைமை வங்கியின் தேவை கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பெருக்கத்துடன் உணரப்பட்டது.

கூட்டுறவுக் கொடுகடன் முறையை ஆராய்ந்த 1934 இன் வங்கித் தொழில் ஆணைக்குழுவினதும் ஏனையோரினதும் ஆலோசனையின் பேரில் 1939 இல் முதல் உள்நாட்டு வங்கியான இலங்கை வங்கி நிறுவப்பட்டது. எனினும் முதலில் எதிர்பார்க்கப்பட்டவாறு இவ்வங்கி கூட்டுறவுச் சங்கங்களுடன் நேரடியாகத் தொடர்பு

கொள்ளத் தவறியது. இது கிராமியத் துறையுடன் மிகக் குறைந்தளவு தொடர்புடையதாக இருந்து விரைவில் இன்னுமொரு ஏற்றுமதித்துறை சார்ந்த வர்த்தக வங்கியாக மாறியது.

இரண்டாம் உலகப் போரினால் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கூட்டுறவு முறையை அரசு பயன்படுத்தியுள்ளது. உணவுப்பங்கீட்டிற்காக கூட்டுறவுப் பண்டகசாலை சங்கங்கள் அமைக்கப்பட்டதோடு உணவுற்பத்தியை விரிவுபடுத்த கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனவு சங்கங்கள் நிறுவப்பட்டன. இது உத்தரவாத விலை, கடன் வழங்குதல், முகவர் நிலையங்களை இயக்குதல் போன்ற தொழிற்பாடுகளைச் செய்தது. 1957 இல் மேலும் வளர்ச்சியடைந்தது.

இலங்கை வங்கி நேரடியாக கூட்டுறவுத் துறையுடன் தொடர்பு கொள்ளத் தவறியமையால் 1940 களின் பிற்பகுதியில் கூட்டுறவு சமஷ்டி வங்கி நிறுவப்பட்டது. இவ்வங்கியானது வங்கித் தொழில் கடன் வழங்குதல், ஏனைய நிறுவனங்களுக்கு ஊடகமாக செயற்படுதல், ஊழியர்களுக்கு அறிவூட்டுதல், மேற்பார்வை செய்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்தது. இதன் மூலதனமானது பங்குகள், வைப்புக்கள், கடன்கள், இலாபங்கள் என்பவற்றைக் கொண்டதாக அமைந்திருந்தது.

சமஷ்டி வங்கி எதிர்நோக்கிய வளங்களின் பின்னடைவு காரணமாக கூட்டுறவு மாகாண மாவட்ட வங்கிகளுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் போதியளவு கடன் வழங்க முடியவில்லை. அரசாங்கத்தினால் உத்தரவாதம் வழங்கப்படாத காரணத்தால் இவ்வங்கியால் தொகுதிக் கடன் முறைகளில் நிதிகளைத் திரட்டவும் முடியவில்லை, இச்சங்கங்கள் பங்குகளை முதலிட முடியாமையால் பங்கு மூலதனம் சேர்க்க முடியவில்லை, 1960 களில் சமஷ்டி வங்கியில் கூட்டுறவுச் சங்கங்களினால் இடப்பட்ட வைப்புக்களும் கடன்களும் திடீரென குறைந்தது. அத்துடன் பணிப்பாளர் சபையின் தேர்ச்சி, அனுபவம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் கடன் வழங்கலுக்கான நம்பிக்கையினை பெற முடியவில்லை,

1957 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் கூட்டுறவு அமைப்பானது தனிநோக்கு உள்ள கூட்டுறவுச் சங்கங்களை பல நோக்கு கூட்டுறவு சங்கங்களாக புனரமைப்புச் செய்தது. இது கிராமியத் துறையில் கடன்களை வழங்கி சேமிப்புக்களை ஏற்படுத்தி கிராமிய வங்கித் தொழிலை மேற்கொண்டது. அத்துடன் நுகர்வோர் பொருட்களை வழங்குதல், விவசாய உள்ளீடுகள் களஞ்சிய வசதிகள் வேலை வாய்ப்புக்கள் போன்ற பல்வேறு சேவைகளை கிராமிய வங்கியாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செய்தன.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாக கிராமிய வங்கித் தொழிலை ஊக்குவிக்க விவசாய உணவு அமைச்சு, மத்திய வங்கி, பாராளுமன்றம் என்பன சேர்ந்து 1961 இன் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது. கூட்டுறவு சமஷ்டி வங்கி கலைக்கப்பட்டு சொத்துக்களும் பொறுப்புக்களும் மக்கள் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டது.

மக்கள் வங்கியின் நோக்கங்களாக கிராமிய வங்கித் தொழிலுக்கும் விவசாயத்திற்கும் நிதி உதவி அளித்தல் ஆகும். அத்தோடு கிராமப்புறங்களில் கிளைகளை உருவாக்கி பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல். கிராமப்புறங்களில் கிளைகளை அமைக்கின்றபோது நிர்வாகச் செலவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்து அபாய நிலை காணப்பட்டது. வர்த்தக வங்கிகள் இல்லாத கிராமப்புறங்களில் கிளைகளை அமைப்பதன் மூலம் வசதி குறைந்த வருமான மட்டத்திலுள்ள வருக்கும் நடுத்தர வகுப்பினருக்குமே உதவிகள் வழங்கியது.

கிராமிய வங்கியானது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வங்கித் தொழிலாக கடன் வழங்கும், சேமிக்கும் திணைக்களமாக ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் கிராமிய வங்கியை அமைப்பதற்கு ஒரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெரிந்தெடுக்கப்பட்டதும் கிராமிய வங்கி இயங்குவதற்கான நியதிகளையும் நிபந்தனைகளையும் விளக்கி அச்சங்கம் மக்கள் வங்கியுடன் ஒரு ஒப்பந்தத்திற்குட்பட வேண்டி இருந்தது. மேலும் தெரிந்தெடுக்கப்பட்ட ப. நோ. கூ. சங்கங்கள் அவற்றின் துணைச் சட்டங்களில் ப. நோ. கூ. சங்கம் ஒரு கிராமிய வங்கியை அமைப்பதற்கு ஏற்ப சட்ட பூர்வ நிலைமையை வழங்குவதற்கான மாற்றங்களையும் ஏற்படுத்தவேண்டி இருந்தது. கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினாலும் மக்கள் வங்கியினாலும் காலத்திற்கு காலம் வழங்கப்படும் கட்டளைகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் கூட்டுறவு கிராமிய வங்கி கீழ்ப்பணிந்து நடத்தல் வேண்டும். கிராமிய வங்கிகள் அதன் ப. நோ. கூ. சங்கங்களின் பெயரில் தொழிலை நடத்திய வேளையில் நகை அடைவுபிடிக்கும் விடயத்தில் மக்கள் வங்கியின் முகவராகவும் கடமையாற்றியது.

கிராமிய வங்கிகள் பெரும்பாலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கட்டடங்களில் அமைந்திருந்தன. அத்துடன் அந்த வங்கி ஊழியர்களும் ப. நோ. கூ. சங்க ஊழியர்களின் ஒரு பாகமாய் அமைந்தனர். கிராமிய வங்கியின் ஆளணியினரில் வங்கி முகாமையாளரும் வங்கியின் செயற்பாடுகளைப் பொறுத்து சில உதவியாளர்களும் இருந்தனர். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குட்பட்ட கிராமிய வங்கியின் நிர்வாகம் ப.நோ.கூ. சங்க பணிப்பாளர் சபையினரால் அதன் பொது முகாமையாளரூடாக மேற்கொள்ளப்பட்டது.

கிராமிய வங்கித் திட்டமானது கிராமியத் துறையில் கடன் வசதிகளையும் சேமிப்புக்களையும் ஏற்படுத்துவதற்காகவும் பொருளாதார நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காகவும் பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது.

(1) கிராமியத்துறையில் குறைந்த வருமானப் பிரிவினருக்கு பயனுள்ள வகையில் கடன் வசதிகளை வழங்குதல்.

(2) நன்கு ஒழுங்கு படுத்தப்பட்ட முறையில் கிராமியத் துறையில் சேமிப்புக்களைத் திரட்டல்.

(3) வழங்கப்படும் கடன் வசதிகளில் போதியளவு விபரமான கண்காணிப்பினை வழங்கல்.

(4) ஆவணமிடுதல், கணக்கீடு செய்தல் முறைகளில் செயற்றிறனை மேம்படுத்தல்.

என்பவற்றோடு இந்த நோக்கங்களை அடைதற் பொருட்டு இந்த நிறுவனங்களால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

(1) ஒவ்வொரு நோக்கத்தினதும் அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் ப. நோ. கூ. ச. அங்கத்தவர்களுக்கு பல்வேறு நோக்கங்களுக்கும் கடன் வசதிகளை வழங்கல்.

(2) அங்கத்தவரிடமிருந்தும் அங்கத்தவரல்லாதவரிடமிருந்தும் வைப்புக்களை ஏற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) அங்கத்தவருக்கும் அங்கத்தவரல்லாதவருக்கும் அடகு பிடிக்கும் வசதிகளை வழங்கல்.

(4) கடன்களை சந்தைப்படுத்தலோடு இணைத்தல்.

கிராமிய வங்கித்திட்டத்தின் கீழ் அதன் அங்கத்தவர்களுக்கு உற்பத்தித்தேவை, வீடமைப்பு, கடன் மீளல், வர்த்தகம், நுகர்வு போன்றவற்றுக்கு நிதி உதவிசெய்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடாக அரசாங்கத்தின் நெல்லுற்பத்திக் கடன் வசதியையும் செய்து வந்தது. இக்கடன்கள் நடுத்தரக் குறுங்காலக் கடன்களாக அமைந்திருந்தது. அத்துடன் மக்கள் வங்கியின் அதிகாரம் பெற்ற முகவர்களாக அடைவு பிடித்தலையும் கிராமிய வங்கி மேற்கொண்டு வந்தது. அத்துடன் அங்கத்தவர்களுக்கும் அங்கத்தவர்களல்லாதவர்களுக்கும் சேமிப்பு, தவணை வைப்புக் கணக்குகளைத் திறந்து வைத்தது. கிராமிய வங்கியானது ஆரம்பத்தில் நடைமுறைக் கணக்குகளை ஆரம்பித்த போதிலும் சட்டப் பிரச்சனை காரணமாக பின் வாபஸ் பெற்றது.

கிராமிய வங்கிகள் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களின் திணைக்களங்களாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அவற்றின் ஒழுங்கமைப்பு முறையில் மக்கள் வங்கியுடன் தொடர்புடையதாக இருந்தது. மக்கள் வங்கி கிராமிய வங்கிகளுக்கு நிதி, முகாமைத்துவம், கண்காணிப்பு போன்ற உதவிகளை வழங்கி வந்தது. அத்துடன் அங்கத்தவர்களுக்கு மேலதிக பற்றுவசதிகள், மீள கடன் கொடுத்தலுக்கான தவணைக் கடன் வசதிகளையும் வழங்கியது. கிராமிய வங்கிகளின் கடன் முகாமையாளர்களுக்கு மக்கள் வங்கி கிளைகளில் பயிற்சி வழங்கப்பட்டது. மாதாந்த கண்காணித்தல் நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் பரிசீலனை செய்து வந்தது. கிராமிய வங்கிகளின் அறிக்கைகள், புள்ளிவிபரங்கள் மக்கள் வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டி ஏற்பட்டது. அத்துடன் அடைவு பிடிப்பதற்கான இரும்புப் பெட்டிகளையும் எழுதுபொருட்கள் உபகரணங்களையும் கிராமிய வங்கிகளுக்கு மக்கள் வங்கி வழங்கியது.

வர்த்தக வங்கி கிளைகளிலும் பார்க்க கிராமிய வங்கிகள் கிரா..ய துறைக்கு சில சேவைகளை செய்தன. உதாரணமாக கிராமிய வங்கிகள் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கட்டிடங்களில் இருப்பதுடன் அவற்றில் வேலை செய்யும் ஊழியர்கள் சங்க ஊழியர்களாக காணப்படுகின்றமையால் குறைந்த சம்பளமும் குறைவான பொருளாதார வசதியும் பெறுகின்றார்கள். எனவே இவர்களுக்கு வரையறுக்கப்பட்ட சேவைகளை இவையே வழங்குகின்றன. கிராமிய வங்கிகள் அவற்றின் குறைவான செயற்பாட்டு செலவு காரணமாக சாதகமாக இயங்கியது. கிராமிய வங்கியின் பணிகள் கூட்டுறவுச் சங்க பிராந்தியத்திற்குள் அமைவதோடு அவற்றின் அலுவலகர்களும் அப்பிராந்தியத்தையே சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இத்தகையவர்கள் பிராந்திய நிலமை பற்றியும் வாடிக்கையாளர்கள் பற்றியும் சிறந்த அறிவினைப் பெற்றிருப்பார்கள். இதனால் கடன் தேவையும் கடன் தீர்மானமும் செய்வது இலகுவானதாகும்.

கூட்டுறவுக் கட்டடங்களில் அமைந்திருந்த கிராமிய வங்கிகளின் அங்கத்தவர்கள் குறைந்த கல்வியறிவு படைத்தவர்களாக காணப்பட்டார்கள். இதனால் தங்களுக்குத் தேவையான உதவிகளை நடைமுறைகளும் சம்பிரதாயங்களும் இன்றி பெற்றுக் கொள்ளக் கூடிய கிராமிய வங்கிகளை விரும்பினார்கள். அதிகார கெடுபிடி இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாத இவ்வங்கி நெருங்கிய தொடர்பினை வாடிக்கையாளர்களுடன் ஏற்படுத்தியது. புதிய வங்கித் தொழில் முறை கிராமியத் துறையில் பெருமளவிலான உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் அடைய முடிந்தது. இத்துறையில் இருந்த பெரும்பாலான வருமான உழைப்பாளிகள் கமக்காரராகவும் சிறு காணிகளைக் கொண்டோராகவும் உயர் பருவகால வருமான வேறுபாடுகளை உடையவர்களாகவும் காணப்பட்டார்கள். அறுவடைக் காலங்களில் கிராமிய வங்கிகளினால் வைப்புத் திரட்டல்கள் மேற்கொள்ளப்பட்டது. இவை வேறு பொருளாதார நடவடிக்கைகளுக்கு முதலீடாக மாற்றப்பட்டன.

வெவ்வேறு பிராந்தியங்களில் இயங்கும் கிராமிய வங்கிகளை தனித்தனியாக எடுத்துப்பார்த்தால் பொதுவாக சில வங்கிகள் நிதியில் தன்னிறைவு மட்டத்திற்கப்பாலும் அம்மட்டத்திற்கு குறைவாகவும் காணப்படுகின்றது தன்னிறைவு மட்டத்திற்கு மேலாக உள்ள வங்கிகளின் மிகை நிதிகள் வளங்களின் ஆதாரம் தேவைப்படும் வங்கிகளுக்கு மாற்றப்படுகின்றது. ஆரம்பத்தில் நிதிப்பிரச்சினையை எதிர் நோக்கியது. ஆனால் வெளித் துறையிலிருந்து இந் நிதி ஈடுசெய்யப்பட்டது.

1964 மார்ச் மாதம் கண்டி மாவட்டத்திலுள்ள "மெனிக்கின்னவிலு"ள்ள கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு கிளையாக மெனிக்கின்ன கிராமிய கூட்டுறவு வங்கி ஆரம்பிக்கப்பட்டது. அதே ஆண்டின் ஏப்ரல், மே மாதங்களில் இரு கிராமிய வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1965, 1966 ஆம் ஆண்டுகளில் 5 வங்கிகளும் 1966 இன் இறுதியில் இருந்து 1971 இன் முடிவுவரை ஆண்டொன்றிற்கு 20 வங்கிகள் திறக்கப்பட்டன. 1971 இன் பின்னரான காலப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் குறைவான வளர்ச்சியே காணப்பட்டது.

1966 இறுதிவரை இவ்வங்கிகளில் சேமிப்புக் கணக்கு வைத்திருப்போரின் எண்ணிக்கை 4600 இல் இருந்து 1971 இல் 60400 ஆக துரிதமாக அதிகரித்தது. 1970 இல் சேமிப்பு வைப்புக்களில் 8255000 ரூபாவிலிருந்து 16109000 ரூபாவாக அதிகரித்தது. இதற்கு காரணம் சேமிப்புக் கணக்கில் ஏற்பட்ட அதிகரிப்பாகும்.

நிலையான வைப்புக்களை நோக்கின் 1967 இல் 41 நிலையான வைப்புக்கணக்குகள் சராசரி வைப்பான ரூபா 1595 உடன் இருந்தபோது 1971 இல் 838 இத்தகைய கணக்குகள் ரூபா 807 சராசரி வைப்புடன் காணப்பட்டது.

1967 இறுதியில் 2897 ஆகவும் ரூபா 2,029,000 ஆகவும் காணப்பட்ட கிராமிய வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையும், மொத்த கடன் தொகை 1970 இன் இறுதியில் முறையே 10,017 ஆகவும் ரூபா 7,122,000 ஆகவும் அதிகரித்தன.

அடகுக் கடன்களைப் பொறுத்த வரையில் வழங்கப்பட்ட ஒரு கடனின் சராசரி அளவு 1967 இல் 96 ரூபாவாகவும் 1968 இல் 114 ரூபாவாகவும் இருந்தது. ஏனைய கடன்களைப் பொறுத்தவரையில் கடனொன்றின் சராசரி அளவு 1965 இல் ரூபா 793 ஆகவும் 1968 இல் ரூபா 650ஆகவும் இருந்தது. 1972 இற்கு முற்பட்ட வருடங்களில் அனேகமாக இதேபோக்கே நிலவியது. கிராமிய வங்கியமைப்பின் முற்று முழுதான செயற்பாட்டினை நாம் பகுப்பாய்வு செய்து பார்க்கும் போது, முதல் ஆறு வருடகாலத்தில் இவ்வங்கிகள் தாம் திரட்டிய வைப்புக்களிலும் கூடிய தொகையினை கடன்களாக (அடகுக்கடன்கள் உட்பட) வழங்கி வந்துள்ளன. எனினும் இந்த ஆரம்ப கட்டத்தின் பின்னர் - குறிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 இன் நடுப்பகுதியில் இவ்வங்கிகள் நிதிகள் விடயத்தில் தன்னிறைவடைந்தன. வைப்புக்கள் முற்பணங்களை விடவும் கூடிய வேகத்தில் தொடர்ந்தும் அதிகரித்து வந்தன.

எனவே கிராமிய வங்கிகளின் வளர்ச்சியினை தொகுத்து நோக்குகின்றபோது வங்கிகளின் முதல் ஏழாண்டு காலம் பரீட்சார்த்த காலகட்டமாக இருந்தது. எந்த நோக்கங்களுக்காக இக்கிராமிய வங்கி அமைப்பு உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கங்களை வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கையினையும் எதிர்பார்ப்பினையும் இப் பரீட்சார்த்த கட்டம் நிருபித்தது. எனினும் இந்த ஆரம்ப கட்டத்தில் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்ட அளவிலேயே இடம் பெற்று வந்தன. கிராமப்புறங்களிலும் கூட ஒரு சில பகுதிகளிலேயே இவ்வங்கிகள் இயங்கி வந்தன. கணிசமான அளவில் கிராமிய சேமிப்புக்களை ஒன்று திரட்டுவதில் அவை வெற்றி கண்டதுடன் கிராமியத் துறையில் உள்ளூர் மூலவளங்களைக் கொண்டே முதலீடுகளை மேற்கொள்வதற்கு இவை வழிவகை செய்தன. பரீட்சார்த்த காலகட்டத்தில் கிடைத்த அனுபவங்களும் வெற்றிகளும் அடுத்து வந்த காலகட்டங்களில் இவ்வங்கிகள் துரிதமாக வளர்ச்சியடைய உதவின எனலாம்.

## உசாத்துணை நூல்கள்


1. Economic Review — 1990 January
2. Economic Review -- 1984 July / August
3. Economic Review — 1989 January / February
4. பொருளியல் நோக்கு — 1988 நவம்பர் / டிசம்பர்.
5. பொருளியல் நோக்கு — 1992 செப்ரம்பர்.
6. பொருளியல் நோக்கு — 1987 பெப்ரவரி.
7. ஜெயரத்தினராசா. ஆர். இலங்கைப் பொருளாதாரம் — 1979


வருடாந்த சராசரி நெல் உற்பத்தி போக்கு

| காலம் | மெ. தொன் | சதவீத மாற்றம் |
|---|---|---|
| 1954 – 56 | 652 | — |
| 1964 – 66 | 922 | 41.4 |
| 1974 - 76 | 1336 | 44.9 |
| 1984 - 86 | 2554 | 91.2 |
| 1991 - 93 | 2431 | 4.8 |

ஆதாரம் : பொருளியல் நோர்க்கு ஆகஸ்ட் - 1994
( Economic Review – August 1994 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை ஒழிப்பினையும் கிராமிய அபிவிருத்தியினையும் இலட்சியமாகக்கொண்ட "சமுர்த்தித் திட்டம்"

## Samoorthi Programme with the Goal of Poverty Alleviation and Rural Development

எம். வரதராஜன்

ஒரு பொருளாதாரம் அபிவிருத்தியினை எய்த வேண்டுமாயின் அப்பொருளாதாரத்தின் பின்னடைவைக் கண்டறிந்து அதற்கு இயைந்த வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது இன்றியமையாததாகும். இதனால்தான் இன்றைய உலக நாடுகள் அபிவிருத்தி முறையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முதல் செயற்பாடாக வறுமை ஒழிப்பினையும் கிராமிய அபிவிருத்தினையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. இலங்கை அரசாங்கம் சுதந்திரத்தின் பின் பல வறுமை ஒழிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தி வந்தமை நாம் அறிந்ததே. இவை தேர்தல் காலத்திலான பிரச்சார நடவடிக்கைகளில் எந்தக் கட்சிகள் கூடிய பங்கீட்டு விநியோக முறைகளையும், சிறந்த நலன்புரி நடவடிக்கைகளையும் தமது அரசாங்க பூட்கைகளாக முன் வைக்கின்றனவோ அக்கட்சிகளே அரசாங்கத்தைக் கைப்பற்றுவதும். அப்பூட்கைகள் மக்கள் மத்தியில் பிரதிபலிக்கும் போது ஆட்சிக் காலத்தை நீட்டுவிப்பதும், இலங்கை அரசியல் வரலாற்றில் அவதானிக்கக்கூடிய முக்கிய விடயங்களாகும். உதாரணமாக 1977ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக்கட்சி பின்பு மக்கள் தீர்ப்பு ஒன்றின் மூலம் ஆட்சியை நீட்டுவித்தும் 1988 இல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் சிறந்த வெற்றியை சுட்டியமையையும் கூறிக் கொள்ளலாம்.

இந்த வகையில் பார்க்கும்போது பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு தனது கொள்கைப் பிரகடனத்தில் முன் வைத்த வாக்குறுதி ஒன்றைச் செயற்படுத்தும் வகையில் வறுமை ஒழிப்பினையும் கிராமிய அபிவிருத்தியினையும் குறிக்கோளாகக் கொண்ட தேசிய அபிவிருத்தித் திட்டமொன்றினை 1995ஆம் ஆண்டு ஆவணி மாதம் 01ஆம் திகதி ஆரம்பித்து வைத்தது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்தோடு ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்தப் பரந்தளவிலான இத் தேசிய அபிவிருத்தித்திட்டமே "சமுர்த்தித் திட்டம்" ஆகும். பிரதேச செயலாளர் பிரிவினை எல்லையாகக் கொண்ட இத்திட்டம் தீவு பூராகவும் ஏக காலத்தில் செயற்படும் வண்ணம் உருவாக்கப்பட்டது. வடகிழக்குப் கிராமப்புற மக்களின் இயல்பு வாழ்க்கைநிலை குழம்பிக் காணப்படுவதால் இத்திட்டத்தை ஏக

முருகேசு வரதராஜன்
பொருளியல் சிறப்புக்கலை
இறுதிவருடம்.
யாழ். பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் நாடளாவிய ரீதியில் நடைமுறைப் படுத்துவதில் மிகுந்த சிரமத்தையும் பிரச்சினையையும் அரசு எதிர் நோக்குகிறது. எனினும் ஏனைய பிரதேசங்களிலாயினும் ஒரே நேரத்தில் இத்திட்டத்தை அமுல் படுத்தியுள்ளமை இத் திட்டத்தின் ஒரு சிறப்பம்சமேயாகும்.

## சமுர்த்தி இயக்கத்தின் சிறப்பம்சங்கள்

இலங்கையில் நிலவும் பிரதான சமூக பொருளாதார பிரச்சனை எனக் கருதக் கூடிய தரித்திரத் தன்மையை இல்லாதொழிப்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு குடும்பத் தொகுதியை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டத்தையும் பயன் படுத்திக்கொள்ளும்போது வருமானத்தையும், சமூக அர்த்தத்தையும் உயர்த்துவதன் மூலம் வறுமையை ஒழிப்பதற்கு நாட்டின் சனத்தொகையின் 100க்கு 40% ஆன இளைஞர், யுவதிகள் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும், நிர்வாகத்திலும் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் வண்ணம் அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டமே 'சமுர்த்தி இயக்கம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் சிறப்பம்சங்கள் வருமாறு :

(1) ஒவ்வொரு குடும்பத்திலுமுள்ள விசேட தேவைகள், மற்றும் தகைமைகளில் வேறுபாடு காணப்படும் குடும்பத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் செயற்படுத்தப் படுதல்.

(2) ஒவ்வொரு கிராமத்தினதும் குடும்பத் தொகுதி தொடர்பாகவும், பிரதேச அபிவிருத்தி தொடர்பாகவும் நலன்புரி வசதிகளைப் பகிர்ந்தளிக்க உதவுதல்.

(3) தேர்ந்தெடுக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நலன் புரிக் கொடுப்பனவு ஒன்றை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொடுப்பதோடு ஏனைய வறிய குடும்பங்களுக்கு அவற்றின் தகுதிக்கேற்ப பொருளாதார நடவடிக்கைகளில் நெறிப்படுத்தப்படுவதை முன்வைப்பதன் மூலம் சமுர்த்தி வேலைத்திட்டமானது நலன்புரித் திட்டத்துடன் கைகோர்த்து நடக்கும் சமுதாய அபிவிருத்தி நடவடிக்கை ஆகிவிடும்.

(4) கிராமிய மட்டத்திலிருந்து அரச மட்டம்வரை, கீழ் மட்டம் முதல் மேல் மட்டம் வரை அபிப்பிராயம், ஆலோசனைகள் என்பவற்றை ஒன்றிணைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளை இத் திட்டத்தின் மூலம் நடைமுறைக்கு எடுக்கப்படும்.

(5) அபிவிருத்தித் திட்டங்களை தேர்ந்தெடுக்கும்போது வளங்களைப் பயன் படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

(6) பரந்து கிடக்கும் வெவ்வேறு கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை ஒருங்கிணைப்பதும் மூல வளத்தை விரயம் செய்தலைக் குறைப்பதற்கென தற்போது பல்வேறு அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மூலம் ஒரே பிரதேசத்தினுள் வெவ்வேறு உருவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும். அபிவிருத்தித் திட்டங்களிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுத்த சமுர்த்தி இயக்கம் நடவடிக்கை மேற்கொள்கின்றது.

(7) நிறுவனம் குறைந்த வருமானம் பெறும் சகல குடும்பங்களுக்கும் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) குடும்பத் தொகுதியின் நிமித்தம் திட்டம், கூட்டு முயற்சி, கூட்டுறவு' பங்குடமை தொழில் என்பவற்றுடன் தம் பணிகளுக்கான திட்டங்களையும் உருவாக்குதல்.

(9) வறுமையை இனங்காணும் காரணிகளின் வருமானத்தைப் போன்று செலவும் சொத்துரிமையும் கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். வறுமையின் எல்லை, நலன்புரிக் கொடுப்பனவின் அளவு என்பவற்றைத் தீர்மானிப்பது வருமானத்தை அடிப்படையாகக் கொண்டேயாகும். அதன் மூலம் உருவான பல்வேறுபட்ட ஒழுங்கீனங்களைத் தீர்மானிப்பதற்கும் கூடியளவு பிழையின்றி வறுமையைத் தீர்மானிப்பதற்கும் குடும்பத்திலுள்ள பல்வேறு சொத்துக்களும் செலவுகளும் கவனத்தில் கொள்ளப்படும்.

(10) வறுமையை அகற்றுவதற்காக செயற்படுகையில் குடும்பத்தினுடைய பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு தொழில்நுட்ப அறிவு, திறமையின் அவசியம், ஆலோசனைச் சேவை, சந்தை வாய்ப்பு, முகாமைத்துவ அறிவு ஆகியவற்றுள் ஒன்றையோ அல்லது பல காரணிகளையோ தேவையான சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொடுப்பதன் மூலம் கிரமமான வருமான மொன்றுக்கு வழிசமைத்துக் கொடுக்கும்.

(11) ஒழுங்கான சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதன் மூலம் கிராமிய மட்டத்தில் வேலை வாய்ப்பிற்கு வழி கோலுதல்.

(12) சமுர்த்தி இயக்கத்தில் பயனடைவோரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் உற்பத்தித் தரத்தில் கவனம் செலுத்துவதைப் போல அவற்றைச் சந்தைப்படுத்துவதிலும் விசேட கவனம் செலுத்துதல்.

(13) வெளிநாட்டுச் சந்தையை இலக்காகக் கொண்ட உற்பத்தியின் நிமித்தம் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதுடன் அதற்கான உதவிகளையும் பெற்றுக் கொடுத்தல்.

(14) பரந்தளவில் சமூகத்தை அறிவு பெறச் செய்யும் செயற்பாட்டின் மூலம் கிராமிய பொருளாதார சமூக அடிப்படையை வலுவடையச் செய்வதுடன் கிராமிய இயக்கத்தைப் பலப்படுத்தல்.

(15) இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றைச் சமுர்த்தித் திட்ட செயற்பாடுகளுடன் ஒருங்கிணைத்தல்.

(16) கிராமப் பகுதிகளில் சேமிப்பை அதிகரிக்கச் செய்வதை ஊக்குவிப்பதுடன் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அத்தியாவசியத் தேவைகளை வழங்கும் பொருட்டு அத்தியாவசிய சேவைகளின் அமைப்பொன்றை சமுர்த்தி வங்கியின் கீழ் செயற்படுத்தல்.

(17) ஆக்கத்திறன் கொண்ட புதிய உற்பத்திகளைப் பெருக்குவதற்கு ஊக்கமளித்தல்.

(18) சமுர்த்தி மையமானது மூலவள மத்திய நிலையமாகச் செயற்படும் பல்வேறு நிறுவனங்களின் விரிவாக்கப் பணிகளின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படுவதோடு எல்லா சேவைகளும் சமுர்த்தி மையத்தினூடாக பெற்றுக் கொடுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(19) உத்தியோகத்தர்களும் அவர்கள் சேவையினால் பயன் பெறுபவர்கள் ஆகியோரிடையே நிலவும் தொடர்பினை மேலும் விஸ்தரிப்பதன் மூலம் தற்போது செயற்படும் விரிவாக்க சேவைகள் உட்பட உதவிச் சேவை நிறுவனங்கள் ஆகியவற்றின் பணிகள் கிராமிய அபிவிருத்திக்குப் பயனுள்ளவையாக அமைத்துக் கொள்ளல்.

(20) கிராமிய மட்டத்தில் செயற்படும் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களினதும் அனுபவம், திறமை, ஆக்க அறிவு, முகாமைத்துவ நிறுவனத் திறமைகளை சமுர்த்தி இயக்கத்திற்காக அர்ப்பணித்துக் கொள்ளக் கூடியவாறு மேற்படி நிறுவனங்களினது உதவியைப் பெற்றுக் கொள்ளுதல்.

மேற்குறித்த வடிவிலமைந்த சமுர்த்தி இயக்கத்தின் சிறப்பம்சங்கள் சமுர்த்தித் திட்டத்தின் உன்னத நிலைமையினை எடுத்துக் கூறுகின்றது. மனித சமுகத்தின் சிறப்பினையும் அச்சமுகத்தின் முன்னேற்றத்தையும் விபரிப்பதனைப் பொருளாகக் கொண்ட இத்திட்டம் பொருளாதார சமூக, அரசியல், பண்பாடு என்பவற்றின் மேம்பாட்டினையும் கொண்டமைந்துள்ளது. இதன் வாயிலாக வறுமையினை ஒழிக்க முயல்கின்றது. வறுமை என்பது பொதுவான நோக்கில் வரையறை செய்யின் மனிதனின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையேயாகும். வறுமையைப்பற்றி ஆய்வு செய்த "றொபரீட் செம்பாஸ்ட்" கூற்றின்படி வறுமை நிலைக்கு முக்கிய காரணம் "தடைகளை எதிர்த்து நிற்கும் சக்தியின்மை" என்றார். நமது நாட்டில் வாழும் வறிய மக்களின் தொகை வருடாவருடம் அதிகரித்துச் செல்கின்றது. இதற்குக் காரணங்களாக பாரம்பரிய சொத்துக்கள் உரிமையாகாமை, உடல் உள ரீதியான பலவீனங்கள், கிராமத்தின் வளப் பற்றாக்குறை, போதைப் பொருள் பாவனைக்கு உட்படுத்தல், குடும்பத்தினர் சூதாட்டம் போன்ற ஒழுக்கயீனமான நடத்தைகளுக்கு உட்படுதல், கடுமையாக உழைக்காமை, வறுமையில் இருந்து மீளமுடியாது என்ற குறிக்கோளைக் கொண்டிருத்தல், உணவு, உடை, உறையுள் என்பவற்றோடு வசதியற்று வாழப் பழகிக்கொண்டமை, வறுமையில் இருந்து மீள்வதற்கு ஒருவருமே உதவியளிக்காமை, வறுமையில் இருந்து மீள்வதற்கு அக்கறை காட்டாமை, போலி நம்பிக்கையும் தேவையற்ற வெட்கமும், பயமும் குடும்பத்தினிடையே ஒன்றிணைந்த முயற்சியில்லாமை, முயற்சியிருந்தும் ஏனையவர்களின் பொறாமை போன்றவற்றால் முயற்சிகள் சிதைவுறுதல் போன்றவையே மிகவும் வறிய நிலைக்குரிய காரணங்களாக உள்ளன.

1993ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகை 17·6 மில்லியன் ஆனதோடு வருடாந்த சனத்தொகை அதிகரிப்பு வேகம் 1·2% ஆகும், மொத்த சனத்தொகையில் கிராமிய மக்கள் தொகை 72·3%மும் நகரப்புற மக்கள் 21·4%மும் மீதி 6·3% தோட்டத் தொழிலாளருமாவர். மொத்த சனத்தொகையில் 65%—70%ஆன மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றவர்களாவர். இந்த வறிய மக்களில் 60%ஆனவர்கள் கிராமப் பகுதிகளில் வாழ்ந்து வருவது இலங்கைப் பொருளாதாரக் கட்டமைப்பில் வெளிப்படையாகப் புலப்படும் ஒரு பண்பாகும். இன்றுவரை பரவலாகப் பேசப்பட்டு வருவது வறுமைத் தணிப்புக்கு "பொசிந்து செல்லும் கோட்பாடு" (Trickle Down Theory of Deveopment)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதாகும். பொசிந்து செல்லும் கோட்பாடு என்பது முதலில் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து பின்பு வருமானப் பங்கீட்டை ஏற்படுத்த அதுதானாக வறுமையைத் தணித்துக்கொள்ளும் என்ற இயங்கியல் விளக்கமாகும். அந்த வகையில் கிராமிய அபிவிருத்தியில் அரசு விசேட கவனம் செலுத்தி சமுர்த்தித் திட்டத்தின் ஊடாக வறுமையை ஒழிக்கும் நடவடிக்கைகளை பின்வரும் முறைகளில் விளங்கிக் கொள்ளலாம்.

## 1. நலனுதவி

சமுர்த்தி ஊக்குவிப்பாளரினால் நலனுதவி பெறத்தக்க குடும்பம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 14,41,357 குடும்பங்கள் இன்றுவரை சமுர்த்தி நலனுதவி பெறுகின்ற மேற்படி குடும்பங்களுக்கு நலனுதவி வழங்கும் பொருட்டு மாதமொன்றிற்கு 650 MR அளவான தொகை அரசினால் செலவிடப்படுகின்றது. வறிய மக்களுக்கு நலனுதவி வழங்குவதற்காக இந்தளவு பெருந்தொகைப் பணம் செலவிடல், இதுவே முதல் தடவையாகக் காணப்படுகின்றது.

## 2. கட்டாய சேமிப்பு

குறைந்த வருமானம் பெறும் வறிய குடும்பங்களுக்கு புதிய ஆரம்பமொன்றை ஏற்படுத்துவதே இச் சமுர்த்தித் திட்டத்தின் முழுமையான இலக்காகும். அதன் ஒரு உபாயமார்க்கமாக சமுர்த்தி நலனுதவித் திட்டத்தின் கீழ் ரூபா 500/-, ரூபா 1000/- நலனுதவி பெறும் குடும்பங்களிலிருந்து முறையே ரூபா 100/-, ரூபா 200/- என்ற அடிப்படையில் கட்டாய சேமிப்பு வைப்பதற்கு வகைசெய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1996 ம் ஆண்டு ஆனி மாதம் வரை 18 மாவட்டங்களில் மட்டும் சேமிப்பில் விடப்பட்டுள்ள முழுத்தொகை 7,82,42,770/- ஆகும். இச் சேமிப்பு அதிகரிப்பானது முழு அபிவிருத்தி நடவடிக்கைக்கும் அசுர பலத்தைக் கொடுப்பதோடு வறிய குடும்பங்கள் தமது சேமிக்கும் மனநிலையை வளர்த்துக் கொள்ள ஆர்வம் காட்டுவதும் இங்கு மிக முக்கிய சாதனையே. கட்டாய சேமிப்பின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட இந்த நடைமுறையை சுய சேமிப்புப் பழக்கம் வரை உயர்த்தி அதனூடாக ஒவ்வொரு குடும்பத்திலும் சிறு சேமிப்பைக் கொண்டு வந்து கிராமிய அபிவிருத்தியைப் பேணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3. சமுர்த்தி காப்புறுதி

நகரங்களில் இருந்த காப்புறுதித் திட்டங்களை சமுர்த்தித் திட்டமானது கிராமங்களில் உள்ள குச்சுக் குடில்களுக்கும் இழுத்துச் சென்றுள்ளது. நலனுதவி பெறுவோர் 20/- போன்ற மிகச் சிறிய தொகையுடன் சமுர்த்தித் திட்டத்தில் இணைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சமுர்த்தி நலனுதவி பெறுவோர் மட்டுமன்றி நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் போன்றோரும் குறைந்த வருமானக் குடும்பங்களும் இதில் இணைவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

## 4. மக்கள் கருந்திட்டம்

சமுர்த்தி செயலணிக்குட்பட்ட பிரதேசங்களில் மக்கள் தாம் ஒன்றிணைந்து கருத்திட்டங்களைச் செயற்படுத்தத் தேவையான அனுபவத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கென ஏதாவது செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் ''மக்கள் கருத்திட்ட வேலைத் திட்டம்'' என்று பெயரிடப்பட்டது. இதன்படி ஒவ்வொரு சமுர்த்தி செயலணிக்கும் 10,000/- வழங்கப்பட்டு அனுபவத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொள்ளும் வகையில் வாழ்க்கைக்கு பயன்படுத்தத்தக்க சிறிய கருத்திட்டமொன்றைத் தேர்ந்தெடுத்து திட்டமிட்டு அதனைச் செயற்படுத்தும் பொருட்டு சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## 5. சமுர்த்தி உபகரணம்

சமுர்த்தி உதவி பெறும் குடும்பத்திற்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் இலகு முறை கடன் திட்டமொன்று அறிமுகப் படுத்தப்பட்டு அதன் கீழ் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. இதன்படி இயந்திர உபகரணங்களை இலகுவாக பணம் செலுத்தத்தக்க தவணை அடிப்படையில் வழங்கும் திட்டம் நாடு பூராகவும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது கிராமப் புறமக்களிடையே சுய தொழில் வாய்ப்பை உருவாக்குகிறது.

## 6. சமுர்த்தி அவசர கிராமிய கடன் திட்டம்

குறைந்த வருமானம் ஈட்டும் சமுர்த்தி உதவி பெறுவோரது அன்றாட நிதித் தேவையை ஓரளவாயினும் தீர்த்து வைக்கும் நோக்கில் ''விசேட ஊக்குவிப்பாளர் கடன்'' திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் நகரங்கள் பொருள், நுகர்வு, ஆபத்துக்கள் போன்ற நோக்கங்களுக்கான சிறிய கடன் திட்டமொன்றின் கீழ் விரைவாகப் பணம் பெற்றுக்கொள்வதைச் சேர்ந்தாற் போல் இத் திட்டம் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. 1996 மே 1ம் திகதியில் இருந்து மேற்படி கடன் வழங்கும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

## 7. மக்கள் மயப்படுத்தப்பட்ட நிதி அமைப்புக்கள்

வறுமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளே சமுர்த்தித் திட்டத்தின் இலட்சணமாகக் கொள்ளப்படுகின்றது. இதனை வெற்றி பெறச் செய்வதற்கான பிரதான காரணியான மூலதன அசைவின் மீதான பொறுப்பையும், உரிமையையும் மக்களிடம் ஒப்படைப்பதற்கான செயல் எதிர்காலத்தில் பெரும் சவாலாக அமையலாம். அத்தகைய செயல்களை வெற்றி கொள்வதற்கு மக்கள் சிறு சிறு குழுக்களாக அமைத்து அக் குழுக்களூடே அவர்கள் பெற்றுக்கொள்ளும் அறிவின் மூலம் அவர்களுக்கே சொந்தமான நிதி தொடர்பான அமைப்பினைக் குறிக்கோளாகக் கொண்ட பயிற்சித் திட்டங்கள் தெரிவு செய்து ஆரம்பிக்கப்படவுள்ளன.

## 8. ஏனைய மக்கள் கருத்திட்டங்கள்

விசேட உதவிகள் மூலம் ஏற்படுத்தக் கூடிய சிறிய குளங்களைப் புனரமைத்தல், காடுகளை மீள் பரிசோதனை செய்தல், காடுகளைப் பராமரித்தல், சிறிய கட்டடங்கள் கட்டுதல், குடிநீர் வழங்கல், வடிகாலமைத்தல் போன்றவற்றினை மேற்கொள்ளுதல்.

## 9. விசேட சமூக அபிவிருத்திச் செயற்றிட்டம்

வயோதிபர்கள், தந்தையை இழந்த பிள்ளைகள், அங்கவீனர்கள், போதைவஸ்து அருந்துபவர்கள் ஆகியோருக்கு உதவி செய்யுமுகமான ஒரு செயல் திட்டமாக இது காணப்படுகிறது. இதனடிப்படையில் வறுமை நிவாரண ஆணையாளர் திணைக் களத்தின் கீழ் பிரதேச செயலாளர்பிரிவுகளில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் கொடுத்து, அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சித் திட்டத்தின் மூலம் சமூகத்தில் எல்லாத் தரத்தில் உள்ளவர்களுக்கும், சமுர்த்தி செயல் திட்டத்தின் உதவியை பெற்றுக் கொடுக்க முடியும் எதிர்காலத்தில் இலங்கை முழுவதும் இவ் வேலைத் திட்டம் விரிவு படுத்தப்படவுள்ளது.

## 10. சந்தை வாய்ப்பு அபிவிருத்தி நடவடிக்கை

சந்தை வாய்ப்பை அபிவிருத்தி செய்வதற்கென ஒரு பிரிவு சமுர்த்தி அதிகார சபையின் கீழ் உருவாக்கப்படுகிறது. உற்பத்தியாளர்களுக்கான விசேடமான சந்தை விபரங்களை உடனுக்குடன் வழங்குவதே இதன் நோக்கமாகும். அதே போல சமுர்த்தி செயலணிகளுக்கிடையில் பண்டங்களைப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கான ஒரு பரிசீலனை முறையாகவும் இது காணப்படுகின்றது. பொதியிடல் சம்பந்தமான நன்மைகளைத் தெளிவு படுத்துவதற்கான ஒரு முறையாகவும் இது காணப்படுகின்றது.

## 11. கால்நடை வளர்ப்பும் மீன் வளர்ப்பும்

கால்நடை வளர்ப்புத் துறையை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது கால்நடைகளை வழங்குவதற்கு கடனுதவி வசதிகளைப் பரந்தளவில் பெற்றுக் கொள்ள மற்றும் அவற்றைக் கிராமியக் குடும்பங்களுக்கு அண்மையில் கொண்டு வருவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டங்களை கிராமிய மட்டத்தை நோக்கி விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 12. சத்துணவுத் திட்டம்

தெரிவு செய்யப்பட்டுள்ள 25 பிரதேச செயலகங்களில் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் நிதியுதவியுடன் இச் சத்துணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற் குறிப்பிட்ட திட்டம் 5 பிரதேச செயலகங்களில் பரீட்சாத்தமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதனை சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் மேற்கொள்வார்கள். இது பாரிய தேசிய ரீதியான மந்த நிலையை ஒழிப்பதற்கு கருவியாகுமெனலாம்.

## 13. குடும்ப அபிவிருத்திக்கான வருமானக் கருத்திட்டங்கள்

ஒரு சமுர்த்தி செயலணியில் 5 வருமான செயல் திட்டங்களை நாட்டினால் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. வர்த்தக வங்கிகளினூடாகப் பெறத்தக்க கடனுதவி வசதிகள் என்பவற்றினைக் கொண்டு சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் பொருத்தமான திட்டங்களை அடையாளம் காண முடியும். இதன் கீழ் 60 000 குடும்பங்கள் வருமானத் திட்டங்களின் கீழ் சேர்த்துக் கொள்ளப் படுவர்.

## 14. தேசிய நம்பிக்கை நிதியம் மக்கள் மயப்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு உதவுதல்

தேசிய நம்பிக்கை நிதியமானது பொது மக்களிற்கான தேவைகளை சமுர்த்தி செயலணியின் ஊடாக செயல்படுத்தும்.

## 15. கைத்தொழில் வியாபார அபிவிருத்திப் பிரிவுகள்

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சிறுகைத்தொழில், சுயதொழில் அபிவிருத்தி என்பவற்றிற்கு உதவும் பொருட்டு விசேட பிரிவு ஒன்றும் உருவாக்கப்படுகின்றது. சிறிய தொழில் நுட்ப உற்பத்திகள் என்பவற்றைச் செய்து கொண்டு போகும் போது ஏற்படும் தடைகளைக் குறைத்து தொழில் முயற்சியாளர்களுக்கும் கடன் வசதிகள், தொழில் நுட்ப வசதிகள், ஆலோசனைகள் என்பன வழங்குவதே இப்பிரிவின் சேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. விவசாய செயல் திட்டங்கள்

சிறு துண்டு நிலத்தைச் சொந்தமாகக் கொண்ட விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தத்தக்க புதிய பரிசோதனை முறைகள் திட்டமிடப்பட்டுள்ளன. உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கும் விரயங்களைத் தடுப்பதற்குமான துறைகளில் விசேட கவனம் செலுத்தப்படும். இயற்கை உரப் பாவனையை அதிகரிப்பதற்கும், கிராம மட்டத்தில் இப்பசளை உருவாக்கல் முறை என்பன விவசாயிகளின் கையில் ஒப்படைக்கப்படுவதற்கு அதிகாரமளித்துள்ளார்கள். வீட்டுத் தோட்டங்களை முறைப்படி அபிவிருத்தி செய்வதற்கு முன்னிற்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. அத்தகைய கருத்திட்டங்களும் இதுவரை தயார்படுத்தப் பட்டுள்ளன. சமுர்த்திப் பயணத்தில் இன்றுவரை செயற்பட்ட காலம் மிகக் குறுகியதேயாயினும் சென்றடைய வேண்டிய காலம் மிக அதிகமாகும்.

## முடிவுரை:

மேற்குறிப்பிட்ட இத்தகைய திட்டங்கள் அமைப்புக்களின் அடிப்படையில் திட சங்கற்பம் பூண்டு நேர்மையான வழியில் நீண்ட காலம் அமையுமாயின் அது வரவேற்கத் தக்கதாக அமையும். ஒட்டு மொத்தமான இந்த சமுர்த்தித் திட்டத்தின் சாத்தியத் தன்மையினை அவதானிக்கின்ற போது இது தேர்தல் பிரசார ஏமாற்று வித்தையேயன்றி வேறில்லை என்ற எண்ணம் தோன்றுகின்றது. எனினும் தமது கட்சியின் ஆதரவைத் தொடர்ந்து நிலை நிறுத்துவதற்காக ஒரு சிறு பகுதியையாவது நிறைவேற்றுவார் என்பதனை நாம் அனுமானத்தின் மூலம் சுட்டிக் காட்டலாம். இத்திட்டம் சில எதிர் விளைவுகளையும் தவிர்க்க முடியாத வகையில் ஏற்படுத்துகிறது. தமது சுயநலனைக் கருத்தில் கொண்ட சிலர் 'லஞ்சம்' 'ஊழல்' என்ற கொடிய செயலில் இறங்குவர். இதனால் சமூகக் குழப்பங்கள், கொந்தளிப்புக்கள் என்பனவும் தலைதூக்க இடமுண்டு. சாதி, இன, மத அடிப்படையில் துவேசங்களும் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களும் உருவாகின்றன. இத்திட்டச் செயற்பாட்டிற்கு நிதியினை வெளிநாடுகளிலிருந்தும் பயன்படுத்தும் நிலமை ஏற்படின் கடன் சுமை அதிகரிக்கக் கூடிய வாய்ப்பும் அரசிற்கு உருவாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் இத்திட்டம் நடைமுறைக்குப் புறம்பானதாக மாறிவிடுகின்றது. முடிவாகநோக்குகின்றபோது இத்திட்டம் பரந்த நோக்கிலான பார்வையைச் செலுத்தி இலட்சியத்தினை நிறைவேற்ற முயல்கின்றது. தனித்து பொருளாதாரத்தின் மேம்பாட்டினையடைந்து கொள்வது மட்டுமன்றி அரசியல், சமூக, பண்பாட்டு நடவடிக்கைகளிலும் இறங்கி சுபீட்சத்தில் சுழியோட முயற்சிக்கின்றது. எனினும் வறுமையை ஒழித்து அல்லது தணித்து அதன் வாயிலாக கிராமிய அபிவிருத்தியினையும் சீர் தூக்கிக் கொணர்ந்து நாட்டின் அபிவிருத்தியினை பேணமுயல்கிறது எனில் மிகையாகாது.

## உசாத்துணைகள்:

1) இருளுக்கு ஒளி — சமுர்த்தி வேலைத்திட்டம் (இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சின் வெளியீடு)
2) திசாநாயக்கா எஸ். பி சமுர்த்தித் திட்டம் பற்றிய உரை (இளைஞர் விவகார விளையாட்டுத்துறை கிராமிய அபிவிருத்தி அமைச்சு)
3) சமுர்த்தி இயக்கத்தின் தத்துவங்களும் குறிக்கோளும் அபிவிருத்தி அணுகுமுறையும் — திட்ட அறிக்கை
4) Central ank Report – 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானிய இந்தியாவின் 'கிராமிய கொடுகடன் பிரச்சனை'

## Rural Indebtedness Problem in British India

கே. நித்தியானந்தன்

இந்திய மக்களில் 70 சதவீதத்தினர் வேளாண்மையை மேற்கொண்டுள்ளனர். இந்தியாவின் இயற்கை வளங்களில் பெரும்பான்மையானது நிலவளமே. இந்திய நாட்டு வருமானத்தில் ஏறக்குறையப் பாதி, வேளான்மையிலும் அதனைச் சார்ந்த தொழில்களிலுமிருந்து பெறப்படுகின்றது. உணவுப் பொருள்களையும், பிற தொழில்களுக்கு வேண்டும் மூலப் பொருள்களையும் படைப்பது விவசாயத் தொழில், அதனால் தான் இந்தியாவின் முதுகெலும்பாக கிராமமும் அதனோடு இணைந்த வேளாண்மை நடவடிக்கையுமெனக் கருதப்படுகின்றது.

ஆயினும் வேளாண்மைத் தொழிலில் இருக்கின்ற விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை. அவர்களின் நிலை நலிவடைந்து கொண்டு செல்வதாகவே உள்ளது. இதற்கு காரணம் பல கூறப்படுகின்றது. இவற்றில் வரலாற்றுக் காரணங்களும் விவசாயியின் தன்மைகளும் சேர்ந்து இருக்கின்றன. நிலத்தினை உழுவதற்குரிய கலப்பையினை பயன்படுத்த முடியாத நிலம், நிலத்தின் மீது விவசாயிக்கு உரிமையின்மை கிழட்டு எருதுகளின் பயன்பாடு, பழங்கால கலப்பைகள், பயிரிடுவதற்கு வேண்டிய உள்ளீட்டுப் பொருட்கள் கிடைக்காமை, தேவையான உரவகையின்மை, நீர்பாசன வசதியின்மை, வீரியம் மிக்க விதையின்மை, போதிய விளைச்சல் இன்மை, விளைந்த பொருளை விற்கும் முறை அறியாமை, துணைத் தொழில்கள் பற்றி அறியாமை, அடிக்கடி நிகழும் வறட்சி இவை இந்திய விவசாயத்தின் நீங்கா இயல்புகளாக இருந்தன. இதனால் தனது நுகர்வுத் தேவைக்காகவும் விவசாயத்தை தொடர்ந்து மேற்கொள்ளவும் கடன்பெற வேண்டிய நிலைக்கு விவசாயி தள்ளப்பட்டான்.

ஆங்கிலேயர் காலத்திற்கு முன்பு இந்திய விவசாயி கடனை உறவினர், நண்பர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டான். அக்கால கிராமிய சட்ட ஒழுங்குகள் கடன்பட்ட விவசாயிக்கே சாதகமாகக் காணப்பட்டன. பின்னர் ஆங்கிலேய சட்ட திட்டங்களுக்கு அமைவாக கடன் பெறும் போது அது விவசாயிக்கு எதிரானதாகவும் கடன் கொடுப்போனுக்கு சாதகமானதாகவும் இருந்தது. இதனால் விவசாயி கடன் பெற்றதனால் பல பிரச்சனைகளுக்கு உள்ளானான். அதாவது கடனை திரும்பச் செலுத்த முடியாத போது விவசாய நிலம் பறிக்கப்பட்டது. இதனால் விவசாயி முன்னேற்ற மடைய முடியாதவாறு இக்கடன் பிரச்சனை தொடங்கியது.

### கிராமிய விவசாயி கடன்படுநிலைக்கான காரணங்கள்:

இந்திய விவசாயி கடன் படுவதற்கும், கடனாளியாகவே வாழ்வதற்கும் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. கிராமியச் சமுதாயத்தில் காணப்படும் சமுதாய, பொருளாதார அமைப்புக்களே கடன்படு நிலைக்குக் காரணங்கள் என்று பொதுவாகக் கூறப்படுகின்றன. உலகெங்கும் விவசாயிகள் கடன் வாங்கினாலும், இந்திய விவசாயியின் நிலை முற்றிலும் வேறுபட்டதாகும். இந்திய விவசாயி கடன்பெற்று, தன்

க. நித்தியானந்தன்
பொருளியல் சிறப்புக்கலை
இறுதி வருடம்
யாழ். பல்கலைக் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த வருவாயில் கடனைத் திரும்பக் கொடுக்க முடியாமல், கடன் தொல்லையை அதிகரித்துக் கொண்டே இருப்பதற்கும் பல்வேறு காரணங்கள் உள்ளன. அவையாவன.

(1) விவசாயிகளின் தொடர்ச்சியான ஏழ்மை நிலை:

விவசாயிகள் பெருமளவில் ஏழைகளாக இருப்பதால் உற்பத்திச் செலவிற்காகவோ, நுகர்வுச் செலவிற்காகவோ கடன் வாங்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகின்றனர். கடன் வாங்கிக் கொண்டே இருப்பதால் தான் ஏழைகளாவே இருக்கின்றனர் என்றும் கூறலாம். கிராமப் புறங்களில் மேலோங்கி இருந்த சில பரம்பரைக் குடிசைத் தொழில்கள் காலப் போக்கில் நசிந்து போய்விட்டன, எனவே கிராமப்புற மக்களின் வருவாய்ப் பெருக்கத்திற்கும் வழியில்லை. பெருகி வரும் செலவைச் சரிக்கட்ட வருவாயைப் பெருக்க இயலாமையால் கடன் படுகின்றனர். எனவே சேமிப்பு என்ற சொல்லுக்கே இடமில்லை. வருவாய்ப் பற்றாக் குறையைச்சரி செய்ய கடன் ஒரு கருவியாகப் பயன் படுகிறது.

(2) முன்னோர்கள் கடன்:

1875 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட தக்காண உழவர் குழு (Deccan Ryot Commission) தந்தையிடமிருந்து மகனுக்கும். எவ்வித மாறுதலும் இல்லாமல் ஒரு தலை முறையில் இருந்து வேறொரு தலைமுறையினருக்கும் வழிவழியாகக் கடன் மாற்றப் படுவதுதான் இன்றைய கடன் சுமைக்கான காரணங்களில் ஒன்று என்று விளக்கியுள்ளது. இந்நிலையே வேளாண்மை அரசுக்குழு (Royal Commission on Agriculture) "இந்திய விவசாயி கடனோடு பிறக்கிறான், கடனோடு வாழ்கிறான். கடனோடு இறக்கும் போது தன் வழி முறையினருக்குக் கடனையே மரபுரிமையாக விட்டுச் செல்கின்றான்." என்று கூறுவதற்குக் காரணமாக அமைந்தது. முன்னோர்களின் கடன் சுமையை விவசாயி ஏற்றுக் கொள்கிறான். ஆனால் அவனுடைய ஏழ்மை நிலை அக்கடனைத் திருப்பிக் கொடுக்க இயலாதவனாக ஆக்கி மேலும் கடன் கொடுப்போரை நாடிச் செல்ல செய்கிறது. இவற்றோடு தன்னுடைய பிற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் எழுப்பப்படுகின்ற கடன் அதிகரித்த வண்ணம் உள்ளது. சிலவேளைகளில் பழைய கடனைத் திருப்பிச் செலுத்தவும் புதிய கடன்களை பெறுகின்றனர். ஆண்டுக்கு ஆண்டு வட்டி விகிதம் அதிகரித்து வருவதால் பழைய கடன்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தையும், புதிய கடன்களுக்கு அதிக வட்டி விகிதத்தையும் கொடுக்கின்றனர். இவ்வாறு கொடுக்கப்படும் உயர்ந்த வட்டி விகிதமும் மேலும் மேலும் கடன் சுமை அதிகரித்துக் கொண்டு செல்வதற்கு ஒரு காரணமாக அமைகிறது.

(3) மக்கள் தொகைப் பெருக்கம்:

நகரங்களைவிட கிராமப் பகுதியில் மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தால் நபர் வீத வருவாய் குறைகின்றது. குறைந்த வருவாய், வளர்ந்துவரும் குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்யப் போதுமானதாக இல்லாமையால், விவசாயிகள் கடன் பெற வேண்டிய கட்டாய நிலைக் குள்ளாகின்றனர்.

(4) நிலப் பகுப்பும் நிலச் சிதறலும்:
(Sub — division and Fragmentation of holding)

இந்திய விவசாயிகளின் சராசரி நில அளவு மிகக் குறைவு. மக்கட் தொகை பெருகுவதால், வாரிசுகள் அதிகரிக்க, இருக்கின்ற சிறு நிலப்பகுதி மேலும் மேலும் சிறு சிறு துண்டுகளாக்கப்படுகின்றது. அவ்வாறு நிலம் பிரிக்கப்படுகின்ற போது, இருக்கின்ற நிலம் பல்வேறு இடங்களிலும் சிதறி விடுகின்றது. நிலப் பகுப்பும், நிலச் சிதறலும் வேளாண்மையின் உற்பத்தியைப் பெரிதும் பாதிக்கிறது. இந்நிலை முன்பே கடனாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக உள்ள விவசாயியை மேலும் கடன் வாங்கத் தூண்டுகிறது. சேர். எம். எல். டார்லிங் (Sir. M. L Darling) என்பவர் தம்முடைய "பஞ்சாப் விவசாயி செழுமை நிலையிலும், கடனிலும்" (The Punjab Persant in Prosperity and Debt) என்ற நூலில் "சராசரி நிலவுடமை மிகச் சிறிய தாக இருப்பதும், அது நம்ப முடியாத அளவுக்குச் சிதறுண்டு கிடப்பதுவுமே விவசாயியின் கடன் படு நிலைக்கு அடிப்படைக் காரணங்களாகும்." என்றார்.

(5) சாதகமில்லாப் பருவநிலை:

இந்திய நாட்டில் உழவுத் தொழில் பருவ மழையையே நம்பியுள்ளது. அடிக்கடி பருவமழை தவறுவதால் மழையை எதிர் பார்க்கும் அவல நிலை ஏற்படுகிறது. மழை தவறுவதால் பயிர்கள் விளையாது பஞ்ச மேற்படுகின்றது. அவ்வாறு பஞ்சம் ஏற்படு கின்றபோது விவசாயிகள் கடன் வாங்க வேண்டியேற்படுகிறது. மாறாக சிலவேளை களில் பருவம் தவறி, அளவுக்கு அதிகமாக மழை பெய்து பயிர்களை நாச மாக்குகி றது. அதனாலும் விளைச்சல் பாதிக் கப்பட்டு வருவாய் குறைந்து கடன்சுமை யை மேலும் கூட்டுகிறது. குறைவான விளைச்சலுக்கு மிதமான மழை அல்லது மழை இல்லாமை மட்டும் காரணங்கள் அல்ல, வெட்டுக்கிளி, புகையான் போன்ற பூச்சிகளும் பயிர்களை அழித்து நாசமாக்கு கின்றன. இவ்வாறு பல்வேறு காரணங்க ளால் விளைச்சல் குறைகின்ற போது விவசா யிகள் கடன் வாங்க வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர்.

(6) கால்நடைகள்:

இந்திய நாட்டில் வேளாண்மைத் தொழில் மேல் நாடுகளைப் போன்று இயந்திரமயமாக வில்லை. விவசாயிகளின் உற்ற நண்பர்களாகக் கால் நடைகள் உப யோகிக்கப்படுகின்றன. 'கோமாரி' போன்ற வியாதிகளாலும், வெள்ளப் பெருக்கினாலும் கால் நடைகள் அதிக அளவில் பாதிக்கப் படுவதால், விவசாயிகள் பெரும் இழப்புக் குள்ளாகிறார்கள். இவ் இழப்புக்களை ஈடு செய்ய கடன் வாங்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அத்தோடு விவசாய வேலை களுக்கு இளம் கால்நடைகள் அவ்வப் போது வாங்கவேண்டி இருப்பதாலும் கடன் பெற வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

(7) கல்வியறிவின்மையும், உடல் நலிவும்:

அறியாமையும் விவசாயிகளின் கடன் படு நிலைக்கான காரணங்களில் ஒன்றாகும். வளர்ந்து வருகின்ற அறிவியலில் புதிய புதிய கண்டு பிடிப்புக்களைப் பற்றிக் கல்வி யறிவற்ற விவசாயிகள் அறிவதில்லை. புதிய கண்டு பிடிப்புக்களைப் பின்பற்றி உற்பத்தியைப் பெருக்கினால் வருவாய் உயரும். ஆனால் இவைகளைப் பற்றி அறி யாத நிலையிலேயே இன்னும் பலர் உள்ள னர். தெரிந்தாலும் அம்முறைகளை முறை யாகப் பின்பற்றும் அளவிற்கு அவர்களுக்குக் கல்வியறிவு இல்லை. அறியாமை காரண மாகக் கடனின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் மேலும் மேலும் கடன் வாங்கிக் கொண்டுள்ளனர். சில வேளைகளில் இவர் களின் அறியாமையைப் பயன் படுத்திக் கடன் கொடுப்போர் கடன் கொடுத்ததை விட அதிகத் தொகைக்குக் கடன் பத்திரம் எழுதி கையொப்பம் வாங்குகின்றனர். கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கடன் வாங் காமல், வட்டிக்கு வட்டி வாங்குபவர்களின் கவர்ச்சியான பேச்சுக்களில் மயங்கி, கடன் வாங்கி, பிறகு அதனைத் திருப்பிக் கொடுக்கும் போது முதலைவிட அதிக வட்டி கொடுக்கின்றனர்.

விவசாயிகளின் நலிவுற்ற உடல் நிலை அவர்களை பரிதாபத்திற் குரியவர்களாக்கி விடுகிறது. கிராமப் புறங்களில் போதுமான அளவிற்கு மருத்துவ வசதிகள் இல்லை. நிலத்தில் பாடுபடும் விவசாயிகள் தங்கள் உடலைப் பற்றியும், சத்தான உணவு பற்றி யும் அக்கறை எடுத்துக் கொள்வது இல்லை. சத்துணவு இல்லாமையினால் அம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலரா போன்ற கொள்ளை நோய்களால் அவதியுறும் நேரத்தில், அவர்களிடத்தில் போதுமான அளவு சேமிப்பு இருப்பதில்லை. ஆகவே அவர்கள் கடன் பெறவேண்டிய மிகத் தேவையான அவசர நிலைகளுக்கு உள்ளாகின்றனர். உடல் நலமின்மை உற்பத்தித் திறனைப் பாதிப்பதுடன் வருவாயையும் பாதிக்கிறது.

(8) ஊதாரித்தனமான செலவினங்கள்:

பொதுவாக விவசாயிகள் கடினமான வாழ்க்கையை மேற்கொண்டிருந்தாலும் சில நேரங்களில் கடன் சுமையை அதிகரிக்கும் வகையில் ஊதாரித்தனமான செலவினங்களையும் மேற்கொள்கின்றனர். கிராமிய சமுதாயப் பழக்க வழக்கங்களின் காரணமாக, விவசாயிகள் தங்கள் சக்திக்கு மேல் திருமணம், திருவிழா போன்ற விழாக்களுக்காக அதிக செலவில் செலவிடுகின்றனர். எதிர்காலத்தைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் வீண் கௌரவத்திற்காக ஊதாரித்தனமாகச் செலவிடுகின்றனர். ஆகவே இப்படிப்பட்ட பலனற்ற செலவினங்களால் கிராம வாழ் மக்களின் வாழ்க்கைத்தரம் குறைவதுடன் கடன் சுமையும் அதிகரிக்கின்றது.

கிராம மக்களிடையே ஏற்படுகின்ற சண்டை சச்சரவுகளினால் நீதிமன்றம் செல்ல வேண்டிய தேவை ஏற்படுகின்றது. நீதிமன்றம் தொடர்பான அலுவலர்கள் விவசாயிகளை ஏமாற்றி பெரும் தொகை பணத்தை அறவிடுகின்றனர். இதனால் பெருமளவு பணம் வீண் விரயம் ஆக்கப்படுவதுடன் கடன்படவும் தூண்டப்படுகிறது.

(9) வட்டிக்கு கடன் கொடுப்போரும், அதிக வட்டி வீதமும்:

விவசாயிகளுக்குக் கடன் வசதி அளிப்பதில் வட்டிக்கு கடன் கொடுப்போர் பெரும் பங்கேற்கின்றனர். தேவைப்படும் போது விவசாயிகளுக்கு கடனளித்து அவர்களைத் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்கின்றனர். கல்வியறிவற்ற விவசாயிகளை பெருமளவில் ஏமாற்ற முனைகின்றனர். கடன் வளங்க முன்னர் கவர்ச்சிகரமாகப் பேசி கடன்வழங்கிய பின்னர் பல்வேறு தொல்லைகளுக்கும் ஆளாக்குகின்றனர். இவர்கள் அதிக வட்டித் தொகையை விதிப்பவராகக் காணப்படுகின்றனர். வட்டி வீதத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் அவசரத்திற்குப் பணம் கிடைத்தால் போதும் என்ற எண்ணத்தில் விவசாயிகள் அதிக வட்டி கொடுக்கத் தயாராக உள்ளனர். வட்டிக்கு வட்டி கொடுப்பதால் விவசாயிகளின் கடன் பளு அதிகரிக்கின்றது. கடன் கொடுப்போர் பெறும் வட்டி வீதம் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டுள்ளது. பீகார் உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 30% உம் மேற்கு வங்கம், இமாசலப் பிரதேசம் ஆகிய வற்றில் 40% உம் திரிபுரா மாநிலத்தில் 49% உம் ஒரிஸ்ஸா மாநிலத்தில் 25% முதல் 70% உம் வட்டி வசூலிக்கப்படுவதாக அகில இந்திய கிராமக் கடன் மதிப்பீட்டுக் குழு தன் அறிக்கையில் குறிப்பிட்டதிலிருந்து வட்டியின் தீவிரத்தை உணர முடிகிறது.

(10) வரிச்சுமை:

நிலத் தீர்வை, நீர்வரி போன்ற வரிகளின் மூலமாகவும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். நாளுக்கு நாள் வளர்ந்து வரும் பொருள்களின் மீது விதிக்கப்படும் மறைமுக வரியும் விவசாயிகளின் வரிச்சுமையை அதிகரிக்கிறது. மொத்த உற்பத்தி மதிப்பில் சுமார் 20% முதல் 50% வரை வரியாக வசூலிக்கப்படுகிறது. வரியை பணமாகச் செலுத்த வேண்டி இருப்பதால், தங்களின் விளைபொருள்களை உடனடியாக, குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

(11) விளை பொருள்களைச் சேமிக்க இயலாமை:

விளை பொருள்களை நீண்ட நாட்களுக்குச் சேமித்து வைக்கக் கூடிய வசதிகள் விவசாயிகட்கு இல்லாமையால், அறுவடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்த உடனேயே குறைந்த விலைக்கு வியாபாரிகளிடம் விற்பனை செய்கின்றார்கள். அறுவடைக்காலத்தில் நிரம்பல் அதிகரிப்பதால் விலை குறைகின்றது. நிலத் தீர்வை செலுத்துதல், சந்தை வசதியில்லாமை, கடனைத் திரும்ப செலுத்துதல், கடனுக்கு வட்டி செலுத்துதல், பிற தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவற்றால் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதால் வருமானம் குறைந்து, பிறகு பணத்தேவை ஏற்படும் நேரத்தில் மறுபடியும் கடன் எடுக்க வேண்டிய நிலைக்குள்ளாகின்றனர்.

### கடனின் விளைவுகள்

வாங்கப்படுகின்ற கடன்கள் விவசாயிகளால் சிறந்த முறையில் பயன்படுத்தப் படாமல் வீணே சிக்கனமற்ற முறையில் செலவழிக்கப் படுகின்றன, இதனால் உற்பத்தி குறைந்து வருமானம் குறைகின்றது. மாறாக நல்லமுறையில் சிக்கனமாக உற்பத்தி நடவடிக்கையில் கடன் செலவழிக்கப் படுமானால் உற்பத்தி உயர்வடையும். இதனால் வருமானம் பெருக வாய்ப்பு உருவாகும். அவ்வாறின்றி பணத்தை விரயமாக்கப் படும் போது பல்வேறு சமூக, பொருளாதார விளைவுகள் ஏற்படுகின்றன.

கடன் பெறுபவர் உரிய நேரத்தில் திருப்பித் தரத் தவறும் நேரத்தில் கடன் கொடுத்தவருக்கும் கடன் பெற்றவருக்கும் இடையே மனத்தாங்கல் ஏற்பட்டு சிலவேளைகளில் நிலத்தினையும் இழக்க வேண்டி வரும். இவ்வாறு இழக்க நேரிடும் போது விரக்தி நிலைக்கு விவசாயி உள்ளாகின்றான். வேலையற்றவர்கள் தேவை அற்ற சச்சரவுகளில் ஈடுபடுவார்கள். இதனால் சமூகத்தில் பல மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும்.

கடன் சுமை அதிகரித்துக் கொண்டு செல்லுமேயானால் விவசாயியிடம் சோர்வு ஏற்பட்டு உற்பத்தி குறைவடையும், இது பல்வேறு பொருளாதாரம் சார்ந்த மோசமான விளைவுகளை ஏற்படுத்தும், கடன் சுமை அதிகரிக்க, இருக்கும் நிலப் பகுதியையும் விற்று மேலும் ஏழ்மை நிலைக்குள்ளாவார்கள். கடனைக் கொடுத்தவர் அதனை வசூலிக்க விளை நிலத்திற்கு வந்து குறைந்த விலையில் உற்பத்தியைப் பெறும் நிலை ஏற்படுகின்றது. இவ்வாறு கிராமியக் கடன் பல்வேறு விளைவுகளையும் சிக்கல்களையும் தோற்றுவிக்கின்றது.

### கடன் நிவாரணத்திற்கான நிறுவன ரீதியான செயற்பாடுகள் :-

வளர்ந்து வரும் கிராமியக் கடன் சுமை 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசின் கவனத்தை ஈர்த்தது. அதன் பயனாக பல்வேறு இயல்பு, தவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. உழவர்களுக்குக் குறைவான வட்டி வீதத்தில் கடன் அளிப்பது மூலம் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இக்காரணத்தைக் கொண்டு நில மேம்பாட்டுக் கடன் சட்டம் (Land improvement Loans Act) 1883 உம் உழவர்கள் கடன்கள் சட்டம் (Agriculturists' Loans Act) 1884 உம் நிறைவேற்றப்பட்டது. முன்னது நிலத்தை அபிவிருத்தி அடையச் செய்ய நீண்ட காலக் கடனளிக்க வகை செய்தது. பின்னது உழவர்களின் நடைமுறைத் தேவையை நிறைவு படுத்தும் வகையில் குறுங்காலக் கடன்கள் வழங்கப் பட்டன. 1904, 1912 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் கீழ் உழவர்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் குறைந்த வட்டிக்கு கடன் வழங்க அரசு திட்டமிட்டது.

1879 ஆம் ஆண்டு தக்காண உழவுத் தொழில் துயருதவிச் சட்டம் (Deccan Agricultural Relief Act - 1879) நிறைவேற்றப்பட்டதன் பயனாக சிவில் வழக்கு மன்றங்கள் ஒப்பந்த வட்டி வீதத்தைக் குறைப்பதற்கும் அதிகாரம் வழங்கப் பட்டது. கடன் வழங்கியவர்களை, வாங்கியவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையான பற்றுச்சீட்டு (Receipts) அவ்வப்போது அளித்தல் வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

வட்டிக்கு கடன் வழங்குவோரிடம் கடன் பெற்ற உழவர்களின் சொத்துக்கள் கடனுக்காக மாற்றப் படுவதைத் தவிர்க்க, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன: நிலவுரிமை மாற்றத்தை அது கட்டுப்படுத்தியது. உழவர்கள் அல்லாதாருக்கு உழவர்கள் தங்கள் நிலங்களை விற்பனை செய்வதை 1901 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பஞ்சாப் நில உடைமை நீக்குதல் சட்டம் (Punjab Land Alienation Act) கட்டுப் படுத்தியது. இருபது ஆண்டுகளுக்கு மேல் நிலத்தை அடமானமாக வைப்பதையும் தடை செய்தது. இது போன்ற சட்டங்கள் பல்வேறு மாநிலங்களிலும் இயற்றப்பட்டாலும், அவை உழவர்களுக்குத் துயருதவி அளிக்கும் வகையில் அமையவில்லை. பாறாக அவர்கள் பெறும் கடன் அளவினை வரையறை செய்தது.

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் கடன் சுமை குறைக்கப்பட வேண்டும் என்பதிலும், அதிலிருந்து விவசாயிகள் விடுபட வேண்டும் என்பதிலும் இருவேறு கருத்திற்கு இடமில்லை. இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இரு வழிகள் உண்டு.

(1) பழைய கடன்களைத் தீர்த்தல்.

(2) புதிய கடனுக்குக் கட்டுப்பாடு விதித்தல்.

பழைய கடன்களைத் தீர்த்தல் எனும்போது கடன் வாங்கிய நபர் கடனைத் திரும்பக் கொடுக்க இயலாத நிலையில்தான் கடனைத் திரும்பக் கொடுக்க வழியற்றவர் என்று அறிவித்துக் கொள்ள சில மாநிலங்களில் சட்டம் இடம் கொடுத்தது. பல மாநிலங்களில் கடன் வழங்குவோரும் கடன் கொடுப்போரும் அங்கம் வகிக்கும் கடன் இணக்கப்படுத்தும் வாரியங்களை (Debt Conciliation Boards) நிறுவுவதற்கு, கொள்கையளவில் ஏற்றுக் கொண்டன. இது கடன் அளவு, வட்டி விகிதம், கடன் திரும்பச் செலுத்தும் காலம் என்பவற்றை நிர்ணயிக்க துணை செய்தன.

புதிய கடனுக்குக் கட்டுப்பாடு விதித்தல் எனும்போது கடன் வாங்குவதால் ஏற்படும் விளைவினை மக்களிடையே விளக்குதல், உற்பத்தியற்ற செலவுகளுக்கு கடன் வாங்குவதை நிறுத்துதல் போன்ற கட்டுப்பாடுகளை விதிக்கலாம். கடனின் அளவை நிர்ணயித்தல், நிலத்தை அடமானம் வைப்பதையும், நிலவுரிமை மாற்றுவதையும் கட்டுப்படுத்தல், அதிக வட்டி வாங்குவதை நிறுத்துதல் போன்றவற்றை நடைமுறைப் படுத்தலாம். இந்திய மத்திய அரசு 1918 ஆம் ஆண்டிலே கடுமையான வட்டிக்குக் கடன் கொடுப்பதைத் தவிர்க்க சட்டம் (Usurious Loans Act - 1918) இயற்றியது. இச்சட்டத்தால் கடன் கொடுக்கும் தொழில் நடத்த அரசின் அனுமதி பெறவேண்டும். கணக்குகள் ஒழுங்காக பேணுதல் வேண்டும். வட்டி விகிதம் குறைவாக இருத்தல் வேண்டும் எனும் கட்டுப்பாடுகளை அரசு விதித்தது. இக்கட்டுப்பாடுகளுக்கு எதிராகச் செயற்படுபவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருந்தும் நடைமுறையில் மேற்கொள்ள முடியவில்லை.

இவ்வாறான நிலையில் விவசாயச் செயற்பாட்டிற்கு கடன் தேவை மிக அதிகமாக இருந்தது. இதனால் அரசு, நிறுவன ரீதியான, கூட்டுறவு அமைப்புக்கள் மூலம் கடன் வழங்க நடவடிக்கை எடுத்தது. வர்த்தக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டு வேளாண்மைத்துறை மீது கவனம் செலுத்தப்பட்டது. ஆயினும் விவசாயிகள் கூட்டுறவுத் துறைமீது தமது நாட்டத்தை செலுத்தவில்லை என்பதை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கடன் கொடுப்போர் | மொத்த கடனில் கடன் பெற்ற விகிதம் |
| --- | --- |
| தொழில் முறைக் கடன் ஈவோர் | 44. 8 |
| கடனளிக்கும் விவசாயிகள் | 24. 9 |
| உறவினர்கள் | 14. 2 |
| வியாபாரிகள் | 5. 5 |
| அரசாங்கம் | 3. 1 |
| கூட்டுறவு அமைப்புக்கள் | 1. 5 |
| நிலச் சுவான்தார்கள் | 0. 9 |
| வர்த்தக வங்கிகள், பிற இனங்கள் | 1. 8 |
| மொத்தம் | 100. 0 |

Source:- Report of the All India Rural Credit Surrrery: Page – 63

மேற்குறிப்பிட்ட பட்டியலில் அரசும் கூட்டுறவு அமைப்புக்களும், வர்த்தக வங்கிகளும் கிராமிய மக்களுக்கு போதுமான அளவு நிதிவசதி அளிக்கத் தவறிவிட்டன. அல்லது கிராமிய மக்கள் இந்நிறுவன அமைப்புக்களை நாடிச் செல்லவில்லை. தொழில் முறைக் கடன் கொடுப்போரும் பிறரும் பெருமளவு நிதி வசதி அளித்து வந்ததைக் காணலாம்.

இவ்வாறு கிராமிய விவசாயிகள் தொழில் முறைக் கடன் கொடுப்போரிடம் கடன் பெறுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

(1) கிராமத்தைப் பொறுத்தவரை விவசாயிகளுக்கு நிதி உதவி அளிப்பதில் நிதி நிறுவனங்களின் போட்டி இல்லை.

(2) கிராமிய விவசாயிகளையும் சொத்துக்களையும் பற்றிய முழு விபரங்களையும் தொழில் முறைக்கடன் கொடுப்போர் நன்கு அறிவர் இதனால் இடமறிந்து எளிதில் கடன் கொடுக்க முன்வருகின்றனர்.

(3) கால நேரமின்றி விவசாயியின் நிதித் தேவையை உடனடியாகத் தீர்த்து வைக்கின்றனர். சட்ட நடை முறைகள் பின்பற்றப்படுவதில்லை. தாராளமாசக் கடன் வழங்குகின்றனர்.

(4) கொடுத்த கடனை கட்டாயப்படுத்தி செலுத்துமாறு வற்புறுத்துவதில்லை. சூழ்நிலைக்கேற்றவாறு இருவரும் விட்டுக் கொடுத்து நடப்பார்கள்.

(5) கடனைப் பெறும் விவசாயி எதற்காக கடன் பெறுகின்றான், சரியாக நல்ல வழியில் செலவளிக்கின்றானா? எனப் பார்ப்பதில்லை.

இத்தகைய காரணங்களினால் தொழில் முறைக் கடன் கொடுப்போரிடம் விவசாயி நாடிச் செல்கின்றான். இவ்வாறான நிலையில் இருந்தாலும் அவர்கள் கடைப்பிடிக்கும் முறைகளில் பல குறைகள் உள்ளன.

கிராமிய கடன் கொடுப்போர் சூழ்ச்சித் திறமையுடன் செயலாற்றுகின்றனர். விவசாயிகளின் அறியாமையைச் சாதகமாக பயன்படுத்தி வட்டிக்குவட்டி கூட்டுவட்டி (Compound Interest) முறையைப் பயன்படுத்தி அபரிமிதமான (Exorbitant) வட்டி வசூலிக்கின்றனர். கடன் கொடுக்கும்போது வெற்றுக் காகிதத்தில் கைரேகையைப் பெற்றுக் கொண்டு பின்னர் அதிக தொகையை பூர்த்தி செய்து கொள்வர். ஆண்டின் இடையில் கடன் கொடுத்தாலும் முழு ஆண்டு வட்டி வசூலிக்கின்றனர். வாங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் கடனை திருப்பக் கொடுக்க முடியாத அளவு கடனை நிலத்தின் மீது குறிவைத்துக் கொடுப்பர். பின்னர் கடன் கொடுக்காத போது நிலத்தினை அபகரித்துக் கொள்வர். கடனைப் பெறுவதற்கு அறுவடையின் போது சென்று கடனை தானியமாகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வர். இவ்வாறு முறைகேடான பல வழிகளையும் பின்பற்றி விவசாயிகளைத் தம் பிடியில் வைத்திருக்கும் நிலையைக் காணலாம்.

## முடிவுரை

இந்தியாவில் கிராமிய கொடுகடன் பிரச்சனையானது பிரித்தானியர் வருகைக்கு முன்பாகவே இருந்து வந்த ஒன்றாக காணப்படுகிறது. பிரித்தானியர் வருகையோடு இக்கடன் பிரச்சனையானது மேலும் சிக்கலானதாக காணப்பட்டது. முதல் தட்டுப்பாடான நேரத்தில் கடன் மிக முக்கியமான ஒரு காரணியாகக் காணப்படுகிறது. இந்தியாவில் கடன் வழங்குகின்றவர்கள் பெரும்பாலும் நிறுவன ரீதியற்ற மூலங்களையே சார்ந்து காணப்பட்டனர். இந்திய விவசாயிக்கு கடனானது அறுவடை முடிவுக்காலங்களிலும் பஞ்ச காலங்களிலும் பெருமளவு உதவியது. எனினும் பிரித்தானியர் வருகைக்கு முன்பு கடன் கொடுப்போர் கிராமிய மக்களைத் துன்புறுத்தா வண்ணம் கிராமிய சட்டங்கள் துணை புரிந்தன. விவசாயி கடன் திரும்பச் செலுத்தாத போது அவனிடமிருந்து நிலத்தை பாறிக்க முடியாதாக இருந்தது. கிராமிய சட்ட ஒழுங்குகள் கடன்பட்டவனுக்கே சாதகமாகக் காணப்பட்டன. ஆனால் 19 ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பிரித்தானியர் வருகைக்குப் பின் இந்தியாவின் கிராமிய கடன் பிரச்சனை தீராத பிரச்சனையாக மாறியது. அது இந்திய விவசாயிகளை நசுக்கும் அளவுக்கு வளர்ந்தது. இந்திய விவசாயத்துறையில் இக்கடன் பிரச்சனை ஒரு வறுமை நச்சு வட்டமாக மாறத் தொடங்கியது.

## உசாத்துணைகள்:


★ மும்தாஜ் பாலகிருட்டிணன், வேளாண்மைப் பொருளியல் (தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், டிசெம்பர் - 1972)

★ பா. நடராஜன், இந்தியப் பொருளியல் (திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நாற்பதிப்புக் கழகம், லிமிட்டெட், 1962)

★ ம திருநாவுக்கரசு, பாரதத்தின் பொருளாதார வரலாறு (கி. பி. 1857 - 1970) (தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், நவம்பர் - 1972)

★ சி. டி. இராஜேஸ்வரன், இந்தியப் பொருளியல் சிந்தனை (தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், டிசெம்பர் - 1973)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பியரின் வருகையினால் இலங்கையில் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள்

# European Arrival and the Socio Economic Changes in Sri Lanka

ஆர். விஜிதா

## அறிமுகம்

இலங்கைப் பொருளாதார வரலாற்றில் ஐரோப்பியரின் ஆட்சிக்காலம் மிக முக்கியமானதாகும். இங்கு போத்துக்கேயர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய மூன்று ஐரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்கம் கி. பி. 1505 — கி.பி. 1948 வரை ஏறக்குறைய 4½ நூற்றாண்டுகள் நிலவியது. இங்கு போத்துக்கேயரது ஆட்சி 1505 – 1658 வரை ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகளும், ஒல்லாந்தர் 1658—1796 வரை 150 வருடங்களும், இறுதியாக வந்த ஆங்கிலேயரது ஆதிக்கம் 1796—1948 வரை சுமார் 1½ நூற்றாண்டுகள் வரை நிலவியது. இங்கு போத்துக்கேயர், ஒல்லாந்தரது ஆதிக்கம் இலங்கையின் கரையோர மாகாணங்களிலேயே நிலவியது ஆனால் பின்வந்த ஆங்கிலேயர் இலங்கையின் முழுப்பகுதியையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து தமது ஆதிக்கத்தை இப்பிரதேசங்களில் செலுத்தி வந்தனர். இவ்வாறு இம் மூன்று ஐரோப்பியரின் ஆதிக்கம் இலங்கையில் நிலைநாட்டப்பட்டமையால் இங்கு பல்வேறு சமூக பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டன,

செல்வி விஜிதா இராசையா B.A.(Hons) Jaffna
விரிவுரையாளர்
பொருளியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்.

போத்துக்கேயரைப் பொறுத்தவரை 15-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மத மறுமலர்ச்சியின் காரணமாக நாடுகளைக் கண்டுபிடித்து, கண்டுபிடித்த நாடுகளில் தமது மதத்தைப் பரப்புதல், வர்த்தகத்தில் ஈடுபடல் என்பன இவர்களின் நோக்கங்களாகக் காணப்பட்டன. இந்தவகையில் போத்துக்கேயர் கீழைநாடுகளுக்கு புதிய பாதை மூலம் ஆபிரிக்க முனையினைச் சுற்றிவரலாயினர். இவர்கள் கீழ்நாட்டு நறுமணப் பொருட்களான கறுவா, மிளகு, ஏலம், சாதிக்காய், கராம்பு முதலியவற்றை அவை கிடைக்கும் இடங்களில் பெறவிரும்பினர். இந்த வகையில் கீழைத்தேச நாடான இலங்கையிலும் அவர்களது ஆட்சி வளரலாயிற்று.

ஒல்லாந்தர் இலங்கைக்கு வந்த சூழ்நிலை போத்துக்கேயரைவிட வித்தியாசமானது. 16-ம் நூற்றாண்டில் ஒல்லாந்து நாடு ஸ்பானியரிடமிருந்து விடுதலை பெற்றது. இதனைத் தொடர்ந்து இரசாயனக் கண்டுபிடிப்புக்கள், தொழிற்சாலைக் கண்டுபிடிப்புக்கள் விஞ்ஞானம், கட்டடம், நுண்கலை ஆகியவற்றில் விருத்தியினை ஏற்படுத்துவதற்கு முயன்றனர். அதற்காக மூலவளங்களைத் திரட்ட குடியேற்ற நாட்டினைப் பயன்படுத்தினர். போத்துக்கேயரின் கீழைத்தேச நடவடிக்கைகள் மன்னரால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் ஒல்லாந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைப் பொறுத்தவரை இவர்கள் வியாபார நோக்கினைக் கொண்ட டச்சுக் கிழக்கிந்தியக்கம்பனியின் (VOC) முகவராகவே இங்கு வந்தனர். ஒல்லாந்தரது பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தவரை வருமானத்தைப் பெருக்குதல், சிக்கனப் பொருளாதாரத்தைக் கடைப்பிடித்தல் (செலவு சேமித்தல்) என்பதாகக் காணப்பட்டது. அதாவது குறைந்த செலவில் நிறைந்த வருமானத்தைப் பெறுதலே இவர்களின் நோக்கமாகக் காணப்பட்டது.

ஆங்கிலேயரைப் பொறுத்தவரையிலும் தமது பொருளாதார நலன்களை உச்சப்படுத்துவதாகவே காணப்பட்டது. கீழை நாடுகளில் உள்ள மூலவளங்களைத்திரட்டி அதன் மூலம் தமது பொருளாதாரத்தை வளர்த்தெடுக்கும் நோக்கிலேயே இவர்கள் செயற்பட்டனர். பிரித்தானியா தனது குடியேற்ற நாடுகளை நிர்வகிக்க ஆரம்பத்தில் ஆங்கிலக்கிழக்கிந்தியக் கம்பனியை வைத்திருந்தது. கம்பனியின் நோக்கம் பொருளாதார நலன்களை அதிகரித்தல், இலங்கையின் வர்த்தகத்தை நிர்வகித்தல், வருமானம் திரட்டல் என்பதாகக் காணப்பட்டது. ஆனால் கம்பனியின் ஆட்சி ஒரு வருடத்திலேயே நிறுத்தப்பட்டு பின் இரட்டை ஆட்சி நடைபெற்று இறுதியில் தேசாதிபதி ஆட்சி கொண்டுவரப்பட்டது.

எனவே போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் இலங்கைக்கு வந்த பிரதான நோக்கம் பொருளாதார நோக்கமாகவே காணப்பட்டது. இவர்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பல்வேறு சமூக பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தி தமது நலன்களை உச்சப்படுத்திக் கொண்டனர்.

இலங்கையில் ஐரோப்பியரின் நடவடிக்கைகளை நோக்கும்போது போத்துக்கேயர் தமது ஆட்சிக்காலத்தில் பல போர்களில் குறிப்பாக கண்டியரசர்களுக்கெதிராக போர்களில் ஈடுபட்டு வந்தமையாலும், தாய் நாட்டு சூழ்நிலையினாலும், இங்குவந்த போத்துக்கேயரின் போக்குகளினாலும் திட்டவட்டமான பொருளாதாரக் கொள்கையொன்றினை அவர்கள் பெரும்பாலும் பின்பற்றவில்லை. ஆனால் ஒல்லாந்தரைப் பொறுத்தவரை இவர்கள் 17-ம்; 18-ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவிலேயே தலைசிறந்து விளங்கினர். தம் தாய்நாட்டிலும், தாம் சென்று ஆதிக்கம் செலுத்திய பிற நாடுகளிலும் பொருளாதார நிலைபற்றி நன்கு கவனித்து, இயன்றளவு போர்களைத் தவிர்த்து சமாதானம் நிலவச் செய்தனர். சமாதானம் நிலவினால்தான் வியாபாரம் செழிக்கும் என்பதை நன்கு உணர்ந்தனர். மூலவளங்களை உள்நாட்டிலேயே வைத்துக் கொண்டு உற்பத்தியினை அதிகரிக்க வேண்டும், உள்நாட்டிலேயே தேவையான உற்பத்திகளைப் பெறவேண்டும். இதன்மூலம் இந்நாட்டிற்குத் தேவையான பொருட்களுக்காக பிறநாடுகளில் தங்கியிருக்கத் தேவையில்லை எனவும் இவர்கள் கருதினர். பிரித்தானியரை எடுத்துக்கொண்டாலும் இவர்களும் உள்நாட்டில் கிடைக்கும் மூலவளங்களை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியினை அதிகரிக்க வேண்டும் என்னும் நோக்கிலேயே செயற்பட்டனர்.

### வருமான மூலங்கள் :-

ஐரோப்பியர் வர்த்தகத்தில் மிகவும் கவனம் செலுத்தி வந்தனர். இவ்வர்த்தகம் இலங்கைக்கும் ஐரோப்பாவிற்கிடையிலும், இலங்கைக்கும் பிற ஆசிய நாடுகளுக்கிடையிலும் நடைபெற்றது. இவ்வர்த்தகத்தில் கறுவா, ஏலம், பாக்கு, மிளகு, யானை, இரத்தினக் கற்கள் என்பன முக்கியம் பெற்றன. ஆங்கிலேயர் இவற்றுடன் கோப்பி, தேயிலை, இறப்பர் வர்த்தகத்திலும் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கறுவாவை எடுத்துக்கொண்டால் இது முக்கியமான வர்த்தகப் பொருளாகக் காணப்பட்டது. மூன்று சாராரும் கறுவா வர்த்தகத்திலே கண்ணும் கருத்துமாக இருந்தனர். இலங்கைக் கறுவாவானது மிகச் சிறந்ததும் நேர்த்தியானதும் மும்மடங்கு விலை கூடியதாகவும் இருந்தது. கறுவா இயற்கையாகவே கோட்டை அரசிலும், சிறியளவு கண்டி இராசதானியிலும் கிடைத்தது. இதற்கென தனி இலாகா ஒன்றிருந்தது. இவ்விலாகா அதிகாரிகளின் கீழ் கறுவாப்பட்டை சேகரிக்கும் ''சாளியர்'' எனும் சாதியினர் நன்கு கண்காணிக்கப் பட்டனர். இங்கு 3 நாட்டவரும் கறுவாவில் தனியுரிமை கொண்டவர்களாகவே இருந்தனர். இலங்கையிலிருந்து எவ்வளவு கறுவாவைப் பெறமுடியுமோ அவ்வளவு தொகை பெற்றனர். இதனால் சாளியர் கடும் வேலை செய்ய நேர்ந்தது. போர்த்துக்கேயர் கறுவாவைத் தோட்டங்களாக்க முயற்சிக்கவில்லை. ஆனால் ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் கறுவாவை தோட்டங்களாக்கி இதன் மூலம் உற்பத்தியினை அதிகரிக்க முயன்றனர். பொதுவாக கறுவா ஐரோப்பாவிற்கே ஏற்றுமதி செய்யப்பட்டது. தரம் குறைந்த கறுவா இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. கறுவாவைவிட மிளகு, ஏலம் போன்ற வாசனைப் பொருட்களும் வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்களவு பங்குவகித்தன.

அடுத்து பாக்கு போத்துக்கேயரினதும் ஒல்லாந்தரினதும் வர்த்தகப் பொருளில் முக்கியமானது. இவ்வர்த்தகத்திலும் அரசு தனியுரிமை வகித்தது. போத்துக்கேயர் பாக்குக் கிடைக்கும் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் குறிப்பிட்டளவு தொகைப் பாக்கைப் பெற்றனர். அதுமட்டுமன்றி சுதேசிகள் அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் மட்டுமே பாக்கைக் கொடுக்க வேண்டியிருந்தது. பாக்கு தென்னிந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அங்கிருந்து புடவை, அரிசி போன்றவை இறக்குமதி செய்யப்பட்டது.

யானை வர்த்தகம் அடுத்து முக்கியம் பெறுகின்றது. இது 3-ம் தரமான வருமானமாகக் காணப்பட்டது. மன்னர்களின் போக்குவரத்துத்தேவையைப் பூர்த்தி செய்யவும், போர்த் தேவைகளுக்காகவும், களியாட்டம் போன்றவற்றுக்காகவுமே யானை முக்கியமாக ஏற்றுமதி செய்யப்பட்டது. யானை அரச சொத்தாகக் காணப்பட்டமையால் பொதுமக்கள் மூலம் யானை பிடிக்க முடியவில்லை. யானை பிடிப்பதற்கும், அரச தேவைகளுக்காக யானைகளைப் பழக்குவதற்கும், தீனி போடுவதற்குமென கூலியாட்கள் காணப்பட்டனர். தென்னிலங்கையிலும், வன்னியிலும் திறையாகவும், பிறவற்றாலும் யானை பெறப்பட்டு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களினூடாக ஏற்றுமதி செய்யப்பட்டது. ஒல்லாந்தர்காலத்தில் யானை வர்த்தகம் இருவழி வர்த்தகமாகவே மேற்கொள்ளப்பட்டது. யானைகளை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் திரும்பி வரும்போது அரிசியினைக் கொண்டு வந்தன. யானை வர்த்தகத்தின் மூலம் ஒல்லாந்தர் காலத்தில் 29% வருமானம் பெறப்பட்டது. யானை வர்த்தகம் போத்துக்கேயரினதும் ஒல்லாந்தரினதும் காலத்திலேயே முக்கியமான வருமானம் பெறும் வர்த்தகமாகக் காணப்பட்டது. பிரித்தானியர் யானை வர்த்தகத்தில் அவ்வளவிற்கு அக்கறை காட்டவில்லை.

இரத்தினக்கற்கள், முத்து என்பனவும் வர்த்தகத்தில் முக்கிய இடம் பெற்றன. இரத்தினக்கற்களுக்கு தென்மேற்கு இலங்கையில் குறிப்பாக சப்பிரகமுவா பகுதியே பெயர் போனதாகக் காணப்பட்டது. இதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் முத்தும் குறிப்பிடத்தக்களவு முக்கியம் பெற்றது. முத்து தென்னிந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. முத்துக்குளித்தலில் 3 ஐரோப்பியரும் ஈடுபட்டனர். ஒல்லாந்தர் காலத்தில் 50 — 60 இறாத்தல் வரையான முத்துக்கள் ஒல்லாந்திற்கு அனுப்பப் பட்டன. ஆங்கிலேயர் காலத்தில் கூடுதலான வருமானம் முத்துக்குளித்தல் மூலம் பெறப்பட்டது. 1796 — 1798க்கு மிடைப்பட்ட காலப் பகுதியில் ஆங்கில அரசின் செலவு £ 12000 ஆகக்காணப்பட முத்துக் குளித்தல் மூலம் £390,000 வருமானமாகப் பெறப்பட்டது.

போத்துக்கேயர், ஒல்லாந்தர் கால வருமானங்களில் நில வருமானம் முக்கியமானது. மன்னர் காலத்திலிருந்து போன்றே இவ்விரு சாராரும் நில வருமானத்தைப் பெற்றனர். போத்துக்கேயர் கோட்டை இராசதானியில் தமது முற்றுமுழுதான ஆதிக்கத்தை செலுத்தும்வரை நில வருமானமே முக்கிய வருமான மூலமாகக் காணப்பட்டது. 17ஆம் நூற்றாண்டு முற்பகுதியில்தான் மாற்றம் ஏற்பட்டு கறுவா முக்கிய வருமான மூலமாயிற்று. பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த சேவைமானிய முறை 17-ம் நூற்றாண்டில் மாற்றமுற்றது. முன்பிருந்த முறைப்படி அரசாங்க சேவை செய்தோருக்கு சம்பளத்திற்குப் பதிலாக நிலம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் பின்பு இதற்குப் பதிலாக சம்பளம் வழங்கப்பட்டது. இந்நிலை போத்துக்கேயர் காலத்திலும், டச்சுக் காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேயர் காலத்திலும் ஏற்பட்டிருந்தது. வருமானத்தினை ஒழுங்காகப் பெறுவதற்காக போத்துக்கேயர் தோம்புகள் தொகுத்தனர். இவற்றிலே குறிப்பிட்ட நிலத்தின் செழிப்பு, விளைபொருட்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன்பின் போத்துக்கேயரைப் பின்பற்றி ஒல்லாந்தரும் தோம்புகளை நன்கு ஒழுங்கமைத்தனர். நிலம் தொடர்பான தோம்புகள்மட்டுமன்றி குடும்பங்கள் சார்பான தோம்புகளும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டன, இங்கு ராஜகாரிய முறையினை போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் தத்தம் நோக்கங்களுக்குப் பயன்படுத்தினர். போத்துக்கேயர் காலத்தில் அரசாங்கத்திற்கு மேலதிகமாகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளவேண்டியிருந்தமையால் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். ஆனால் டச்சுக்காரர் ஓரளவு நீதியான முறையில் வரிகளை அறவிட்டனர். ஆனால் ஆங்கிலேயர் காலத்தில் நிலவரி வருமானங்கள் ஓரளவிற்கு நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதைவிட பல்வேறுவகையான வரிகளும் அறவிடப்பட்டன. போத்துக்கேயர் துறைமுகவரி இதில் ஏற்றுமதிவரி, இறக்குமதிவரி அடங்கும். மரணவரி, தென்னைவரி, மீன்பிடி வரி போன்ற வரிகளை அறவிட்டனர். ஒல்லாந்தர் ஒவ்வொருவகைப் பொருட்களுக்கும் வெவ்வேறுபட்ட வரிகளை அறவிட்டனர். 1663 இல் துணி, உப்பு, பாக்கு போன்றவற்றுக்கு வேறுபட்ட வரிகளை அறவிட்டனர்.

### சமூக பொருளாதாரத் தாக்கங்கள்:—

ஐரோப்பியரின் வருகையினால் இலங்கையில் ஏற்பட்ட சமூகத்தாக்கங்களை எடுத்துக் கொண்டால் ஆரம்ப காலங்களில் இருந்து போத்துக்கேயர் ஒல்லாந்தர் காலங்களில் சேவை நில உடமையாளர் முறை இருந்து வந்துள்ளது. இக்காலப்பகுதியில் நிலங்கள் அரசனுக்கே சொந்தமாகக் காணப்பட்டன. அரசனுக்கு சேவைசெய்பவர்களுக்கு அதற்கு மாற்றீடாக நிலங்கள் வழங்கப்பட்டு வந்தன. இந்நிலங்களில் இவர்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவந்தனர். போத்துக்கேயரும், ஒல்லாந்தரும் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் மாற்றத்தை ஏற்படுத்த விரும்பாது முன்பிருந்த சமூக அமைப்பை அடிப்படையாகக் கொண்டே வருமானங்களைத் திரட்டினர். ஆனால் ஆங்கிலேயர் காலத்தில் கோல்புறூக் கமரன் சீர்திருத்தத்தில் ''ராஜகாரிய'' என்னும் இச்சேவை மானிய முறையை நீக்குதல் முக்கியமானதொரு அம்சமாகக் காணப்பட்டது. இங்கு அரச நிலங்களில் வேலை செய்பவர்களுக்கு கூலி வழங்கும் முறை அறிமுகமாகின்றது.

இங்கு போத்துக்கேயர், ஒல்லாந்தர் இலங்கையில் பெருமளவிற்கு மாற்றங்களை ஏற்படுத்தாது, இருக்கும் வளங்களைக் கொண்டு வருமானத்தைப் பெறுவதில் ஈடுபட்டனர். ஆனால் ஆங்கிலேயர் காலத்திலேயே குறிப்பிடத்தக்களவு சமூக பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டன. ஆங்கிலேயர் காலத்தில் பெருந்தோட்டத்துறையின் வளர்ச்சியினால் ஆங்கிலேயருக்கு நிலங்கள் அதிகளவில் தேவைப்பட்டன. இந்நிலங்கள் குறிப்பாக சுதேசிகள்வசம் காணப்பட்டது. இந்நிலங்களில் சுதேசிகள் சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவந்தனர். கோப்பிச் செய்கையின் ஆரம்பத்துடன் ஆங்கிலேயர் இந் நிலங்கள் மீது அதிக கவனத்தைச் செலுத்தினர். கண்டிமக்கள் தமது சேனைகள் என்று உரிமை கொண்டாடியமையால் இந்நிலை நற்பலனைக் கொடுக்கக்கூடிய கோப்பிச் செய்கையைப்பாதிக்கும் என்பதால் Stewart Mackenzie என்பவர் வழக்கின் பெயரால் கொண்டாடப்பட்ட உரிமைகளை மறுக்கும் படியும் முன்னர் எப்போதாவது அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப் படாத நிலத்தின் மீது முடிக்கு முற்றான உரிமை உண்டென்று பிரகடனம் செய்யும் படியும் குடியேற்ற நாட்டிற்குரிய அரசுக் காரியாலயத்தைத் தூண்டினார். குடியேற்ற நாட்டுக் காரியாலயம் இதனைச் செய்ய முதலில் தயங்கினாலும் பின் உழவர்கள் தமது சேனை நிலங்களுக்கு சட்டபூர்வ உறுதிகளைக் காட்டவேண்டும் என்று கோரியது. இவ்வாறான ஒரு நிலையில் சட்டபூர்வமான உறுதிகள் பல விவசாயிகளிடம் இல்லாததனால் நிலங்களை இழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இந்த நிகழ்வு மானியமுறைப் பொருளாதாரத்தின் மீது வர்த்தக விவசாயம் ஏற்படுத்திய தாக்கலின் தடுக்கமுடியாத விளைவு என்றே கூறவேண்டும்.

ஆங்கிலேயரின் வருகையினால் ஆங்கிலக் கல்வி மூலம் மக்களுக்கு ஆங்கில அறிவைப் புகுத்தியமையும் இங்கு முக்கியமானதாகும். ஆங்கில அறிவைப் பெறுவதன் மூலம்தான் இப்பிராந்திய மக்களின் அறிவுத்திறன், ஒழுக்க முறை என்பவற்றில் முன்னேற முடியும் எனவும் அத்துடன் மானிய நிலையில் இருந்து வணிக சமூகம் ஒன்றாக எழுச்சியடைவதாயின் அதற்கு ஆங்கில அறிவு அவசியம் எனவும் இவர்கள் கருதியதால் இலங்கையில் ஆங்கிலக் கல்வியை அறிமுகப் படுத்தினர்.

பொருளாதாரத் தாக்கங்களை எடுத்துக் கொண்டால் போத்துக்கேயரதோ, ஒல்லாந்தரினதோ ஆட்சி இலங்கையின் மேற்குக் கரையில் இருந்து 20 மைல்களுக்கு அப்பால் போகவில்லையென்றே கூறவேண்டும். இக் குறுகிய பிரதேசத்தில் தாம் வந்தபோதிருந்த ஆட்சியமைப்பை மாற்றாது தொடர்ந்து இருக்கவிட்டனர். எனவே பழைய மானிய முறைப் பொருளாதார அமைப்பு தொடர்ந்து இருந்தது. ஆகவே 1505—1796 வரையான காலப்பகுதி மத்தியகாலப்பொருளாதார வரலாற்றைச் சேர்ந்த காலமாகும். பிரித்தானியரும் தமது ஆட்சியின் முதல் சில ஆண்டுகளுக்கு போத்துக்கேயரையும் ஒல்லாந்தரையும் போல கரையோரப் பிரதேசங்களில் வருமானத்தைப் பெறுவதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிக்குத்தகை அறவிடுவதையுமே செய்தனர். இதன்பின் 1815 இல் பிரித்தானியரின் ஆட்சி இலங்கை முழுவதிலும் ஏற்பட்ட போதும் பழைய மானிய முறை அமைப்பில் எதுவித மாறுதல்களும் ஏற்படவில்லை. இதனைத் தொடர்ந்து கோப்பிச் செய்கையின் ஆரம்பத்துடன் புதிய முறையான பொருளாதாரப்பழக்கங்களையும் அக்காலத்திலிருந்த பொருளாதார அமைப்பிற்குப் புதிதான பல கருத்துக்களையும் கொண்டுவந்து அதுவரை நிலைத்திருந்த அமைப்புக்கள் மாறி இலங்கையில் முதலாளித்துவம் வளர வழிவகுத்தது.

மானியகாலத்திலிருந்து இலங்கைப் பொருளாதாரம் குடியான் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டே காணப்பட்டது. போத்துக்கேயரது ஆட்சியிலும் இது பெரிதும் மாறவில்லை. ஆனால் ஒல்லாந்தர் காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் ஆரம்பம் ஏற்பட்டது. இவர்கள் தமது ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் கறுவாவை பெருந்தோட்ட அடிப்படையில் உற்பத்தி செய்ய முயற்சித்தனர். இவ்வளவு காலமும் கறுவா தோட்ட அடிப்படையில் இல்லாது இயற்கையாகவே வளரவிடப்பட்டிருந்தது. ஆனால் ஒல்லாந்தர் கறுவாவை பெருந்தோட்ட அடிப்படையில் உற்பத்தி செய்தனர். இதன் மூலம் தோற்றம் பெற்றதே கொழும்பு கறுவாத்தோட்டமாகும். இதனைத் தொடர்ந்து பிரித்தானியர் காலத்தில் கோப்பிச் செய்கை பெருந்தோட்ட அடிப்படையில் ஆரம்பிக்கப்படுகிறது. பிரித்தானியர் காலத்தில்தான் பெருந்தோட்டவளர்ச்சி மிகவேகமாக ஏற்பட்டது. கோப்பி அதனைத் தொடர்ந்து தேயிலையும் அதன்பின் இறப்பரும், தென்னை என்பனவும் பெருந்தோட்ட அடிப்படையில் செய்கைபண்ணப்பட்டன. எனவே இப் பெருந்தோட்ட வளர்ச்சி இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட முக்கியமானதொரு மாற்றமாகக் கருதப்படுகின்றது. இப் பெருந்தோட்ட வளர்ச்சியுடன் இலங்கைப் பொருளாதாரத்திலும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன.

ஐரோப்பியரின் வருகையுடன் போக்குவரத்துப்பாதைகளின் விருத்தியும் ஏற்படுகின்றது. போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் ஏற்கனவே இருந்த பாரம்பரிய போக்குவரத்துச் சேவைகள் தொடர்ந்து இருந்தன. வண்டில்கள், குதிரைகள், பல்லக்கு, யானை, படகு சேவைகள் முதலியன வாகும். ஒல்லாந்தர் போக்குவரத்துச் சேவைகள் சிலவற்றைத் திருத்தியமைத்தனர். சில பிரதான தெருக்கள் அமைக்கப்பட்டன. சிற்றாறுகளைக் கடக்க பாலங்கள் அமைக்கப்பட்டன. கடலில் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் ஆங்கிலேயர் காலத்தில் பெருந்தோட்ட வளர்ச்சியுடன் போக்குவரத்துப் பாதைகளிலும் முக்கிய முன்னேற்றங்கள் ஏற்பட்டன. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் முக்கிய நோக்கம் சந்தையை அடிப்படையாகக் கொண்டதாகும். இதற்கு போக்குவரத்துப் பாதை மிக இன்றியமையாததாகும். ஆரம்பத்திலே குறைந்த வீதிகளே இருந்தன. கரையோரக்குறிச்சிகளின் பெரிய நகரப்பகுதிகளில் மட்டுமே வீதிகள் காணப்பட்டன. பாதுகாப்பின் பொருட்டும், நிர்வாகத் தேவைக்காகவும் கோப்பித் தோட்டத்தின் ஆரம்பத்துடன் நாட்டின் உட்பகுதிகளுடன் தொடர்பு வழிகள் திறக்கப்பட்டன. எனினும் இவை பிரதான வீதியாகவே இருந்தன. அத்துடன் இவை மிகச் சிக்கலாக இருந்தமையால் கோப்பிச் செய்கையாளருக்கு இவை பயனளிப்பதாக இருக்கவில்லை. 1840 ஆம் ஆண்டை அடுத்த 10 ஆண்டுகளுக்குள் முதலீடுகள் பெருகியமையால் வீதிகளுக்கான தேவைகள் அதிகரித்தன. ஆனால் அரசாங்கத்திடம் இதற்கான பணப்பிரச்சனை முக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய விடயமாக இருந்தது. அத்துடன் அமைக்கப்பட்ட வீதிகளையும் அதிக வெப்பம், அதிக மழைவீழ்ச்சி, துறைமுகங்களுக்கும் பெருந்தோட்டங்களுக்குமிடையே ஓடிய வண்டிகளுடைய இரும்புச் சட்டமிடப்பட்ட சக்கரங்களுமாகச் சேர்ந்து மிகப் புதிய வீதிகளை இரண்டொரு மாதத்திற்குள் சீரற்றவையாக்கிவிட்டன. எனவே இங்கு வீதிகள் குறைவாகக் காணப்பட்டதுடன் இருக்கும் வீதிகளும் சீரற்றுக் காணப்பட்டன. இப்பிரச்சனைகளைத் தீர்க்கும் முகமாக புகைவண்டிப்பாதை அமைக்கும் எண்ணம் தோற்றம் பெற்றது.

1845ஆம் ஆண்டளவில் புகைவண்டிப் பாதை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. புகையிரதப்பாதையானது திருட்டுக்களையும் இடப் பெயர்வுச் செலவுகளையும் குறைக்கும் என்ற கருத்து எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் அரசாங்கத்தின் வருமானத்தில் ஓர் உறுதியின்மை காணப்பட்டதால் இப்பாதை அமைப்பிற்கு உறுதியளிக்க முடியவில்லை. எனினும் 1860 களில் வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்களைத் தொடர்ந்து 1867 முடிவில் கொழும்பு — கண்டி புகையிரதப் பாதை திறக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல கிளைப்பாதைகளும் பெருந்தோட்ட முதலீட்டாளர்களின் நன்மை கருதித் திறக்கப்பட்டன. இதனால் பெருந்தோட்டச் சொந்தக்காரர் எதிர்பார்த்த நன்மைகளை அடைய முடிந்தது. பொருட்களின் இடப்பெயர்வுச் செலவு. 60 — 70 விகிதம் குறைவடைந்தது. எனவே இலங்கைப் பொருளாதார வரலாற்றில் போக்குவரத்துப் பாதைகளின் விருத்தியும் மிகவும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகவே கருதப்படுகின்றது.

அடுத்து வெளிநாட்டுத் தொழிலாளர்களின் வருகையும் ஒரு முக்கிய நிகழ்வாகும். பெருந்தோட்டச் செய்கையின் ஆரம்பத்தோடு இத்தோட்டங்களில் வேலை செய்வதற்கு ஏராளமான தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். இலங்கையில் சட்டரீதியாக கட்டாயத் தொழிலாளரைப் பெற முடியவில்லை. சிங்களக் குடியான்கள் தமது ஒய்வு நேரத்தை இழக்க விரும்பாமையினால் பெருந்தோட்டங்களில் கூலிகளாக மாற விரும்பவில்லை. அத்துடன் தம் இருப்பிடங்களை விட்டு வேறு இடங்களில் சென்று குடியேறவும் இவர்கள் விரும்பவில்லை. எனவே சுதேசிகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்டளவு நிலம் சொந்தமாகக் காணப்பட்டது. அந்நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு அதில் கிடைக்கும் வருமானத்தின் மூலம் தம் வாழ்க்கையைக் கொண்டு நடத்தக் கூடியதாக இருந்தமையால் பெருந்தோட்டங்களில் கூலிகளாக மாறவிரும்பவில்லை. இந்நிலையில் தொழிலாளர் பிரச்சனையைத் தீர்க்குமுகமாக தென்னிந்தியத் தொழிலாளர்கள் பெறப்படுகின்றனர். தென்னிந்தியாவில் தொழிலாளரைப் பெறுவதற்கான நிலைமைகள் சாதகமாக இருந்தமையால் இலகுவாகத் தொழிலாளரைப் பெறமுடிந்தது. ஆரம்பத்தில் போத்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்திலும் தென்னிந்தியர் கறுவாப்பட்டை உரிப்பதற்காகக் கொண்டுவரப்பட்டாலும் இவர்கள் அடிமைகளாகவே கொண்டுவரப்பட்டனர். தற்போது கூலித்தொழிலாளர் என்ற வகையில் வெளிநாட்டுத் தொழிலாளர்படை இலங்கையில் உருவாகியுள்ளது. இதுவும் மேற்கு நாட்டவர்களின் வருகையால் ஏற்பட்ட முக்கிய தாக்கங்களில் ஒன்றாகும்.

இலங்கைப் பொருளாதாரத்தில் குடியான் விவசாயமே முக்கியமானதாகக் காணப்பட்டது. போத்துக்கேயரும்சரி, ஒல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாந்தரும்சரி குடியான் விவசாயத்திலேயே கூடுதலான அக்கறை கொண்டிருந்தனர். ஒல்லாந்தரின் பொருளாதாரக் கொள்கையில் உணவுத் தேவைக்காக பிறரை நம்பியிராது தமது உணவைத் தாமே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கம் காணப்பட்டது. ஒல்லாந்தர் சுயதேவையை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டு விவசாயத்திலேயே கூடுதலான அக்கறை கொண்டிருந்தனர். ஆனால் பிரித்தானியரின் வருகையுடன் நிலமை மாறுகின்றது. உள்நாட்டு விவசாயத்துடன் பெருந்தோட்ட விவசாயம் அறிமுகமாகின்றது. இங்கு குடியான் விவசாயமும் அதனோடு தொடர்பில்லாத வகையில் ஏற்றுமதி சார்ந்த பெருந்தோட்ட விவசாயமும் வளர்ச்சியடைந்து இரட்டைப் பொருளாதாரம் என்ற நிலை உருவாகின்றது. இதைவிட இதுவரை சுயதேவையை அடிப்படையாகக் கொண்டு இயங்கிய பொருளாதாரமானது வர்த்தக அடிப்படையில் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரம் என்ற நிலைக்கு வருகின்றது. இதற்கு பிரித்தானியரால் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்ட வளர்ச்சியே காரணமாக அமைகின்றது.

மேலும் ஆங்கிலேயர் காலத்தில் கோப்பிச் செய்கையின் ஆரம்பத்தோடு இலங்கையில் பணப் பொருளாதாரம் என்ற அமைப்பு உருவாகின்றது. பொதுவாக உள்நாட்டில் முதலீடு குறைவாக இருந்தமையால் அந்நியரே முதலிட்டு இலாபத்தை உழைத்தனர். முதலீட்டாளர்களின் நிதி நெருக்கடியைத் தீர்க்கு முகமாக வங்கிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. அந்த வகையில் இங்கிலாந்து வங்கியே இதில் ஈடுபட்டது. இதனைத் தொடர்ந்து 1860 இல் Asiatic-Bank முதலீட்டாளர்களின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்யவென ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1882 இல் Oriental Banking Corperation ஆரம்பிக்கப்பட்டது. எனவே வங்கித்துறையின் வளர்ச்சியும் ஐரோப்பியரின் வருகையினாலேயே ஏற்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பியரின் வருகையுடன் குறிப்பாக ஆங்கிலேயரின் வருகையுடன் இலங்கையில் பெருந்தோட்டத் துறையின் அறிமுகத்துடன் பலமாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆங்கிலேயரைப் பொறுத்தவரையில் இவர்கள் விவசாயத்துடன் தொடர்புடைய பெருந்தோட்டத்துறையை வளர்த்தெடுப்பதிலேயே அக்கறை கொண்டிருந்தனர். பிரித்தானியர் தமது தாய் நாட்டில் கைத்தொழிற் புரட்சியை ஏற்படுத்தி பல்வேறு சாதனைகளை நிலைநாட்டியிருந்த அதேவேளை இலங்கையில் கைத்தொழில் துறையின் விரித்திக்கு எவ்வித அக்கறையும் காட்டவில்லை. எனவே இவர்களின் காலத்தில் பெருந்தோட்டத்துறை வளர்ச்சியடைந்தளவிற்கு கைத்தொழிற்துறை வளர்ச்சியடையவில்லை.

## முடிவுரை

எனவே தொகுத்து நோக்கும் போது இலங்கையில் மேற்கு நாட்டு வல்லரசுகளின் ஆதிக்கத்தினால் பலசாதகமானதும் பாதகமானதுமான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இதிலும் போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களைவிட ஆங்கிலேயர் காலத்திலேயே கூடுதலான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயர் காலத்தில் பெருந்தோட்டச் செய்கையின் அறிமுகத்துடனேயே பல்வேறு வகையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பொதுவாக சுயதேவைப் பொருளாதாரமாக இருந்த இலங்கையை ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரமாக மாற்றியதுடன் இதற்கு ஏற்றதாக போக்குவரத்துத் துறையின் வளர்ச்சியை ஏற்படுத்தி, வெளிநாட்டுத் தொழிலாளர்களை குறிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியத் தொழிலாளர்களை இலங்கைக்கு வரவழைத்ததுடன், வங்கித்துறையின் வளர்ச்சியையும் ஏற்படுத்தியிருந்தனர். இதைவிட இலங்கையில் சுயமொழியை மட்டும் தெரிந்திருந்தவர்களுக்கு ஆங்கிலக் கல்வியைப் புகுத்தியமையும் முக்கியமான தொரு அம்சமாகும். இதே நேரம் மக்கள் தமது நிலங்களை இழந்தமை ஒரு கவலைக்குரிய விடயமாகவே கருத வேண்டும். அத்துடன் போத்துக்கேயர், ஒல்லாந்தர் சமூக அமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வரவில்லை. ஆனால் ஆங்கிலேயர் தமது பொருளாதார நடவடிக்கைகளுக்கு இலகுவாக சமூக அமைப்பை மாற்றியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே ஐரோப்பியர் தமது வருவாய்களையும் பொருளாதார நலன்களையும் அதிகரிக்கும் நோக்கிலேயே இவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தனர். இவர்கள் தமது நலன்களை அதிகரிக்கும் நோக்கில் செயற்பட்டனரே யொழிய இலங்கையின் பொருளாதார விருத்தியில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. இந்த ஐரோப்பியர் இலங்கைக்கு வந்திராவிட்டால் இலங்கைப் பொருளாதாரம் வேறு வகையில் வளர்ச்சியடைந்திருக்குமா என்ற வினா எழுகின்றது. இதற்கான விடையை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

## Reference :


1. K. M. De Silva : History of Ceylon Volume III, University of Ceylon 1973.
2. K. M. De Silva : A History of Sri Lanka. Oxford University Press 1981
3. G. C. Mendis : Ceylon under the British, Second Rivised Editiou 1948.
4. Sinnappah Arasaratnam : Dutch Power in Ceylon 1658 – 1687.
5. Tikiri Abayasinghe : Portugues Rule in Ceylon 1594 – 1612 University of Ceylon 1966.
6. வி. சிவசாமி : "இலங்கையில் போத்துக்கீசரும் ஒல்லாந்தரும் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கை – ஓர் ஒப்பியல் நோக்கு" பொருளியலாளன் செப்டெம்பர் 1988.
7. T. H Vanden Driesen : இலங்கையின் தற்காலப் பொருளியல் வரலாற்றிற்கு ஓர் அறிமுகம். பொருளியலாளன் யூன் 1989.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் "அந்நிய நேரடி முதலீடுகள்"

# Foreign Direct Investments in Developing Countries

ஆர். நந்தகுமாரன்

பழம் பொருளியலாளர், நவபழம் பொருளியலாளர் ஆய்வுகளில் பொருளாதார வளர்ச்சியை தீர்மானிக்கும் காரணிகளில் முதலீடு முக்கியமான இடத்தினை வகிக்கின்றது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்நாட்டு சேமிப்பிற்கும் முதலீட்டுக்கும் இடையில் இடைவெளி காணடபடுகின்றது. எனவே இந்த இடைவெளியை இட்டு நிரப்புவதற்கு "வெளிநாட்டு வளங்களை" வேண்டி நிற்பது வளர்ச்சிக்கு அத்தியாவசியமாக இருக்கின்றது. இதேபோன்று ஏற்றுமதி வருமானத்திற்கும் இறக்குமதி செலவினத்திற்குமிடையில் அந்நியச் செலாவணி இடைவெளியும், வரவு செலவுத் திட்டத்தில் உள்நாட்டு வருமானத்திற்கும் செலவிற்குமிடையில் பற்றாக்குறை காணப்படுவதும் அந்நிய வளங்களை வளர்முக நாடுகள் வேண்டி நிற்பதற்கு, ஏனைய காரணங்களாகும். சேமிப்பு — முதலீட்டு இடைவெளி, அந்நியச் செலாவணி பற்றாக்குறை, வரவு செலவுத்திட்டப்பற்குறை என்பவற்றிற்கும் மேலாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் முகாமைத்துவ தொழில்நுட்ப ஆளணியிலும் பற்றாக்குறை காணப்படுகின்றது. இவ்வாறான இடைவெளிகளை இட்டு நிரப்பி வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் தமது வளர்ச்சியைத் துரிதப்படுத்த வெளிநாட்டு வளங்களை எதிர்பார்த்து இருக்கின்றன.

வெளிநாட்டு வளங்கள், அந்நிய நேரடி முதலீடாக, அந்நிய உதவியாக, வெளிநாட்டு கடன்களாக அல்லது பட்டியல்படுத்தப் பட்ட முதலீடுகளாக அபிவிருத்தியடைந்து வரும் நாட்டிற்கு உள்வரலாம். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு கிடைக்கின்ற நன்கொடைகள் சலுகை அடிப்படையிலான உதவிகள் வற்றி வருகின்றன. 1980களில் சர்வதேச கடன் நெருக்கடியின் பின்னர் வர்த்தக நோக்கிலான கடன்களும் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே காணப்படுகின்றன. பட்டியல் படுத்தப்பட்ட முதலீடும் சர்வதேச நிதிச் சந்தைகளில் ஏற்படுகின்ற வட்டிவீத மாற்றங்களுக்கு ஏற்ப வட்டி வருமானத்தை உச்சப்படுத்தும் நோக்கில் உலகின் நிதிச் சந்தைகளுக்கிடையில் பறந்து திரிகின்றன. இத்தகைய முதலீடுகள் நிச்சயமற்றவையாகும். எனவே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வளர்ச்சியில் நேரடி முதலீடு என்பதே பிரதான பங்கினை வகிக்கமுடியும்.

இந்தக்கட்டுரையானது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அந்நிய நேரடி முதலீட்டின் போக்கு ஏன் வளர்முக நாடுக

இராஜகோபால் நந்தகுமாரன்
B. A. (Hons), M. A. Msc
சிரேஷ்ட விரிவுரையாளர்
பொருளியற்றுறை
யாழ். பல்கலைக் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் ஒரு சில பிராந்தியங்களில் இவை செறிவாகக் காணப்படுகின்றன. எவ்வாறான நடவடிக்கைகள் அந்நிய நேரடி முதலீட்டினை அதிகரிக்க உதவும், (4) அந்நிய முதலீடு தொடர்பாக முன்வைக்கப்படும் எதிர்வாதம் என்பவற்றை எடுத்துக்காட்ட முயற்சிக்கின்றது.

வளர்ச்சியடைந்துவரும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியில் அந்நிய நேரடி முதலீடு கூடிய பங்கினை வகிக்கின்றது. 1980—85 காலப்பகுதியில் சராசரியாக வருடமொன்றிற்கு 12.6 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த அந்நிய நேரடி முதலீடானது 1992 – 93 காலப்பகுதியில் நான்கு மடங்காக அதிகரித்ததுடன் 1990இல் 70 பில்லியன் அமெரிக்க டொலராகவும் அதிகரித்துள்ளது. 1980 களின் முதல் அரைப் பகுதியில் மொத்த அந்நிய நேரடி முதலீட்டில் 20 சதவீதம் மட்டுமே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உட்பாய்ந்தது. ஆனால் 1992 — 94 காலப்பகுதியில் இப் பங்கு 32 சதவீதமாக அதிகரித்துள்ளது. 1993 ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் மொத்த மூலதன ஆக்கத்தில் அந்நிய நேரடி முதலீடானது 6 சதவீதத்திற்கும் அதிகமாகக் காணப்பட்டது. அந்நிய நேரடி முதலீட்டின் பங்கு அதிகரித்து வர ஏனைய வெளிநாட்டு வளங்கள் வீழ்ச்சியடைந்து வருகின்றது. இதனை கீழே உள்ள அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது.

### அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட மூலதனப் பாய்ச்சல்

(1993 ஆம் ஆண்டு டொலர் பெறுமதியில் மில்லியன்கள்)

| | 1960 | 1970 | 1980 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|---|---|
| தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடு | 304 | 3024 | 12988 | 34765 | 44568 | 63997 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு | 13 | 423 | 3353 | 17505 | 24250 | 86569 |
| தேறிய வர்த்தக வங்கிக் கொடுப்பனவுகள் | 384 | 9839 | 11791 | 1892 | 14541 | 5482 |
| நன்கொடைகளும் உத்தியோக பூர்வ கடன்களும் | 1466 | 9854 | 34366 | 59301 | 47383 | 52336 |
| மொத்தம் | 2167 | 21340 | 62498 | 113173 | 131142 | 208386 |

Cited in Finance & Development Dec. 1995.

1960கள் முதல் உதவிகள் மொத்த மூலதன பாய்ச்சலின் வீதமாக குறைந்து கொண்டே வந்துள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு மிக முக்கியமான மூலதன வளமாக இருந்தபோதும் அது தற்போது மொத்த மூலதனப் பாய்ச்சலில் ஐந்தில் ஒரு பங்காக மட்டுமே காணப்படுகிறது. 1970 களில் பிரதான மூலதன வளமாகக் காணப்பட்ட வர்த்தக வங்கிக் கடன்கள் 1980 களில் ஏற்பட்ட உலகளாவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் நெருக்கடிகளைத் தொடர்ந்து இல்லாமலேயே போய்விட்டது எனலாம். 1980 களில் முதலீட்டாளர்களது கவனத்தை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பங்குச் சந்தைகள் கவர்ந்தபோது "பட்டியலிடப்பட்ட மூலதனம் பிரதானவுளமாகக் காணப்பட்டது. இது முக்கியமானதாக இருந்தாலும் மாற்றமடையக்கூடியதும் ஆபத்து ஏது நிறைந்ததும் ஆகும். ஏனெனில் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து இம் முதலீடு வெளிப்பாய்ந்துவிடும்.

ஏனைய மூலதனப் பாய்ச்சல்களைவிட அந்நிய நேரடி முதலீடு மேலதிகமான வளங்களையும் கொண்டு வருகின்றன. தொழில் நுட்பம், முகாமைத்துவம், ஏற்றுமதிச் சந்தைகள் போன்றவையே மேலதிகமான வளங்களாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மூலதனத்திற்கும் மேலாக இத்தகைய திறமைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறது. அந்நிய முதலீட்டாளர்கள் தமது முதலீட்டிற்கு பொருத்தமான நாட்டினை தீர்மானிக்கும்போது உலகின் குறிப்பிடத்தக்க சில பிராந்தியங்களில் அதாவது கிழக்காசியா, இலத்தீன் அமெரிக்கா என்பவற்றில் குறிப்பிட்ட சில நாடுகளையே தெரிவு செய்கின்றனர். 1990 — 94 காலப்பகுதியில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உள்வந்த மொத்த அந்நிய முதலீட்டில் 52 சத வீதமான பங்கு கிழக்காசிய பிராந்திய நாடுகளுக்கும், 29 சத வீதமான பங்கு இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் சென்றுள்ளது. அத்துடன் மொத்த அந்நிய முதலீட்டில் 76 சத வீதமானது இப்பிராந்தியங்களில் உள்ள 11 நாடுகளில் செறிந்து காணப்படுகின்றது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் மிகச் சிறியதீவுப் பொருளாதாரங்கள் அவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தியைவிட கூடிய பங்கினை அந்நிய நேரடி முதலீடாகவும் பெற்றுள்ளன. உப சகாராப் பிராந்தியத்தில் உள்ள ஆபிரிக்க நாடுகளில் அந்நிய நேரடி முதலீடானது தேக்க நிலையிலேயே காணப்படுகின்றது.

மேலும் மேலும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அந்நிய நேரடி முதலீட்டிற்கான தடைகளை தளர்த்தியுள்ளன. அத்துடன் வர்த்தகத்திற்கான சூழ்நிலையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதேநேரம் பல்தேசிய நிறுவனங்கள் அதிகரித்த போட்டிக்கு முகம் கொடுக்கும் வகையில் அவர்களது தொழிலுக்கு பலதரப்பட்ட இட அமைவுகளைக் கருத்திற் கொள்கின்றன. ஒன்றில் ஒன்று தங்கியுள்ள இவ்விரு போக்கும் தொடர்பாடல், போக்குவரத்து, உற்பத்தி ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்களும் சேர்ந்து "உலக சந்தை இடம்" (World Market Place) என்ற விடயத்தை மெய்ப்பித்துள்ளது. உள்நாட்டுச் சந்தைக்கு உயர்ந்த செலவுடைய தரங்குறைந்த பொருட்கள் உற்பத்தி செய்த நாட்கள் மறைந்துவிட்டன. பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எங்கு சர்வதேச நியமனங்களுக்கமைய தரமும் விலையும் உடைய பொருட்களை உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்கின்றதோ அவ்வாறான இடங்களுக்கே தமது முதலீடுகளை நகர்த்த ஆர்வமாக இருக்கின்றார்கள்.

உலகளாவியதாகல் (Globalization) என்பதன் கருத்து ஏற்றுமதி மயப்படுத்தப்பட்ட உற்பத்தி, உள்நாட்டுச் சந்தைக்கான உற்பத்தி என்பவற்றிற் கிடையிலான வேறுபாடு நலிவடைந்து வருவதுடன் மறைந்து போவதையும் குறிக்கின்றது. அபிவிருத்தியடைய விரும்பும் நாடுகள் ஏற்றுமதியாளருக்கும் உள்நாட்டுச் சந்தைக்கு உற்பத்தி செய்பவர்களுக்கும் சிறந்த வியாபார சூழ்நிலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். உள் நாட்டுச் சந்தையின் அளவைப் பொறுத்து அழுத்தம் வேறுபடலாம். ஆனால் இவ் இரண்டினதும் சேர்க்கை அதிகரித்தளவு முக்கியம் பெறுகின்றது. கிழக்காசியாவும் இலத்தீன் அமெரிக்க நாடுகளும் அதிகளவு அந்நிய நேரடி முதலீடுகளைப் பெற்று வருவதற்கு ஒரு காரணம், அவை உலகமயமாக்கலுக்கு ஏற்றவாறு தமது தந்திரோபாயங்களை சீராக்கியுள்ளன.

இந்த நாடுகளில் சில ஆரம்பத்தில் தமது அபிவிருத்தியை ஊழியச் செறிவான தயாரிப்புப் பொருட்களை கைத்தொழில் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அடைந்துகொண்டன. அண்மைக் காலமாக தொழில்நுட்ப மாற்றம் போட்டியில் ஏற்பட்டுள்ள தீவிரத்தன்மை காரணமாக தொழில்களின் உற்பத்தியில் மூலதன, கைத்திறன் செறிவு அதிகரித்திருப்பதை உணர்ந்து கொண்டனர். அதாவது இனியும் நாடுகள் தமது குறைந்த ஊழியச் செலவில் மட்டும் தங்கியிருக்க முடியாது. தொடர்ந்தும் ஒப்பீட்டு நலனைப் பேணிக் கொள்ள வேண்டுமெனில் உயர்தரமும், உற்பத்தித் திறனும் கொண்ட உழைப்பு அவசியமாகும். அந்நிய நேரடி முதலீடுகளை அதிகளவில் கவர்வதில் வெற்றி கொண்ட நாடுகள் பொதுக்கல்வி, கைத்தொழில் நுட்பப் பயிற்சிகள், ஊழிய முகாமைத்துவ ஒழுங்குகள் என்பவற்றில் தமது கவனத்தை செலுத்தியவையாக இருக்கின்றன. ஒப்பீட்டு நலனானது இயங்கியல் அடிப்படையில் மாற்றமடைந்து கொண்டு செல்லக்கூடியது. எனவே தொடர்ந்து பேணவேண்டுமானால் நிறுவனங்களினது தொழில்நுட்ப மேம்பாட்டு முயற்சிகளுக்கு உதவுவது முக்கியமாகும்.

வேறு வெற்றிகண்ட நாடுகளின் அபிவிருத்தியின் ஆரம்பத்தில் இறக்குமதி பிரதியீட்டுக் கைத்தொழில் அடிப்படையாக இருந்துள்ளது. இந்தத் தந்திரோபாயம் பெறுமதியான நுட்பங்களையும், நிறுவனங்களையும் பௌதீக உட்கட்டுமானங்களையும் உருவாக்கியது. ஆனால் சிறிய உள்நாட்டுச் சந்தை, தொடர்ந்தும் பேணப்பட்ட பாதுகாப்பினால் ஏற்பட்ட வினைத்திறனின்மை போன்றவற்றால் வரையறுக்கப்பட்டதாகக் காணப்பட்டது. இந்த நாடுகள் ஒன்றில் பொருளாதார சீர்கேடுகளால் கட்டாயப் படுத்தப்பட்டோ அல்லது வெளிநோக்கிய கொள்கைகளைக் கடைப்பிடித்த நாடுகளின் வெற்றியினால் கவரப்பட்டோ பாதுகாப்புக்களைக் குறைத்து அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தி தமது உற்பத்தி நடைமுறைகளை சர்வதேச ரீதியில் போட்டியிடக் கூடியதாக மாற்றி அமைத்தனர்.

எந்த வழியைப் பின்பற்றினாலும் விரைவானதும் நிலை நிறுத்தக் கூடியதுமான வளர்ச்சி. வெற்றிகண்ட தெ கிழக்கு ஆசியா, இலத்தீன் அமெரிக்க பிராந்தியங்களின் நாடுகளுக்கு ''உருவாகிவரும் சந்தைகள்'' (Emerging Markets) என்ற பெயரை ஈட்டித் தந்துள்ளன. அத்துடன் தொடர்ந்தும் நுகர் பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி அதிகரிப்பதனால் இந்நாடுகள் ஏற்றுமதி சந்தையில் வளர்ச்சியடைந்த நாடுகளுடன் போட்டியிடவும் ஆரம்பித்துள்ளன. இவையாவும் சர்வதேச முதலீட்டாளர் சமூகத்திற்கு மிகவும் கவர்ச்சியானதாக உருவாகியுள்ளது.

உருவாகிவரும் சந்தைகளில் தமது நிறுவனங்களின் செயற்பாடுகளை ஆரம்பிக்க விரும்புகின்றவர்களுக்கு தரமான உதிரிப்பாகங்கள் கூறுகள், துணைச் சேவைகள் எல்லாம் எளிதில் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். குறிப்பாக தயாரிப்புத் தொழிலில் வெற்றிக்கு இட்டுச் செல்லும் பிரதான சக்தி நிறுவனங்களுக்கிடையிலான

தொடர்புகளில் நெகிழ்ச்சித் தன்மையாகும். இதன்கீழ் நிறுவனங்கள் உற்பத்தியின் வெவ்வேறு கட்டங்களில் சிறப்புத் தேர்ச்சியடைய முடியும். உற்பத்திச் சங்கிலியில் மேல் பிணைப்புகளிலோ அல்லது கீழ்ப் பிணைப்புக்களிலோ சிறப்புத் தேர்ச்சியடையலாம். அத்துடன் வலைப் பின்னல் (Net Working) முறையிலும் நீண்டகால கொள்வோன் நிரம்பல் தொடர்புகள் ஊடாக ஒன்றுடன் ஒன்று மிக நெருக்கமாக இணைந்து செயற்படலாம். இவ்வாறான முறைமைகள் அந்நிய நேரடி முதலீடு வரவேற்கும் நாடுகளுடன் நன்கு ஒன்றிணைக்கின்றது.' அத்துடன் இந் நாடுகள் அந்நிய முதலீட்டில் இருந்து அதிக நலன்களையும் பெற்றுக்கொள்ள வழி கோலுகின்றது. இந்த நலன்கள் பொருளாதார நடவடிக்கைகளுக்கு கிடைக்கும் தூண்டுதல் தொழில்நுட்ப இடமாற்றம், முகாமைத்துவ நுட்பங்கள், ஏற்றுமதிச் சந்தைகளை அடையக்கூடிய வாய்ப்பு என்ற வடிவங்களில் கிடைக்கப் பெறுகின்றது. குறித்த நேரத்தில் குறைபாடுகள் அற்ற தரமான நடுத்தரப் பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு கம்பனிகளுக்கு அதிக மகிழ்ச்சித் தன்மையும் அபிவிருத்தியடைந்த உயர் நுட்பங்களும் தேவைப்படுகின்றது. இத்தகைய செயற்பாடுகளுக்குத் துணைசெய்யக்கூடிய நிலமைகளைக் கொண்டுள்ள நாடுகள் அந்நிய முதலீட்டாளர் பார்வையில் கூடிய போட்டித் தன்மை கொண்டவையாகத் தெரிகின்றது.

சர்வதேச போட்டியின் அழுத்தத்திற்கேற்றவாறு நிலைத்து நிற்கக்கூடிய வர்த்தக சீராக்கங்களை மேற்கொண்ட நாடுகள் மட்டுமே அந்நிய நேரடி முதலீட்டினை கவர்வதில் வெற்றிகண்டுள்ளன. இந்நாடுகளில் எல்லாம் தனியார்துறை அபிவிருத்தியை ஊக்குவிக்கக் கூடிய குறிப்பிடத்தக்களவு உள்நாட்டு பொருளாதார சீராக்கங்களை மேற்கொண்டுள்ளன. முக்கியமாக பேரின பொருளாதார உறுதிப் பாட்டினை அடைந்துகொள்ளவதில் வெற்றி கண்டுள்ளன. விலை வேறுபாட்டினை குறைத்துள்ளன. முதலீட்டு பாதுகாப்பு தொடர்பான சட்டதிட்டங்களை உருவாக்கியுள்ளன பொதுவாக பொருளாதாரவினைத் திறனை உயர்த்தியுள்ளன. அதாவது உள் நாட்டு வெளிநாட்டு தனியார் முதலீட்டாளர்களுக்கு தேவையான அடிப்படைகளையெல்லாம் சரிசெய்துள்ளன.

வேறும் பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் இதேபோன்ற பிரச்சனைகளை கையாள்வதற்காக சீராக்கங்களை மேற்கொண்டுள்ளனர். பல குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் கண்டுள்ளன. பல பொருளியலாளர்கள், வங்கிகள், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மேலும் பல சர்வதேச நிறுவனங்களினதும்பாராட்டையும் பெற்றுள்ளன. ஆனால் அந்நிய நேரடிமுதலீடு ஒன்றில் அங்கு வரவில்லை அல்லது எதிர்பார்த்த தொகையைவிட குறைவாகவே உள்வந்தது. ஏன் இவ்வாறு காணப்படுகின்றது?

ஒரு அடிப்படைப் பிரச்சனை என்னவெனில் சில நாடுகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர சில அம்சங்களையே கொண்டிருக்கின்றன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஒரு மரபார்ந்த கவர்ச்சி மலிவான உழைப்பு ஆகும். முதலீட்டுத் தீர்மானத்தில் மலிவான உழைப்பு தற்போது முக்கியத்துவத்தை இழந்து வருகிறது. கைத்தொழில் ஆக்கத்தின் ஆரம்பகட்டத்தில் உள்ள பொருளாதாரங்கள் நுணுக்கமான உள்ளீடுகளை வழங்கக் கூடியவர்களைக் கொண்டிருப்பதில்லை. போட்டித்தன்மையை பேணுவதற்கு இத்தகைய பொருட்கள் வியாபார சேவைகளின் உள்ளீடுகள் அந்நிய நேரடி முதலீட்டாளர்களுக்குத்

தேவைப்படுகிறது. முதலீட்டாளர்களைத் தயங்கச் செய்யும் மற்றுமொரு காரணி குறைந்த பொருளாதாரச் செயற்பாடு ஆகும். அந்நிய நேரடி முதலீடுகள் வளர்ச்சியை பின்பற்றிச் செல்லுமே யல்லாமல் முன்னெடுத்துச் செல்லாது.

அந்நிய முதலீடுகளை கவர்வதில் வெற்றி காணாத நாடுகளை கூர்ந்து நோக்கினால் இங்கு முதலீடுகளை கவர்வதற்குரிய உள்ளார்ந்த வளமிருந்தும், போதிய பொருளாதாரச் சீர்திருத்தங்களை முன்னெடுக்காததால் முதலீடுகளை உட்கவரவில்லையென்பது புலப்படும். அந்நிய நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கு நாடுகள் உலகளாவிய ரீதியில் கடைப்பிடிக்கும் நியமங்களை உள்ளடக்கியதாக முன்னேற்றங்களைச் செய்யவேண்டும்.

கடந்த சில வருடங்களாக பல நாடுகள் உள் வருவதற்கான கொள்கைகளை தாராளமயப்படுத்தியுள்ளன. அந்நிய உடமை சில துறைகளில் உட்புகுவதற்கு இருந்த தடைகள் அகற்றப்பட்டுள்ளன. தேர்ந்தெடுப்பதற்கும், அனுமதி வழங்கப்படுவதற்குமான முதலீடுகளை கட்டுப்படுத்துவதற்கான "எதிர் மறை அட்டவணை" (Negative list) அறிமுகப்படுத்தியுள்ளன. பல நாடுகளில் உள்நுழைதல் தேவையற்ற விதத்தில் கட்டுப்படுத்தப்பட்டோ அல்லது எழுந்தமானமாகக் கட்டுப்படுத்தப்பட்டோ வருகிறது. அநேகமாக உள்ளூர் அமுக்கக் குழுக்களினால் அல்லது தமக்கென அனுகூலங்கள் கொண்ட வெளிநாட்டு நிறுவனங்களின் அழுத்தத்தினாலோ கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகிறது.

பல நாடுகளில் அந்நிய முதலீடுகளை பாதுகாப்பதற்கான தேவை இருப்பது உணரப்பட்டுள்ளது. பல நாடுகள் உள்நாட்டு முதலீடுகள் வெளிநாட்டு முதலீடுகள் இரண்டும் சமமாகவே கருதப்படும் என உறுதி மொழி வழங்கியுள்ளன. பெருமளவான நாடுகளில் முதலீடுகளை அபகரித்தலை தடை செய்யும் சட்டங்களை அல்லது அபகரிக்கும் பட்சத்தில் போதுமான நட்ட ஈடு வழங்குவதை உறுதி செய்யும் சட்டங்களை இயற்றியுள்ளன. மேலும் பல நாடுகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது முதலீடுகள் சம்பந்தமான தகராறுகளை தீர்ப்பதற்கு சர்வதேச இணக்கத்தினை நாட வழி உள்ளது.

எனினும் பல நாடுகளில் சட்டரீதியான சீர்திருத்தங்கள் இன்னும் போதுமான அளவு இடம்பெறவில்லை. பல சந்தர்ப்பங்களில் சட்டங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களது சொத்துடமைகளை தகுந்த காரணங்கள் இன்றி அபகரிக்க இடமளிக்கின்றது. பல நாடுகளில் நீதி அமைப்புக்களின் செயற்பாடுகளில் காலதாமதம் காணப்படுவதனால் போதுமானதும் உடனடியாகவும் நட்ட ஈடு கிடைக்க வழி கிடைப்பதில்லை. இறுதியாக முதலீட்டாளர்கள் சர்வதேச இணக்கத்திற்குப் போகுமுன்னர் உள்நாட்டில் கிடைக்கக்கூடிய வழிவகைகளை பயன்படுத்த வேண்டப் படுகின்றார்கள். பலவீனமான நீதி மன்ற அமைப்பில் இத்தகைய அழுத்தங்கள் முதலீட்டாளரது நம்பிக்கையை மேலும் பலவீனமாக்குகின்றது.

1980 களின் பிற் பகுதிகளில் இருந்து பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அவர்களது அந்நிய செலாவணி முறைமையை தாராளமயப்படுத்த நடவடிக்கைகள் மேற் கொண்டுள்ளன. பல நாடுகள் நாயணப்பெறுமதியை மேற்கொண்டுள்ளன. வேறும் சில நாடுகளில் நாணயத்தின் பெறுமதியை தீர்மானிப்பதற்கு சந்தைப் பொறிமுறையிடம் விட்டுவிட்டன. குறிப்பிடத்தக்களவு சீராக்கங்கள் செய்தபோதும் பலநாடுகளின் நாணயங்கள் இன்னும் மிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீடு செய்யப்பட்டவையாகவே காணப்படுகின்றன. அத்துடன் அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களில் கட்டுப்பாடுகள் அவசியமாகவும் காணப்படுகின்றது. பல நாடுகளில் அந்நியச் செலாவணி தாராண்மைப் படுத்தல் நடவடிக்கைகள் முடிவுற்ற போதும் தேவையான சட்டவாக்க நடவடிக்கைகள் தொடராத காரணத்தினால் முதலீட்டாளர்கள் நிச்சயமற்ற தன்மையைஎதிர் நோக்குகின்றனர்.

கடந்த காலங்களில் பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் இறக்குமதிப் பிரதியீட்டுத் தந்திரோபாயம் அந்நிய முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பான உள்நாட்டுச் சந்தையை வழங்கியதன் மூலம் கவர்ச்சிகரமானதாக இருந்தது. சர்வதேச சந்தைகளில் போட்டியிடவேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்து அனேகமான நாடுகள் கட்டுப்பாடுகளை தளர்த்தி ஏற்றுமதிகளை ஊக்குவிக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளன. பல சந்தர்ப்பங்களில் வர்த்தகச் சீர்திருத்கள் இன்னும் போதியளவு இடம் பெறவில்லை. பல நாடுகளில் பாதுகாப்பினை குறிப்பிடத் தக்களவு குறைந்துள்ளன. எனினும் உள்ளூரில் உண்மையான போட்டியை ஏற்படுத்த இன்னும் வெகு தூரம் செல்ல வேண்டியுள்ளது. அதேபோல் ஏற்றுமதிக்கு உகந்த நாணய மாற்று வீதத்தினைக் கொண்டிருக்கவில்லை. அத்துடன் சுங்கத்துடன் தொடர்பான பிரச்சனைகளும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படுகின்றன. நல்ல வர்த்தக் கொள்கைகள் கூட சுங்கச் செயற்பாடுகள் தொடர்பான பணிக் குழுவினது நடவடிக்கைகளிலும் சுங்க முகவர்களின் தடைப்படுத்தும் மனோபாவத்தினாலும் முறியடிக்கப் படலாம். இதனால் இறக்குமதி செய்யப்பட்ட முதலீட்டு உபகரணங்கள் உரியநேரத்தில் உற்பத்தி நடைபெறும் இடத்திற்கு வந்து சேருவதில்லை. ஏற்றுமதியாளர்களுக்கான கொடுப்பனவுகள் பல படிகளில் அங்கீகார பெற்றுவருவதனால் ஏற்படும் தாமதம் போன்றவை முதலீட்டாளர்களை ஊக்கமிழக்கச் செய்கின்றன.

சில நாடுகளில் அந்நிய நேரடி முதலீடுகளைக் கவர்வதற்காக விசேடமான முதலீட்டு ஊக்குவிப்புக்கள் வழங்கப் படுகின்றன. இவற்றுள் வரி விடுதலை, வரிச் சலுகை, வரிவிலக்கு, தீர்வைக் குறைப்பு போன்றவையும் அடங்கும். அனுபவரீதியாக நோக்கும்போது இத்தகைய ஊக்குவிப்புக்கள் நீண்டகால ரீதியாக முதலீட்டாளர்கள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் மிகவும் குறைவதும் வரி விடுதலைகள் வரி அமைப்புக்களுக்குகிடையில் பிறழ்வினை ஏற்படுத்தலாம். புதிய முதலீட்டாளர்களுக்கு சாதகமாகவும் ஏற்கனவே முதலிட்டவர்களுக்கு பாதகமாகவும் அமையலாம். இதேபோன்று உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கிடையில் வேறுபாட்டைத் தோற்றுவிக்கலாம், ஊக்குவிப்புக்களின் காலம் முடிவடைந்ததும் கம்பனிகளின் வரிச்சுமை திடீரென்று அதிகரிக்கும். இச்சலுகைகளை நிர்வகிக்கப் பணிக்குழுக்கள் பொறுப்பாக உள்ளபோது ஊழல் இடம்பெறவும் தூண்டுகோலாக அமைகின்றது. நிலையான தன்னியக்க ரீதியான வரி அமைப்பு நியாயமான வரி வீதத்துடன் இயங்குமானால் முதலீட்டாளருக்கும் வரவேற்கும் நாடுகளுக்கும் நன்மை பயக்கும். இத்தகைய இலக்கினை அடைய பல நாடுகள் இன்னும் நீண்ட தூரம் பயணம் செய்யவேண்டும்.

முதலீட்டாளர்களை ஊக்குவித்தல், முதலீட்டாளர்களை தூண்டுதல் எல்லாம் அண்மைக் காலமாகவே பிரபல்யமானவையாகும். உள்நாட்டில் அடைந்து கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றங்களை உலகத்திற்கு தெரியப்படுத்த சிறந்த திட்டமிட்ட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை கொண்டிருக்க வேண்டும். விலையுயர்ந்த விளம்பரங்கள் தேவையில்லை. நீண்டகால பொதுத்தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் இதனைச் செய்யலாம். ஆர்வமுள்ள முதலீட்டாளர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கல், தொடர்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளல், இருக்கின்ற முதலீட்டாளர்களுக்கு ஏற்படும் நிர்வாகப் பிரச்சனைகளை தீர்த்தல் போன்றவையும் முதலீட்டு ஊக்குவிப்புத்தான், என்றாலும் அநேகமான சந்தர்ப்பங்களில் புறக்கணிக்கப்பட்டு விடுகின்றது.

எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக் கொள்ளாத பல நாடுகளில் சீர் திருத்தங்கள் போதியளவு இடம் பெறாததே பிரச்சனையாகும். அரசாங்கங்கள் ஏலவே செய்த சீர்திருத்தங்களில் மேலும் கூடிய கவனமெடுத்தல் வேண்டும். உலகளாவிய போட்டி தீவிரமாக இருப்பதனால் கம்பனிகள் அதிக அழுத்தத்தினை எதிர்கொள்வதுடன் தமக்கு சாதகமாக உள்ள இடங்களிலேயே முதலீடுகளைச் செய்யவருகின்றன. நேரடி அந்நிய முதலீட்டிற்கான போட்டி யுத்தத்தில் நாடுகள் வெற்றியடைய வேண்டுமானால் இந்தச் சூழ் நிலைகளை ஒரு சாவாலாக எடுக்கவேண்டும்.

தாராளமயப்படுத்தல் கொள்கை மட்டும் போட்டித்தன்மையை அதிகரித்து விடாது. வளங்களை அவற்றின் அதியுயர்ந்த உற்பத்திக்கு இட்டுச் செல்லக்கூடிய பொருளாதார சூழ்நிலைதான் போட்டிக்கு அவசியமாகும். அத்தோடு பல நாடுகளின் அனுபவத்தில் இருந்து நிறுவனங்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு அரசின் உதவி அவசியமானது என்பது தெரியவந்துள்ளது. உதாரணமாக சர்வதேச முதலீட்டாளர்கள் தற்போது குறைந்த ஊழியச் செலவு என்பதை விட உயர் உற்பத்தித் திறன் என்பதிலேயே அதிக ஆர்வம் கொண்டவராகக் காணப்படுகின்றனர். உயர் உற்பத்தித் திறனைப் பெற்றுக்கொள்ள தேவையான தொழிநுட்ப முன்னேற்றத்திற்கும் ஊழியத்தில் திறனை அதிகரிப்பதற்கும் அரசின் உதவி தேவைப்படுகின்றது. சர்வதேப் போட்டித்தன்மையை நிர்ணயிப்பதில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், தொழில் நுட்ப சேவைகளைப் பெற்றுக் கொள்ளல், பொதுக் கல்வி விசேடமான கைத்தொழில் முகாமைத்துவ பயிற்சிகள் யாவுமே என்றுமில்லாத அளவு இன்று முக்கியம் வாய்ந்தனவையாக காணப்படுகின்றது.

அரசாங்க உதவி என்பதன் பொருள் அரசாங்கம் நேரடியாக செய்ய வேண்டும் அல்லது அரசு அதற்காக செலவு செய்ய வேண்டும் என்பதல்ல. மாறாக இத்தகைய சேவைகளை தனியார் துறையினரே மிகவும் திறமையாக வழங்கக் கூடியதாக இருக்கும். சிலசமயங்களில் அந்நிய முதலீட்டாளார்களே தமது வியாபார ஆர்வம் காரணமாக தூண்டப்பட்டு தாமே அத்தகைய சேவைகளை வழங்க முன்வரலாம். தனியார் துறை நிறுவனங்கள் இவ்வாறான திட்டங்களை வடிவமைத்தல் செயல்படுத்தல் என்பவற்றில் பங்கு கொள்வதுடன் நன்மையையும் ஈட்டிக் கொள்ளலாம். அரசாங்கம் இவற்றிற்கான செலவுகளில் ஒரு பகுதியையாவது செலுத்த முன்வரவேண்டும். அரசாங்கம் தனியுரிமையாளன் என்ற நிலையில் அல்லது கட்டுப்பாட்டாளன் என்ற நிலையில் இருந்து இறங்கி தனியாளுடன் ஒருங்கிணைந்து பங்காளனாகச் செயற்படவேண்டும். அரசாங்கங்கள் தமது அணுகுமுறையில் மாற்றங்களை கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர முன்வரவேண்டும். அரசாங்கங்களில் சிந்தனையிலும் செயலிலும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வது அந்நிய நேரடி முதலீட்டை வரவழைப்பதற்கு அத்தியாவசியமான ஒரு முன் நிபந்தனையாகும்.

தற்போது அந்நியமுதலீடுகளை கவர்வதற்கு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் மத்தியில் கடுமையான போட்டி நிலவுகின்றது. இந்தப்போட்டியை மையமாக வைத்து அந்நிய முதலீடுகள் தமக்கு அதியுயர் இலாபம் கிடைக்கக் கூடிய நாடுகளை நோக்கிப் பாய்கின்றது. இவர்களது இலாப உச்சப்படுத்தும் கொள்கை இம்முதலீடுகள் செல்லும் நாடுகளின் அபிவிருத்தி நலன்களுக்கு பாதகமாக அமையலாம். அல்லது அபிவிருத்திக்கு எதிரானதாகவும் அமையலாம். இலாப உச்சப்படுத்தும் நோக்குடன் இந்நாடுகளின் அபிவிருத்தியில் முன்னுரிமை இல்லாத திட்டங்களில் முதலீடு செய்யும்போது அபிவிருத்தியடைந்து வரும் நாட்டிற்கு கிடைக்கும் நலன்கள் குறைவாகலாம். இதேபோன்று சூழலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய உற்பத்திகளில் முதலிடும்போது நீண்டகாலத்தில் அது அபிவிருத்திக்கு எதிரானதாகவும் மாற்றமடையலாம்.

இந்த நிறுவனங்களின் இலாபத்தில் இருந்து வரி அறவிடுவதன் மூலம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஏற்படும் வரவு செலவுத் திட்டக்குறைகளை குறைப்பதற்கு தேவையான வரி வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று வாதிடப்படுகின்றது. ஆனால் இந்நாடுகளில் பல்வேறு விதமான வரிச்சலுகைகள், வரி விடுதலைகள் வழங்கியே முதலீடுகளை கவர்வதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகிறது. அத்துடன் அந்நிய முதலீடுகளைச் செய்கின்ற பல்தேசியக் கம்பனிகள் தமது மாற்று விலையிடல் (Transfer Pricing) கொள்கை மூலம் வரி அதிகம் விதிக்கும் நாடுகளில் இலாபத்தை குறைத்துக்காட்டியும் வரி குறைந்த நாட்டில் இலாபத்தைக் கூட்டிக் காட்டியும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வரிவருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றன.

இதே போன்று அந்நிய முதலீடுகள் தொழில் நுட்ப மாற்றம், முகாமைத்துவ நுட்பங்கள் எல்லாவற்றையும் வளர்முக நாடுகளுக்குக் கொண்டு வரும் என்ற எதிர்பார்க்கையும் காணப்படுகின்றது. ஆனால் உயர் தொழில் நுட்பம், அல்லது உயர் முகாமைத்துவ நுட்பங்களை வளர்முக நாடுகளுக்கு வழங்கிய அனுபவங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. பொதுவாக அந்நிய முதலீடுகள் உட்பாய்கின்ற தொழில் முயற்சிகள் குறைந்த தொழில்நுட்பத்தினை வேண்டி நிற்பவையாகவே காணப்படுகின்றது. இதனால் தொழில்நுட்பம் பரவும் என்பதற்கான சாத்தியக் கூறுகள் குறைவாகவே காணப்படுகின்றது.

உள்நாட்டு வளப்பயன்பாடும் குறைவாகவே காணப்படுகின்றது. பொதுவாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படும் மிகையான ஊழியத்தை உறிஞ்சக் கூடியவாறான தொழில் முயற்சிகளில் அந்நிய முதலீட்டு உள்வருகை குறைவாகவே காணப்படுகின்றது. ஓரளவிற்கு உழைப்பினைப் பயன்படுத்தினாலும் ஏனைய வழங்களைப் பயன்படுத்துவதோ அல்லது அவ்வாறான தொழில் முயற்சிகள் தோன்றுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதோ குறைவாகவே காணப்படுகின்றது.

இத்தகைய எதிர் வாதங்கள் கருத்தளவிலேயே பெரும்பாலும் காணப்படுகின்றன. இவற்றினை புள்ளிவிபரரீதியாக நிறுவ வேண்டிய தேவை இருக்கின்றது. தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அந்நிய முதலீட்டு ஊக்குவிப்புக்கள் தனிப்பட்ட நிறுவன ஒழுங்கமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதால் தகவல்கள் பெற்றுக் கொள்வதோ அல்லது கசிவதோ சாத்தியமற்ற தொன்றாகவே காணப்படுகின்றது. எந்த ஒரு சந்தர்பத்தில் அந்நிய முதலீட்டாளர்களது இலாப உச்சப்படுத்துதல் குறிக்கோளும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அபிவிருத்தி அபிலாசைகளும் ஒழுங்கிணைகின்றனவோ அப்போதுதான் அந்நிய முதலீடானது எதிர்பார்த்த நலன்களை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு கொண்டு வரும்.

## Reference


1. M. Todaro — Economic Development in the Third world. Longman Group Ltd. London 1985
2. Rehman Sobhan — The Crisis of External Dependance The political Economy of foreign Aid to Bangaladesh· University Press Ltd. 1995
3. Joel Bergman & Xiasfang Shen: — Foreign Direct Investment in Developing Countries Progress and Problems Finance & Development Dec. 1995


### இலங்கை உயர் கல்வித்துறையில் மகளிர்

| வருடம் | பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக மகளிர் (வீதம்) | மகளிர் பேராசிரியர்கள் (வீதம்) |
|---|---|---|
| 1973 | 16,6 | 2.4 |
| 1984 | 2. 5 | 8.3 |
| 1990 | 31.8 | 9.4 |

மூலம்:- மகளிர் ஆய்வு மையம், கொழும்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக ஒளி - இதழ் - 6 சிறப்படைய எமது

நல்வாழ்த்துக்கள்

- துவிச்சக்கர வண்டி வகைகள்
- துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள்
- லோட்டஸ் துவிச்சக்கர வண்டி டயர், டியூப் ஏக விநியோகஸ்தர்கள்
- பெயின்ற் வகைகள்
- இரும்பு, கட்டடப் பொருட்கள்
- வானொலிப் பெட்டிகள்
- கலர் பிலிம்ஸ் றோல்கள்
- வீடியோ கசெற்ஸ்
- கடிகார வகைகள்
- அழகு சாதனப் பொருட்கள்

யாவற்றையும் ஒரே இடத்தில் மொத்தமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள இன்று யாழ் நகரில் தனித்துவம் பெற்றவர்கள்.

# இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்

50, 52, 54, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக ஒளி - இதழ் - 6 சிறப்புடன் வெளிவர
எமது வாழ்த்துக்கள்

றைக்கிளீனேர்ஸ்

போட்டோஸ்ரற்

அடையாள அட்டை கவரிடுதல்

முதலிய சேவைகளை சிறந்த முறையில் செய்து கொள்ள
உங்கள் நினைவில் உதிக்க வேண்டிய ஒரே நிறுவனம்

# சன்லைற்

## றைக்கிளீனேர்ஸ் & போட்டோஸ்ரற்

பஸ் நிலையம் யாழ்ப்பாணம்.

---

சமூக ஒளி - இதழ் - 6 இற்கு நல்வாழ்த்துக்கள்
கூறுவதில் நிறைவடைகின்றோம்.

சிறுவர்கள், பெண்கள், பெரியவர்களுக்கான
நவீன டிசைன்களில் உங்கள் எண்ணம் போல் பாதணிகளை
தெரிவு செய்ய நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

## "பாட்டா"

மொத்த விற்பனை நிலையம்

350, பலாலி வீதி திருநெல்வேலி.

---

சமூக ஒளி - இதழ் - 6 சிறப்படைய

அன்பளிப்பு

# குகன் களஞ்சியம்

(பல்பொருள் வாணிபம்)

180, (130) மருத்துவமனை வீதி யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய பூர்வமான நன்றிகள்

★ சமூக ஒளியை மெருகூட்ட ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தி, பாராட்டுச் செய்தி, மகிழ்வுச் செய்தி வழங்கிய துணைவேந்தர், கலைப்பீடாதிபதி, காப்பாளர், பெரும் பொருளாளர் ஆகியோருக்கும்.

★ ஆக்கங்களை குறித்த நேரத்தில் சிறப்பாக வரைந்து மலரை சிறப்பித்த விரிவுரையாளர்கள், மாணவர்களுக்கும்.

★ வேண்டிய நேரத்தில் இம்மலர் பற்றியும் ஏனைய தேவைகள் பொறுத்தும் ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்கிய காப்பாளர், பெரும் பொருளாளர், விரிவுரையாளர்களுக்கும்.

★ இவ் இதழை உங்கள் கைகளில் தவழவிடுவதற்கு வேண்டிய நிதியினைப் பெறுவதற்காக எம்மால் நடாத்தப்பட்ட அதிர்ஸ்டலாபச் சீட்டுக்களை விற்பனை செய்து உதவிய எமது மன்ற மாணவர்கள், ஏனைய நண்பர்கள் ஆகியோருக்கும்.

★ அதிர்ஸ்டலாபச் சீட்டுக்கள் மூலம் இம்மலர் வெளியீட்டுக்கு உதவி வழங்கிய பொது மக்கள், வர்த்தகர்களுக்கும்.

★ அதிர்ஸ்டலாபச் சீட்டுக்கள் அச்சிடுவதற்கு நிதி உதவி வழங்கிய E. S. பேரம்பலம் & கோ, சன்லைற் றைக்கிளீனேர்ஸ் & போட்டோஸ்ராற், குகன் களஞ்சியம் ஆகிய வர்த்தகப் பெருமக்களுக்கும்

★ இம் மலரை என்றும் இல்லாதவாறு வெகு சிறப்பாக அச்சிட்டு வழங்கிய புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளர், மேற்பார்வையாளர், ஏனைய ஊழியர்கள் அனைவருக்கும்.

★ வேண்டிய நேரத்தில் உதவிகள் புரிந்த பொருளியல் துறை ஊழியர்கள், ஏனைய பல்கலைக் கழக ஊழியர்களுக்கும்

★ தேவையான போது முன்னின்று உழைத்த மன்ற உறுப்பினர்களுக்கும், ஏனைய மாணவ நண்பர்களுக்கும்

★ இறுதியாக இச்சமூக ஒளி சிறப்பாக உங்கள் முன் மலர்வதற்கு தேவையான வழிகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிய சகலருக்கும் எமது மனம் கனிந்த இதய பூர்வமான நன்றிகள்

- இதழாசிரியர்கள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய பூர்வமான நன்றிகள்

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAMUUKA OLI - 6


* A. Thayaparan — *The principle of Ability-to pay in Taxation*
* N. Jeyavani — *An Analysis of internation Trade theories.*
* N. Sivagowry — *International politics : A view.*
* J. Thayaparan — *Inftation in Economy.*
* T. Krishanthy — *Changing Concepts of Development*
* E. Riched — *'Anomie' theory and concept.*
* S. Uthayakumar — *A Brief study of the origin ………*
* M. Srithangarajah — *Land Reform legislations and ………*
* T. Sumangala — *Decentralization of power and ………*
* T. Srimuralitharan — *Theoretical Determinants ………*
* N. Kirubakaran — *Sri Lanka population and ………*
* S. Kirupananthan — *The changes occurring in the ………*
* S. Sanjeavan — *Demosgraphic Growth and ………*
* V. Jeevakaran — *Evolution Growth of ………*
* M. Varatharajan — *Samoorthi programme with .. ……*
* K. Nithiyananthan — *Rural indebtedness problem ………*
* R. Vijitha — *European Arrival and the socio ………*
* R. Nanthakumaran — *Foreign Direct investments ………*


SOCIAL SCIENCE UNION

St. Joseph's Catholic Press, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org